உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# கட்டளைத்திரட்டு.

இஃது,
அஷ்டாவதானம்
பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டது.

சுத்தப் பிரதி.

2-ம் பதிப்பு
காபி-க000.

கோளப்பஞ்சேரி
செல்லப்பமுதலியாரவர்களாற் றமது
சென்னை:
ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1908.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

இதன்விலை அணா—கஉ.

உ

கணபதி துணை.

# நூன் முகம்.

வைதிக ஞானசாத்திரங்களிற் பழகுவோர்கட் குப யோகமாகச் சாத்திரபாரங்கதராயுள்ள சற்சீலர்கள் பற்பலர் அவ்வக்காலங்களி லெளியநடையில் சாத்திர சோபான நூல்களாக வியற்றிவைத்த சிறு நூல்களின் றிரட்சியே இக் கட்டளைத்திரட்டு. வைதிகசீலர்களால் மிகவியந்து கொண்டாடப்படும். பிரசித்தியுற்ற சுத்தாத்துவித சாத்திரங்கட்குச் சோபானமாயுள்ளவை முதலேழுகட்டளைகள். கேவலாத்துவித சாத்திரங்கட்குச் சோபானமாகவுள்ளவை மற்றவை. முதலேழு கட்டளைகள் பசுபாச விலக்கணங்களைக் கரதலாமலகமாக வெடுத்துக்காட்டுவன. மற்றையவைச் செகசீவபர விலக்கணங்களை வெள்ளிடைமலைபோல விளக்குவன. சில நூல்கட்குக் கட்டளையென்ற பெயர்களில்லையாயினும், கட்டளைபோன்ற பாகுபாடுகளா லமைக்கப்பெற்றனவாகலின் திரட்டிற் சேர்க்கப்பட்டன. பெருஞ்சாத்திரங்களிற் காணப்படும் பரிபாஷா பதங்கட்கெல்லா மிக்கட்டளைகளில் வெகு இலேசாக விவரமெழுதிக் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய வசனரூபமான கட்டளைகளாக அச்சிடப்பட்டவை;— சிவப்பிரகாசக் கட்

டளை, திருவாலவாய்க் கட்டளை, சித்தாந்தக் கட்டளை, சித்தாந்த சாதனக்கட்டளை, சித்தாந்த தசகாரியக்கட்டளை, கித்தாந்தப் பிரகாசிகை, சித்தாந்த தத்துவலக்ஷணம், நாநாசீவ வாதக் கட்டளை, வேதாந்தத் தத்துவக்கட்டளை, ஞானக்கட்டளை, தத்வாமிர்தக் கட்டளை, உபதேச வுண்மைக்கட்டளை, வேதாந்த தசாவத்தைக்கட்டளை சுருக்கம், வேதாந்த தசகாரியக்கட்டளை, பிரமோபதேசக் கட்டளை, உபதேச சித்தாந்தக்கட்டளை, வேதாந்த ஸாராமிருதம், பஞ்சீகரண வேதாந்தசித்தாந்தம், தத்துவ தீபிகை, ஜீவோற்பத்தி சிந்தாமணியாக இருபதாம். *இதுவரையில் வெளிவராத சில அருமையான கட்டளைகள் இத்திரட்டிற் சேர்க்கப்பட்டுள்ளன.*

கோ - சேல்லப்பமுதலியார்

*28-வது நெம்பர் நம்புலையர் வீதி,*

*சவுகார்பேட் போஸ்ட்டு சென்னை.*

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவப்பிரகாசக்கட்டளை.

## முதலங்கம் தத்துவநாமம்.

### உண்ணிலைக்கருவிகள்.

பூதங்களாவன.

பிருதுவி
அப்பு
தேயு
வாயு
ஆகாயம், ஆக-ரு.

ஞானேந்திரியங்களாவன.

சுரோத்திரம்
துவக்கு
சட்சு
சிகுவை
ஆக்கிராணம், ஆக-ரு.

தன்மாத்திரைகளாவன.

சத்தம்
பரிசம்
உருவம்
இரசம்
கந்தம், ஆக-ரு.

கன்மேந்திரியங்களாவன.

வாக்கு
பாதம்
பாணி
பாயு
உபத்தம், ஆக-ரு.

அந்தக்கரணங்களாவன.

மனம்
புத்தி
அகங்காரம்
சித்தம், ஆக-௪.

ஆக ஆன்மதத்துவம்-௨௪.

இவற்றிற்கு ஆன்மதத்துவமென்றும், அசுத்ததத்துவமென்றும், போக்கிய காண்டமென்றும் பெயர்.

வித்தியாதத்துவங்க ளாவன.

காலம்
நியதி
கலை
வித்தை
இராகம்
புருடன்
மாயை, ஆக-எ.

இவற்றிற்கு வித்தியா தத்துவ மென்றும், சுத்தாசுத்த தத்துவ மென்றும், போகசயித்துருகாண் டமென்றும் பெயர்.

சிவதத்துவங்க ளாவன.

சுத்தவித்தை
ஈச்சுரம்
சாதாக்கியம்
சத்தி
சிவம், ஆக-ரு.

இவற்றிற்குச் சிவதத்துவ மென்றும், சுத்ததத்துவமென்றும், பிரேரகாண்டமென்றும் பெயர்.

இவை ௩௬-ம், உண்ணிலைக் கருவிகள்.

புறநிலைக் கருவிகள்.

பிருதுவியின்கூறு.

மயிர்
எலும்பு
தோல்
நரம்பு
தசை, ஆக-ரு.

அப்புவின் கூறு.

ஓடுநீர்
உதிரம்
சுக்கிலம்
மூளை
மச்சை, ஆக-ரு.

தேயுவின் கூறு.

ஆகாரம்
நித்திரை
பயம்
மைதுனம்
சோம்பல், ஆக-ரு.

வாயுவின் கூறு.

ஓடல்
நடத்தல்
நிற்றல்
இருத்தல்
கிடத்தல், ஆக-ரு.

ஆகாயத்தின்கூறு.

காமம்
குரோதம்
உலோபம்
மோகம்
மதம், ஆக-ரு.

ஆக பூதகாரியம்-உரு.

### தசவாயுக்களாவன.

பிராணன்
அபானன்
உதானன்
வியானன்
சமானன்
நாகன்
கூர்மன்
கிரிகரன்
தேவதத்தன்
தனஞ்சயன், ஆக-௧௦.

### தசநாடிகளாவன.

இடை
பிங்கலை
சுழுமுனை
காந்தாரி
அத்தி
சிகுவை
அலம்புடை
புருடன்
குகு
சங்கினி, ஆக-௧௦.

### வசனாதிகளாவன.

வசனம்
கமனம்
தானம்
விசர்க்கம்
ஆனந்தம், ஆக-௫.

### வாக்குகளாவன.

சூக்குமை
பைசந்தி
மத்திமை
வைகரி, ஆக-௪.

### குணங்களாவன.

சத்துவம்
ரஜஸு
தமஸு, ஆக-௩.

### அகங்காரங்களாவன.

தைசதவகங்காரம்
வைகரியகங்காரம்
பூதாதியகங்காரம், ஆக-௩.

ஆக தத்துவந் தொண்ணூற்றாறு.

# இரண்டாமங்கம்.

## தத்துவதோற்றமும் ஒடுக்கமும்வருமாறு.

---

பரமசிவனுடைய பராசத்தியருளினாலே குடிலையிலே நாதந்தோன்றும்; நாதத்திலே விந்துதோன்றும்; விந்துவிலே சாதாக்கியந்தோன்றும்; சாதாக்கியத்திலே மகேசுவரந்தோன்றும்; மகேசுவரத்திலே சுத்தவித்தைதோன்றும். இவையைந்தினுள் முன்சொன்ன விந்துவிலே நாலுவாக்கும், ஐம்பத்தோரக்ஷரமும், எண்பத்தொரு பதமும், இருநூற்றிருபத்துநான்கு புவனமும், சப்தகோடி மஹாமந்திரமும், சகலசாஸ்திரமும், விஞ்ஞானகலர் பிரளயாகலருக்குத் தனுகரண புவனபோகங்களும், சரியை கிரியை யோகங்களினின்றோர்க்குச் சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகளும், பஞ்சகலைகளும் தோன்றும். இவைகள் சுத்தமாயையின் தோற்றமென்றறிக.

இனி அனந்ததேவ நாயனாரருளினாலே அசுத்தமாயையிலே நின்று காலமும், நியதியும், கலையுந்தோன்றும். கலையிலே வித்தை தோன்றும்; வித்தையிலே இராகந்தோன்றும்.

இனி உருத்திரதேவநாயனா ரருளினாலே முன்சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும்; மூலப்பிரகிருதியிலே முக்குணங்களுந் தோன்றும்; முக்குணங்களுந் தோன்றுநின்றவிடம் அவ்வியக்தம்; இந்த அவ்வியக்தத்திலே சித்தமும், புத்தியும் தோன்றும். பத்தியிலே அகங்காரந் தோன்றும். அது யான் எனதென்று விகற்பித்துவரும். அதுவே அகர்த்தைக்கு வித்தாகும். அது தைசதவகங்காரமென்றும், வைகாரியகங்காரமென்றும், பூதாதியகங்காரமென்றும் மூன்றுவிதமாயிருக்கும். தைசதயகங்காரத்திலே சத்துவகுண

த்தினையுடைய மனமும், புத்தியும், இந்திரியங்களென்னும் பெயரை யுடைய சுரோத்திராதிகளைந்துந் தோன்றும். வைகரியகங்காரத்தி லே ரஜோகுணத்தினையுடைய கன்மேந்திரியங்களாகிய வாக்காதிக ளைந்துந் தோன்றும். பூதாதியகங்காரத்திலே தமோகுணத்தினையு டைய தன்மாத்திரைகளாகிய சத்தாதிகளைந்துந்தோன்றும். சத்தத் திலே ஆகாயந்தோன்றும். பரிசத்திலே வாயுதோன்றும். உருவத்தி லே தேயுதோன்றும். இரசத்திலே அப்புதோன்றும். கந்தத்திலே பிருதுவிதோன்றும். ஒடுங்குங்காலத்துத் தோன்றினவடைவே யொ டுங்கும்.

---

# மூன்றுமங்கம்.

## தத்துவகுணங்கள்.

பிருதுவி உரத்துத்தரிக்கும், அப்பு குளிர்ந்துபதஞ்செய்யும், தேயு சுட்டொன்றுவிக்கும், வாயு சலித்தெவையுந் திரட்டும், ஆகா யம் நிரந்தரமா யிடங்கொடுக்கும். சுரோத்திரஞ் சத்தத்தையறியும், துவக்கு பரிசத்தையறியும், சட்சு உருவத்தையறியும், சிகுவை ரச த்தையறியும், கிராணங்கந்தத்தையறியும், வாக்குவசனிக்கும், பாதங் கமனம்பண்ணும், பாணி யிடுதலுமேற்றலுஞ்செய்யும், பாயு மலவி சர்க்கத்தைச்செய்யும், உபத்தம் ஆனந்திக்கும், மனம் பற்றும், புத்தி நிச்சயிக்கும், அகங்கார மெழுந்திருக்கும், சித்தஞ் சிந்திக்கும். காலம் செல்காலம், நிகழ்காலம், எதிர்காலமென மூன்றும். நியதி கருமத் தை நிச்சயம்பண்ணும், கலை ஆணவத்தைச் சிறிதுநீக்கும், வித்தை அறிவையெழுப்பும், இராகம் பெற்றதைச் சிறிதாக்கிப் பெருதலிலே யிச்சையுண்டாக்கும், புருடன் விடயத்திலே அழுத்துவிக்கும், மா யை மயக்கும், சுத்தவித்தை ஞானமேறிக் கிரியைகுறைந்திருக்கும்,

ஈசுவரதத்துவம் ஞானங்குறைந்து கிரியையேறியிருக்கும், சாதாக்கியதத்துவம் ஞானமுங் கிரியையுமொத்திருக்கும், சத்திதத்துவங் கிரியையாயிருக்கும், சிவதத்துவம் ஞானமாயிருக்கும், சிவதத்துவம் சிவனுக்கிடம், நாதமென்றுபெயர். சத்திதத்துவம் காருண்ணியத்துக்கிடம், விந்துவென்றுபெயர். சாதாக்கியதத்துவம் அனுக்கிரகத்துக்கிடம், சதாசிவமென்றுபெயர். ஈசுவரதத்துவம் திரோபவத்துக்கிடம், மகேசுவரமென்றுபெயர். சுத்தவித்தை சங்காரத்துக்கிடம், உருத்திரமென்றுபெயர்.

---

# நான்காமங்கம்.

## அவத்தை தரிசனம்

## கீழாலவத்தை.

---

இவற்றுடனே கூடிநின்று ஆன்மாபுசிக்கும் அவதரத்திலுணர்த்துமுறைமை யெங்ஙனமென்னில்?

கீழாலவத்தை-௫, மேலாலவத்தை-௫, சுத்தாவத்தை-௫, இந்தக் கேவல சகலசுத்தமூன்றிற் காரியாவத்தை-௧௫, காரணாவத்தை-௩, ஆக அவத்தை-௧௮, இதிற் கீழாலவத்தைக்குத் தத்துவம்-௩௫, மேலாலவத்தைக்குத் தத்துவம்-௩௬, அவையெப்படியென்னில், கீழாலவத்தையாவன-சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ௫-க்கு அகக்கருவி முப்பத்தாறிற் பூதங்களைந்துங் கலாதிகளாறுஞ் சிவதத்துவம் ஐந்தும் ஆகிய பதினாறுங்கழித்து மற்றவையுடனே புறக்கருவியறுபதில் வாயுக்கள் பத்தும் வசனாதிகளைந்தும் ஆகிய ௧௫-ம் கூட்டவேண்டும். இவற்றைக் கூட்டவேண்டுவானேன், அவற்றைக் கழிக்கவேண்டுவானேனெனில், அவத்தைக்குநிற்குங்கருவிகள் கூட்டப்பட்டு நில்லாக்கருவிகள் கழிக்கப்பட்டன.

ஆன்மா ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், தன்மாத்திரைகளைந்தும், அந்தக்கரணநான்கும், உள்ளமொன்றும், வாயுக்கள்பத்தும், வசனாதிகளைந்தும் ஆகிய நரு - கருவிகளுடனே லலாடதானத்திலே நின்றவவதரம் சாக்கிரம்.

ஞானேந்திரியங்கள் ரு - ம், கன்மேந்திரியங்கள் ரு - ம், ஆகிய க0 - ம், லலாடதானத்திலேநிற்க, மற்ற உரு-கருவிகளுடனே கண்டதானத்திலேநின்ற வவதரம் சொப்பனம்.

தன்மாத்திரைகளைந்துஞ் சித்தநீங்கலாக அந்தக் கரணங்கள் ந-ம், பிராணவாயுநீங்கலாக வாயுக்கள் கூ-ம், வசனாதிகள் ரு-ம், ஆகிய உஉ-கருவிகளும் கண்டதானத்திலேநிற்கச் சித்தமும் பிராணவாயுவு முள்ளமும் ஆகிய ந-கருவிகளுடனே இருதயதானத்திலே நின்றவவதரஞ் சுழுத்தி.

சித்தமொன்றும் இருதயதானத்திலேநிற்கப் பிராணவாயுவும் உள்ளமும் ஆகிய இரண்டுகருவிகளுடனே நாபித்தானத்திலே நின்ற அவதரந்துரியம்.

பிராணவாயுவொன்றும் நாபித்தானத்திலேநிற்கஉள்ளமொன்றுடனே மூலாதாரத்திலேயடங்கின வவதரந் துரியாதீதம். இப்படிக் கீழாலவத்தையைத் தரிசிக்க. இங்கேவுள்ளமென்பது பிரகிருதியையெனக்கொள்க. இதற்குக் கேவலாவத்தை யென்று பெயர்.

## மேலாலவத்தை.

மேலாலவத்தையாவன. இப்படிக் கேவலாவத்தையைப் பொருந்தி அதீதப்பட்டுக்கிடக்கும் அவதரத்திலுணர்த்து முறைமை யெங்ஙனமென்னில், விளங்காநின்ற விந்துசத்தி ஆன்மாவுக்குள்ளகன்மத்துக்கீடாக வாக்குகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு ஒருநாதத்தை யுண்டாக்கும்.

சூக்குமையென்னும் வாக்கு அந்தநாதமாகிய அறிவுதானே வடிவாகவரும்.—பைசந்தி என்னும் வாக்கு உந்திதானத்திலேபொருந்தி வெவ்வேறாய்வரும் அட்சரங்களினுடைய சொரூபங்கள் தோன்றும் முறைமைதெரியாதபடி மறைந்திருந்து மயில்முட்டைக்குட் சலமானது புறம்பே மயிலினிறமாய் ரூபிகரிக்கத் தக்கதாயிருந்தும், உள்ளே பஞ்சவர்ணங்களுங்கூடி உருத்தெரியாமற் சலமயமாய்த்தோன்றினாற்போலச் சித்தத்தினிடத்திலே நினைவுமாத்திரமாய்நிற்கும்.—மத்திமை என்னும் வாக்கு பிராணவாயுவோடுங்கூடி அட்சரங்களினுடைய சொரூபங்களை ஒழுங்குபடநிறுத்திச் செவிக்குக்கேளாமல் உள்ளறிவுமாய்த் தொனியுமுண்டாய்க் கண்டதானத்திலே முற்பட்டு வரும்.—வைகரி என்னும் வாக்கு பிராணவாயுவோடுங் கூடிவந்து உதானவாயுவிலேயும் பந்தித்துச் செவிப்புலனிடத்துக் கேட்கத்தக்கதாக நினைவிலுண்டான வசனத்தைச் சொல்லும்.

இங்குச்சொல்லப்பட்ட வாக்குகளுக்குத்தானமும் வடிவுமாவன:—சூக்குமைக்குத்தானம் நாபியடியும், வடிவு நாததத்துவமுமாம். பைசந்திக்குத்தானம் உந்தியும், வடிவு பிராணவாயுவுமாம். மத்திமைக்குத்தானம் நெஞ்சுங்கண்டமும், வடிவு பிராணவாயுவுமாம். வைகரிக்குத்தானம் நாக்கினடியும் வடிவு பிராணவாயுவும் உதானவாயுவுமாம். இந்த நான்குவாக்குந் தோன்றுகைக்குக் காரணமாயிருக்கின்ற

பஞ்சமையென்றொருவாக்குண்டு; அதற்குத்தானம் மூலாதாரம், அது பிரணவசொரூபமாயிருக்கும். வாக்கு நான்குங்காரியப்படுமுறைமை அறிவித்தது. சிவதத்துவமுஞ் சத்திதத்துவமும் சூக்குமையைக்காரியப்படுத்தும். சாதாக்கியதத்துவம் பைசந்தியைக் காரியப்படுத்தும். ஈசுவரதத்துவம் மத்திமையைக் காரியப்படுத்தும். சுத்தவித்தை வைகரியைக் காரியப்படுத்தும்.

இப்படி வாக்கு நான்கினுமுணர்த்த உணர்ந்த ஆன்மா சகலாவத்தைப்பட்டு வருகிறதெப்படியென்னில்.— கிரியாசத்தி சத்திதத்துவத்தை யெழுப்பச், சத்திதத்துவங் காலத்தையும் நியதியையுங் கலையையுமெழுப்ப, கலை ஆணவமலத்தைச்சிறிதேநீக்க, ஆன்மா கலையே வடிவாய்த் துரியத்திலே பிராணவாயுவைக்கூடிச் சுழுத்தனாவன்.

இனி ஞானசத்தி சுத்தவித்தையை யெழுப்ப, சுத்தவித்தை வித்தையையெழுப்ப, வித்தை ஆன்மாவுக் கறிவையெழுப்பும். இனி யிச்சாசத்தி ஈசுவரதத்துவத்தையெழுப்ப, ஈசுவரதத்துவம் இராகதத்துவத்தையெழுப்ப, இராகதத்துவம் ஆன்மாவுக்கு இச்சையை யெழுப்பும். இப்படி ஆன்மா இச்சாஞானக்கிரியா சொரூபனாயிருக்கும். ஆன்மாவானது காலம், நியதி, கலை, வித்தை, இராகம் இவ்வைந்துந் தனக்கு உடம்பாகக்கொண்டு இந்திரியங்களுடனேகூடிச் சத்தாதிவிடையங்களைப் புசிக்கவருகிற அவதரத்தைப் புருடதத்துவமென்றுசொல்லுவர். ஆதலால் ஆன்மாவுக்குப் பஞ்சகஞ்சுகனென்று பெயர்.

இப்படிப் புருடதத்துவமான அவதரத்திற் கிரியாசத்தி சாதாக்கியதத்துவத்தை யெழுப்ப, சாதாக்கியம் பிரகிருதியை யெழுப்ப, பிரகிருதி குணரூபமாய் ஆன்மாவைக்கூட, ஆன்மா குணமேவடிவாய்ப் போகத்துக்கேதுவான கருவிகளைக் கூடாநிற்கும். இப்படி ஆன்மா கருவிகளைக்கூடிச் சொப்பனத்தனாவன், சொப்பனத்தனை அவ்தர

த்திலுணர்த்து முறைமை பதினைந்து பிரகாரமாயிருக்கும். அவை யெங்ஙனமெனின்—அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் என்னும் தத்துவங்களை அகார-உகார-மகார-விந்து-நாதம் என்னும் அட்சரங்களெழுப்ப அந்த அட்சரங்களைப் பிரம்மா - விஷ்ணு-உருத்திரன் - மகேசுவரன் - சதாசிவனென்னும் - அதிதேவதைகளெழுப்ப, ஆன்மா இவையேவடிவாய்ச் சூட்சுமதேகியாய்ச் சாக்கிரத்திற் புசிப்பதுபோலச் சொப்பனத்திலும் புசிக்கும்.

இனி இவற்றுடனே சாக்கிரத்தனுவன், சாக்கிரத்தனை அவதரத்திலுணர்த்து முறைமை யெங்ஙனமெனின்—ஆகாயமிடமாகநின்று சுரோத்திரத்தைப் பொருந்திச் சத்தத்தையறிந்தால் வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாகநின்று துவக்கினைப்பொருந்திப் பரிசத்தையறிந்தால் பாதங்கமனிக்கும். அக்கினியினிடமாகநின்று சட்சுவைப்பொருந்தி உருவத்தையறிந்தால் பாணியிடுதலு மேற்றலுஞ் செய்யும். அப்புவினிடமாகநின்று சிகுவையைப்பொருந்தி இரசத்தையறிந்தால் பாயு மலசலத்தைவிடும். பிருதுவியினிடமாகநின்று கிராணத்தைப்பொருந்திக் கந்தத்தையறிந்தால் உபத்தமானந்திக்கும். இப்படிக் காரியப்படுகிற அவதரத்தில் ஞானசத்தி சிவதத்துவத்தையெழுப்ப, சிவதத்துவம் மாயையையெழுப்ப, மாயை குணரூபமாய்நின்று மும்மூன்றொன்பது குணங்களாலேயும் பேதிப்பித்துப் பொய்யைமெய்யென்று மயக்காநிற்கும். குணங்களொன்பதாவன—சத்துவத்திலே சத்துவம், சத்துவத்திலே ரஜஸ், சத்துவத்திலே தமஸ்.—ரஸஸிலே ரஜஸ், ரஜஸிலே தமஸ், ரஜஸிலே சத்துவம்.—தமஸிலே தமஸ், தமஸிலே சத்துவம், தமஸிலே ரஜஸ் என்பனவாம்; இவற்றால் ஆன்மா ஜனனமரணப்பட்டுவரும். இதற்குச் சகலாவத்தையென்று பெயர். இப்படி மேலாலவத்தையைத் தரிசிக்க.

———

## சுத்தாவத்தை.

சுத்தாவத்தையாவன—கன்மவொப்பும் மலபரிபாகமு முண்டான அவசரத்திலே ஞானாசாரியனாலே ஞானதீபத்தைப்பெற்றுச் சிவனையும், ஆன்மாவையும், பாசத்தையும், உணர்ந்து அருள்பெறும் அவதரம் எங்ஙனமென்னிற் பூதங்களைத்தரிசிக்கவே தூலதேகமில்லையாம்; இந்திரியங்களைத் தரிசிக்கவே பூதங்களில்லையாம்; அந்தக்கரணங்களைத் தரிசிக்கவே இந்திரியங்களில்லையாம்; கலாதிகளைத் தரிசிக்கவே அந்தக்கரணங்களில்லையாம்; சுத்ததத்துவங்களைத் தரிசிக்கவே கலாதிகளில்லையாம்; அருளைத்தரிசிக்கவே சுத்ததத்துவங்களில்லையாம்.

இது நின்மலசாக்கிரம் நின்மலசொப்பனம் நின்மலசுழுத்தி நின்மலதுரியம் நின்மலதுரியாதீதம் என ரு-ஆம். நின்மலசாக்கிரமாவது பிரபஞ்சம் அநித்தியமெனத் தோன்றி ஆசாரிய ரனுக்கிரகத்தினாலே பற்றறப்புகுந்து பொறிபுலன்மேலிட்ட பசுகரணங்கள் சிவகரணங்களாயிருக்கை. நின்மலசொப்பனமாவது கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றுப்பொருந்துவன மனதிலே கோசரியாம லிருக்கை.—நின்மல சுழுத்தியாவது இந்தப்பேறு பெற்றோமென்னும் நிராசையினாலே பரிணாமத்தை யடைகை:—நின்மல துரியமாவது தனக்கின்பம் பிறந்த சம்பூரண திசையை யடைகை.—நின்மல துரியாதீதமாவது முன்சொல்லப் பட்டபேறு நான்கு மின்றிப்பேறாய் விடுகை. சம்பூரண திசையிலே நீரிலேமுழுகின வனைப்போலவும் நிறையவுண்டவனைப் போலவும் தானன்றிச் சுட்டன்றிச் சொல்லப்படாது இதற்கு நின்மலாவத்தை யென்றும்பெயர் இப்படிச் சுத்தாவத்தையைத் தரிசிக்க.

## காரணாவத்தை.

காரணாவத்தையாவன.—காரணகேவலமும், காரணசகலமும், காரணசுத்தமுமென ௩-ஆம். காரணகேவலமாவது சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் அசுத்தமாயா காரணத்திலே யொடுங்கிச் சிருட்டிகாலமளவும் ஆணவ † மலத்தாலே மறைப்புண்டு ஒன்றுமறியாமற் கிடக்குமவதரமென வறிக.—காரண சகலமாவது சிருஷ்டிதொடங்கிச் சர்வசங்காரம் வருமளவும் ஆன்மாக்கள் எண்பத்துநான்கு நூறுயிரம்யோனிபேதத்திலும் பிறந்திறந்துதிரிகிற வவதரமெனவறிக—காரணசுத்தமாவது இங்ஙனங் கேவலசகலப்பட்டுப் பிறந்திறந்து திரியுமவதரத்து ஆணவமலபாகம்வந்து ஆன்மாக்களுக் கிருவினையொப்புஞ் சத்தினிபாதமு முண்டானவவதரத்துச் சிவன் ஆசாரியமூர்த்தமாக வெழுந்தருளி இரட்சித்துத்தனது திருவருளாலே ஞானத்தையுங் கடாக்ஷித்துப் பிராரத்தந் தொலைந்தபின்பு தனதுபூரணநிலையோடுங் கூட்டிக்கொண்ட அவதரமெனவறிக.

## தசகாரியம்.

தசகாரியமாவன. * தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், என்பனவாம்.

† மலபேதங்களைச் சித்தாந்தக்கட்டளையிற் காண்க.

* இவற்றின் விரிவைச் சித்தாந்த தசகாரியக் கட்டளையிற் காண்க.

தத்துவரூபமாவது—அவற்றின் குணங்களைக்காண்கை.

தத்துவதரிசனமாவது—அவை தன்னிடத்திலே நின்றுசீவித்த முறையைக்காண்கை.

தத்துவசுத்தியாவது—அவை தனக்கு வேறென்றறிந்து நீங்குகை.

ஆன்மரூபமாவது—ஆன்மஞானமென்னும் அறிவே வடிவெனவறிகை.

ஆன்மதரிசனமாவது—தத்துவங்களையறிந்து நீங்கி யிவற்றினின்று நீங்கினவறிவு நானெனவறிகை.

ஆன்மசுத்தியாவது—பந்தமுத்தி யிரண்டிலுஞ் சிவ னுபகரிக்கி றனென்று தன்னுடைய சுதந்தர ஆனியையறிகை.

சிவரூபமாவது—தத்துவமுப்பத்தாறிற்கும் அப்பாலாய் வாக்கு மனோதீதாகோசரமாய் ஞானமேவடிவா யிருப்பதெனவறிகை.

சிவதரிசனமாவது—தத்துவமுப்பத்தாறையு மறிந்துத் தரிசிப்பித்து நீக்கி இவற்றினின்று நீங்கிநிற்கும் ஆன்மாவையுந் தரிசிப்பித்து நிற்கின்ற ஞானமெனவறிகை, சிவயோகமாவது இந்தஞானந் தன்னைவிட்டு நீங்காதென்றறிந்துதான் அதுவாய் நிற்கை.

சிவபோகமாவது—தான் அந்தநேயத்திலே நிறமூழ்த்திச் சிவத்தைப்பெறுகை.

ஆன்மரூபமாவது—ஆன்மாவுக்கு ரூபஞ்சொல்லில் ஆன்மா இச்சாஞானக்கிரியா சொரூபமாயிருக்கும்.

ஆன்மாவுக்கு இச்சையாவது—விஷயங்களிலே சென்றுபற்றுதல்.

ஆன்மாவுக்கு ஞானமாவது—இது விது வென்று பகுத்தறிதல்.

ஆன்மாவுக்குக் கிரியையாவது—சர்வத்தையும் தனது விடய மென்று பற்றிநின்று செய்துகொள்ளுதல்.

ஆன்மதரிசனமாவது—ஆன்மாவினுடைய இச்சாஞானக்கிரியையைத் தரிசிக்குமாறு சொல்லில் ஆன்மாவினுடைய இச்சை சீவிக்குமிடத்து அந்தக்கரணங்களினிடமாகநின்று சீவிக்கும்.

ஆன்மாவினுடைய ஞானஞ் சீவிக்குமிடத்து ஞானேந்திரியங்களினிடமாகநின்று சீவிக்கும்.

ஆன்மாவினுடைய கிரியை சீவிக்குமிடத்துக் கன்மேந்திரியங்களினிடமாக நின்று சீவிக்கும்.

இவைகள் அடுத்ததின் தன்மையாதலினின்றொழிந்து தத்துவங்களைத் தானன்றென்றுகழித்து அருளே தனுவாகப் பொருந்தித் தத்துவங்களையுந் தன்னையும் அந்த அருளையுந் தரிசிப்பது.

ஆன்மசுத்தியாவது—ஆன்மசுத்தியைச் சொல்லுமிடத்துச் சிவனேதான் சர்வத்தையுமறியு முறைமையுங்கண்டு சிவனே ஆன்மாவுக்கு அறியுமுறைமையுங் கொடானென்பதுங்கண்டு சிவனுடைய ஞானசத்தியிலேயல்ல தன்னுடைய ஞானஞ் சீவிக்குமென்றறிந்து தான் மலமுமாகாமல் சிவமுமாகாமல் நிற்கிறவிடம்.

சிவரூபமாவது—சிவனுக்கு ரூபஞ்சொல்லில் சிவனு மிச்சாஞானக்கிரியா சொரூபனாயிருப்பன்.

சிவனுக்கிச்சையாவது—ஆன்மாக்களை முத்தியிலே யடைவிக்க வேண்டுமென்பதே.

சிவனுக்கு ஞானமாவது—ஆன்மாக்கள் செய்யப்பட்ட அநாதி கருமங்களனைத்தையுந் திருவுளத்தடைத் திருத்தல்.

சிவனுக்குக் கிரியையாவது—ஆன்மாக்களுக்குக் கன்மசாமீப்பியம்பிறக்கும்படி அநாதியாய் வரப்பட்ட கன்மங்களனைத்தையும் பக்குவாபக்குவமறிந்து கூட்டிப்புசிப்பித்துத் தொலைப்பித்தருளுதல்.

சிவதரிசனமாவது—தான் கருமம் புசிக்குமிடத்துச் சிவன்தனக்கு மூன்றுவகையாகநின்று உபகரிப்பன். அதெப்படி யென்னில்—அவன்-அவள்-அது-முன்னிலையாகநின்று உபகரிப்பன். இப்படியுபகரிக்குமிடத்துத் தோன்றுகின்ற மூன்றுவகையுமொழிந்து அவையுடமாகநின்று சேஷ்டிப்பித்துத்தான் அக்கருமத்தைப் புசிக்குமிடத்துத் தன்னிடத்து மறைந்து நின்று இந்திரியங்களையுந் தன்னையுஞ்சேஷ்டிப்பித்துத்தனக்கு அந்தக்கருமம் ருசிக்கும்படிசெய்து இடைவிடாமலூட்டுகிற நிலைத்தைப்பார்ப்பது.

சிவயோகமாவது—அகண்டபரிபூரணமாகிய சிவத்துள்ளேயழுந்தி உள்ளும்புறமு மெண்ணமற் சிவனை யுள்ளபடிகண்டு யுணர்ந்திருப்பது.

சிவபோகமாவது—பராசத்தியி னிடமாகநின்று அனுபவத்துடனேகலந்து சிவானுபவம்பிறக்கச் சிவனுடனே அக்கினிக்கு வெம்மைபோலவும் நீருக்குத் தண்மைபோலவுஞ் சிவத்திலே இரண்டறவழுந்துவது.

சிவப்பிரகாசக்கட்டளை

முற்றுப் பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாலவாய்க் கட்டளை.

## நூன்முகம்.

### காப்பு.

நேரிசை வெண்பா.

கைக்குலவு ஞானக் களிறேழுக் கட்கடத்து
மெய்க்குலவுஞ் சித்தி விநாயகா—பொய்க்குலவா
மட்டளவி லாதசிவம் வாய்த்ததிரு வாலவாய்க்
கட்டளைக்குன் றாட்டுணையே காப்பு.

## நூல்.

பதி, பசு, பாசம்—இம்மூன்றும் அநாதி நித்தியம்.

### முதலாவது.

### பதி இலக்கணம்.

பதியாவது:—ஒன்றாய், பரிபூரணமாய், அறிவுக்கறிவாய், நின்மலமாய், உயிருக்குயிராய், குறியுங்குணமுமில்லாததாய், அருவும் உருவும் அருவுருவமுமாய், இவை அல்லாததுமாய், அகண்டிதமாய், ஆநந்தமாய் விளங்குவது.

இங்ஙனம் விளங்குகிற பரமசிவமும் பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என்னும் பஞ்சசத்திகளாகிய அருளும், பின்னமின்றிச் சூரியனுங் கிரணமும்போல ஒன்றாயிருக்கும்.

இவ்வாறிருக்கிற பரமசிவம் ஆன்மாக்களை இரட்சிக்கும்பொருட்டு, அருவமாகிய சிவம், சத்தி, நாதம், விந்து நான்கும், அருவுருவமாகிய சதாசிவம் ஒன்றும், உருவமாகிய மகேச்சுரன் உருத்திரன் இருவரும், இவர்கள் அதிகாரத்தால் நடக்கும் பிரம விஷ்ணுக்கள் இருவரும் ஆக ஒன்பது மூர்த்திகளுமாய், ‡ உபாதானத் திரயங்களைக்கொண்டு, சிருட்டித்தும் திதித்தும் சங்கரித்தும் திரோபவித்தும் அநுக்கிரகித்தும் இங்ஙனம் பஞ்சகிருத்தியங்களைச் செய்யாநிற்கும். எங்ஙனஞ் செய்யுமெனின், தன்மை முன்னிலை படர்க்கையாகநின்றியற்றும்.

இவற்றுள் தன்மையாவது,—பரிபூரணமாயிருக்கை. முன்னிலையாவது,—இச்சாஞானக்கிரியைகளாயிருக்கை. படர்க்கையாவது,—மனம், புத்தி, அகங்காரம், சித்தம், உள்ளம் ஆக-ரு. அகாரம்,உகாரம், மகாரம், விந்து, நாதம் ஆக-ரு; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆக-ரு. ஆகிய பதினைந்து பிரகாரமாயிருக்கை.

பிரபஞ்சம் இவ்விடங்களில் எவ்வாறு காரியப்படும் எனின்,இவற்றுள் கரணங்களை அக்கரங்கள் செலுத்த, அக்கரங்களை மூர்த்திகள் செலுத்த, மூர்த்திகளை இச்சாஞானக் கிரியைகள்செலுத்த, இங்ஙனம் காரியப்படும். இவ்வாறு பிரபஞ்சத்தைக் காரியப் படுத்துகையிலேயும் அந்தச் சிவம் அதிற்றாக்கற்று நிற்கும்.

## பதியிலக்கணம் - முற்றிற்று.

---

‡ உபாதானத்திரயமாவது, சுத்தமாயை, அசுத்தமாயை; சுத்தாசுத்தமாயை ஆகிய முதற்காரணங்கள் மூன்று.

## இரண்டாவது

# பசு இலக்கணம்.

ஆன்மாக்கள்;—விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்என மூவகைப்படுவர்.

## விஞ்ஞானகலர்.

விஞ்ஞானகலர்,—அஷ்டவித்தியேசுரர், அனுசதாசிவர், சத்தகோடி மகாமந்திரர். இவர்கள் ஆணவமலமொன்றே உடையவர்கள். இவர்களுக்குச் சுத்தமாயாதத்துவம் தநு கரண புவன போகமாயிருக்கும். இவர்களில் பக்குவர்க்குப் பரமசிவம் அநுக்கிரகிக்கு முறைமையாவது, அறிவினின்றுந் திருவருளுதிப்பித்து ஆணவமலத்தைப் போக்கி இரட்சிப்பதாம்.

## பிரளயாகலர்.

பிரளயாகலர்,—நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களும் புவனகர்த்தர்களுமாயிருப்பர். இவர்கள் ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலமுடையவர்கள். இவர்களுக்கு அசுத்தமாயாதத்துவம் தநுகரண புவன போகமாயிருக்கும். இவர்களில் பக்குவர்க்கு அநுக்கிரகிக்கு முறைமையாவது,—அந்தப் பரமசிவம் மான்மழு சதுர்ப்புயம் காளகண்டம் திரிநேத்திரங்களோடு திருமேனிகொண் டெழுந்தருளி இருமலத்தைப்போக்கி இரட்சிப்பதாம்.

## சகலர்.

சகலர்,—பிர்ம விஷ்ணுமுதல் கிருமி யீறாக வுள்ளார். இவர்கள் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலமுடையவர்கள். இவர்களுக்குப் பிரகிருதி தத்துவம் தநு கரண புவன போகமாயிருக்கும்.

இவற்றுள் தநுவாவது,—சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பிசம் ஆகிய நால்வகை யோனிகளிலும் பிறப்பதாய், தேவர் பதினொரு நூறாயிரமும், மானிடர் ஒன்பது நூறாயிரமும், தாவரம் பத்தொன்பது நூறாயிரமும், மிருகம் பத்துநூறாயிரமும், பறவை பத்து நூறாயிரமும், நீர்வாழ்வன பத்துநூறாயிரமும், ஊர்வன பதினைந்து நூறாயிரமும் ஆகிய எழுவகைத் தோற்றத்திலும் எண்பத்துநான்கு லட்சயோனி பேதமாயிருக்கும். அத் தநு தூலமாகவும், சூக்குமமாகவும், காரணமாகவும் இருக்கும். அவைகளுக்கு ஆயுள் க்ஷணமுதலாக அநேக முள.

சரணமாவது,—அத் தநுவுக்கேற்ற நானாவிதங்களா யிருக்கும்.

புவனமாவது,—இருநூற்றிருபத்து நான்கிலுமுள்ள ஊரும், நாடும், தேயமுமாய்ப் புண்ணிய கன்ம முடையவர்களுக்குச் சுவர்க்காதி பதங்களுமாயிருக்கும்.

போகமாவது,—அவரவர் கன்மத்துக் கேதுவான உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, நக்குவன, விழுங்குவன, உடுப்பன, முடிப்பன, பூண்பன, பூசுவன, கொடுப்பன, வாங்குவன, காண்பன, கேட்பன, நடப்பன, படுப்பன, பெண்டு, பிள்ளை, சுற்றம், பொன், மணி இவைமுதலிய பிரபஞ்சமாயிருக்கும்.

இனி இவர்கள் சூக்குமதேகத்தைப் பொருந்திக் கன்மத்துக்கீடாகிய தூலதேகமெடுத்து, எடுத்ததேகமே தானாய்ப் புண்ணிய பாவங்களை ஆர்ச்சித்துச் சுவர்க்க நரகங்களிலே போக்குவருத்து உடைத்தாயிருப்பர்.

இவர்களில் பக்குவர்க்கு அநுக்கிரகிக்கு முறைமை எங்ஙனமெனின்? மலபரிபாகம் வந்தவிடத்து இருவினையொப்புப்பிறக்கும் அப்பொழுது முன்செய்த சிவபுண்ணியம் வந்தெய்த அப்பரமசிவம் மா

னைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல ஞானாசாரியமூர்த்தமாய் மான், மழு, காளகண்டம், திரிநேத்திரமொழித்து மானிடச்சட்டை சாத்தி, இவனது ஊரும், பேரும், உருவும் ஒழிக்கவேண்டி, ஊரும், பேரும், உருவுங்கொண்டெழுந்தருளி, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் சத்திநிபாதத் தன்மையுணர்ந்து, சமயதீக்ஷைபண்ணிச் சரியையநுட்டிப்பித்து, விசேஷ தீக்ஷைபண்ணி ஞான மனுக்கிரகித்து, மல மாயாதி கன்மங்களைநீக்கி மோட்சத்தைக் கொடுக்கும்.

ஆன்மாக்களின் பரியாய நாமங்களாவன,—பசு, சீவன், புருடன், புமான், தேகி, கிஞ்சிஞ்ஞன், சுதந்தரவீனன், பரதந்திரன், அகர்த்தா, அணு, அறியாதவன், உள்ளம், சைதன்யன், பிரகிருதி, புத்தி, பிராணன், சதசத்து, புட்கலன் முதலியன.

மூவகை ஆன்மபேதமுஞ் சரீரத்தையடைந்து காரியப்படு முறைமையும் அநுக்கிரகம்பெறு முறைமையுங் கண்டுகொள்க.

## பசுவிலக்கணம்,

முற்றிற்று.

## மூன்றாவது
## பாச இலக்கணம்.

பாசமாவது:—ஆன்மாக்களுக்கு அநாதியிலேயே பந்தமாயிருக்கிற ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, திரோதாயி என ஐவகைப்படும்.

### ஆணவம்.

இவற்றுள் ஆணவமாவது,—ஒன்றாய், பரிபாகத்திலே நீங்குஞ் சத்தியையுடையதாய், மூலமலமாய், இருளு மொளியென்ன ※ இரண்டதாய், வியாபகமாய், சிவத்தையும் ஆன்மாவையும் பாசத்தையும் தெரியவொட்டாமல், செம்பிற் களிம்புபோலவும் அரிசியிற் றவிடு போலவும் தண்ணீரில் உப்புபோலவும் ஆன்மாவை இரண்டறக்கலந்து இச்சாஞானக் கிரியைகள் முழுவதையு மறையாநிற்கும்.

### கன்மம்.

கன்மமாவது,—வியாபகமாய், அவ்வவ் வணுக்கள் தோறும் வெவ்வேறாய், மனோவாக்குக் காயங்களினு லறிந்தும் அறியாமலு மியற்றுவதனால் வந்தேறுகிற புண்ணிய பாவங்களாய், சுகதுக்கங்களைப் பண்ணுவதாய், இதாகிதங்களினாலாவதாய், அநுபவித்தாலன்றித் தீராததாய், ஒன்றாலொன் றழிக்கப்படாததாய், விதிப்படி பரிகாரஞ்செய்யின் நீங்குவதாய், நெல்லுக்குள் முளைபோல ஆன்மாவிற் பற்றியிருப்பதாய், சங்கிலிபோலத் தொடர்ச்சியாய், அழிந்தும் ஆகியும் வருவதாய், பிரவாகத்து அலைபோல்வதாய், சிருட்டிகாலத்தே காரியப்படுவதா யிருக்கும்.

---

※ ஆன்மசிற்சத்தியை மறைத்தலால் இருளும் பிரகாசமென்று சொல்லும்படி மிகக் கறுத்துள்ளது ஆணவமலம் எனப்பொருள்.

இந்தக்கன்மம்,—சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகையாம்.

## சஞ்சிதம்.

இவற்றுள் சஞ்சிதமாவது,—அநாதிதொட்டுச் சனனங்கள்தோறும் ஆர்ச்சித்த வினை புசித்து மிஞ்சியதாகிய + ஆறு அத்துவாக்களிலுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணியபாவங்களாயிருக்கும்.

## பிராரத்தம்.

பிராரத்தமாவது,—இந்தச் சஞ்சிதத்திற் சிறிது புசிக்கப் பாகப்பட்ட வினை ஒருசரீரத்தை யெடுப்பித்துச் சாதி யாயுள் போகங்களைக் கொடுக்கும்.

## ஆகாமியம்.

ஆகாமியமாவது,—பிராரத்தம் புசிக்குமிடத்து வந்தேறுகிற புண்ணிய பாவங்களாயிருக்கும்.

## திரோதாயி.

இனித் திரோதாயியாவது,—நான்கு மலங்களின் காரியங்களையேவி ஆன்மாக்களுக்குப் பிரபஞ்சமாகிய பொய்யை மெய்யென்றுருசிப்பித்து நிற்கும். அதனால் அதைப் பாசமென்றுஞ் சொல்லுவர்.

## சுத்தமாயை.

சுத்தமாயையாவது,—விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் தநு கரண புவன போகமாய் இருக்கும்.

---

× அத்துவா ஆறுவன,—மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம்.

## அசுத்தமாயை.

அசுத்தமாயையாவது,—சகலருக்குந் தநு கரண புவன போகங்களா யிருக்கும்.

## தத்துவங்கள்தோன்று முறைமை.

இவ்விருவகை மாயையிலும் தத்துவங்கள் தோன்று முறைமை எங்ஙனமெனின்? பரமசிவனுடைய பராசத்தியருளினாலே † குடிலையிலேநாதமும், நாதத்திலே விந்துவும், விந்துவிலே சாதாக்கியமும், சாதாக்கியத்திலே ஈச்சுரமும், ஈச்சுரத்திலே சுத்த வித்தையும் தோன்றும். இவை ஐந்தனுள் முன்சொன்ன விந்துவிலே நாலுவாக்கும், ஐம்பத்தோரட்சரமும், எண்பத்தொரு பதமும், பஞ்சகலைகளும், சத்தகோடி மகாமந்திரங்களும் தோன்றும்.

அசுத்தமாயையிலே நின்று அநந்ததேவ நாயனா ரருளினாலே காலமும், நியதியும், கலையும் தோன்றும். கலையிலே வித்தை தோன்றும். வித்தையிலே அராகந்தோன்றும். ஆன்மா இவ்வைந்துடன் கூடிப் பஞ்சகஞ்சுகனான புருடனும். முன்சொன்ன கலையிலேஉருத்திரதேவநாயனார் அருளினாலே குணரூபமான மூலப் பிரகிருதி தோன்றும். மூலப்பிரகிருதியில் முக்குணங்களுந்தோன்றும். முக்குணங்களும் தோன்றாமல் நின்றவிடம் அவ்வியக்தம். அந்த அவ்வியக்தத்தில் சித்தமும், சித்தத்திற் புத்தியுந் தோன்றும். புத்தியிலே அகங்காரந் தோன்றும், அவ்வகங்காரம் தைசதவகங்காரமென்றும், வைகாரியகங்காரமென்றும், பூதாதியகங்காரமென்றும் மூவகைப்படும். இவற்றுள், தைசதயகங்காரத்திலே சாத்துவிக குணத்தைப்பொருந்திய மனமும் ஞானேந்திரிய மைந்துந் தோன்றும். வைகாரியகங்காரத்திலே இராசதகுணத்தைப் பொருந்திய கன்மேந்திரிய மைந்துந்

---

† மகாமாயை.

தோன்றும். பூதாதியகங்காரத்திலே தாமதகுணத்தைப் பொருந்திய தன்மாத்திரைகளைந்துந் தோன்றும். சத்தத்திலே ஆகாயந்தோன்றும். பரிசத்திலே வாயுதோன்றும். உருவத்திலே தேயுதோன்றும். இரசத்திலே அப்புதோன்றும். கந்தத்திலே பிருதிவிதோன்றும்.

இங்ஙனந் தோன்றிய கருவி, அகக்கருவி, புறக்கருவி என இருவகைப்படும்.

அகக்கருவி-௩௬.

## ஆன்மதத்துவம்.

அவற்றுள் அகக்கருவி,—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்பூதம்-௫. சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, கிராணம் என ஞானேந்திரியம்-௫. இவற்றின் விடயமான சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் எனத் தன்மாத்திரை-௫. வாக்கு, பாதம் பாணி, பாயு, உபத்தம் எனக் கன்மேந்திரியம் - ௫. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என அந்தக்கரணம்-௪. ஆக-௨௪.

## வித்தியாதத்துவம்.

வித்தியாதத்துவம்,—காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என-௭.

## சிவதத்துவம்.

சிவதத்துவம்,—சுத்தவித்தை, ஈச்சுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என-௫. ஆக அகக்கருவி ௩௬-ஆம்.

## புறக்கருவி ௬0.

புறக்கருவி,—பிருதிவியின்கூறு தோல், எலும்பு, நரம்பு, தசை, மயிர் என-௫; அப்புவின்கூறு-நீர், உதிரம், மச்சை, மூளை, சுக்கிலம் என-௫; தேயுவின்கூறு-ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் என-௫; வாயுவின்கூறு-ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல்,

கிடத்தல் என-ரு; ஆகாயத்தின்கூறு-குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என-ரு; ஆக பூதகாரியம்-உரு; பிருதிவியின் வழித்தான இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி என நாடிகள்-க0; வாயுவின்வழித்தான பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என வாயுக்கள்-க0; ஆகாயத்தின்வழித்தான அர்த்தஎடணை, புத்திர எடணை, உலகஎடணை என எடணை-ங; வாக்காதியின் வழித்தான வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்தம் என-ரு; பிரகிருதியின் வழித்தான சாத்துவீகம், இராசதம், தாமதம் என குணம்-ங; விந்துவின் வழித்தான சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என வாக்கு-ச. ஆகப் புறக்கருவி சுO-ஆம்.

ஆக அகக்கருவி புறக்கருவிகளாகிய தத்துவந் தொண்ணூற்றாறுந் தோன்றியமுறைமையிலே ஒடுங்குமுறைமையுங் கண்டுகொள்க.

## ஆன்மதத்துவங்களின் தொழில்.

தத்துவங்களின் தொழிலாவன,—பிருதிவிக்குவடிவு - நாற்கோணம், நிறம்-பொன்மை, குணம்-கடினம், சுபாவம்-கிடத்தல், தொழில்-பொறுத்தல், குறி-வச்சிரம், தேவதை-பிரமன், அட்சரம்-லகாரம், சூக்கும பஞ்சாட்சரம்-அகாரம், கலை-நிவர்த்தி.

அப்புவுக்கு வடிவு-இருகோணம், நிறம்-வெள்ளை, குணம்-நெகிழ்ச்சி, சுபாவம்-பதார்த்தம், தொழில்-கட்டுண்டல், குறி கோகநகம், தேவதை-விஷ்ணு, அட்சரம்-வகாரம், சூக்குமபஞ்சாட்சரம் - உகாரம், கலை-பிரதிஷ்டை.

தேய்வுக்கு வடிவு-முக்கோணம், நிறம்-செம்மை, குணம்-சுட்டொன்றுவித்தல், சுபாவம்-வவ்வுதல், தொழில்-உலர்த்தல், குறி -

சுவத்திகம், தேவதை-உருத்திரன், அட்சரம்-மகாரம், சூக்குமபஞ்சாட்சரம்-மகாரம், கலை-வித்தை.

வாயுவுக்குவடிவு-அறுகோணம், நிறம்-கறுப்பு, குணம்-சலித்துத்திரட்டல், சுபாவம்-நிறைத்தல், தொழில்-விம்முதல், குறி - அறுபுள்ளி, தேவதை-மகேச்சுவரன், அட்சரம்-யகாரம், சூக்குமபஞ்சாட்சரம்-விந்து, கலை-சாந்தி.

ஆகாயத்துக்கு வடிவு-வட்டம், நிறம்-புகை, குணம்-இடங்கொடுதல், சுபாவம்-நிற்றல், தொழில்-போக்குதல், குறி - அமுதவிந்து, தேவதை-சதாசிவம், அட்சரம்-அகாரம், சூக்கும பஞ்சாட்சரம்-நாதம், கலை-சாந்தியாதீதம்.

## ஞானேந்திரியங்களின் தொழில்.

ஞானேந்திரியம் ஐந்தின் தொழிலாவன,—சுரோத்திரம் ஆகாயமிடமாக நின்று செவியைப் பொருந்திச் சத்தத்தை யறியும்; துவக்கு வாயுவினிடமாக நின்று சரீரத்தைப் பொருந்திப் பரிசத்தை யறியும்; சட்சு அக்கினியினிடமாக நின்று கண்ணைப்பொருந்தி உருவத்தை யறியும்; சிகுவை அப்புவினிடமாக நின்று நாவைப்பொருந்தி இரசத்தை யறியும்; கிராணம் பிருதிவியி னிடமாகநின்று மூக்கைப் பொருந்திக் கந்தத்தையறியும்.

## கன்மேந்திரியங்களின் தொழில்.

கன்மேந்திரியம் ஐந்தின் தொழிலாவன,—வாக்கு ஆகாயமிடமாகநின்று வசனிக்கும்; பாதம் வாயுவினிடமாக நின்று கமனிக்கும்; பாணி அக்கினியி னிடமாக நின்று இடுதலும் ஏற்றலுஞ் செய்யும்; பாயு அப்புவினிடமாக நின்று மலவிசர்ச்சனஞ்செய்யும்; உபத்தம் பிருதியினிடமாக நின்று சுக்கிலத்தைக் கழிக்கும்.

## தன்மாத்திரைகளின் தொழில்.

தன்மாத்திரைகள் ஐந்தின் தொழிலாவன,—சுரோத்திராதிகளுக்குவிடயமாயிருக்கும்.

## அந்தக்கரணங்களின் தொழில்.

அந்தக்கரணங்களின் தொழிலாவன:—மனம் பற்றும், புத்தி நிச்சயிக்கும், அகங்காரம் கொண்டெழும்பும், சித்தஞ் சிந்திக்கும்.

## வித்தியாதத்துவங்களின் தொழில்.

வித்தியா தத்துவங்களின் தொழிலாவன,—காலம் செல்காலமான எல்லையும், நிகழ்காலமான பலமும், எதிர்காலமான புதுமையும் ஆக மூன்றுவிதமாயிருக்கும்.

நியதி அரசனாணை போலக் கன்மபலத்தை உள்ளளவும் நிறுத்தும்.

கலை ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குக் கிரியையையெழுப்பும்.

வித்தை ஆன்மாவுக்கு ஞானத்தை எழுப்பும்.

அராகம் ஆன்மாவுக்கு இச்சையையெழுப்பும்.

ஆகக்கலையாதி பஞ்ச கஞ்சுகத்துடனே கூடிப் புல்லுகருமிடமே புருடனும்.

மாயை பிரகிருதி குணரூபமாய் நின்று பொருந்தினதிலழுந்தும்.

## சிவதத்துவங்களின் தொழில்.

சிவதத்துவங்கள் ஐந்தின் தொழிலாவன,—சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும்.

ஈச்சுர தத்துவம் கிரியையேறி ஞானங் குறைந்திருக்கும்.

சாதாக்கிய தத்துவம் ஞானமுங் கிரியையு மொத்திருக்கும்.
சத்திதத்துவம் கிரியையா யிருக்கும்.
சிவதத்துவம் ஞானமா யிருக்கும்.
ஆக அகக்கருவி முப்பத்தாறின் தொழிலுங் கண்டுகொள்க.

## பூதகாரியம்.

புறக்கருவியின் தொழிலாவன:—பூதம் ஐந்தில் பிருதிவியின் கூறாகிய மயிர் வளரும், எலும்பு உரக்கும், தோல் வறங்கன்னும், நரம்பு கதித்தோடும், தசை முற்றும்.

அப்புவியின் கூறாகிய நீர் விழும், உதிரம்பரக்கும், சுக்கிலம் வர்த்திக்கும், மூளை மெத்தென்றிருக்கும், மச்சை நிறைக்கும்.

தேயுவின் கூறாகிய பசி தாபிக்கும், நித்திரை மயக்குங், பயம் அஞ்சுவிக்கும், மைதுனம், சங்கமஞ் செலுத்தும், சோம்பு முறிப்பிக்கும்.

வாயுவின் கூறாகிய ஓடல் விரைவிக்கும், இருத்தல் அழுத்துவிக்கும், கிடத்தல் போடுவிக்கும், நடத்தல் எழுப்புவிக்கும், நிற்றல் நிற்பிக்கும்.

ஆகாயத்தின் கூறாகிய காமம் மோகிப்பிக்கும், மதம் அகங்கரிப்பிக்கும், குரோதம் கோபிக்கும், லோபம் பிசினிப்பிக்கும், மாச்சரியம் இகழ்விக்கும், ஆக பூதகாரியம்-உ௫.

## பிருதிவியின் வழித்தான நாடிகளின் தொழில்.

பிருதிவியின் வழித்தான நாடிகள் பத்தில் இடைகலை இடதுமூக்கிலே நிற்கும்; பிங்கலை வலதுமூக்கிலே நிற்கும்; சுழுமுனை நேரே நிற்கும்; காந்தாரி கண்ணிலே நிற்கும்; அத்தி உடலெங்கும் நிற

கும்; சிகுவை தாலுவிலே நிற்கும்; அலம்புடை செவியிலே நிற்கும்; புருடன் பாதத்திலே நிற்கும்; சங்கினி களத்திலே நிற்கும்; குகு மார்பிலே நிற்கும்,

## வாயுவின் வழித்தான நாடிகளின் தொழில்.

வாயு பத்தில், பிராணன் மூலாதாரத்தில் தோன்றி இடை பிங்கலையாலேறிக் கபாலத்தளவுஞ் சென்று, நாசியிலே பன்னிரண்டங்குலம் புறப்பட்டு, நாலங்குலம் வெளியே சென்று எட்டங்குலம் உள்ளே அடங்கும். இங்ஙனம் ஒருநாளைக்கு இருபத்தோராயிரத்தறுநூறு சுவாசம் நடக்கும். இதிலே ஏழாயிரத் திருநூறு வெளியே செல்லும். பதினாலாயிரத்து நானூறு உள்ளே அடங்கும். அபானன் பலவிசர்க்கம் பண்ணும். உதானன் விக்கல் இருமல் இவற்றைப் பண்ணும். வியானன் உண்ட அன்னசாரத்தை எழுபத்தீராயிர நாடிகளிலுங் கலப்பிக்கும். சமானன் எல்லாவற்றையுஞ் சமானம் பண்ணும். நாகன் தும்ம விருமலை யுண்டாக்கும். கூர்மன் கண்ணேற்றல் செய்யும். கிரிகரன் சோம்பு கொட்டாவிகளை யுண்டாக்கும். தேவதத்தன் இமைத்தல் நகைத்தல்களைச் செய்யும். தனஞ்சயன் உடம்பை வீங்கவும் விரியவுஞ்செய்து, உயிர்நீங்கிய காலத்தில் கபாலத்தைப் பிளந்து செல்லும்.

## வசனாதிகளின் காரியம்.

வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம் ஐந்தும் வாக்காதிகளுக்கு விடயமா யிருக்கும்.

## குணங்களின் தொழில்.

குணம் மூன்றில் சாத்துவிகமாவது அருள், ஐம்பொறியடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, மோனம், வாய்மை ஆகிய

எண் குணமுடையது. இராசதமாவது ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தவம், தானம், கல்வி, கேள்வி ஆகிய எண்குணமுடையது. தாமத மாவது ஒழுக்கமின்மை, காமம், கோபம், கொலை, சோம்பு, நீசிவழு, நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குண முடையது.

## எடணைகளின் தொழில்.

எடணை மூன்றில் அர்த்த எடணை திரவிய முதலியவற்றால்வரும் பிணக்கு; புத்திர எடணை புத்திரர் முதலாகிய சுற்றத்தாரால் வரும் பிணக்கு; உலக எடணை உலகமுதலாகிய சங்கற்பத்தால் வரும் பிணக்கு.

## வாக்குகளின் தொழில்.

வாக்கு நான்கில் சூக்குமையாவது சோதியாய் நேர்மையாய் ஒன்று சொல்லவந்த விடத்தில் துரியத்தில் நாதமாய்த்தோன்றுவது; பைசந்தியாவது சுழுத்தித்தானத்தைப் பொருந்திய சூக்குமையில் தோன்றியநாதம், உதான வாயுவினாலே சிதறப்பட்டு மயில்முட்டையில் பஞ்சவன்னமு மடங்கியிருப்பதுபோல, இனிச் சொல்லும் வசனத்துக்கு அக்கரசொரூபம் பிறக்கக் கருக்கொண்டிருப்பது; மத்திமையாவது அந்தச்சிதறப்பட்ட வாயுவானது, சொப்பனத் தானத்திலே பிராணவாயு வுடனே சேர்ந்து அக்கரத்தினது சொரூபங்களைப் புத்தியிலே ஒழுங்குபட நிறுத்திச் செவியிற் கேளாமல், உள்ளே கேட்கத்தக்க ஒலியாய்க் கண்டத்திலே முழங்கா நிற்பது; வைகரியாவது நாக்கு, அண்ணம், உதடு, பல், மூக்கு என்னும் ஐந்திடத்திலேயும் புறப்பட்டுச் செவிக்குக் கேட்க வசனிக்கப் படுவது. இந்தவாக்கு நான்கும் பஞ்சகலைகளாற் காரியப்படும்.

இங்ஙனம் புறக்கருவிகள் ௬௦ - ன் தொழிலையும் பஞ்சவாசகங்களையும் அவற்றினுண்டாகிய தோற்ற வொடுக்க முதலியவற்றையுங் கண்டுகொள்க.

## அவத்தை.

அவத்தைகளாவன,—கேவலம், சகலம், சுத்தம், என மூன்று வகைப்படும்.

இவற்றுள் கேவலமாவது,—ஆன்மா தத்துவங்களொன்றையுங் கூடாதிருப்பது; சகலமாவது,—தத்துவங்களுடனேகூடிக் காரியப்படுவது; சுத்தமாவது,—கேவல சகல மிரண்டுந் தாக்காமல் பரமசுகமாகிய ஆநந்தத்தைப் பெற்றிருப்பது. ஆக காரணாவத்தை மூன்றில் கேவலாவத்தையின் காரியம்-ரு, சகலாவத்தையின் காரியம்-ரு, சுத்தாவத்தையின் காரிய-ரு, ஆக காரியாவத்தை-கரு.

## கீழாலவத்தை.

கேவலத்தின் காரியமாகிய கீழாலவத்தை சாக்கிரம், சொப்பனம், சுத்தி, துரியம், துரியாதீதம் ஆக-ரு.

## சாக்கிரம்.

இவற்றுள் சாக்கிரமாவது,—தத்துவம் முப்பத்தாறில் சிவ தத்துவம் ரு-ம், புருடன் நீங்கலாகக் கலாதிகள் சு-ம், பூதம் ரு-ம், ஆக பதினாறு கருவியும் நீங்கி, நின்ற கருவிகள் இருபதும், புறக்கருவி யறுபதில் வாயுக்கள் பத்தும், வசனாதிகளைந்தும், ஆகிய முப்பத்தைந்துடனே லலாடஸ்தானத்தில் நின்று கண்டு கேட்டுண்டுயிர்ப்பது நீங்கி மயக்கத்தைப் பொருந்தி அறிகருவிகளையுஞ் செலுத்துங் கருவிகளையுங் கைவிட்டு நிற்கின்ற அவதரம்.

## சொப்பனம்.

சொப்பனமாவது,—ஞானேந்திரியங்களைந்துங், கன்மேந்திரியங்களைந்தும் ஆகிய பத்தும் லலாடஸ்தானத்திலே நிற்க, மற்ற இருபத்தைந்து கருவிகளுடனே கண்டத் தானத்திலே நின்று சூக்குமதேகத்தாற் பயன்கொண்டு அசீவனமாக நின்ற அவதரம்.

## சுழுத்தி.

சுழுத்தியாவது,—பிராண வாயு நீங்கலாக வாயுக்கள் ஒன்பதும், சித்தம் நீங்கலாக அந்தக்கரணம் ௩-ம், சத்தாதி ௫-ம், வசனாதி ௫-ம், ஆக இருபத்திரண்டும், கண்ட ஸ்தானத்திலேநிற்க, சித்தமும் பிராணவாயுவும் புருடனும் ஆகிய ௩ - கருவிகளுடனே ஒன்றுந் தெரியாது இருதயத்தில் நின்ற அவதரம்:

## துரியம்.

துரியமாவது,—சித்தமொன்றும் இருதயத்தில் நிற்கப் பிராணவாயுவும் புருடனும் நாபித்தானத்திலே ஒன்று மறநின்ற அவதரம்.

## துரியாதீதம்.

துரியாதீதமாவது,—பிராணவாயு ஒன்றும் நாபியில் நிற்கப் புருடனொன்றும் மூலாதாரத்திலே அதீதமாய்க் கருவிகளொன்று மின்றிக் கேவலஸ்தனாய் நிற்பது. ஆகக் கீழாலவஸ்தை—௫.

## மத்தியாலவத்தை.

சகலாவத்தையின் காரிய மாகிய மத்தியாலவத்தையாவது,—சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற்சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற் றுரியாதீதம் ஆக-௫. இவற்றுள் சாக்கிரத்தில் அதீதமாவது, ஒருவன் ஒருபதார்த்தத்தை ஓரிடத்திலேவைத்து அறியாமல் திகைத்து நின்ற அவதரம்; சிறிது பிராணவாயு இயங்கியது சாக்கிரத்திற் றுரியம்; அந்தப்பதார்த்தம் எங்கே வைத்தோமென்று விசாரிக்க வந்தவிடம் சாக்கிரத்திற் சுழுத்தி; அந்தப்பதார்த்தம்வைத்தவிடம் நினைவெழத்தோன்றுவது சாக்கிரத்திற் சொப்பனம்; அந்தப் பதார்த்தம் புலப்பட அறியவந்தவிடம் சாக்கிரத்திற் சாக்கிரம், ஆக மத்தியாலவத்தை—௫.

## நின்மலாவத்தை.

சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலாவத்தையாவது,— அமல சாக்கிரம், அமல சொப்பனம், அமல சுழுத்தி, அமல துரியம், அமல துரியாதீதம், ஆக—ரு. இவற்றுள், அமலசாக்கிரமாவது-ஆசாரியராலே ஞானதீட்சை பெற்றுத் திரிபதார்த்த வுண்மையை விசாரித் தறிந்து கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பொருளுடனேநிட்டை கூடும் பகுதிக்குக் கருவியினின்றுநீங்கி விசாரித்து நிற்பது; அமல சொப்பனமாவது - கருவிகளினின்று நீங்கியும் நீங்காதும் நிற்காது நடுவே சற்றுப் பதைப்புண்டாய் நிற்பது; அமல சுழுத்தியாவது-தத்துவங்களினின்றுநீங்கி மேலான கேவலத்தனாய் நிற்பது; அமல துரியமாவது-கேவலம் நீங்கி அருளினாலே தன்னையும் அருளையுங்கண்டு தன்வசத் தழிந்து அருள்வழித்தாய் நிற்பது; அமலதுரியாதீதமாவது-பணியற நின்று சிவத்தைத்தரிசித்து ஆநந்தத்திலழுந்தி நிற்பது. ஆகக் காரியாவத்தை-கரு, காரணாவஸ்தை ௩-ஆக அவத்தை ௪அ-ல், பெத்தர்க்கு கஉ-ம், சத்திநிபாத முத்தர்க்கு ௬-ம், எனக்கொள்க.

இனி யுணர்த்து முறைமை ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி; ஆன்ம லாபம் என மூன்று விதமாயிருக்கும்,

## ஆன்மதரிசனம்.

இவற்றுள் ஆன்மதரிசனமாவது,—ஆன்மா படிகம்போல்வதென்றும், தானா யிருப்பதென்றும், எப்பொழுதும் வியாபி யென்றும், இதனறிவு சிவனறிவிலே கலந்துநின்று கண்ணும் ஆதித்தனும் போலக் காணுமென்றும், ஒரு பதார்த்தத்தை அறியவேண்டின் பொறியிலொன்றும் பூதத்திலொன்றும் அந்தக்கரணம் நான்கும் கலாதிகள் ஏழும் சிவதத்துவம் ஐந்தும் ஆகக் கருவிகள் கஅ-ம், கூடாமல் அறியமாட்டாதென்றும், வித்தியாதத்துவங்களில் மாயையைச் சிவதத்துவஞ் செலுத்தக் கலை காலம் நியதியைச் சத்திதத்துவஞ் செலுத்த

அராகதத்துவத்தை ஈசுர தத்துவஞ் செலுத்தப் புருடனைச் சாதாக்கிய தத்துவஞ் செலுத்த வித்தையை சுத்தவித்தை செலுத்த ஈசுர தத்துவத்தை இச்சாசத்தி செலுத்தச் சாதாக்கிய தத்துவத்தையுஞ் சத்தி தத்துவத்தையுங் கிரியாசத்தி செலுத்தச் சுத்தவித்தையையுஞ் சிவதத்துவத்தையும் ஞானசத்திசெலுத்த இவ்வாறு காரியப்படுவதன்றித் தத்துவங்கள் தாமேவந்து ஆன்மாவைப் பொருந்தமாட்டாவென்றும், அவ்வான்மா தானே தத்துவங்களைப் பொருந்தமாட்டா தென்றும், திருவருள் கூட்டிமுடிக்கக் காரியப்படு மென்றும், பெத்தத்திலும் முத்தியிலும் ஒருகாலும் விட்டு நீங்காமல் நிற்கும் அருளுக்கே சுதந்தரமன்றித் தனக்கொரு சுதந்தரமு மில்லையென்றும் அறிந்து நிற்பதாம்.

## ஆன்மசுத்தி.

ஆன்மசுத்தியாவது,—தனக் கநாதியே துணையாய் இற்றைவரையுந் தோன்றாதிருந்து இப்பொழுது ஆன்மாவையுந் தன்னையுங் காட்டிநிற்கிற திருவருளே தாரகமாகத் தனக்குப் பந்தமாயிருந்த மலம் திருவடியின் நீங்கத் தன்னுடைய சுதந்தர ஆணியை அறிவதினாலும், கன்மசஞ்சிதம் தீக்ஷையினாலும், பிராரத்தம் சரீராந்தமளவும், ஆகாமியம் சுட்டற நிற்கையினாலும், மாயை யிரண்டும் தத்துவங்களெல்லாம் நீங்கி நிற்பதினாலும், வினையேறாம லிருப்பதினாலும், திரோதாயி பிரபஞ்சத்தை ருசிப்பியாம லிருந்ததினாலும், பஞ்சபாசம் நீக்கக் கண்டு பணியற்றுத் திருவருள் வசத்தாய் நிற்பதாம்.

## ஆன்மலாபம்.

ஆன்மலாபமாவது,—அங்ஙனம் இடைவிடாம லிருப்பதனாற் பரமாநந்தசுக முண்டாக,அதைப்பெற்று ஆநந்தமேலீட்டில் அழுந்தி நிற்பதாகிய நேயத்தழுந்தலாம். அந்நிட்டை கூடுதற்கரிதாயின் அவ்

வருளிலேயழுந்திநிற்க, அஃதுங் கூடுதற்கரிதாயின், பூதமுதல்நாதமளவாகப் பொய்யென்று கண்டு நீங்கித் தன்னைக்கண்டு, தானும் அருளும் நிற்குமுறைமையையுமறிந்து, அருளே நாவாக முத்திபஞ்சாட்சரத்தைச் செபியாமற் செபிக்க, அஃதுங் கூடுதற்கரிதாயின் ஞானநூலோதியும் சிந்தித்தும் அந்தரியாகம் பண்ணுக. இவ்வாறு செய்யவே உண்மை வந்து கைகூடும். இங்ஙனம் நேயத்தழுந்தல் முதலாகிய எந்நிலையில் நிற்கினும் ஆசாரியரையும் திருக்கோயிலையும் திருவேடத்தையும் நாளும்வழிபடுக.

## திருவாலவாய்க்கட்டளை

## முற்றிற்று.

---

மெய்க்கண்ட தேசிகன் திருவடிவாழ்க.

[பதிப்பு.

உ

சிவமயம்.

சிவபெருமான் சந்நிதானத்தில்

திருநந்திதேவர்

விண்ணப்பஞ்செய்தருளிய

# பதிற்றுபேறு.

கலி நிலைத்துறை,

மறைக ணிந்தனை சைவநிந் தனைபொறா மனமும்
தறுக ணைம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்.

யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாதவத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்.

மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முணர்த்திடும் பொலிவும்.

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமு றும்பர தாரநச் சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்குறாத் துறவும்.

## கலிவிருத்தம்.

துறக்கமீ துறையினு நரகிற் றேய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

## வேறு.

## கலித்துறை.

துதிவாணி வீரம்விசயம் சந்தானம் துணிவுதனம்
மதிதானியம் சவுபாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோயகல் பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட தேசிகன் திருவடிவாழ்க.

---

பதிப்பு.]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தக் கட்டளை

# நான்முகம்.

ஏகாம் பரசிவ யோகிக ளிணையடி
வாகாம் படியடி யேன்முடி யணைமுடி.

"ஒருமேவே தாந்தமென் றுச்சியிற் பழுத்த - ஆரா வின்பவருங் கனி பிழிந்த - சாரங்கொண்ட சைவசித்தாந்த" சாத்திரங்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசமுதலிய ஞான நூல்கட்கு, அகத்தியர் வரத்தா லவனியில் வந்தே-அவரொரு கடலை யாசமனஞ்செயின்-நாமிரு கடலை மாந்துவ மென்றே-வடமொழி தென்மொழி மகோததி பெருகித் - திராவிடபாடியந் திருவாய்மலர்ந்த ஆசிரியர் சிவஞானயோகிகள் முதலியோ ரருளிய வியாக்கியானங்களை யாதர வாக்கொண்டவற்றுள் வேண்டிய வாங்காங்கெடுத்துத் தொகுத்துச் சித்தாந்தக்கட்டளை எனப் பெயர் தீட்டிக் கற்பவற்கெளிதி னிற்புலப்படவே-சொற்றன னெளியேன் சோபான மாகப்-பேதந் தெரித்தும் அபேதந் தெரித்தும்-பேதாபேதம் பெரிது தெரித்தும்-இவையே யாகியு மிவையல வாகியும்-இருக்கு முளவையினிது தெரித்தும் - ஆகமாந்தத்தை யடியேற் குணர்த்திய தணிகா சலபதி தண்ணடி பணிந்தே.

இக்கட்டளைக்குச் சிந்தாந்தமென அடைமொழி யிருத்தலின், எச்சமயச்சிந்தாந்தமெனக் கடாவச் சிற்சிலப் பசு பாசஞானிக ளெழுவரேயெனின்;

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லனாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்."

என்னச் சகலாகமபண்டிதரருளிய திருப்பாசுரத்தைத் தரிசிப்பாராக.

இக்கட்டளையானது சித்தாந்த வசனபூஷணமென்னுஞ் சாத்திரத்தினைப் படித்தற்கேதுவான ஒருசோபானநூலாகும்.

மெய்கண்டதேசிகன் மெல்லடிவாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தக்கட்டளை.

---

## காப்பு.

சஞ்சிதஞ் சஞ்சலப் பஞ்சின சைஞ்சிடக்
குஞ்சரன் செஞ்சரண் கூறு.

## உபாசனாமூர்த்திவணக்கம்.

அரசமயத்தவநோன்ச மண்பூடோழித்தன்றுகண்ண
தரசமயத்தெனத்தன்னுருதந்து தமிழையொன்றி
முரசமயத்தரளச்சிவிகைக்கண் முயன்றுவரும்
பரசமயக்கோளரிப் பிள்ளையார்பதம்பற்றுதுமே.

## சிவஞானசுவாமிகள் வணக்கம்.

அவஞான மரற்றிவரு மரிவையரின் புறமுத்தி யாதிவாட்டி,நவ
ஞானந் தருப்பியெழு முப்பொருளி னுண்மையினை நன்கு நாட்டித்,
தவஞான மிழைத்திட்ட தென்றிருவா வடுதுறையிற் றபனனை,சிவ
ஞான முனிவரன்றாட் செழுங்கமலஞ்சிறியனேன் சிரக்குவைப்பாம்,

## அவையடக்கம்.

சித்தாந்த சாத்திரத்திற் செப்புபொருட் கிகலாகப்
பித்தாந்த னோருரையும் பிதற்றுகிலே னகலினன்
முத்தாந்தத் தரமிசென முழுதுணர்வை திகசைவீர்
கைத்தாள வெண்ணுவிரோ கடைக்கணிக்க வெண்ணுவிரே.

## நூல்.

பதி பசு பாச மூன்று மனுதிநித்தம். இவை சமமாமோ * வியாபக வியாத்தி வியாப்பிய விலக்கணம் பெற்றிருத்தலின் ஆகா.

## § பதியியல்பு.

பதி: ஏகன், நித்தன், நின்மலன், அசலன், அகண்டிதன், ஆநந்தவுருவன், ஆதியந்தமில்லான், அளவிடற்கரியன், அருவமுருவ மருவருவமென்னு முக்கூற்று ளின்னனுவ னென்றும்; அம்முக்கூறும் படும் விருத்தி, பரிணமம், விவர்த்தனமென்பவற்றுள் ஒன்றிற்படு வன் படானென்றுங் கூறுதற்கோ ராசங்கையுமில்லான்.

ஞாயிறொன்றுதானே விடயங்களைவிளக்குழிக் கதிரெனவும், தன்னை விளக்குழிக் கதிரோனெனவும், தாதான்மியத்தால் இருதிறப்பட் டியைந்து நிற்றல்போல, பேரறிவாய சைதன்னிய மாகிய சிவமொன்றே, அங்ஙனம் புறப்பொருளைநோக்கி நிற்கு நிலையிற் சத்தி யெனவும், புறப்பொருளை நோக்கா தறிவுமாத்திரையாய் நிற்கு நிலையிற் சத்த னெனவும் சமவாயத்தா லிருதிறப்பட் டியைந்து நிற்கும்.

தீயின்சத்தி யொன்ருயிருந்தும் உலோகம், விறகு, உப்பு, சாதம் முதலான விஷயபேதங்களினுல் உருக்குஞ்சத்தி, கொளுத்துஞ் சத்

---

* வியாபகம்=நிறைவு, வியாத்தி=சமநிறைவு, வியாப்பியம்=ஒன்றிலே யொன் றடங்கி நின்ற நிறைவு. கடல்=வியாபகம். நீரு மூப்புங் கலந்திருத்தல்=வியாத்தி. கடலில் நீரு மூப்பு மடங்கியிருத்தல்=வியாப்பியம்.

§ பா - காத்தல், தி - வினைமுதற் பொருள் விகுதி, பதி=காக்கிறவன்.

தி, வெடிக்குஞ்சத்தி, சமைக்குஞ்சத்தி யென்றற் றொடக்கத்துப் பல் வேறுவகைப்படுமாறுபோல, சிவசத்தி யொன்றே காரிய வேறுபாட் டால் பல்வகைப் பெயர்பெற்று நிற்கும். அவ்வச் சத்திகளோடு புண ர்ந்த சிவமு மவ்வாறு பல்வகைப் பெயர்பெற்றுவிளங்கும்.

சத்தியின் சொரூபம் ஞானம்; இது பராசத்தி யெனப்படும் இச்சத்தி பசுக்கட்கு ஐந்தொழில் செய்வித்தற் பொருட்டுச் சிறப்பு வகையானே வியாபரிக்குங்கா லொருகூற்றானே திரோதானசத்தி யெனநின்றும்; இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி யென முத்தி றப்படும்.

யாண்டு மொருபெற்றித்தாய் வியாபரிக்கு மிச்சையை யொழித் து ஒழிந்த ஞானங்கிரியைக ளிரண்டுந் தனித்தனி வியாபரித்தலா னும்; ஒத்து வியாபரித்தலானும், தம்முட்குறைந்தும் ஏறியும் வியா பரித்தலானும்; சிவம், சத்தி, சதாசிவம், மகேச்சுரம், சுத்த வித்தை யென் றைவகைப்பட்டு நிற்ப, இலயன், போகன், அதிகார னென மூவகைப்படப் பதிப்பொருள் ஒருவனே அவற்றை யதிட்டித் து, அவ்வப் பெயர்பெற்று நிற்பன்.

படிகமானது பொன்மை நீலமுதலான பஞ்ச வர்ணங்களுந் தன் னிடத்துப் பொருந்தினபோது தன்னிறத்தைக் காட்டாது அவற்றி னிறமாய் நிற்பதுபோல, பதி குணரூபமா யுடனிக்குந் தனது சத்தி யிற் காணப்படு மப்பேதமெல்லாந் தானாகத்தோன்றி வேற்றுமை யின்றி நிற்பன். இது பற்றித் தன்றன்மை வேறுபடான்.

நிமித்த காரணனாகிய பதி முதற்காரண மாகிய மாயையினின் றும், துணைக்காரணமாகிய தனது சத்தியாற் பிரபஞ்சத்தைச் சிருட் டித்தும், திதித்தும், சங்கரித்துந் தான் தாக்கற்று நிர்விகாரியா யிரு

ப்பன். அது ஆதித்தன் சந்நிதானத்துத் தாமரை மலர்ந்தும், காந்தம் அனலைக் கக்கியும், சலம்வற்றியும் வருவனபோலும்.

## ※ பசுவியல்பு.

ஆன்மாக்க ளிலக்கத்தினு லளவுபடுத்தற் கரியராய், ஒருகாலத்தினும் அழியாதவராய், அஞ்ஞானமாகிய வாணவ மலத்தின்மறைப் புண்டு கிடந்து, தத்தமக் குண்டான புண்ணிய பாவங்களுக் கீடான தோ ருடலினைக் கடவுளின் காருண்யத்தினுலேபொருந்தி, அவ ணவ ளதுவாகிய வுடம்பெனத் தானென்னத் தோன்றுமற் பிறிவற் று நின்று, அவ்வுடம்போடு கூடுகையி லெண்ணிறந்த போகங்களை முயற்சியாற் புசித்து, அந்தந்தப் புசிப்பாலுண்டாகிய இதாகிதங்களி னுலே மீளவும் புண்ணிய பாவங்களை யார்ச்சித்துக்கொண்டு அவற்று லிறந்து பிறந்துவருவர். இத்தகையோர் விஞ்ஞானகலர், பிரளயா கலர், சகலர் என மூவகைப்பட்டிருப்பர்.

## ‡ விஞ்ஞானகலர்.

அட்டவித்தியேசுரர், அணுசதாசிவர், சத்தகோடி மகாமந் திர ரென மூவகையர். இவர்கள் முறையே மயேசுர தத்துவத்தி லும், சாதாக்கிய தத்துவத்திலும், சுத்தவித்தியா தத்துவத்திலு மிருப்பர். இவர்கள் ஆணவமல மொன்றினை யுடையவர்கள். இவர்க ட்குத் தனு கரண புவன போகஞ் சுத்தமாயையாம். இவர்களில் பக்குவர்க்குப் பதி அறிவிலே தன்மை மாத்திரையாய்நின்று திருவரு ளை யுதிப்பித்து மலத்தைப் போக்கி யிரட்சிப்பன்.

---

※ பசு—ஆன்மா. பாச சம்பந்தம் பெற்றிருத்தலால் பசு. பச்-பந்தித்தல். உ-செயப்படுபொருள்விகுதி.

‡ விஞ்ஞானமென்னும் பிரபோதத்தாற் கட்டுப்பட்டிருக்கிற படியால் விஞ்ஞானகலரென்னப்படுவர்.

## † பிரளயாகலர்.

நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களாம். இவர்கள் ஆணவம் கன்மமென்னும் மிரண்டு மலத்தையுடையவர்கள். இவர்கட்குத் தனுகரணபுவனபோகம் அசுத்தமாயையாம். இவர்களில் பக்குவர்க்குப் பதி மான் மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்திரதாரியாகச் சுபாவவருட்டிருமேனிகொண் டெழுந்தருளி முன்னிலை மாத்திரையாய் நின்று மலத்தைப்போக்கி யிரட்சிப்பன்.

## + சகலர்.

பிரம விஷ்ணு முதல் பிபீலிகை யீறாக விருப்பவர்கள். இவர்கள் ஆணவம், கன்மம், மாயை யென்னு மும்மலமு முடையவர்கள். இவர்கட்குப் பர சரீர மூன்று, சூக்கும சரீரமொன்று, தூலசரீரமொன்று. அவைவருமாறு:—

அசுத்தமாயையில் அநந்த தேவராற் கலக்குண் டபாகமாகியாகாரணசரீரமென்னும் பரசரீர மொன்று; இது ஆநந்த மயகோசமென்னப்படும். வித்தியா தத்துவங்களாகிய பஞ்சகஞ்சுக மென்னுஞ் சரீர மொன்று; இது விஞ்ஞானமய கோசமெனப்படும். பஞ்சகஞ்சுகத்தி லொன்றாகிய கலையிற்றோன்றிய அவியத்தவியத்த ரூபமாகிய குண சரீரமென்னும் பரசரீர மொன்று; இது மனோமயகோசமென்னப்படும். மனம் புத்தி யகங்காரந் தன்மாத்திரை யைந்துமாகிய சமூகஞ் சூக்குமசரீரம்; இது புரியட்டக மெனவும் பிராணமய கோச மெனவும் படும். ஏனையது தூலசரீரம்: இது அன்னமய கோ

---

† பிரளயத்தில் மாயா தத்துவத்திற் கட்டுப்பட்டிருக்கிறபடியால் பிரளயாகலரெனப்படுவார்.

+ கலாதிகளினுல் முற்றுங் கட்டுப்படுகிறபடியால்சகலரெனப்படுவர்.

சமென்னப்படும். இவ்வாறு புருடனொருவனே ஐந்து சரீரங்களோடுங்கூடி வினைக்கீடாகப் பிறப்பு இறப்படைவன்.

இவர்கட்குத் தூலதனு அண்டசம், சுவேதசம், உப்பிசம், சராயுசம் என்கிற நால்வகைத் தோற்றத்தில், சுரர்-கக-லட்சம், நரர்-கூ-லட்சம், மிருகம்-க0-லட்சம், தாவரம்-ககூ-லட்சம், பறவை-க0-லட்சம்; நீர்வாழ்வன-க0-லட்சம், ஊர்வன-கரு-லட்சம் ஆகிய வெழுவகைப் பிறப்பும், அச-லட்சயோனிபேதமாம். இவையாவும் பிரகிருதியில். இவருள் பக்குவருக்கு § இருவினை யொப்பு மலபரிபாகமுண்டாகச் சத்திநிபாதம் விளைந்தவழி மானைக்காட்டி மானைப்பிடிப்பது போலக் கடவுள் மானிடச்சட்டை சாத்திக்கொண்டு குருமூர்த்தமாயெழுந்தருளி மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதர மறிந்து சமய தீட்சைபண்ணி, சரியை யனுட்டிப்பித்து, விசேடதீட்சை செய்து கிரியாயோகங்களை யனுட்டிப்பித்து, நிருவாண தீட்சைபுரிந்து ஞானமனுக்கிரகித்து, மும்மலங்களை நீக்க, ஆன்மாக்கள் அழிந்தார்களுமில்லையாய், அந்தச் சிவமுதலானார்களுமில்லையாய், சிவமுதலின்றிக் காரியப்பட்டார்களுமில்லையாய், அம் முதலுக்கு வேறாயிருந்தார்களுமில்லையாய், கேவல விசிட்ட மறுதலை யத்துவிதங்களைக் கடந்து, அப்பதியோடு சுத்தாத்வித நிலையினையடைவர்.

---

§ இருவினையொப்பு = நல்வினையிலுந் தீவினையிலும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல். மலபரிபாகம்-மலம் = ஆணவமலம்: பரி = உபசர்க்கம்; பாகம் = திரிவுகெடுதல். ஆன்மாவிற்குப் பக்குவம் வந்தவிடத்து மலசத்தி ஆன்மஞானத்தை மறைத் திருத்தல். சத்திநிபாதம்-சத்தி = சிவசத்தி; நி = உபசர்க்கம்; பாதம் = பதிதல். மலம் நீங்கியவழி சிவசத்தி பதிதல்.

## × பாசவியல்பு.

பாச மைந்து வகைப்படும். அவையாவன:—

அறியாமை மிக வுண்டாம்படி யான்மாக்கடோறுஞ் சகசமா யனாதியா யிருக்கும் ஆணவமல மொன்று. இந்த வாணவமலத்தோ டுங் கூடி நின்று அது பக்குவமாமளவு மான்மாவை மறைத்து அந்த மலத்தைப் பாகம்வருவிக்கின்ற திரோதமல மொன்று. ஆன்மாக்க ளுக்குத் தனுவாதிகளைக் கொடுத்து மயக்கத்தைச்செய்யும் மாயா காரண மல மொன்று. ஆன்மாக்கடோறும் விரிந் தனுபவமாய் நிற் குங் கன்மமல மொன்று. ஆன்மாக்களின் சுக துக்க விளைவுகட்கெல் லாம் இடமாய் நின்று அவற்றின் அறிவு, இச்சை, செயல்களை ஏகதே சப்படுத்து மாயாகாரியமாகிய மாயேய மல மொன்று.

## ÷ ஆணவமலம்.

எண்ணிறந்த வான்மாக்களோடுங்கூடி நின்று மறைத்துந் தா னென்று யிருப்பதாய், ஆன்மாக்களுடைய பக்குவா பக்குவங்கட்குத் தக்கதாக வவரவரிடங்களிலே மறைந்து நின்று, அந்த வான்மபோத ங்களின் மீட்சியிலே நீங்குவதா யிருக்கிற தன்காரியமான வெண்ணி றந்த சத்திகளையுடைதாய், செறிந்த இருளென்னும்படி நின்று ஆன் மாக்களுக்கு மிக்க மறைப்புகள் செய்வதாய். செம்பினுடன் கூடியிரு க்கப்பட்ட காளிதமானது அந்தச்செம்புள்ளவன்றே யதனை மறை த்து உள்ளும் புறம்புங்கலந்து வெட்டுவாய்தோறும் நின்றாற்போல

---

× பச்-பந்தித்தல் அ-கருவிப்பொருள் விகுதி

÷ ஆன்மாக்களை யணுத்தன்மைசெய்தலி னாணவமெனப் பெ யர் பெறும். ஆணவம் சடமாதலி னதற்குச் செய்தியுண்டோ?விடம், கள், பாடாணம், தீ, காற்று, நீர் முதலிய சடங்கட்குச் செய்தியுண் டானாற்போலும்.

ஆன்மபேதத்தோடுங் கலந்து மறைந்து கேவலத்தில் ஆவாரக சத்தியானும், சகலத்தில் அதோநியாமிக சத்தியானும், அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய்நின்றவநாதிமலமாய், ஆன்மாவி னிச்சாஞானக்கிரியைகள் சற்றுஞ் சீவியாதபடி மறைத்து நிற்கும்.

## திரோதானமலம்.

ஆணவமலம் நசிக்கும்படி பதியினுடைய அருட்சத்தியானது அந்த வாணவமலத்தோடுங் கூடித் திரோபவித்துநின்று காரியப்படுத்துகையான் மூலமல மென வுபசரிக்கப்பட்டுத் திரோதமாய் நின்று காரியப்படுத்தி மலபாகம் வருத்தின வருளானது அவர்களிடத்துக் கிருபை சனித்துப் பதியோடிரண்டறப் பொருந்து முறைமையை யுண்டாக்கும்.

## மாயாமலம்.

மலகன்மங்களோடு விரவாது சுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமா யிருப்பது சுத்தமாயை. இம்மாயின் கீழாயடங்கி, மல கன்மங்களோடு விரவி, சுத்தாசுத்த காரியப்பிரபஞ்சத்திற்கு முதற் காரணமா யிருப்பது அசுத்த மாயை இவ்வசுத்தமாயையின் றூல பரிணாமமா யசுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமா யிருப்பது பிரகிருதிமாயை. ஆக மூன்றும். இவற்றிற்கு முறையே விந்து, மோகினி, மான் என்றுஞ் சொல்லப்படும்.

## சுத்தமாயையின்தோற்றம்.

பதியினுடைய சத்தியாற் குடிலையாகிய சுத்தமாயையிலே (சர்வான்மாக்களுக்கு மறிவை யெழுப்புவித்து நிற்கிற ஞானமாகிய) நாத தத்துவந் தோன்றும். நாதத்திலே (சர்வான்மாக்களுக்குமுண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கிற) விந்துதத்துவந் தோன்றும்.) விந்துவிலே (நாத விந்துக்களிரண்டுங் கூடின வவசரமாகிய) சாதாக்கிய

தத்துவந்தோன்றும். சாதாக்கியத்திலே (கிரியையேறி ஞானங்குறைந்து நின்ற வவசரமாகிய) ஈச்சுரதத்துவந் தோன்றும். ஈச்சுர தத்துவத்திலே (ஞானமேறிக் கிரியை குறைந்து நின்ற வவசரமாகிய) சுத்தவித்தைதோன்றும். இந்தத்தத்துவங்களைந்துந்தோன்றின வொழுங்கிலே தத்துவ கர்த்தர்கள் முறையே சிவம், சத்தி, சதாசிவம், மகேச்சுரம், உருத்திரன் ஆகிய ஐவருந் தோன்றி யவற்றோடு பொருந்தி நிற்பார்கள். மேற்சொன்ன விந்துவிலே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென்னும் வாக்குகள் நான்கும், ஐம்பத்தோரக்கரங்களும், எண்பத்தொரு பதங்களும், சத்தகோடி மகா மந்திரங்களும், வேதாகம புராண சாத்திரங்களும்; விஞ்ஞானகலர், பிரளயாகலர் தங்கட்குத் தனு கரண புவனபோகங்களும், பதமுத்திகளும், பஞ்ச கலைகளுந் தோன்றும்.

## அசுத்தமாயை.

அசுத்த மாயையானது நாசமில்லாததாய், உருவமில்லாததாய், ஒன்றாய், சகல சகத்திற்கு மொருகாரணமாய், சடமாய், சர்வ வியாபியாய், பதிக்குப் பரிக்கிரக சத்தியாய், ஆன்மாக்களுக்குத் தனு கரண முண்டாக்குவதாய், மலங்களி லொன்றாய், விபரீதவுணர்வைச் செய்வதாயுள்ளது.

## அசுத்தமாயையின் றோற்றம்.

அசுத்தமாயையில் காலமும், நியதியும், கலையுந் தோன்றும். கலையில் வித்தை தோன்றும், வித்தையில், ராகந் தோன்றும். ஆகவிவ்வைந்துங் கூடிப் பஞ்சகஞ்சுகமாம். இவற்றோடுங் கூடிய வான்மா பஞ்சகஞ்சுகனாம். கலையிலே மூலப்பகுதி அவியத்த குணமாய்த் தோன்றித் தன்கணின்றும் வியத்தமாய்ச் சரப்படுங் குணதத்துவம், சாத்துவிகம், இராசதம், தாமதமென முக்குணங்கள் தோன்றும். அவற்று ளொவ்வொன்று முத்திறப்பட்டு ஒன்பது வகையாம். அவ்வியத்தமாகிய பிரகிருதியில் பஞ்ச கிலேசமு முண்டாம்,

இம் முக்குணத்தில் ஒரு குணமேறினவிடம் புத்தி. புத்தியில் ஆங்காரந்தோன்றும். இவ்வாங்காரந் தைசதம், வைகரி, பூதாதி யென மூன்றும். தைசத வாங்காரஞ் சாத்துவித குணத்தைப்பொருந்தில் மனமும், ஞானேந்திரிய மைந்துந்தோன்றும். வைகரியாங்காரம் ராசத குணத்தைப் பொருந்தில் கன்மேந்திரியமைந்துந் தோன்றும். பூதாதி யாங்காரந் தாமதகுணத்தைப் பொருந்தில் தன்மாத்திரைகளைந்துந்தோன்றும். இவ்வைந்தினும் பூதங்களைந்துந் தோன்றும் இவ்வைந்தினும் பஞ்சதேவர்கள் பொருந்துவர்.

பிரகிருதி தத்துவத்தில் ஆன்ம தத்துவ மிருபத்துநாலுந் தோன்றும்.

## கன்மமலம்.

ஆன்மாக்களா லெடுக்கப்பட்ட உடம்புகளுக்கு முன்னிலே காரணமாய், பலவிதமான புசிப்புகளையுண்டாக்குவதாய், சநநமரணத்தையுண்டாக்குவதாய், பலபேதங்களாயிருப்பதாய், ஆன்மாக்கடோறுஞ் சென்று பொருந்துவதாய், மனத்தினாலும் வாக்கினாலுங் காயத்தினாலுஞ் செய்யப்படு மியல்பினையுடையதாய், புத்தியிலே நிற்பதாய், இருவினையான புண்ணியபாவங்களாய், சங்கார காலத்து மாயா காரணத்திலேசென்று பொருந்தும். இது நல்லசாதி, தீயசாதி, தீர்க்காயுள், அற்பவாயுள், நல்லபோகம்,பொல்லாப்போகம் என மூன்றுவிதமாம். இக்கன்மங்கள் மூன்று மோரான்மாவிலே யநாதியே கூடியுள்ளனவாம். இப்புசிப்பு ஊழ்வினையாலல்லதுண்டாகாது; அதுமுன்பு ஆர்ச்சித்த வொழுங்கிலேயும் ‡ வன்மை மென்மைகளுக் கிடாயும்

---

‡ ஒருவன் பனம்விதையை மண்ணிலேநட்டான், பின்பு தெங்கு வைத்தான், பின்பு கத்திரிநட்டான், பின்பு கீரைவிதைத்தான். கீரை பதினைந்து நாளிலும், கத்திரி யொருமாதத்திலும், தெங்கு ஐந்து வருடத்திலும், பனைமுப்பதுவருடத்திலும் பலன்கொடுப்பதுபோல.

வரும். இக்கன்மம் சூக்குமகன்மம், அதிசூக்குமகன்மம், தூலகன்மமென மூன்றாம். அவை முறையே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியமாம்.

## சஞ்சிதம்.

அநாதிதொடுத்துச் சநநந்தோறு மார்ச்சித்த வினைபுசித்து, மிஞ்சியது. + ஆறத்துவாவிலேயும் கட்டுப்பட்டிருப்பது; பயிர் வினைஞனொருவன் தன் முயற்சியால் விளைந்த தானியத்தைச் சேர்ப்பித்திருக்கும் நெற்களஞ்சியம்போலும்.

## பிராரத்துவம்.

சஞ்சிதத்திலே சிறிது புசிக்கப்பட்டவினை யொரு சரீரத்தையெடுப்பித்துச் சாதி, ஆயுள், போகம், இவற்றைக் கொடுக்கும். களஞ்சியத்திலிருந்து தானியத்தையெடுத் தனுபவித்து வருதல்போலும்.

## ஆகாமியம்.

பிராரத்துவம் புசிக்கையில் வந்தேறுகிற புண்ணிய பாவங்கள். அவையாவன:—மனோவாக்குக் காயங்களினாற் செய்யப்படும் நற்றொழிலுந் தீத்தொழிலுமாம். களஞ்சியத்தினின்றும் எடுத் தனுபவித்துவருங்கால் மறுபடியுங் களஞ்சியங் குறையாவண்ணம் விளைவித்துப் பூர்த்திபண்ணிக்கொள்வதுபோலும்.

மேற்சொன்ன பிராரத்துவம் ஆதிதெய்வீகம், ஆதிபௌதீகம் ஆதியான்மீகமென மூன்றாம்.

---

+ கலாத்துவா, மந்திராத்துவா, புவனாத்துவா, வன்னாத்துவா, பதாத்துவா, தத்துவாத்துவா.

## ஆதிதெய்வீகம்.

மாதாவின்கருப்பத்தி லிருக்குமிடத்துண்டான விசனம்; பின் சநநம், நரை, திரை, யமதண்டம், நரகவேதனை முதலிய.

## ஆதிபௌதீகம்.

குளிர், வெப்பம், மழை, காற்று, மின்னல், இடி, சுவர்விழுதல், கல்விழுதல் முதலிய.

## ஆதியான்மீகம்.

தத்தஞ் சரீரத்திலுண்டான வியாதிகளினாலும், மிருகங்களினாலும், இராசாங்கத்தாலும், பசாசுகளாலும், கள்வராலும், மனிதராலும் உண்டாகுந் துக்கம். பிறருடைய கல்வியுஞ் சௌந்தரியமுஞ் செல்வமுங்கண்டு பொறாமை கொள்ளல், அபிமானங் கெடுதல், எழுந்தது புத்தியாகச் செய்தல், கோபித்தல் முதலிய.

## மாயேயமலம்.

ஆன்மாக்களுக்குப் பலத்தால் விழுங்கப்பட்ட ஞானக்கிரியைகளை வெளிப்படுத்தும் பொருட்டும், தாஞ்செய்தவினைகளை யனுபவித்தொழிக்கும் பொருட்டும் இன்றியமையாத தனுகரணபுவனபோகங்கள் காரியப்படுமவசரத்து முற்கூறிய அசுத்தமாயாகாரணத்திலேநின்று சில சத்திகள் அவற்றைத்தோற்றுவிக்க அவற்றோடும் பொருந்தி நடத்தப்பட்ட சுத்தமாயையின் திரட்சியாகிய சுத்ததத்துவங்களாம்.

சுத்தத்துவங்களை மலமென்னலாமோ வெனில் எனலாம். சிவனுடைய அருட்சத்தியானது திரோதமாய் நின்று மலத்தைக் காரியப்படுத்த, அதை மலமென உபசரித்தாற்போலும்.

இதுகாறுங்கூறிய ஆணவம், திரோதானகாரி, மாயை, கன்மம், மாயேய மென்னும் இப்பஞ்சமலங்களை ஆன்மா பொருந்தி

நின்று பிறப்பிலும் இருப்பிலும் இறப்பினுந் தங்கிப் பூமி, பாதாளம், சுவர்க்கமென்னு மூன்றுலகத்துங் கொள்ளிவட்டம்போலும், காற்றாடிபோலும் நிமிடத்தி லலைந்து சிவாஞ்ஞைப்படி நடப்பன்.

---

## தத்துவம்.

### ஆன்மதத்துவம் - உச.

பூதம் ரு:—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

ஞானேந்திரியம் ரு:—சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம்.

தன்மாத்திரை ரு:—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

கன்மேந்திரியம் ரு:—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

அந்தக்கரணம் ச:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

வித்தியாதத்துவம் எ:—காலம், நியதி, வித்தை, கலை, ராகம், புருடன், மாயை.

சுத்ததத்துவம் ரு:—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம். ஆக உட்கருவிகள் - ௩௬.

பிருதிவியின்கூறு ரு:—மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.

அப்புவின்கூறு ரு:—நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை.

தேயுவின்கூறு ரு:—ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்.

வாயுவின்கூறு ரு:—ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்.

ஆகாயத்தின்கூறு ரு:—குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

பிருதிவியின்வழிநாடி க0:—இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புருடன், சங்குனி, வைரவன், குகுதை.

வாயுவின்வழிநாடி க0:—பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன்.

ஆகாயத்தின் வழியேடணை ங:—அருந்தவேடணை, புத்திரவேடணை, உலகவேடணை.

வாக்காதியின் வழிதொழில் ரு:—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

பிரகிருதியின்வழிகுணம் ங:—சாத்துவிகம், இராசதம், தாமதம்.

விந்துவின்வழிவாக்கு ச:— சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆக புறக்கருவிகள் - சா0.

ஆக தத்துவங்கள் - கூசு.

---

## தத்துவத்தின் தொழில்.

### வடிவு.

பிருதிவி நாற்கோணம், அப்பு அர்த்தசந்திரன், தேயு முக்கோணம், வாயு அறுகோணம், ஆகாயம் வட்டம்.

## நிறம்.

பிருதிவி பொன், அப்பு வெண்மை, தேயு சிவப்பு, வாயு கருமை, ஆகாயம் புகை.

## குறி.

பிருதிவிக்கு வச்சிரம், அப்புவுக்குத் தாமரை, தேயுவுக்கு அசுவத்திகம், வாயுவுக்கு, அறுபுள்ளி, ஆகாயத்திற்கு அமுதவிந்து.

## தெய்வம்.

பிருதிவிக்குப் பிரமன், அப்புவுக்கு விண்டு, தேயுவுக்கு உருத்திரன், வாயுவுக்கு மகேசன், ஆகாயத்திற்குச் சதாசிவன்.

## குணம்.

பிருதிவி கடினம், அப்பு நெகிழ்வு, தேயு சுடுகை, வாயு திரட்டல், ஆகாயம் நிரந்தரம்.

## ஞானேந்திரியங்களின் றொழில்.

சோத்திரம்—ஆகாயத்தினிடமாக நின்று செவியைப்பொருந்திச் சத்தத்தை யறியும்.

தொக்கு:—வாயுவினிடமாக நின்று சரீரத்தைப் பொருந்திப் பரிசத்தை யறியும்.

சட்சு:—தேயுவினிடமாக நின்று கண்ணைப் பொருந்தி ரூபத்தைக்காணும்.

சிங்ஙுவை:—அப்புவினிடமாக நின்று நாவைப்பொருந்தி ரசத்தையறியும்.

ஆக்கிராணம்:—பிருதிவியினிடமாக நின்று மூக்கைப்பொருந்திக் கந்தத்தையறியும்.

## கன்மேந்திரியங்களின் றொழில்.

வாக்கு:—ஆகாயத்தினிடமாக நின்று வசனிக்கும்.

பாதம்:—வாயுவினிடமாக நின்று கமனிக்கும்.

பாணி:—தேயுவினிடமாக நின்று இடுதலேற்றலைச்செய்யும்.

பாயுரு:—அப்புவினிடமாக நின்று மலசலத்தைக் கழிக்கும்.

உபத்தம்:—பிருதிவியினிடமாக நின்றுசுக்கிலத்தைக்கழிக்கும்.

## தன்மாத்திரைகளின் றொழில்.

சத்தாதிகளைந்தும் சுரோத்திராதிகளுக்கு விடையமாயிருக்கும்.

## அந்தக்கரணங்களின் றொழில்.

மனம் பற்றும், புத்தி நிச்சயிக்கும், சித்தம் சிந்திக்கும், அகங்காரங் கொண்டெழுப்பும்.

## வித்தியாதத்துவங்களின் றொழில்.

காலம்:—கழிகாலத் தெல்லையையும், நிகழ்காலத்துப் பலத்தையும், எதிர்காலத்துப் புதுமையையும் பொருத்துவிக்கும்.

நியதி:—எந்தக்காலமும் கன்மத்தை யிவ்வளவென்று நிச்சயம் பண்ணி நிறுத்தும்.

கலை:—ஆணவத்தைச் சிறிது நீக்கி யான்மாவுக்குக் கிரியையை யெழுப்பும்.

வித்தை:—ஆன்மாவுக்குச் சீக்கிரத்திலே யறிவையெழுப்பும்.

அராகம்:—பெற்ற பதார்த்தங்களைச் சிறிதாக்கிப் பெறுததிலே யிச்சையை யுண்டாக்கும்.

புருடன்:—கலையாதி பஞ்ச கஞ்சுகத்துடனேகூடிச் சத்தாதி விடயங்களை நுகருமவசரம்.

மாயை:—ஒன்றையும் நினைக்கவொட்டாமல் மயக்கத்தைச் செய்யும்.

## சுத்ததத்துவங்களின் றோற்றம்.

இப்புத்தகத்தின் சஅ-வது பக்கத்திலுள்ள சுத்தமாயையின் றோற்றத்திற் காண்க.

## பிருதிவியின்வழிநாடிகளின் றோற்றம்.

இடைகலை இடது மூக்கில் நிற்கும். பிங்கலை வலது மூக்கினிற்கும் சுழுமுனை மத்தியில் நிற்கும். காந்தாரி கண்ணில் நிற்கும். அலம்புருடன் செவியினிற்கும். வைரவன் பாதத்தினிற்கும். சங்குனி கழுத்தினிற்கும். குகுதை மார்பினிற்கும்.

## வாயுவின்வழிநாடிகளின் றோற்றம்.

பிராணன் மூலாதாரத்திற் றோன்றி இடை பிங்கலையாகவேறிக் கபாலத்தளவுஞ் சென்று நாசியில் கஉ-அங்குலம் புறப்பட்டு ச-அங்குலம் வெளியிற்போய் அ-அங்குலமுள்ளடங்கும். இவ்வாறு ஒரு நாளைக்கு உகசுOO சுவாசம்நடக்கும்;இதில் எஉOO-பாழ்போய்,கசசOO சுவாச முள்ளடங்கும்; அபானன் குதத்தினின்று மலசலங்களைக் கழிப்பிக்கும்; உதானன் விக்கலிருமல் அவத்தைப் பண்ணுவிக்கும், வியானன் உண்ட அன்னசாரத்தை எஉOOO-நாடிகளிலும் கவப்பிக்கும்; சமானன் யாவையும் சமன்பண்ணும்; நாகன் இருமல் தும்மலுண்டாக்கும்; கூர்மன் கண்ணேற்றல் செய்யும்; கிரிகரன்சோம்பல், கொட்டாவி வுண்டாக்கும்; தேவதத்தன் இமைக்கும், நகைப்பிக்கும்; தனஞ்செயன் உடம்பை வீங்கவும் விரியவும்செய்து கபாலத்தை வெடிப்பித்துப்போகும்.

## ஏடணைகளின்றேழில்.

அநந்தவேடணை திரவியமுதலியவற்றால் வரும் பிணக்கு; புத்திரவேடணை புத்திரன்முதலிய சுற்றத்தாரால் வரும் பிணக்கு; உலகவேடணை உலகமுதலிய சங்கத்தால் வரும்பிணக்கு.

## குணங்களின் றேழில்.

சாத்துவிகம்:—தவம், சமம், கல்வி, சௌரியம், பொறுமை, கிருபை, சந்தோஷம், அறிவு, அடக்கம் முதலிய.

தாமதம்:—மந்தம், கோள், அகௌரவம், நித்திரை, மதம், மச்சரம், அதன்மம், அறியாமை, சோம்பல் முதலிய.

இராசதம்:—சௌரியம், உச்சாகம், அபிமானம், கிருபையின்மை, இடும்பை முதலிய.

## வாக்குகளின் றேழில்.

வைகரி:—வைகரியென்னும் வாக்குச் செவியாற் கேட்கப்படுவதாய், அதத்தந்தோடு கூடியதாய், உதானவாயு உந்தியடியாய்த் தோன்றித் தலையையுமிடற்றையும் நெஞ்சையும் பொருந்துதலாலுண்டாகிய வட்சரங்களை விபரீதமறக் கிரமமாக வுடையதாய், புத்தியையறிகாரணமாயுள்ளதாய்ப் பிராணவாயுவைப் பொருந்தி வெளியே புறப்பட்டுக் காரியப்படும்.

மத்திமை:—மத்திமை யென்னும் வாக்குக் கண்டத்திலுள்ளே சவிகற்பமாயுணரத்தக்க வோசையாகி, செவிக்கு விடயமாகாமல், பிராணவாயுவின் விருத்தியைப் பொருந்தாமல், தெளிவாகிய அக்கரங்களைச் சொல்லுஞ் செயலில்லாது வைகரிக்கு வேறாய் மெள்ள வெழுந்திடும்.

பைசந்தி:—பைசந்தி வாக்கானது வைகரியில் ஒன்றோடொன்றொவ்வாத வடிவினையுடையதாய், வேறுபட்ட வன்னங்கள் தோற்றுதலை முறையே யொடுக்கித் தானே விளங்குவதாய், மயிலின் முட்டை தரிக்குஞ் சலத்தை யொத்து நினைவு மாத்திரையாய் நிற்பது.

சூக்குமை:—சூக்குமை வாக்கானது பர சரீரத்திலுள்ளாக நாத மாத்திரையாய் விளங்குதலும், ஞானமாத்திரைக் கேதுவாகிய விலக்கணத்தையுடையது. சில சுத்த மாயா ரூபமாய்க் கேடின்றி நிலைபெறுவது. இதனை யுள்ளபடி காணப்பெறுவார்க்குச் சுத்த மாயா புவனத்தின்கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போசமுண்டாகும்.

இந்த வாக்கு நான்குந் தோன்றுகைக்குக் காரணமாயிருக்கின்ற பஞ்சமையென் றொரு வாக்குண்டு. இதற்குத் தானம் மூலாதாரம். அது பிரணவசொரூபம். இந்த வைந்துவாக்குகளும் நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகச்சார்ந்து சிவசந்திகளாற் காரியப்படுத்தப்பட்டுச் சிவதத்துவமுதலிய பஞ்சதத்துவங்களி லிருக்கும். இன்றியமையா தறியவேண்டிய தத்துவங்களின் றொழில்களை மாத்திர மீண்டுக் கூறினும்.

## பஞ்ச கலைகள்.

நிவர்த்திகலை:—தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுடைய சங்கற்ப நிவர்த்தி செய்கையாம்.

பிரதிட்டாகலை:—தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்கு முன்சொன்ன சங்கற்பம் விடுதி நிலைபெற்றுத் திடமாகப் பிரதிட்டிக்கையாம்.

வித்தியாகலை:—தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்குச் சங்கற்ப விடுதி நிலைபெற்றுத் திடமானத்திற் சர்வார்த்தஞானம் பிரகாசிப்பிக்கையாம்.

சாந்திகலை:—தன்னிடத்தில் பொருந்தின வான்மாக்களுக்குச் சர்வார்த்த ஞானப் பிரகாசத்தால் இராக் துவேஷமின்றி யிருக்கை.

சாந்தியாதீதகலை:—தன்னிற் பொருந்தின ஆன்மாக்களுக்கு விகற்பஞானஞ் சாந்தமான தென்கிற மூன்னினைவுங் கழிந்து அதீத மாய்ப் பரமாகச் சொரூபமாய் நிற்கை

இவ்வைந்துகலைகளுள் மந்திரங்கள், பதங்கள், அட்சரங்கள், புவனங்கள், தத்துவங்கள் விரவியிருந்தலை விரிவுநூலிற் காண்க.

---

## ஆறாதாரம்.

மூலாதாரம்:—குதத்திற்கும் கோசத்திற்கும் நடு, முக்கோணம், நாலிதழ்க் கமலம், மாணிக்க நிறம், கணபதி, குண்டலி, சத்தி, ஓங்காரம்.

சுவாதிட்டானம்:—கோசத்திற்கும் நாபிக்கும்நடு, நாற்சதுரம் ஆறிதழ்க்கமலம், செம்பொன்னிறம், பிரமா, சரஸ்வதி, நகாரம்.

மணிபூரகம்:—நாபிக்கமலம், மூன்றாம்பிறை, பத்திதழ்க்கமலம், மரகதநிறம், விஷ்ணு, லட்சுமி, மகாரம்.

அநாகதம்.—இருதய கமலம், பன்னிரண்டிதழ்க் கமலம், முக்கோணம், ஸ்படிகநிறம், உருத்திரன், பார்வதி, சிகாரம்.

விசுத்தி:—கண்டத்தானம், பதினாறிதழ்க்கமலம், அறுகோணம், மேகநிறம், மகேசுவரன், மகேசுவரி, வகாரம்.

ஆஞ்ஞை:—லலாடத்தானம், மூன்றிதழ்க்கமலம், வட்டம், படிகநிறம், சதாசிவம், மனோன்மணி, யகாரம்.

## மண்டலம்.

சந்திரமண்டலம்:—மூலாதாரந்தொடங்கி ஒவ்வோரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசுநடுவில் கோடிசூரியர் உதையமானாற்போலப் பிரகாசிக்கும். இந்த அமிர்தகலை அக்கினிமண்டலத்தை நோக்கிச் சோதியாநிற்கும்.

ஆதித்தமண்டலம்:—இருதயகமலத்தில் அறுகோணமாய் எட்டு இதழுடைய ஒருபுஷ்பமாயிருக்கும். இது வாழைப்பூப்போல் கீழ்நோக்கியிருக்கும்.

அக்கினிமண்டலம்:—பிருதிவியும் அப்புவுங் கூடினவிடத்தில் நாற்சதுரமாய் நடுவே முக்கோணமாய் நாலிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும்.

## அவத்தை.

தத்துவங்களோடு ஆன்மா பொருந்திக் கன்மம் புசிக்கிறபோது கீழாலவத்தை-௫, மத்தியாவத்தை-௫, சுத்தாவத்தை-௫, காரணாவத்தை-௫ ஆக ௨௰ அவத்தைகளைப் பெறுவன்.

### கீழாலவத்தை.

இது கேவலாவத்தையின் காரியம்.

சாக்கிரம்:—தத்துவம் ௩௬-ல் ஞானேந்திரியம்-௫, கன்மேந்திரியம்-௫, தன்மாத்திரை-௫, வசனாதி-௫, வாயு-௰, புருடன்-௧, அந்தக்கரணம்-௪, ஆக-௩௫ கருவிகளுடன் ஆன்மா லலாடஸ்தானத்தில் நின்ற அவசரம்.

சொப்பனம்:—முன் சொன்னவற்றுள் ஞானேந்திரியம், கன்மேந்திரியம் நீங்கலாக மற்ற ௨௫-கருவிகளுடன் ஆன்மா கண்டத்தில் நின்ற அவசரம்.

சுழுத்தி:—புருடன்-க, அந்தக்கரணம் நான்கில் சித்தம்-க வாயு பத்தில் பிராணவாயு-க ஆக மூன்று கருவிகளுடன் ஆன்மா இருதயத்தில் நின்ற அவசரம்.

துரியம்:—பிராணவாயுவும் புருடனுமாகிய இரண்டு கருவிகளுடன் ஆன்மா நாபிதானத்து நின்ற அவசரம்.

துரியாதீதம்:—ஆன்மா புருடனோடு மூலாதாரத்தில் நின்ற அவசரம்.

## மத்தியாவத்தை.

இது சகலாவத்தையின் காரியம்.

சாக்கிரதுரியாதீதம்:—ஒரு பண்டத்தைமறந்தவ னந்தப்பண்டங்காணாதபோது பிராணவாயுவு மியங்காமல் சிவதத்துவம் ஒன்றுடன் மூர்ச்சித்திருந்த அவசரம்.

சாக்கிரதுரியம்:—அந்தப் பிராணவாயு வியங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து சிவதத்துவம், சத்திதத்துவங்களுடன் விசாரித்தறிவோமென்ற அவசரம்.

சாக்கிரசுழுத்தி:—அவ்விடத்தி லல்லவோ போனோமென்று சிவம், சத்தி, சாதாக்கிய தத்துவங்களுடன் நினைவெழுந்த அவசரம்.

சாக்கிரசொப்பனம்:—இன்னவிடத்தில் பண்டம் வைத்தோமெனச் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈச்சுர தத்துவங்களோடு விசாரப்பட்ட அவசரம்.

சாக்கிரசாக்கிரம்:—அந்தப்பண்டம் வைத்தவிடத்திலே சென்று சுத்ததத்துவமைந்துடன் கண்ட அவசரம்.

## நின்மலாவத்தை.

இது சுத்தாவத்தையின் காரியம்.

நின்மலசாக்கிரம்:—ஆசாரியராலே ஞானதீட்சை பெற்றுத் திரிபதார்த்தவுண்மை அறிந்து சிந்தித்துத்தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது.

நின்மலசொப்பனம்:—கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நனவிலே சற்றுப் பதைப்புண்டாவது.

நின்மலசுழுத்தி:—தத்துவ நீங்கி மேலான கேவலந் தானாய் நிற்பது.

நின்மலதுரியம்:—கேவலநீங்கி அருளினாலே தன்னையுங்கண்டு அருளையுங்கண்டு அவ்வசத்தாய் நிற்பது.

நின்மலதுரியாதீதம்:—சிவத்தைத்தரிசித்துச் சிவாநந்தத் தழுந்துதல்.

## கேவலாவத்தை.

சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் சுத்த மாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவமலத்தான் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களோடுங் கூடாமல் யாதொருநினைவுமின்றி யிருப்பது. இது கண்ணனது இரவின் இருளிலே யொளிகொடாமல் விழித்திருப்பதுபோலும்.

## சகலாவத்தை.

சிருட்டிதொடங்கிச் சர்வசங்காரமளவும் ஆன்மாக்கள் தத்துவம் முப்பத்தாறோடு கூடி எண்பத்து நூறாயிரம் யோனிபேதங்களிலும் பிறந் திறந் துழல்வது. இது இரவின் இருளிலழுந்திக்கிடந்த கண் விளக்கினாலே இருள்நீங்கிப் பலபதார்த்தங்களைக் காண்டல் போலும்.

## சுத்தாவத்தை.

ஆன்மாக்கள் கேவல சகலப்பட்டுப் பிறந்திறந்து திரியுமவசரத்து அவர்கட்கு இருவினையொப்பும், சத்திநிபாதமும், குருவருளும், ஞான சாதனமும், மும்மலக் கழிவும், வாதனை நீக்கமும், ஞானப் பெருக்கமு முறையே உண்டாகப் பெற்றுத் திருவருளைக் கூடுவது. இது இரவில் இருளோடும் விளக்கோடுங் கூடியிருந்த கண்ணானது ஆதித்தனுதயஞ் செய்தவிடத்து அதன்கிரணத்தா லாதித்தனைக் காண்டல்போலும்.

## மார்க்கங்கள்.

சன்மார்க்கம், சகமார்க்கம், புத்திரமார்க்கம், தாசமார்க்க மென நால்வகைகளாம். இவற்றை ஞானம், யோகம், கிரியை, சரியையென்றுஞ் சொல்லுவர். இவற்றால் முறையே வருமுத்தி சிவ சாயுச்சியம் சிவசாருபம் சிவசாமீபம் சிவசாலோகமாம்.

## தாசமார்க்கம்.

சிவபெருமானது திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், மலர்கொய்தல், அம்மலர்களைத் தார் மாலை கண்ணியென்னும் பகுப்பினவாகச் சமைத்தல், ஸ்ரீகண்ட பரமேசுவரன் கல்யாண சுந்தரமுதலிய குணங்களைப் புகழ்ந்து பாடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவன முண்டுபண்ணுதல், சிவனடியார் திருவேடத்தைக் காணின் எதிர்சென்று ஏதேனும் அடியேனா லாகவேண்டிய பணியாதோவென வினாவி அவற்றைச் செய்தல் முதலியவாம்.

## புத்திரமார்க்கம்.

அன்றெடுத்த மணமுள்ள புதிய மலர், தூபதீபங்கள், திருமஞ்சனம், திருவமுது முதலிய திரவியங்களைச் சேகரித்து, பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்திகளையுஞ் செய்து, ஆசனம் பூசித்து, அதன் மேல் வித்தியாதேகமாகிய மூர்த்தியைக் கற்பித்து, அதில் மூர்த்தி

மாகிய சுத்தசிவத்துவைதத்தியானித்து ஆவாகித்துச் சுத்தமான பத்தியினால் ஏகாக்கிர மனத்தோடுபெசரித்துப் பிரார்த்தித்துத்தோத்திரஞ்செய்து விருப்பத்தோடு அக்கினிகாரிய மியற்றிவருதல் முதலியவாம்.

## சகமார்க்கம்.

பஞ்சேந்திரியங்களை யொடுக்கி ரேசக பூரக வாயுக்களைத் தடுத்துக் கும்பித்திருந்து பிராணவாயுவைச் சுழுமுனையினிறுத்தித் தனது சரீரத்துள்ளே ஆறாதாரங்களை யறிந்து அவற்றில் பத்மதளம், அதிதேவதை, அக்கரங்களாகிய பொருளையறிந்து தியானித்து மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிப்பித்து நாபிந்தானத்திற் குண்டலிசத்தி சொரூபமா யிருக்கும் அமுதத்தை யுருகப்பண்ணி, மற்றையவாதாரங்களில் அதோமுகமான பதுமங்களை அதனைக் கொண்டு பேதித்து, மேலே சென்று விந்துந்தானத்தின் வழியேயிறங்கி பெருகுகின்ற வமுததாரையைத் தனதுடல்முற்றும் நிறையச்செய்து முழுச்சோதியான சிவத்தியானத் திருப்பது முதலியவாம்.

## சன்மார்க்கம்.

வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், கலைஞானங்கள், சமயசாஸ்திரங்கள் இவைபலவும் கற்றுணர்ந்து புறச் சமயங்களில் பலவாகச் சொல்லப்பட்டிருக்கிற யாவையும் பூர்வபட்சஞ்செய்து, மேலான பதி பசு பாசமாகிய ஞானத்தால் ஞாதுரு ஞான ஞேயங்கள் பொருந்தாதவண்ணம், பதியோடு இரண்டறக் கலக்கத்தக்க ஞானத்தைப் பெறுவது.

## நியமங்கள்.

இடம்:—கங்கை, குமரி முலிய புண்ணிய தீர்த்தங்களையும்; காசி, காஞ்சி, திருவம்பல முதலான சிவத் தானங்களையும் நாடி யிருக்கை.

காலம்:—விஷுசு, அயனம், சங்கிரமமுதலாயுள்ள காலங்களிலேசெய்யுங் கிரமங்கள்.

திக்கு:—இன்னமந்திர மின்னதிசையைப் பார்த்துச் செபிக்கலாமென்னு முறைமைகள்.

ஆசனம்:—பதுமாதனம், கூர்மாதன முதலாயுள்ள வாதனங்களிட்டிருக்கை.

குலம்:—ஆதிசைவர்முதல் பஞ்சமரீருகிய குலரீதி முதலாயுள்ளவை.

குணம்:—அவரவர் சீலத்தி லொழுகுதல், பிறரை நிந்தியாமை, புறங்கூறுமை முதலிய.

சீர்:—அந்தந்தச் சாதிவொழுங்கு குலையாமல் நடக்கை.

விரதம்:—கொல்லாவிரதம், சிவராத்திரிவிரத முதலிய.

சீலம்:—சாதித்தொழில், குணத்தொழில், பொறையுடைமை, அருளுடைமை முதலிய.

தவம்:—பஞ்சாக்கினிநடு, சலத்தின் நடுவில் செய்யுந் தவங்கள்.

செபம்:—தேவதைமந்திரங்கள் சத்திமந்திரங்கள் முதலிய.

தியானம்:—ஆதாரம், நிராதாரமுதலிய தியானங்கள்.

## பஞ்சாக்கரவுண்மை.

சிவபெருமானுடைய திருநாமமாகிய நமச்சிவாய வென்ற வைந்தட்சரங்களில் நகாரத்தில் திரோதசத்தியும், மகாரத்தில் மலமும், சிகாரத்திற் சிவமும், வகாரத்தில் அருளும், யகாரத்தில் ஆன்மாவும் நிற்கும். இவ்வைந்தும் பதி, பசு, பாச மூன்றிலடங்கும். எங்ஙனமெனின் சிவ்வும், வவ்வும், நவ்வும் பதியின் கூருகிய சிவத்திலும், அருளிலும், திரோதசத்தியிலு மடங்கும். யகரம் பசுவி லடங்கும், மகரம் பாசத்தி லடங்கும், அஞ்ஞானமாகிய மலமும், அதனேடு கூடி

யிருக்கப்பட்ட திரோதானசத்தியும் ஆன்மாவைப் பொருந்தாமனிற்கும்படி சிவமுன்னாக வுச்சரித்தால் திரோதமொருபாலும் அருளும் சிவமுமொருபாலும் முன்பின் சூழ்ந்து நிற்க நடுநின்றது ஆன்மா. அப்போது நவ்வாகிய திரோதசத்தியும் மவ்வாகிய மலத்தின் மேலீட்டையும் நீக்கி யருளாக நின்று பிரகாசிக்கும். மலத்தினின்று மீளவிட்ட வவ்வாகிய வருள் சிவ்வாகிய சிவத்தையுந் தாராநிற்கும். பின்பு மலபாகம் வந்த யவ்வாகிய ஆன்மா வகாரமாகிய அருள்தாரகமாகச்சென்று அந்தச் சிகாரமாகிய சிவத்தோடுங் கூடி யிரண்டறநின் றனுபவிக்கும்.

## பஞ்சசுத்தி.

பூதசுத்தி:—முப்பத்சாறு தத்துவங்கள் நாமல்ல, அவையாவுஞ் சடம், அவையுந் தானாகக் காரியப்பட மாட்டாவென வறிகை.

ஆன்மசுத்தி:—அப்படியறிவது திருவருளாலன்றி ஆன்மபோதத்தா லல்லவெனவறிகை.

திரவியசுத்தி:—ஆன்மபோதத்தாற் றானே யறிகைக்குச் சேட்டையில்லையென்று கண்டது கொண்டே ஆன்மாவுக் கறிவில்லையென வறிந்து, கண்டு கேட்டுண் டுயிர்த் துற்றறிவதெல்லாந் திருவருளெனவறிகை.

மந்திரசுத்தி:—ஐந்தெழுத்தைச் சிகாரமுதலாக மாறி அதன் உண்மையை விசாரித் தறிகை.

இலிங்கசுத்தி:—பதி யெங்கும் பூரணமாய்ப் பசு பாசங்களிரண்டினும் பிரிவற நின்று அவற்றைச் சேட்டிப்பித்து நின்ற தன்மையை யறிந்து அத்தகைய சிவம் இலிங்கத்தினு மெழுந்தருளி யிருக்குமென வறிகை.

## சத்திநிபாதம்.

மந்தம்:—நமக்குப் பேருயுள்ள வொரு பதி யுண்டென் றறிவெழுந்திருக்கை. அது வாழைத் தண்டிலே நெருப்புப் பற்றினாற் போலும்.

மந்ததரம்:—அப்பதியை யடைவதற்கு வழி யெப்படி யென்றாராய்கை. அது பச்சை விறகிலே நெருப்புப் பற்றினாற்போலும்.

தீவிரம்:—அப்படி யாராய்ந்தறிந்த பதியை யடைவதற்குப் பிரபஞ்சத்தை வெறுத்துப் புளியம்பழமும் அதனோடும்போல் நிற்றல் அது உலர்ந்த விறகிலே நெருப்புப் பற்றினாற்போலும்.

தீவிரதரம்:—பிரபஞ்சத்தை முற்றத்துறந்து ஆசாரியனே பொருளெனக் கண்டு வழிபடுகை. அது கரியிலே நெருப்புப் பற்றினாற்போலும்.

## தீட்சைகள்.

ஆசாரியன் பாசவிமோசனம் பண்ணும்படி ஆன்மாக்களுக்குச் செய்யும் தீட்சைகள் சாதிம்பதமுதலியவற்றால் பலவிதமாம். அவை வருமாறு:—

நயனதீட்சை:—மீன் தனது சினையைக் கண்ணால் பார்த்தமாத்திரத்தால் இரட்சிப்பதுபோல ஆசாரியன் நயனத்தால் கடாட்சித்தனுக்கிரகிப்பது.

பரிசதீட்சை:—கோழியானது தனது சினையைச் சிறகாற்றழுவிக் காத்தல்போல தனது கரத்தால் தொட்டனுக்கிரகிப்பது.

மானசதீட்சை.—ஆமையானது தனது சினையை நினைத்த மாத்திரத்தா லிரட்சிப்பதுபோ லனுக்கிரகிப்பது.

வாசகதீட்சை:—பஞ்சாட்சரோபதேசத்தா லனுக்கிரகிப்பது.

சாத்திரதீட்சை:—ஆகமார்த்தங்களைப் போதிப்பது.

யோகதீட்சை:—யோக மார்க்கத்தால் சீடனது இருதயத்திற் சென் றனுக்கிரகிப்பது.

அவுத்திரிதீட்சை:—ஓமசம்பந்தமுற்றது. இது ஞானதீட்சை யென்றுங் கிரியாதீட்சையென்றும் இரண்டுவிதமாம்.

ஞானதீட்சை:—மனத்தாற் செய்யப்படுவது.

கிரியாதீட்சை:—குண்டலமண்டலாதிக ளிட்டுச்செய்வது.

இது நிர்ப்பீஜமென்றும் சபீஜமென்றும் இரண்டுவகையாம்.

நிர்ப்பீஜம்:—இது சத்தியநிர்வாணமென்றும் அசத்தியநிர்வாணமென்றும் இரண்டாம்.

சத்தியநிர்வாணம்:—விருத்தர்முதலிய பக்குவர்க்குச் செய்வது.

அசத்தியநிர்வாணம்:—அறிவிலிகளாகிய வாலிபர் முதலியவர்க்குச் செய்வது.

சபீசதீட்சை:—ஆசாரியனிடத் தாகமங்களையோதிப் பதி பசு பாச உண்மைகளை யறிந்துசமயாசாரங்களில் வழுவாதநன்மையுடையவர்கட்குச் செய்வது. இது உலோகதர்மிணியென்றும் சிவதர்மிணியென்றும் இரண்டாம்.

உலோகதர்மிணி:—ஆசாரியன் சீடனைப் பதப்பிராப்தியாகிய புவனங்களில் சேர்க்கும் தீட்சை.

சிவதர்மிணி:—மோட்சகாமியாகிய சீடனுக்குச் சிகாச்சேதஞ் செய்து மோட்சத்தை யடைவிக்கும் தீட்சை. சமய, விசேட, நிர்வாண தீட்சைகளும், ஆசாரிய வபிடேகமும், சபீட்சையிலு முத னுட்பிரிவுகளிலு மடங்கும்.

## † தசகாரியம்.

தத்துவரூபமாவது:—முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலைத் தனக்கு வேறுயறிதல்.

தத்துவதரிசனமாவது:—தத்துவங்களைச் சடமென்றறிதல்.

தத்துவசுத்தியாவது:—அவைகளைச் சிவஞானத்தினாலே தனக்கன்னியமென்றறிதல்.

---

† இவற்றின்விரிவைச் சித்தாந்ததசகாரியக்கட்டளையிற் காண்க.

ஆத்துமரூபமாவது:—பஞ்சமலங்களும்நீக்கி ஆத்மஞானமென்னு மறிவே வடிவென வறிதல்.

ஆத்துமதரிசனமாவது:—தனக்கொரு செய்தியு மில்லையென்றறிந்து நிற்றல்.

ஆத்துமசுத்தியாவது:—பெத்தத்தினும் முத்தியினுஞ் சிவனுபகரிக்கிறாரென்று தன்னுடைய சுதந்தர ஆனியை யறிந்து சிவஞானத்திலே யழுந்தல்.

சிவரூபமாவது:—ஆணவமலத்திலே கிடக்கிற வான்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச்செய்து மலங்களைநீக்கி மோட்சத்திலே விடுவனென்று திடமாயறிதல்.

சிவதரிசனமாவது:—சிவன்செய்யும் பஞ்சகிருத்தியத்தை ஆன்மா செய்யானென்றறிந்து ஆன்மாவைத் தரிசிப்பித்து நின்றஞானம்.

சிவயோகமாவது:—சிவசத்திசெய்யுங் கிருத்தியமெல்லாம் சிவனுக்குச் சற்றுமில்லை யென்றறிந்து, சிவ சத்தியையன்றித் தனக்கும் பிறருக்குஞ் சற்றுஞ் செய்தியில்லையென்று தெரிந்து திருவருளோடழுந்தல்.

சிவபோகமாவது:—சிவத்தோ டிரண்டற நின்று சிவானந்தத்தைப் புசித்துவருதல்.

இக்கட்டளை யியற்றினர் அறுபான் மும்மை நாயன்மார்களிலொருவராய வாயலார் நாயனூர் பரம்பரையில்வந்த வரும்,சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவபிரவர்த்தகாசாரியரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களிலொருவரும், சென்னை மெய்கண்ட சந்தான சபை அக்கிராசனுதிபதியுமாகிய சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரர்.

சித்தாந்தக்கட்டளை
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தசாதனக்கட்டளை.

## காப்பு.

*சேதனன்வி யாபகநல் லறிவினைம றைத்தோங்கிச் செறிந்த பாச
வேதனைநீத் தமலனுட னத்துவிதக் கலப்பெய்தி விளங்க ஞான
வேதனமதடைந்திடுவானுண்மைநூல்களின்முன்னம்விரித்துரைத்த
சாதனமீ தெனவியம்பத் தனித்தவிநா யகன்றாளைச் சாற்று வாமால்.*

## நூல்.

*"சர்யாக்ரியாசயோகச்ச ஜ்ஞாநஞ்சேதிசதுர்விதம்
ஆத்மநாம்பந்தமுக்த்யர்த்தம் கல்பிதாநிசிவேநவை"*

*சாதனமாவது சரியை, கிரியை, யோகம், ஞானமெனநான்கு வகைப்படும். சரியையாவது தேகத்தினைச் சிவார்ப்பிதஞ்செய்தல். அதாவது புறத்தொழின்மாத்திரையானே முதல்வனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும்வழிபாடு. இது சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானமென நால்வகைப்படும்.*

## முதலாவது சாதனம்.

### சரியையிற் சரியை.

*சலசுத்தி முதற்சுத்திசெய்து பீஜமந்திரங்கூடாமல் ஆசமனம், இதயாதிகளினால் அங்கநியாசம்; விபூதிதாரணம், சடங்கநியாசம், மார்*

ச்சனம், அகமருடணம், சிவமூல மந்திரம், பரமேசுவரி மந்திரம், கணபதி மந்திரம், சுப்பிரமணிய மந்திரம், குரு, ஆதித்தன், இருடிகள், மனுடர், பூதங்கள், பிதிர்கள் இவர்களுக்குத் தருப்பணம் முதலியவைகளை யுணர்த்துவது.

## சரியையிற் கிரியை.

திருக்கோயிலின் நியதிசெய்யுமளவில் சாயையை மிதியாதிருத்தல், எச்சிலுமிழாதிருத்தல், சிவநின்மாலியஞ் சேரப்பட்ட சண்டேசுரத்தானம் நின்மாலியம் விழுங்கோமுகத்தான மிவற்றைக்கடவாதிருத்தல், பலிபீடத்தை இடபத்தேவரைக் குறுக்கிடாதிருத்தல், தெய்வத்தானங்களிற் கால்நீட்டாதிருத்தல், விளையவாராமலும் ஒன்று இரண்டுபிரதட்சணம் பண்ணுதிருத்தல், திருவலகாற்கிருமிகள் சாகாமல் மேற்பட அலகிடல், சாணகங்கொள்ளுமிடத்து ஈன்றணணியதும் நோயுள்ளதல்லாததுமான பசுக்களிற் சாணகம் பூமியிலே விழுமுன்னே இலையிலேற்றுக்கொள்ளல், அன்றிச் சுத்தநிலத்தில் விழுந்தால் மேல்கீழ்தள்ளி நடுப்படவெடுத்து, நதி ஓடை வாவியாதிகளில் வடித்தெடுத்த திருமஞ்சனத்தால் மெழுகிடல், நந்தவனமுண்டாக்கல், இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டிற் கட்டுவ தாகிய திருமாலைகளையுண்டாக்கிச் சிவபிரானுக்குச் சாத்தக்கொடுத்தல், திருவேடத்தார்க்கு அடிமைத்தொழில்புரிந்து அவரேவலின் வழியே நிற்றலாகிய இவைகளையுணர்த்துவது.

## சரியையில் யோகம்.

எழுகோடி மந்திரவடிவுகளைத் தன்னிதயத்திலே தியானிப்பது. அல்லது நாடோறுந் திருக்கோயினியதிசெய்யுமிடத்துச் சதாசிவநாயனார் திருமேனியைக் கிழாதாரசத்திமுதல் மேற்சுத்தமாயையளவாக அக்கினிசொரூபமான வித்தியாதேகமாகத் தியானித்து இந்தவளவிலே பதுமராகஒளிபோலத் திருமேனியைத்தியானித்துப் பிர

தட்சணம் செய்யுமளவில் ஒருகாற்பாதாளத்திலே வலம்வருகிறதாயும், ஒருகாற் பூமியிலே வலம்வருகிறதாயும், ஒருகா லாகாயத்திலே வலம்வருகிறதாயும் திருக்கோயினியதி நினைத்துச் செய்துவருநேரமெல்லாம் அந்தத்தழற்பிழம்பான ஒளியுடனே மனப்பற்றுகிச் செய்ய வுணர்த்துவது.

## சரியையில் ஞானம்.

ஒன்றையுங் கொலைசெய்யாமை, இந்திரியங்களை யடக்குதல், பொறை, உண்மையன்பு, தியானம், தவம், சத்தியம், சிவனேவலாக அறிவுகோடல் ஆகிய ஞானபுட்பமெட்டினையும் சாத்தல், சதாசிவமூர்த்தியையும் அவன் வேடம்பூண்ட அவனடியாரையும் அந்த மூர்த்தி மன்னுங்கோயிலையும் அந்தப்பரம்பொருளாகவே நிச்சயித்துக் கைகொண்டு அதுவே தனதுபணியாகத்தியானஞ்செய்திருப்ப தனையுணர்த்துவது.

# இரண்டாவது சாதனம்.

கிரியையாவது இந்திரியங்களைச் சிவார்ப்பிதஞ்செய்தல். அதாவது புறத்தொழின் அகத்தொழின்மாத்திரையானே முதல்வனுடைய அருவுருவத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு. இது கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானமென நால்வகைப்படும்.

## கிரியையிற் சரியை.

கலசுத்தி முககசுத்திசெய்து பீஜமந்திரத்தோடுகூடிய மந்திராசமனம், விபூதிதாரணம், உருத்திராட்சதாரணம், அக்கினிகாரியம், அங்கநியாசம், கரநியாசம், மார்ச்சனம், அருமருடணம்,சிவகாயத்திரிசெபம், பஞ்சாட்சரசெபம் என்பவைகளை யுணர்த்துவது.

## கிரியையிற்கிரியை.

புஷ்பம் திருமஞ்சன முதலிய உபகரணங்கள்கொண்டு ஆன்ம சுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி இலிங்கசுத்தி, என்னும் பஞ்சசுத்திகளுஞ்செய்து சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்திபரியந்த பதுமமாகிய சிவாசனம்பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியா தேகமாகிய மூர்த்தியை நியாசஞ்செய்து, அவ்வித்தியாதேகத்திற்குச் சீவனுயுள்ள நிஷ்களரூபரும் சருவகருத்தாவும் சருவவியாபகருமாகும் பரசிவனாகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்தின்மேலே தியானித்து முன்னே நியாசஞ்செய்த வித்தியா தேகத்திலே ஆவாகித்து, சுவாமீ! பூசையின்முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் அன்புடன் இவ்விலிங்கத்தினிடத்தே சாந்நித்தியராயிரும் என விண்ணப்பஞ்செய்து பூசித்துத் தோத்திரம் பிரதட்சணம் நமஸ்காரம் முதலிய பண்ணிச்சூரியபூசையுடன் சிவபூசையை முடித்தலையுணர்த்துவது.

## கிரியையில் யோகம்.

மேதாகலை முதல் உன்மனாகலை யீருயுள்ள சோடசகலைகளுள்ளே, மேதாகலை, அர்க்கீசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினிகலை, வியோமரூபிணிகலை, அநந்தைகலை, அநாதைகலை, அநாசிருதைகலை, சமனாகலை என்னும்கலைகளிலே தனித்தனியமைந்து கிடந்த தத்துவம் முதலியவைகளை எல்லாம் இருதயமுதல் சமனாந்தம்வரையும் சோபானமுறையாய் அவ்வக்கால மாத்திரையினுள்ளே கடந்து கடந்து சென்று பஞ்சாக்கரத்தின் நாமாக்களிலேவைத்து, சமனாந்தே பாசசாலம்என்றறிந்து அவற்றைக் கழித்துவிட்டு உன்மனாந்தே பரசிவமெனக்கொண்டு சிவத்தைத்தியானித்துப் பின்பு தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப்பொருளாகிய சிவமொன்றே விளங்கப்பெற வுணர்த்துவது.

## கிரியையில் ஞானம்.

எல்லாவுயிர்க்கும் அந்தக்கரணங்களுக்கும் ஆதாரமாவது சூக்குமவெழுத்தெனக்கண்டு சூக்குமத்தாலே இதயத்திலேபூசித்து மூலாதாரத்தில் பிரணவத்திலே அக்கினியையெழுப்பி ஓமஞ்செய்து புருவமத்தியிலே விந்துத்தானமாகிய கோர்தண்டத்தே தியானமுற்றுப் பொருந்தலாம். அல்லது மூலாதாரந்தொடங்கிப் பன்னிரண்டங்குலத்திலே நாளமாய் அதுமுப்பத்தொரு தத்துவமான மாயையளவாய் மலோபதானம் மூன்றும் சுத்ததத்துவ மைந்துமாக எட்டும் மலராக்கி அதற்குட் சிவன்வடிவு வித்தியாதேகமாக்கி இந்தவடிவுடையவன் சிவனைக்கண்டு அருச்சிப்பது. அல்லது பிரபஞ்சமாகக் காணப்பட்ட வடிவுகளுங் காணப்படாத நிட்களவடிவுமாகிய எல்லாவற்றையுஞ் சத்திவடிவாகக்கண்டு இதற்குப் பிராணனைச் சிவனைத்தியானித்துத் தரிசித்துக் கைகொண்டு எவ்விடத்தினுமாக அறிவு இரவும் பகலும் விடாமற்கொள்வது ஆக விவற்றைக்குறித்துணர்த்துவது.

## மூன்றாவது சாதனம்.

யோகமாவது கரணங்களைச் சிவார்ப்பிதஞ்செய்தல். அதாவது அகத்தொழின்மாத்திரையானே முதல்வனுடைய அருவத்திருமேனியைநோக்கிச் செய்யும்வழிபாடு. இதுயோகத்திற்சரியை, யோகத்திற்கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானமென நால்வகைப்படும்.

## யோகத்திற் சரியை.

கண்டமளவும் விரல்செலுத்திப் பித்தம்வாங்கலும் சலத்தைவாங்கி யுள்ளேகொள்ளுதலும்செய்து, பிரணவமந்திரத்தாலே பூரித்துக் கும்பித்து ரேசித்து அஞ்ஞானம்நீக்கு ந்தக்கதாக மூன்றுகாலமும் உத்தூளனஞ்செய்து, தாழைசாற்றால் உப்பும், புளியுஞ்சிராய்ச்

சாம்பனீராற் புளியும், கடுக்காயாற் கைப்புமறுத்து அன்னங்குறைத்துக் கறிகள்நீக்கி, சத்திரயோகம் தூலகன்மமாகிய மெய்யிற்றொழில் உடற்கன்மமாகிய சங்காரயோகமுதல் செய்துவருவதாகிய இயமநியமங்களை முன்செய்து, சங்கிதாமூலமந்திரத்தாலே சிவனை மனத்திற்றியானித்துத் தண்டம்பண்ணிப் பரிவுறுமதனை யுணர்த்துவது.

## யோகத்திற் கிரியை.

பதினாறுமாத்திரையளவிற்கு வாயுவைப்பூரித்து, அறுபத்தினாலு மாத்திரையளவிற்குக் கும்பித்து முப்பத்திரண்டு மாத்திரையளவிற்கு ரேசித்தல், பிரணவத்தினை உச்சரித்து வாயுவை யுள்வாங்குதல், இருபத்தோராயிரத்தறுநூறு வாயுக்களைத் தினவழியிலே குறைத்தல், இரண்டு நாசியினாலும் வாயுவைப் பலகாலுள்வாங்குதல், புருவமத்தியிலே தியானித்தல், வாயுவைக் கபாலத்தினின்றுந்தோன்றி ஒடுங்கினதாகத் தியானித்தல், வாயுவையடக்கிக் கன்னமூலத்தால் விடுதல், உடம்பை பூரிப்பித்தல், வாயுவை எப்போதும் மேனோக்கிச் செலுத்துதல், சித்திரநாடி வச்சிரநாடி சுழுமுனாநாடிகளிலே வாயுவைச் செலுத்துதல், உபத்தத்தால் வாயுவையேற்றல், பிரமரந்திரந் திறப்பித்தல், பிரசாதவழியிலே வாயுவைச்செலுத்துதல், நீர் உதிரம் முதலியதாதுக்களை அடக்குதல் முதலியவைகளை யுணர்த்துவது.

## யோகத்தில் யோகம்.

ஞானேந்திரியங்களையும் கன்மேந்திரியங்களையும் உள்ளேயடக்க வொடுங்கியிருந்து, மூர்ச்சிக்கும் பிராணவாயுமுதற் பத்துவாயுவுமியங்காமற் பிராணவாயுவையுங் கபாலத்திலே யடக்கிச் சற்றுநேரம் மனத்தினைவிகற்பியாது, மூலாதாரம் நாற்சதுரமும், சுவாதிட்டானம் முச்சதுரமுமாக இப்படி ஆறாதாரத்தையும் மூன்றுமண்டலத்தையும் அசபாமந்திரத்தைக் கீழ்மேலாகவுச்சரித்து வாயுவையேற்றி

மேலே சென்று ஆகாயத்தின் சந்திரகலையிலே அக்கினியோடே யுறைத்தலினலே யுருகிவிழுமமுதைக்கொண் டுடலமெங்கும்நிறைத்து, அகாராக்கரத்தினலே திருக்கூத்தைத்தியானித்து அந்தத்திருக்கூத்தோ டொன்றுபட்டவனுகி அந்தநடனத்தின்வழியிலேதியானமென்றுந் தானமென்று மிரண்டுபடாமலிருந்து தூங்குவதனையுணர்த்துவது.

## யோகத்தில்ஞானம்.

மண்முதலாகச் சொல்லப்பட்ட யாவற்றையும் கருகிக்குறிக்கும்வடிவால் அதாவது மண்ணைக் குறித்ததியானம் வச்சிரகாயஞ் சாதித்தல், நீரைக்குறித்ததியானம் வாயுவுள்ளடக்கிப் பவனமொடுக்கி ஒன்பதுவாயிலினும் நீர்செல்லாது அடக்கி நீரில்நடத்தல் கிடத்தல் அகமருடிணஞ்செய்தல் ஆயிரமுகமிருந்தல் முதலிய இபற்றுவது. தீயாவது மூலாக்கினியை யெழுப்பிக் கபாலத்தைவெடிப்பித்துடலை வெந்தபுரிபோலாக்கி நெருப்புள் நிற்க விருக்கக்கிடக்கச் செய்வது. காற்ருவது வாயுவை யுடலெங்குமோட்டிக் காயத்தோடா காயத்திற்செல்லப் பரகாயப்பிரவேசஞ்செய்பவருதல். வடிவில்லாத வாகாயம் உடலைச்சூனியமாக்கல் உயிரைச் சூனியமாக்கல் அறிவைச்சூனியமாக்க லிவையாம். இதனல் அணிமா மகிமாவுமாம். ஒளியாவது நாசி நுனி புருவமத்தியம் விளக்குள்ளொளி மின்னெளி விந்துவொளி உள்ளொளிமுதலான வொளிகளைத் தியானிக்கை. சூனியமாவது எல்லாந் தன்னிடமாகத் தானெங்குஞ்செல்ல வியற்றுகை. வாயுவைநிறைவாகக்கண் டந்நிறைவோ டறிவுநிறைதலாம்படிநிற்றல், அக்கரங்களாவது ஔகாராதி அக்கரங்களைத் தனித்தனியே தியானித்தல், விந்தாவது குறித்தபொருளிலே யுரைப்பதும் அதிலேயடங்கச் சங்குகடல்மணிபோல வோசையெழுவது. இவையாதிவற்றின் கூறியநிலையே நிலையாக இவற்றொன்றின்வடிவாய் அந்தநிலையிலே மனமும் வாயுவுமடங்க வவைதானே அறிவுமாய் வேறுசற்றும் ஊன்

உறக்கங்களிலும் பேதியாமல் அவ்வுண்மையின் மனக்கவலையிற்றொன்றுபட்டதாகக் கண்டுகொண்டுநின்ற வத்தன்மைகள் பெறுவது ஆகியவிவற்றை யுணர்த்துவது.

## நான்காவது சாதனம்.

ஞானமாவது ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ்செய்தல் அதாவது புறத்தொழில் அகத்தொழிலிரண்டுமின்றி அறிவுத்தொழின்மாத்திரையானே உருவம அருவுருவம் அருவம்என்னு முத்திறத் திருமேனிகடந்த அசண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நின்ற முதல்வனிடத்துச்செய்யும் வழிபாடு ஞானமெனப்படும். இது ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானமென நால் வகைப்படும்.

### ஞானத்திற்சரியை.

ஞானத்தினிற்பார் நயிட்டிகரென்றுஞ் சாதகரென்று மிருவகையாம். அவரின் நயிட்டிகராவார் சந்தத நிட்டையிலேயிருப்பர். அவர்க்குச் சரியைமுதலான கிரியைசெல்லாதாம், சாதகியாயுள்ளவர்க்கு முன்னே சொல்லப்பட்ட ஞானத்திற்சரியை சொல்லப்படும் அதாவது யானெனதென்னுந்தன்மையுடனிராக்காலமெல்லாஞ் சூக்குமவுடலிலே புசிப்பித்துக்கொண்டுநின்ற முறைமையுங்கண்டு மீளவுந் தூலதேகத்திலே கூடினமுறைமையுமறிந்து சுத்தசலத்தான் முகசுத்தி முதலானவைசெய்து பஞ்சாக்கரங்கூடின ஈசானாதியாலே திருநீறுசாத்தி தத்துவங்கள் முப்பத்தாறுஞ் சுத்தமாகிறதாக்கண்டு ஆசமனம்பண்ணி நியாசஞ்செய்து தர்ப்பித்துவிடுவது முதலியவுணர்த்துவது.

### ஞானத்திற்கிரியை.

பிருதிவியாதி தத்துவங்களைச் சடமெனக் காண்டலாகிய பூதசுத்தியும்,திருவருளானன்றி அங்ஙனம் ஆன்மா அறியாதெனக் காண

டலாகிய ஆன்மசுத்தியும், கண்டுகேட்டுண் டுயிர்த்துற்றனவெல்லாந் திருவருளெனக் காண்டலாகிய திரவியசுத்தியும், திருவைந்தெழுத்தைச் சிவமுன்னாகக் கணித்தலாகிய மந்திரசுத்தியும்; யாண்டும் நீக்கமறவியாபித்து நிற்குமுதல்வன் இவ்விலிங்கத்தினுமுளனெனக் காண்டலாகிய இலிங்கசுத்தியுமாக ஐந்துசுத்தியுஞ்செய்து வழிபடுதலை யுணர்த்துவது.

## ஞானத்தில்யோகம்.

எழுத்தக்களைந்தும் சத்தியும் அவற்றின்பொருள் சிவமுமாம். இவ்வகையன்றிச் சிவனெழுத்து ஏதலும், சத்தியெழுத்திரண்டாவதும், உயிரெழுத்து மூன்றாவதும், திரோதானவெழுத்து நாலாவதும், மலவெழுத் தைந்தாவதும் அடைவுபெற்று நிற்குமாகையால், இவ்வெழுத்தைச் சொன்னவடைவி லுச்சரியாது திரோத மலம் கடையாயிருப்பதைத் தலையிலேயாகக்கொள் ளுமதுதியானிக்குங் காலத்திற் போகவழியாய்விடுமல்லது முத்திவழியாகாது. இவ்வெழுத்தை ஞானவழியாகப்பார்த்துச் சிவனாலே சத்தியுஞ் சத்தியாலே யான்மாவும் ஆன்மாவைப்பற்றிப் போகத்தைக்காட்டுந் திரோதமுமத்திரோதத்தானடக்கு மலமுமென்று தெரிசித் துச்சரிக்குநேரத்தில் ஆன்மாத்திரோதமுதலான வுச்சாரணையி லான்மாப் பின்னின்று முன்னாய்த் திரோதமே பற்றும்பொருளையுணாந்துவேறுபாட்டின்றி யொன்றொன்றாகிய திரோதங்கூடாமற் திரோதமலநிலைகளை ஆன்மாவிட் டருளின்லயுற்று நிற்குநிலையாக வுச்சரித்தால் அவ்வுச்சாரணைங் குற்றமற்றான்மா நடுவேயாய்ப்பற்றுஞ்சிவத்திலே ஆன்மாக்கருத்தேகொண்டுநாட வெப்போது முச்சரிப்பதனை யுணர்த்துவது.

## ஞானத்தில்ஞானம்

பெத்தர்களாயினோர் மருண்மேலீட்டினாலே சிவமுற்றுந் தோன்றப்பெறாது பிரபஞ்சவாசனையோடு நிற்குநிலைபோல, முத்தர்களா

யினோர் அருண்மேலிட்டினாலே பிரபஞ்சவாசனை முற்றுந்தோன்றப் பெறாது சிவத்தோடு அத்துவிதமாய் நிற்குநிலையை உணர்த்துவது.

## சாதனசங்கிரகம்.

### முதலாவதுசாதனம்.

சரியையிற்சரியை:—திருக்கோயிலில் அலகிடல் மெழுகல் முதலியன.

சரியையிற்கிரியை:—ஒருமூர்த்தியை வழிபடல்.

சரியையில்யோகம்:—நெஞ்சின்கண் முதல்வனைத் தியானஞ் செயதல்.

சரியையில்ஞானம்:—தியானபாவனையின் உறைப்பினால் ஓரனுபவவுணர்வு நிகழ்தல்.

### இரண்டாவதுசாதனம்.

கிரியையிற்சரியை:—பூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாம்செய்து கோடல்.

கிரியையிற்கிரியை—ஆகமத்தில் விதித்தவாறே ஐவகைச்சுத்தி முன்னாகச்செய்யும் பூசனை.

கிரியையில்யோகம்:—அகத்தே பூசை, ஓமம், தியானம், மூன்றற்கு மூவிடம்வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம்.

கிரியையில்ஞானம்—அந்தரியாகவுறைப்பின்கண் நிகழும் ஓரனுபவ வுணர்வு.

### மூன்றாவதுசாதனம்.

யோகத்திற்சரியை:—இயமம், நியமம், ஆசனம், பிராணயாமமென்னு நான்கும்.

யோகத்திற்கிரியை:—*பிரத்தியாகாரமும் தாரணையும்.*

யோகத்தில்யோகம்:—*தியானம்.*

யோகத்தில்ஞானம்:—*சமாதி.*

## நான்காவதுசாதனம்.

ஞானத்திற்சரியை:—*கேட்டல்.*

ஞானத்திற்கிரியை:—*சிந்தித்தல்.*

ஞானத்தில்யோகம்:—*தெளிதல்.*

ஞானத்தில்ஞானம்:—*நிட்டைகூடுதல். (அத்துவிதநிலை)*

*இக்கட்டளையியற்றினார் அறுபான்மும்மை நாயன்மார்களிலொருவராய வாயிலாநாயனார் பரம்பரையில்வந்தவரும், சுத்தாத்துவிதசித்தாந்த வைதிக சைவபிரவர்த்த காசாரியரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான்களிலொருவரும், சென்னை மெய்கண்ட சந்தான சபை அக்கிராசனாதிபதியு மாகிய சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்* பூவைகல்யாணசுந்தரர்.

சித்தாந்தசாதனக்கட்டளை

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்ததசகாரியக்கட்டளை.

## காப்பு.

நிசமாய தன்னிலையீ தெனவுணரத் தடையாகச் சேர்ந்த பாச, வச மாகா திரண்டறவவ் விமலனொடு கலந்தொளிர வசைகா ணற்குக், குசமார்நுண் மைப்பொறியர் வகுத்துரைத்த வாய்மைநூற் குறித் துச் சூழ்ந்து, தசகாரியங்கூறத் தனிவிநா யகன்றாளைச் சாற்றுவா மால்.

## நூல்.

சித்தாந்தத்திற்குப் பொருந்துவதாகும் ஆகமத்தினையுள்ளபடி யாய்ச் சித்தாந்தவழியில் விளங்கச்சொல்லப்பட்ட தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன் மசுத்தி, பரரூபம், பரதரிசனம், பரயோகம், பரபோகமென்னும் பத் தவதரமுந் தசகாரியமாம்.

## தத்துவரூபம்.

பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறுதத்துவங்கள் தனுவும் கரணமும், புவனமும், போகமும், செயலும, பிரோகமுமாய் நின்ற பெருவடிவைத் தனக்கு வேறாகக்காணுமவதரம்.

## தத்துவதரிசனம்.

பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறுதத்துவங்களைச் சுத்த மாயா அசுத்தமாயாமலங்களின் காரியமென்றும், சடபதார்த்தங்க ளென்றும், தன்னாலேயறியப்பட்டனவென்றும் தன்னறிவிலே விள ங்கக்காணு மவதரம்.

## தத்துவசுத்தி.

பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறுதத்துவங்களின் விகற்பமாகிய சுட்டறிவுகளிற் றானில்லாமல் தத்துவங்கள் தன்னைத்தாக்காமல் கானலைத்தண்ணீரென்று கண்டவுடன் கானலென்றறிந்தவிடத்துத் திரும்பவிரும்பாததுபோலவும், சொப்பனத்தில் யானையேறி மாலைசூடக்கண்டவன் விழித்தவிடத்ததுமெய்யாகக்காணாமல் பொய்யாகக்கண்டதுபோலவும், தன்னறிவிலேகண்டு நீங்கித் தானசைவின்றி யன்னியனுமெங்குநிறைவாய் நித்தமாயறிவாயுள்ள முறைமையையறிந்து நின்றவவதரம்.

## ஆன்மசுத்தி.

தேசிகமூர்த்தியினுடைய அனுக்கிரகத்தினால் தன்னையுந் தன்னிடத்திலே பந்தமாயிருக்கிற தத்துவ விவசாரங்களையு மெவ்விடத்திலுந் தோன்றாமல் சகசமாய் மறைந்துநின்ற வாணவ மலத்தினையு நீங்கித் தானறியுமுறைமையியும் அவனுடைய ஞானமறிவுக் கறிவாகி நின்றுபகரிக்கிற முறைமையும் தன்னறிவிலே விளங்கக் காணுமவதரம்.

## ஆன்மதரிசனம்.

ஆன்மசெய்தி யெவ்விடத்திலுந்தோன்றாமல் தத்துவசாத்திசங்களை யெனதென்றும், பசுஞானத்தினை யானென்றும், நின்ற வசத்திய போதநீங்கிப் பழைய சிற்றறிவாகிய சுட்டுப்போதங் கழன்று நின்றவவதரம்.

## ஆன்மசுத்தி.

தனக்கெனச் செய்தியில்லாதவான்மா தன்னுடைய சுட்டறிவு எவ்விடத்திலுந்தோன்றாமற் கெட்டுத் தன்னிடத்திலே விளங்கப்பட்ட வனுக்கிரகத்தினாலே தற்பூரணமெல்லாமடங்கித் தன்னுடையசெய்தியெல்லா மனுக்கிரகத்தினது செய்தியாய்த் தன்னை யந்தஞானமடக்கின முறைமையும், தானந்த ஞானத்தினாலேயடங்கின

முறைமையும், எவ்விடத்திலுந்தோன்றாமல் பெத்தத்திலே தேக மே தானும் தானே தேகமாகியுநின்ற முறைமைபோல முதல்வ னே தானாய்நின்றவவதரம்.

## பரரூபம்.

சடசித்துக்களாகிய தாபரசங்கமங்களுமெல்லாந் தான்வேறற நின்று பெருமைபொருந்தி யிருக்கப்பட்ட காருண்ணிய சத்தியே தனக்குத் திருமேனியாகி ஆணவமலஞ் சகசமாயிருக்கப்பட்ட வான் மாக்கள் பாகபேதங்களைத் திருவுள்ளத்தடைந்து தனதிச்சாஞானக் கிரியையின் செய்தியாகிய மாயாதத்துவங்களினால் சிருட்டித்துந் திதித்துஞ் சங்கரித்தும் மலபாகமொழிவிலை யிந்ததத்துவங்கள் வேறாம்படிக்குச் சத்திநிபாதத்தை விளைவித்துச் சத்திநிபாதத்தின் வழியிலே புறம்பே கட்புலனுக்குத்தோன்ற மானிடச்சட்டைசாத்தி யெழுந்தருளிவந்து தான்வேறற நிற்கிறமுறைமையைத் தருகின்ற வன் ஆன்மாக்களுக்கெல்லா மறிவிற்கறிவாயிருக்கிற முதல்வனே யென்று பிரதிக்கினையேது திருட்டாந்தங்களினாலே மயக்கவிகற்ப மறத் தன்னறிவிலே விளங்கக்கண்டு நின்றவவதரம.

## பரதரிசனம்.

ஆன்மாவென்பதெவ்விடத்திலுந் தோன்றாமலெனதென்றும் யானென்றும் நின்ற வசந்திய போத நீங்கத் தேசிகமூர்த்தியினு டைய அனுக்கிரகஞானம் பிரகாசித்துநின்ற வவதரம் முதல்வனு டைய பாதம். தன்னையுணர்த்தும் பகுதியாகந் தாக்குவதான விடய போகங்களை யவனவளதுவாய் நோக்குமிடமெல்லா மவனுடைய அனுக்கிரகத்தையே கண்டனுபவிக்குமவதரம் முதல்வனுடையதிரு முகம், அந்தவனுக்கிரகத்திலே தற்செயல்தோன்றாமல் பரவசப்படு மவதரம் முதல்வனுடைய திருமுடியாமென்றறிந்து, இந்தவுண்மை யினைச் சந்தேகவிசற்பமற வுள்ளபடி விசாரித்துத்தேர்ந்து, இதுவல் லாமற் சத்தியமாயுள்ளபொருள் வேறேயுமொன்றில்லையென்றுதெளி

ந்து எனதியானென்னும் விசற்பமாகிய பிருதுவிமுதல் நாதமீறுகச் சொல்லப்பட்ட சகலாவத்தையிலும் பொருந்தாமல் இந்தக்கருவிகள் நீங்கினுற் றனக்குள்ள சகசநிலையாகிய கேவலாவத்தையிலும் பொருந்தாமல், இந்தக் கேவல சகல மிரண்டு நீங்கினவிடத்து விளங்குவதான போதபூரணமாகிய அகம்பிரமஞானத்திலும் பொருந்தாமல் தேசிகமூர்த்தியினுடைய செய்தியாய் அறிதற்கரிதாகிய மேலான பூரணவின்பந்தோன்றும லேகதேச வியாபாரமாகிய தனுகரணுதியின்பமேதோன்ற அந்தவின்பங்களையே மெய்யென் றனுபவித்து நின்றமுறைமைபோலத் தனுகரணுதி யின்ப மெவ்விடத்திலுந் தோன்றுமல் பூரணவின்பத் தொடர்ச்சியாகிய தேசிகமூர்த்தத்தி னனுக்கிரக ஞானத்தினை யெவ்விடத்திலுங் கண்டனுபவிக்கு மவதரம்.

## பரயோகம்.

சடசித்துக்களிரண்டினு நின்றுவிளங்குவதாகிய இதாகிதங்களுக்கேற்ற சத்தாதி விடயங்களிலே யெந்தவிடயங்கள்வந்து தாக்கினுலும், அந்தவிடயங்களை யெதிரிட்டுப்பார்த்து, இவை மாயாகாரியமான தனுகரண புவனபோகங்களினுடைய விகற்பமென்றும் இந்த விடயங்களினின்றும் விளங்குவதாகிய இதாகிதங்கள் கன்மத்தினது விகற்பமென்றுங்கண்டு தனக்கெனச்சற்றுஞ் செய்தியில்லாத சடரூபமாகையினலே தானுகச்செய்திட வறியாது. அந்தவிடயங்களை யதுவதுவாகப் புசிக்குமான்மாவை நித்தியனைப் பூரணனு யறிவாயிருந்தாலும் தானுக வொன்றையு மறிதற்கறிவில்லையென்னு முறைமையையுள்ளபடி தரிசித்து, அந்தவருளினது நிறைவெல்லாந் தனது வடிவாகவுடைய பூரணவின்பமெனக் கண்டித்துக் குருமூர்த்தமாயெழுந்தருளி மானிடச்சட்டை தரித்து வந்துபதேசித்த வனுக்கிரகத்தையுள்ளபடி தரிசித்து, இவ்விடத்திலேவந்து பொருந்தப்பட்ட சத்தாதிவிடயங்களையெல்லா மந்தவனுக்கிரகத்திலைலே பொருந்திப் பார்த்து, இந்தவிடய போகங்களின் வழித்தாய்த் தீவினையைச் செய்

விக்கிறது மனுக்கிரகமாகிய திருவருள்தானே, இந்த நன்மை தீமைகளை யறியும்படிக்குப் புசிப்பாகிவந்த விடயபேதங்களுக்கு மவ்வனுக்கிரகமாகிய வருள்தானேயென் றுள்ளபடி தரிசித்து, இந்தமுறைமையேயன்றிச் சித்தாகிய வான்மவர்க்கத்திற்கும் சடமாகிய பாசசாலங்களுக்கு மொன்றையொன்றறியவு மொன்றையொன்று பொருந்தவு மொருசற்றுஞ் செயலில்லையென்னு முறைமையை யுள்ளபடிதரிசித்து அந்தப்பொருளோ டிசைவதாகிய வவதரம்.

## பரபோகம்.

எத்தகைய தொழில்களைச்செய்தாலும் தற்செய லெவ்விடத்திலுந் தோன்றும லனுக்கிரகமாகிய வருணிறைவிலே வேறறநிற்கில் அந்தவருளுக்கு முதன்மையாகிய நேய மவனதறிவு பூரணமெல்லாம் தனதுவடிவாகக்கொண்டு தானந்தவறிவு பூரணத்திற்கெல்லாமுயிராய் இவனதறிவு தொழிலாகிய விந்திரியபோகங்களாய்வரும் புசிப்புந் தொழிலுந் தனதுபுசிப்புந் தொழிலுமாகவே புசித்துத் தொழிற்படும் நானுவிதமாகிய போகங்களை யெல்லா மிவனுக்குத் தனது பூரணவின்பமாகிய நேயவடிவாகவேகாட்டி இவனதறிவுபூரணமெல்லாந் தனதின்பப்பூரணமாகவும் தனதின்பப்பூரண மெல்லாமிவனதறிவு பூரணமாகவும் வேறறத்தோன்றிநின்று தனதின்பநிறைவெல்லா மிவனதனுபோக பூரணத்தை யமிழ்த்திநிற்கு மவதரம்.

## தசகாரியசங்கிரகம்.

தத்துவரூபம்:—முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலைத் தனக்குவேருயறிதல்.

தத்துவதரிசனம்:—தத்துவங்களைச்சடமென்றறிதல்.

தத்துவசுத்தி:—அவைகளைச் சிவஞானத்திஞலே தனக்கன்னியமென்றறிதல்.

ஆத்துமரூபம்:—பஞ்சமலங்களுக்கு நீங்கிஆத்ம ஞானமென்னு மறிவேவடிவெனவறிதல்.

ஆத்துமதரிசனம்:— தனக்கொரு செய்தியுமில்லையென்றறிந்து நிற்றல்.

ஆத்துமசுத்தி:—பெத்தத்தினும், முத்தியினுஞ் சிவனுபகரிக்கிறனென்றுதன்னுடைய சுதந்தர ஆனியையறிந்து சிவஞானத்திலே யழுந்தல்.

சிவரூபம்:—ஆணவமலத்திலே கிடக்கிற ஆன்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்து மலங்களைநீக்கி மோட்சத்திலே விடுவனென்றுதிடமாயறிதல்.

சிவதரிசனம்:—சிவன்செய்யும் பஞ்சகித்ருதியத்தை ஆன்மாசெய்யானென்றறிந்து ஆன்மாவைத்தரிசிப்பித்து நின்றஞானம்.

சிவயோகம்:—சிவசத்திசெய்யும் கிருத்தியமெல்லாம்சிவனுக்குச்சற்றுமில்லை யென்றறிந்து, சிவசத்தியையன்றித்தனக்கும் பிறருக்குஞ்சற்றுஞ்செய்தியில்லை யென்றுதெரிந்து திருவருளோடழுந்தல்.

சிவபோகம்:—சிவத்தோடிரண்டறச்சிவானந் தத்தைப்புசித்து வருதல்.

இக்கட்டளை யியற்றினர் அறுபான் மும்மை நாயன்மார்களிலொருவராய வாயிலாநாயனர் பரம்பரையில்வந்தவரும் சுத்தாத்துவிதசித்தாந்தவைதிக சைவ பிரவர்த்தகாசாரியரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான்களிலொருவரும், சென்னைமெய்கண்ட சந்தானசபை அக்கிராசனாதிபதியுமாகிய சித்தாந்த்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரர்.

சித்தாந்ததசகாரியக்கட்டளை
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தப்பிரகாசிகை.

வணங்கிவாழ்த்திமதிப்பரும்பொருளை
வணங்கிவாழ்த்திமதித்துமன்பெரிதே. (க)

இயங்கியற்பொருளுநிலையியற்பொருளும்
படைத்துடன்விராய்ப்பசுபாசமாற்றிய
முப்புரப்பகைஞன்மூழங்குகழனேன்றூண்
மெய்ப்படப்பரசுதும்வீடுபெறற்பொருட்டே. (உ)

சைவாகமத்தின்மெய்யுணர்காட்சி
யருட்சர்வாத்மசம்புவாசிரியன்
றருசித்தாந்தப்பிரகாசிகையினை
யம்முறைமொழிபெயர்த்தறைகுவன்
செம்மனத்தமிழோர்தெளிதரற்பொருட்டே. (ங)

ஈண்டுச் சாதி குலம் பிறப்பு முதலியவற்றான் அபிமானஞ்செய் தற்கு இடமாகிய இந்தத்தூலதேகம் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் இவ்வைந்துங்கூடிப் பரிணமித்தது. இந்தத்தூலதேகத்தின் முன்செய்த புண்ணியபாவங்களுக்கு ஈடாகிய வேதியர் முதலாகிய சாதியும் வடிவும் அழகும் இந்திரியவலிமையும்பெற்று வரையறைப்படும் ஆயுளும் வரையறைப்படும்போகமும் உடையவனாய் உடம்பிற்கு வேறாய் உடம்பினால் செய்யப்படும் புண்ணியபாவங்களுக்கு இடமாய் நித்தனாய் அருவாய் வியாபகனாய் ஞானக்கிரியா சொரூபியாய் ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதசத்தி என்னும் ஐவகைப்பாசத்தாற் கட்டுண்டு போக்குவரவுடையனாய்ப் புருடன் என நிற்பவன் ஆன்மா. இச்த ஆன்மாப் போகம்நுகர்தற்குக்

கருவியாகிய சூக்குமதேகம் பிருதிவிமுதல் கலை ஈருகிய முப்பது தத்துவங்களான் ஆக்கப்பட்டு ஆன்மாக்கள்தோறும் வெவ்வேருய் ஆயுள்முடிவின் முன்னுடம்பு விட்டு மற்ரேருடம் பெடுத்தற்குஎது வாயிருக்கும். இவ்விருவகை யுடம்பிற்கும் எதுவாகிய தத்துவங்களின் பெயரும் தொழிலும் தோன்றுமுறைமையும் எவ்வாறென்னில்: பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்து தத்துவங்களுக்கும் பூதம் என்றுபெயர். இவற்றிற்குக் காரணமான கந்தம் இரதம் உருவம் பரிசம் சத்தம் என்னும் ஐந்துதத்துவங்களுக்கும் தன்மாத்திரை என்றுபெயர். இந்தப்பத்தும் காரியம் எனப்படும். வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் ஐந்துதத்துவங்களுக்கும் கன்மேந்திரியம் என்றுபெயர். இவற்றின் தொழில் முறையே வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆனந்தமுமாம். சோத்திரம் தொக்கு சட்சு சிங்ஙுவை ஆக்கிராணம் என்னும் ஐந்துதத்துவங்களுக்கும் ஞானேந்திரியம் என்றுபெயர். இவற்றின்தொழில் முறையே சத்தமும் பரிசமும் உருவமும் இரதமும் கந்தமும் என்னும் இவற்றையறிதலாம். இந்தவாக்கு முதலிய கன்மேந்திரியம் ஐந்தும் சோத்திரமுதலிய ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப்பத்தும் கரணமெனப்படும். மனமும் அகங்காரமும் புத்தியும் என்னும் மூன்றுதத்துவமும், உடம்பின் புறத்துச்சென்று புலன்களை நுகர்விக்கும் சோத்திரமுதலிய இந்திரியங்களைப்போல, அகத்து நின்று தொழிற்படுத்துதலான் இம்மூன்றிற்கும் அந்தக்கரணம் என்றுபெயர். இவற்றுள் மனத்தின் தொழில் ஒருபொருளைச் சங்கற்பித்தலும் சோத்திரமுதலிய இந்திரியங்களைப்புறத்தே விடயங்களிற் செலுத்தலுமாம். அகங்காரத்தின்தொழில் அபிமானஞ்செய்தலும் பிராணன்முதலிய வாயுக்களை இயக்குதலுமாம். புத்தியின்தொழில் ஒருபொருளைத்துணிதலாம். துணிதலாவது இஃது இப்பிஅன்று வெள்ளியே என்று நிச்சயித்தலாம். ஆக இங்ஙனங் கூறப்பட்ட தத்துவங்கள் இருபத்துமூன்று.

இவற்றுள் நிச்சயித்திற்குக் காரணமான புத்திதத்துவத்தினின்றும் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் வேறுபாட்டான் மூவகைத்தாகிய அகங்காரம் தோன்றும். இதனுள் சாத்துவிக அகங்காரத்தினின்றும் மனமும் சோத்திரமுதலிய ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும். இராசத அகங்காரத்தினின்றும் வாக்குமுதலிய கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றும். தாமத அகங்காரத்தினின்றும் கந்தம் முதலிய தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும். கந்தம் முதலிய தன்மாத்திரைகள் ஐந்தினின்றும் முறையே பிருதிவி முதலிய பூதம்ஐந்தும் தோன்றும்: பூதங்களின்தொழில் முறையே தரித்தலும் பதஞ்செய்தலும் சுடுதலும் அவயவங்களைத் திரட்டுதலும் ஏனைநான்குபூதத்திற்கும் இடங் கொடுத்தலுமாம். இவற்றுள் பிருதிவிக்குச் சத்தமும் பரிசமும் உருவமும் இரசமும் என்னும் நான்கும் பொதுக்குணம் கந்தம் ஒன்றும் சிறப்புக்குணம். அப்புவுக்குச்சத்தமும் பரிசமும் உருவமும் மூன்றும்பொதுக்குணம், இரசம் ஒன்றும் சிறப்புக்குணம். தேயுவுக்குச் சத்தமும் பரிசமும் பொதுக்குணம். உருவம் ஒன்றும் சிறப்புக்குணம். வாயுவுக்குச் சத்தம் ஒன்றும் பொதுக்குணம். பரிசம் ஒன்றும் சிறப்புக்குணம். ஆகாயத்திற்குச் சத்தகுணம் ஒன்றே. இந்தச்சத்தம் வன்னரூபம் அன்று; எதிரொலி வடிவாயிருக்கும். இப்பிருதிவிமுதலிய இருபத்திரண்டு தத்துவத்திற்கும் மேலாகிய புத்திதத்துவத்திற்குக்காரணம் குணதத்துவம். இது சாத்துவிகம் இராசதம் தாமதம் என மூவகைத்தாய் முறையே சுகதுக்கமோகங்கட்குக் காரணமாக இருக்கும், இந்தக் குணதத்துவத்திற்குக்காரணம் பிரகிருதிதத்துவம் குணதத்துவம் இருபத்துநாலாவது; பிரகிருதிதத்துவம் இருபத்தைந்தாவது. இவ்விரண்டினுள் பிரகிருதிதத்துவத்தின்காரியம் குணதத்துவம். குணதத்துவத்தின் காரியம் சுகதுக்கமோகங்களும் முறையானே தனக்குக்கீழுள்ளபுத்திதத்துவமுதலிய இருபத்துமூன்று தத்துவங்களுமாம். பிருதிவிமுதற் பிரகிருதிவரை இருபத்தைந்து தத்துவங்களுக்கும் அசுத்தாத்துவாஎன்று

பெயர். இதற்குமேல் அராகதத்துவம். இதன்தொழில் விடயங்களில் ஆசையைப்பெருக்குதலாம். இதற்குமேல் நியதிதத்துவம். இதன் தொழில் ஆன்மாக்கள் அவரவராற் செய்யப்பட்ட கன்மம் அவரவரே நுகரப்படுமெனநியமித்தல். இதற்குமேல் காலதத்துவம். இதன் தொழில் நெடுங்காலநுகர்ந்தான் சிலகாலநுகர்ந்தான் எனப்புருடனுக்குப் போகத்தை வரையறுத்தல். இதற்குமேல் வித்தியாதத்துவம். இதன்தொழில் விடயத்திற்பற்றிய புத்தியைப்புருடனிடத்திற் கொண்டுசெலுத்துங்கருவியாதல். இதற்குமேல் கலாதத்துவம். இதன்தொழில் ஆன்மாக்களுக்கு அநாதியே செம்பிற் களிம்புபோலச்சகசமான மலசத்தியிற் சிறிது நீக்கி ஆன்மரூபத்தை விளக்குதல். இவற்றிற்குக்காரணம் மாயாதத்துவம். மாயாதத்துவத்தில் காலம் நியதி கலை வித்தை அராகம் இவ்வைந்தும் தோன்றும். இவ்வைந்தோடுங் கூடிப் புலன்களை நுகருமிடத்துப் புஸம்தத்துவம் என்று ஒருமலமுண்டாமாதலான் ஆன்மாவுக்குப் புருடதத்துவம் என்றபெயர். புருடதத்துவம் சடரூபம் அன்று. இங்ஙனம் கூறிய அராக முதல் கலை ஈறுகிய ஐந்துதத்துவங்களுக்கும் மிச்சிராத்துவா என்றுபெயர். ஆக இவை முப்பது தத்துவங்களும் ஆன்மாக்களிடத்தில் தனித்தனி சூக்குமதேகங்களாய் இருக்கும். புவனங்களில் தோன்றிய தேகங்களுக்கும், ஆதாரமாகிய புவனங்களுக்கும், ஆசிரயங்களாயிருப்பன் சர்வான்ம சாதாரணங்களாகிய முப்பது தத்துவங்களுமாம். இவற்றிற்கெல்லாங் காரணம் அசுத்தமாயாதத்துவம். இந்தமாயை நித்தமாய் வியாபகமாய் ஆன்மாக்களுக்கெல்லாம் கன்மத்தால் பந்திப்பதாய்த் தன்காரியமுகத்தான் ஞானக்கிரியைகளை விளக்குமாயினும் மயக்குவதாய் இருக்கும். இதற்குமேல் முப்பத்திரண்டாவது சுத்தவித்தியாதத்துவம். இதற்குமேல் முப்பத்துமூன்றுவது ஈசுர தத்துவம் இந்தச் சுத்தவித்தியா தத்துவத்தில் சத்தகோடி மகாமந்திரங்களும் காமிகமுதலிய இருபத்தெட்டாகமங்களும் சித்தாந்தசாத்திரத்தால்

பூசிக்கப்படாநின்ற நந்திமுதலிய கணநாதர் எண்மரும் இந்திரன் முதலிய உலகபாலகரும் வச்சிரமுதலிய இவர்கள் ஆயுதமும் இருக்கும். ஈசுரதத்துவத்தில் அனந்தர்முதலிய வித்தியேசுரர் எண்மரும் இருப்பர். இவர்களுள் அனந்ததேவர் ஏனைவித்தியேசுரருக்கும் சுத்தவித்தியாதத்துவவாசிகட்கும் மற்றவர்களுக்கும் தலைவராய் மாயையைக்கலக்கி மாயாதத்துவபுவனங்களை உண்டாக்குவர். இந்த அனந்தர்பரமசிவத்திற்கு வேறாய் அதிகாரமலம் ஒன்று உடையராய் இருப்பர். பாகம் வந்தகாலத்திற் பரமசிவத்தின் அருளால் பரமுத்தியை அடைவர். ஆணவம் கன்மம் என்னும் இருமலம் உள்ளபிரளயாகலருள் மலபரிபாகம் உடையோராய் நிரதிகரணமாய்ப் பரமசிவன் அனுக்கிரகம் செய்யப்பெற்றவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர். இவருள் ஸ்ரீகண்ட உருத்திரன் மத்தியப்பிரளைய முடிவில் பிரகிருதிதத்துவத்திற்குக் கீழ்ப்பட்டதத்துவங்களையும் புவனங்களையும் உண்டாக்கி ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றுமலம் உடைய சகலருள் ஞானத்தாலும் யோகத்தாலும் தவத்தாலும் தியானமுதலியவற்றாலும் சிறந்தவரைப் பிரமபதம் விண்டுபதங்களில் இருத்துவர். இந்த ஸ்ரீகண்ட உருத்திரர் மத்தியப்பிரளைய காலத்தில் அராகதத்துவத்தில் இருப்பர். பின்பு படைப்புக்காலத்தில் சுத்தாத்துவாக்களைப் படைத்துப் பிர்மாவும் விண்டுவும்செய்யும் சிருட்டிகளை அதிட்டித்து நின்று கீழ்ப்பட்ட புவனேசுரரையும் முப்பத்துமுக்கோடிதேவர்களையும் பிரமாண்டமுதலிய அண்டங்களையும் உண்டாக்குவர். பிரமாண்டத்தில் பதினான்குபுவனம் சகலருக்கிருப்பிடமாம். முன்சொன்ன உருத்திரருள் நூறு உருத்திரர் பாஞ்சபௌதிகமான பிரமாண்டத்திற்குக் காவலாயிருப்பர். பிரமா விட்டுணுக்களுடனேகூட குணதத்துவத்திலிருக்கும் ஸ்ரீகண்ட உருத்திரர் மத்தியப்பிரளையம் வரையும் அதிகாரஞ்செய்துகொண்டிருந்து பின்புஅந்தப் பிரமாவிட்டுணுக்களையும் ஒடுக்கிக்கொண்டு தாம் மிச்சிராத்துவாவில் அராகதத்துவத்தில் இருப்பர். இவரோடேகூட வீரபத்திரரும் இருப்பர். பிர

இருதிமத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். கலைமத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். இவர்களோடு முன் சொன்ன ஸ்ரீகண்டர் வீரபத்திரர் சத உருத்திரருமாக நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் பரமசிவன் அனுக்கிரகத்தால் பரமுத்தியை அடைவர். இந்த நூற்றுப் பதினெட்டு உருத்திரரும் மலபரிபாகத்தால் தீக்ஷைபெற்றுப் பரம சிவன் அருளால் பதங்களைப்பெற்றவர். சுத்தவித்தியா தத்துவங்க ளில் இருப்போர்மலபரிபாகத்தால் பரமசிவன் அருளால் பதம்பெற் றவர். இந்தச் சுத்தவித்தியா தத்துவவாசிகள் சரீரமும் வித்தியேசுரர் சரீரமும் வைந்தவம். நூற்றுப்பதினெட்டு உருத்திரர்சரீரம் மாயே யம். பிரமா விட்டுணு முதலியோர் சரீரம் பிரகிருதிசம்பந்தம். பரம சிவனுடைய எல்லாத்திருமேனியும் நூற்றுப்பதினெட்டு உருத்திரர் வடிவும் வித்தியேசுரர்வடிவும் போலத் தியானிக்கப்படும். பிரமாவிட் டுணு சரீரம் பிராகிருதமாகலானும் முன் பரமசிவன் அனுக்கிரகம் இல்லாமையானும் இவர்கள் சரீரம்போலப்பரமசிவனைத் தியானிக்க லாகாது. பிர்மவிட்டுணுக்கள்பதம் பசுத்தானம். உருத்திரர்பதம் இ ரண்டும் பதித்தானம். இந்தஈசுரதத்துவத்திற்குமேல் சதாசிவதத்து வம். இதற்குமேல்சத்திதத்துவம். இதற்குமேல்சிவதத்துவம். இந்த மூன்றுதத்துவமும் பரமசிவனுக்குமுறையே அதிகாரத்துவம் போக த்துவம் இலயத்துவம் எனப்பெயர் பெறுவதற்கு நிமித்தமாயிருக் கும். இந்தத்தத்துவங்கள் மூன்றினும் பரமசிவன் ஒழிய வேறே கிரு த்தியஞ்செய்யும் ஆன்மாக்கள் இல்லை. இலயம் போகம் அதிகாரம் என்னும் பதங்களை விரும்பிச் சாதகதீக்ஷைபெற்று மந்திரங்களைச் சாதித்த சாதகர்பின்பு பரமசிவன் அருளால் அந்தப்புவனத்தை யடைந்து போகம் நுகர்ந்து வைராக்கியம் வருமளவாதல் மகாசங் காரவருமளவாதல் இருந்து பின்பு வித்தியேசுவரருடனேகூடப் பர முத்தியைப்பெறுவர். சுத்தவித்தியாதத்துவத்தில் அகாரமுதலிய ஐம் பத்தோரக்கரமும் காமிகமுதலிய இருபத்தெட்டுச் சங்கிதைகளும் வைகரிவடிவாய்இருக்கும். ஈசுரதத்துவத்தில் பிரணவம் இருக்கும்.

சதாசிவதத்துவத்தில் சகளவிந்துவும் சகளநாதமும் இருக்கும், சத்தி தத்துவத்தில் சூக்குமை என்னும் பெயருடைத்தாய்ப் புத்திகாரணமாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாகிய சூக்குமநாதம் இருக்கும்; சிவதத்துவத்திற்குக் காரணம் விந்து. விந்துவுக்கும் சிவதத்துவத்திற்கும் வேறுபாடில்லை. சிவதத்துவங்களை யதிட்டித்து நிற்குஞ் சதாசிவருடைய சத்தி சகளம சகளநிட்களம் நிட்களம் எனவும், வியத்தம் வியத்தாவியத்தம் அவியத்தம் எனவும், மகேசுரன் சதாசிவன் சிவன் எனவும், பெயர் பெற்றிருக்கும். இந்தமுப்பத்தாறு தத்துவங்களுக்குள் விந்துவானது நித்தியமாய் வியாபகமாய் அருவமாய்ப் பரமசிவனாலே நித்தியம் அதிட்டிக்கப்படுவதாய்ச் சொல்வடிவும் பொருள்வடிவுமாய் நாதமுதலியவற்றின்வழியால் ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குதற்குக் காரணமாய் மயக்கஞ்செய்யாததாய்த் மாயாகாரியம் ஒழிந்த எல்லாப்பொருட்கும் உபாதானகாரணமாய்ச் சடமாயிருக்கும். இங்ஙனங் கூறப்பட்ட பிருதிவிமுதல் சிவதத்துவம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களுந் தத்துவாத்துவா. காலாக்கினிபுவனமுதல் அனுசிரிதபுவனம் ஈறாகிய இருநூற்று முப்பத்தைந்து புவனங்களும் புவனாத்துவா. அகரமுதலிய ஐம்பத்தோரக்கரங்களும் வன்னாத்துவா. வியோமவியாபிமந்திர வடிவான எண்பத்தொரு பதமும் பதாத்துவா. மூலப்பிரமாங்கங்களாகிய பதினொருமந்திரமும மந்திராத்துவா. நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளும் கலாத்துவா. இவ்வாறுள் கலைதத்துவம் புவனம என்னும் மூன்று அத்துவாக்களும் திரவிய வடிவாயிருக்கும். வன்னம் பதம் மந்திரம் என்னும் மூன்று அத்துவாக்களும் ஒலிவடிவாயிருக்கும். இவற்றுள் புவனம் தத்துவத்தைப் பற்றிநிற்கும். தத்துவம் கலையைப்பற்றி நிற்கும். வன்னம் பதம் மந்திரம் என்னும் மூன்று அத்துவாக்களும் புவனத்திற்றோன்றிய சரீரங்களைப் பற்றிநிற்கும். இந்த அத்துவாக்கள் ஆறுக்கும் மேலாகியகாரணம் சுத்தமாயை என்றுரைக்கப்படும். சுத்தமாயை குண்டலினி சுத்தவித்தியை பிரமம் என்பன ஒரு பொருட்கிளவி. அங்ஙனமே

அசுத்தாத்துவாவுக்கு மேலாகியகாரணம் அசுத்தமாயை என்றுரைக்கப்படும. இவ்வத்துவாக்களாறும் ஆன்மாக்களுக்குப் பந்தமாயிருக்கும். ஆன்மாக்கள் ஆறு அத்துவாவுக்கும் வேருய் நித்தியமாய் வியாபகமாய்ச் சேதனமாய்ச் சரீரந்தோறும் வெவ்வேருய் வினைகளைச் செய்து வினைப்பயன்களை நுகர்வோராய்ச் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையவராய்த் தமக்கொரு தலைவனை உடையவராயிருப்பர். இந்த ஆன்மாக்கள் பந்தவேறுபாட்டாற் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என மூவகைப்படுவர். இவர்களுக்கு மாயாபந்தமாவது கலைமுதல் பிருதிவி ஈருனதத்துவங்களும் புவனங்களும் புவனத்துப்பொருள்களுமாயிருக்கும். கன்மபந்தமாவது சோதிட்டோமம் பிரமகத்தி முதலியவற்ருல் உண்டாவதாய் அபூர்வம் என்னும் பெயரையுடைய வாதனையாய்ப் புரியட்டகத்துள் புத்திதத்துவத்தைப்பற்றிச் சுகதுக்கமோகவடிவாயிருக்கும். மலபந்தமாவது ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைகளை மறைப்பதாய்ஆன்மாக்கள்தோறும் வெவ்வேருய்த் தத்தம்காலவரையில் நீங்கும் அநேகசத்திகளை உடைத்தாய்நித்தமாய் வியாபகமாய்ச் சடமாயிருக்கும். சுத்தமாயா பந்தமாவது வித்தைகள் வித்தியேசுரர் முதலியோர் சரீரங்களுக்குக் காரணமாயும் சகலர் போகம் புசித்தற்குக்கருவி யாகிய சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் வாக்குகளுக்கு ஏதுவாயிருக்கும். திரோதசத்திபந்தமாவது மாயை கன்மம் ஆணவம் வைந்தவம் என்னும் நால்வகைப் பாசத்தினுடைய அநாதித்தன்மை நிகழ்வதற்கு ஏதுவாயிருக்கின்ற சிவசத்தியே பாசமென்று உபசரித்துக்கூறப்படும். இங்ஙனம் ஐவகைப்பந்தங்களும் கண்டுகொள்க. சுத்தாத்துவாவில் இருப்போர் வைந்தவம் திரோதம் என்னும் இரண்டு பாசம் உடையர். மிச்சிராத்துவாவில் இருப்போர் இந்தஇரண்டுபாசத்தினுடனே ஆணவமும் கன்மமும் ஆகநான்குபாசம் உடையர். அசுத்தாத்துவாவில் இருப்போர் அந்தநான்குடனே மாயையுங்கூட ஐவகைப்பாசமும் உடையர். இவருள் சுத்தாத்துவாவில் இருப்போர்க்கு முத்தரைப்

போல நிரதிசய இன்பமே அன்றித் துக்கத்தோடுகூடிய சுகதுக்க மோகங்கள் இல்லாமையால் அந்தஅத்துவா சுத்தம் என்றுசொல்லப் படும். மிச்சிராத்துவாவில் இருப்போர்களில் நிரஞ்சனர் ஒழிய அஞ்சனமுடையோர் தம்மெல்லையளவும் முற்றுணர்வுடையராயினும் சுக துக்கமோகங்களுடையராதலின் அந்த அத்துவாமிச்சிரம் என்றுசொல்லப்படும். அசுத்தாத்துவாவி லிருப்போர்களுள் நிரஞ்சனர் ஒழிய அஞ்சனமுடையோரில் சிலர் தம்மெல்லையளவும் முற்றுணர்வுடையோராயினும் மற்றுள்ளோரெல்லாம் சிற்றறிவும் சிறுதொழிலும் சுக துக்க மோகங்களும் உடையராதலின் இந்த அத்துவா அசுத்தம் என்றுசொல்லப்படும். இவற்றுள் மாயேயமும் வைந்தவமும் ஆதிபந்தம் கன்மம் பிரவாகாநாதியாய்ப் போகத்தால் அழிவதாம். ஆணவம் மூலமாய் அநாதிபந்தமாய்த் தன்பாகமுடிவில் பரமசிவன் திருவருளாகிய தீக்கையால் நீங்குவதாம். கன்மபாசம் ஞானத்தாலும் யோகத்தாலும் சந்நியாசத்தாலும் போகத்தாலும் நசிக்கும்.

இந்த ஞானமுதலாயின எல்லாம் சாத்திரவழியால் கிடைக்கும். அந்தச்சாத்திரங்கள் லௌகிகமும் வைதிகமும் அந்தியான்மிகமும் அதிமார்க்கமும் மாந்திரமும் என ஐவகைப்படும்.

அவற்றுள் லௌகிகமாவது ஆயுள்வேதமும் தண்ட நீதியும் முதலாயின. இவையிம்மையிற் பலிக்கும் நூல்கள்.

வைதிக நூலாவன வேதங்களில் கிரியாகாண்டத்தை மேற்கொண்டு சோதிட்டோமம் முதலியபுண்ணியங்களாற் பெறப்படும் துறக்கமுதலியவற்றைச் சாதிப்பதாகிய மீமாஞ்சைநூலும் வேசம் ஒரு புருடனாற் செய்யப்பட்ட தெனச்சாதித்துப் பிரமாணமுதலிய பதார்த்தங்களை ஆராய்ச்சிசெய்யும் முனிவராற்செய்யப்பட்ட நியாயநூலும் வைசேடிகநூலும் எனமூன்றுவகைப்படும். இந்தமூன்றும இம்மையினும் மறுமையினும் பலிக்கும் நூல்கள்.

அத்தியான்மிக நூலாவது சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் என மூவகைப்படும். அவை உபநிடதங்களை எடுத்துக்காட்டி யிருடி

களாற்செய்யப்படுவனவாய் ஆன்ம ஞானத்தைப் பலிப்பிக்கும் நூல்கள்.

அதிமார்க்கநூலாவது உருத்திரர்களாற் செய்யப்பட்ட பாசுபதம் காபாலம் மகாவிரதம் என்பன.

மாந்திரநூல்களாவது சிவன் அருளிச்செய்த சித்தாந்த சாத்திரம்.

இவற்றுள் மீமாஞ்சை நூல்செய்தவன் சைமினிபகவான். இந்நூல் வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி நித்தியமாய் உள்ளதென்றும், பிரபஞ்சநித்தமென்றும், இட்டிமுதலிய கன்மங்கள் செய்யவேண்டுமென்றும், கன்மம்செய்தலுக்கு அந்தவினையே துறக்கமுதலியபலன்களைக் கொடுக்குமென்றும், பௌதிகசரீரேந்திரியங்களுக்கு வேறாய் ஆன்மாக்கள் உண்டு என்றும், ஆன்மாக்கள் பலர் என்றும், இந்த ஆன்மாக்களுக்கு வேறாய் ஈசுரன் ஒருவன் இல்லை என்றும் கூறப்படும்.

இனிவைசேடிகநூலில் பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நான்குபூதங்களும் நித்தியம் என்றும், இவற்றிற்குக்காரணம் அவ்வப்பெயர்களால் வேறுபட்டபரமாணுக்கள் என்றும், இவற்றிற்கு வேறாய்ச்சத்தத்திற்குக் காரணமாய் நித்தமாகிய ஆகாசம் ஐந்தாம்பூதம் என்றும், இதற்குவேறாய்க் காலமும் திக்கும் ஆன்மாக்களும் நித்தமாய் அருவாய் வியாபகமாய் இருக்குமென்றும், ஆன்மா பரமான்மாவும் சீவான்மாவும் என இருவகைப்படுமென்றும், பரமான்மா ஈசுரனென்றும், சீவான்மா உடம்புதோறும் வேறாய்ப்பலவாய் இருக்கும் என்றும், இவற்றிற்கு வேறாய்ப் பலவாய் நித்தமாய் அணுவாய்ஞானத்துக்கேதுவாய் ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாய் இருப்பதுமனம் என்றும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் காலம் திக்கு ஆன்மா மனம் என்னும் இவ்வொன்பதும் திரவியம் என்றும், இவற்றிற்கு வேறாகிய சுக்கிலமுதலியன குணபதார்த்தம் என்றும், எழும்புதன்

முதலாயின கன்மபதார்த்தம் என்றும், குடத்தன்மை ஆடைத்தன்மை யென்றாற்போலும் சாதி சாமானியபதார்த்தம் என்றும், நித்தப்பொருள்களின் வேறுபாடுணர நிற்பது விசேடபதார்த்தம் என்றும், குடத்தில் குடத்தன்மையென்றாற்போலும் சம்பந்தம் சமவாயபதார்த்தம் என்றும், இவ்வாறுவகைப்பதார்த்தங்களுள் ஆன்மா என்னும் பதார்த்தத்துக்கு மனத்தோடுசையோகத்தால் ஞானம் உண்டாமென்றும், அதனானே புண்ணியபாவங்களாகிய கன்மானுட்டானம் உண்டாமென்றும், அதனானே சுவர்க்க நரகங்கள் சரீரமுதலாயின வுளவாமென்றும், எல்லாம்வல்லவன் ஈசுரன் என்றும், ஈசுரனுக்கு மனத்தோடு சையோகத்தால் ஞானம் உண்டாமன்றி இயற்கை ஞானம் இல்லை என்றும், இவ்வாறுபதார்த்தங்களுடைய பொதுவியல்பு வேற்றியல்புகளை யறியும் ஞானத்தால் ஆன்மாக்களுக்குக் கன்மம்நசிக்குமென்றும், கன்மம் நசிக்கவே மனத்தோடுசையோகத்தால் தோன்றும் ஞானம் இன்றிப் பாடாணம் போற்கிடப்பர் அதுவே முத்தியென்றும், வேதம் ஈசுரனாற் கூறப்பட்டதென்றும் சொல்லப்படும்.

இனி நியாயநூலில் பிரமாணமுதலிய பதார்த்தங்கள் பதினாறு என்றும், பதார்த்த இலக்கணமும் முத்திஇலக்கணமும் வைசேடிக நூலிற் கூறியவாறே என்றும் ஈசுரன் செய்விப்பன் என்றுங் கூறப்படும். இவ்விரண்டுநூலுஞ்செய்தார் கணாதரும் அக்கபாதரும்என உணர்க.

இனிச் சாங்கியநூலில் பிரகிருதி நித்தமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப்பொருட்குங் காரணமாய்ச் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னுமுக்குணங்களுஞ் சமமாய்நின்ற அவதரமாய் அருவாய் இருக்கும் என்றும், இந்தப்பிரகிருதி இருபத்தினான்காம் தத்துவம் என்றும், இந்தப்பிரகிருதியின்காரியம் புத்திதத்துவ முதற்பிரகிருதி தத்துவம் ஈறாக இருபத்துமூன்றுதத்துவம் என்றும், இந்த இருபத்துநான்கு தத்துவங்களுக்கும் வேறாய் நித்தமாய் வியாபகமாய் அரு

வாய் காணுபேசமாய் முற்றுணர்வும் தொழிலுமின்றி அறிவுமாத்திரமாயிருக்கும் ஆன்மாக்கள் இருபத்தைந்தாம் தத்துவம் என்றும், இந்த ஆன்மாக்களுக்கு முத்திகாலத்தும் பெத்தகாலத்தும் வேற்றுமை இல்லை என்றும், சொரூபத்தில் அழுக்குஇல்லை என்றும், அநாதியே புத்தியைச்சார்ந்த அவித்தை வசத்தால் சுகதுக்கஞானம் தோன்றும் என்றும் அதனால் பெத்தன் ஆயினனென்றும் பிரகிருதியையும் புருடனையும் பகுத்தறியும் விவேகஞானத்தால் அவித்தைநீங்கவே முத்தி என்றும் ஆன்மாக்களுக்கு வேறாய் ஈசுரன் ஒருவன் இல்லை என்றும் கூறப்படும். இந்தநூல் செய்தவன் கபிலமுனி.

இனிப் பாதஞ்சலநூலில் பிரகிருதியும் பிராகிருதங்களும் ஆன்மாக்களும் பெத்தமுத்திகளும் சாங்கியநூலிற் கூறியவாறே என்றும் விவேகஞானம்போல யோகமும் யோகாங்கமும் முத்திக்குக் காரணம் என்றும், இருபத்தாறாம் தத்துவம் ஈசுரன் ஒருவன் உண்டென்றும், அவன் எல்லாவற்றையும் அதிட்டித்துநின்று செய்வோனாகலானும் ஆன்மஞானத்தை உபதேசிப்பவனாதலானும் ஆன்மாக்களுக்கு வேறு என்றுங் கூறப்படும். இந்தநூல் செய்தவன் பதஞ்சலிபகவான்.

இனி வேதாந்தவாதிகள் பாற்கரியனும் மாயாவாதியும் சத்தப்பிரமவாதியும் கிரிடோப்பிரமவாதியும் என நான்கு வகைப்படுவர்.

இவருள் பாற்கரியர் சுரர்நரர் விலங்குமுதலிய சடசித்துக்களெல்லாம் பிரமத்தினுடைய பரிணமம் என்றும், இந்தப்பிரமம் சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் இருக்கும் அதுவே ஈசுரன் என்றும்,பரிணமித்து விகாரப்பட்டதை அறியாமையினாற் பந்தமாயிற்று என்றும், பாரமார்த்தத்தில் ஒருபொருளேஎன்றும், வேதாந்தஞானத்தால் சரீரத்திற்கு வேறாகிய ஆன்மரூபம் விளங்கும் என்றும், அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதன்கண் இலயித்தலே முத்தி என்றும் கூறுவர்.

இனி மாயாவாதிகள் முன்சொன்ன பிரமமே பாரமார்த்திகத்திலே மெய்ப்பொருள் என்று, அதுஒழிந்து காணப்பட்ட பொருளெல்லாம் இப்பியில் வெள்ளிபோலப் பொய்ப்பொருள் என்றும். சகத்திற்கு உபாதானம் மாயை என்றும், அந்தமாயை பிரமம்போல மெய்ப்பொருளும் அன்று முயற்கோடுபோலப் பொய்ப்பொருளும் அன்று என்றும், மாயைக்குவேருகப் பிரமசொரூபம் நான் என்றும் வேதாந்த ஞானத்தால் அறிவது முத்தி என்றும் கூறுவர்.

இனிச் சத்தப் பிரமவாதிகள் காரணமான பரப்பிரமம் பிரளயகாலத்தில் சத்தவடிவாயிருக்கும் என்றும், சடசித்துக்களாய்த் தோன்றியழியும் எல்லாப்பொருள்களும் சத்தத்தினுடைய விகாரம் என்றும், சத்தரூபமே முழுதும் என்றறிவது முத்தி என்றும் கூறுவர்.

இனிக் கிரீடாப்பிரமவாதிகள் முன்கூறப்படும் பிரமமே நான் என்றும், நான் ஒருபடித்தன்றிப் பலவகையாய் நானவிதமான விகாரப்பொருள்களோடுங் கூடிவிளையாடுகின்றேன் என்றும், இவ்வாறு அறிவதே முத்தி என்றும் கூறுவர்.

இந்த நான்கு மதங்களுக்கும் நூல்செய்தவன் வேதவியாசன் என அறிக.

மீமாஞ்சை வைசேடிகம் நியாயம் சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் என்னும் இவ்வாறுநூலும் வைதிகசாத்திரங்கள்.

இவ்வாறுள் வேதாந்தம் ஒன்றுமே அத்துவிதநூல்; ஏனை ஐந்தும் பேதநூல்கள்.

இந்த அறுவகைநூலும் அன்றி வேதத்திற்குப் புறம்பான நூல்கள் நாத்திகநூல்கள்.

அவையாவன பௌத்தம் ஆருகதம் உலோகாயதம் என மூவகைப்படும்.

அந்த மூன்றினுள் உலோகாயத நூலில் காட்சி ஒன்றே பிரமாணம் என்றும், காட்சிப் பொருளாகிய பிருதிவி அப்பு தேயு வாயு

என்னும் நான்குமே மெய்ப்பொருள் என்றும், இந்தநான்கு பூதக் கூட்டமான சரீரமே ஆன்மா என்றும், உடல்வளர அறிவு வளரும் உடம்புதேய அறிவுதேயும் என்றும், ஈசுரன் என்று ஒருவன் இல்லை என்றும், இம்மையில் சுகதுக்கங்களே சுவர்க்க நரகங்கள் என்றும், சரீரம் நசித்தால் மேலைக்கு ஆவதொருவினை இருப்பது இல்லை என்றும், ஆதலால் உடம்பிற்கு வேறாய் ஆன்மா ஒருவன் இல்லை என்றும் கூறப்படும். இந்த உலோகாயத நூல் செய்தவன் பிரகற்பதி பகவான்.

இனி பௌத்தநூலில், பிருதிவி முதல் புத்தி தத்துவம் ஈறுகத் தத்துவம் இருபத்துமூன்று என்றும், இவற்றுள் புத்திதத்துவம் பிரதானம் என்றும், பாஞ்சபௌதிகம் ஆன சரீரத்தில் புத்திதத்துவம் உளது என்றும், இந்தப்புத்திதத்துவமுதலிய எல்லாப்பொருளும் கணபங்கம்என்றும்,இவ்வாறன்றித் திரமாகிய ஆன்மா என்பதும் ஈசுரன் என்பதும் இல்லை என்றும் கூறப்படும். இந்தநூல் செய்தவன் ஆதிபுத்தன். இந்த நூலிற் கூறப்படும் முத்தியாவது தண்ணீர் ஓட்டம்போல அநித்தியமாய் அனுபவிக்கப்படும் ஞானசந்ததியே மோக்ஷமாம். இன்பத் துன்பத் தொடர்ச்சியின்றிச் சுத்தமான ஞான சந்ததியே முத்தியென்பர் சிலர். முறைமுறையாய் வளராநின்ற தீபம் எண்ணெயும் திரியும் தேய்ந்தவிடத்துக் கெடுவதுபோல ஞானசந்ததியினது நாசமே முத்தியென்பாரும் உளர்.

இந்தப் பௌத்தர் சௌத்திராந்திகன் வைபாடிகன் மகாயானிகன் மாத்தியமிகன் என்று நால்வகைப்படுவர்கள்.இவருள் ஒருசாரார் காணப்படும் பொருளெல்லாம் அசத்தியம் ஞானசந்ததி ஒன்றுமே சத்தியம் என்பர். மற்றொருசாரார் இந்தப் பொருள் அனைத்தும் சத்தியமே கணபங்கம் என்பர்.

இனி ஆருகதநூலில் ஆருகதநூல்செய்தவன் அருகன்என்றொரு கடவுள் அநாதியே உள்ளவன் என்றும் சீவன் என்றொருபதார்த்

தம் அநாதியே குற்றமுடைத்தாயிருக்கும்என்றும் இந்தச்சீவன்றூல தேகம் தேயத்தேயும் வளரவளரும் என்றும் மற்றை இந்திரியங்க ளும் உள என்றும் இவையெல்லாம் அத்திகாயம் அநாத்திகாயம் என்று வழங்கப்படும் என்றும், ஆருகதநூற்பொருள் ஞானத்தாலும் அந்த நூலிற்கூறும் சுடுபாறையிற்கிடத்தல் முதலிய தவங்களாலும் சீவன் உயிர்க்கொலைமுதலிய பாவங்கள் நீங்கி அருகன்போலக் குற் றந்தீர்ந்தவன் ஆவனென்றும் இந்தநூலும் இந்தப்பதார்த்தம் உண் டோ இல்லையோ என்று வினவினல் உண்டாம் இல்லையாம் உண் டும் உண்டும் இல்லையுமாம் என்று மூவகையாற் சொல்லப்படும் என் றும் கூறப்படும்.

உலோகாயதன் பௌத்தன் சமணன் என்னும் இம்மூவரும் ஆசா ரமில்லிகளாகிய நாத்திகர் ஈசுரன் என்று அநாதிப்பொருள் ஒன்றில் லை என்பர்.

இந்தமதம் மூன்றும் வேதத்திற்குப்புறம்.

இவற்றிற்கு முன்கூறப்பட்ட ஆறுநூல்களும் வைதிகநூல்கள்.

இவ்வாறுக்கும் பிறப்பிடமாகிய வேதங்கள் இருக்கும் எசுரும் சாமமும் அதர்வணமும் எனநால்வகைப்படும்.

இவைகளுக்கு அங்கமாவன சந்தசும் கற்பசூத்திரமும் சிக்கை யும் வியாகரணமும் நிருத்தமும் சோதிடமும் என அறுவகைப்படும்.

வேதத்திற் கூறப்படும் விதிவிலக்குகளைப்பற்றிப் பிராமணர் முதலிய சாதிகளையும் பிரமசாரிமுதலிய ஆச்சிரமங்களையும் விதிப்ப தும் உபநிடதங்களைப்பற்றிப் பிரகிருதி புருடன் ஈசுரன் இலக்கண ங்களைக் கூறுவதும் வேதத்திற்பிற் பெறப்படும் ஒழுக்கம் வழக்கு தண்டங்களை நியமிப்பதும் செய்வனவாகிய மனுமுதலிய தருமசாத் திரங்கள் பதினெட்டுவகைப்படும். இந்த மிருதிகளைச்செய்தவர்மனு முதலிய இருடிகள்.

இனி வாசுதேவனாற் செய்யப்பட்ட பாஞ்சராத்திரத்தில் இருபத்துநான்காம் தத்துவமாகிய குணதத்துவத்திற்குமேல் இருபத்தைந்தாம் தத்துவம் வாசுதேவன் என்றொருபரம்பொருள் உண்டென்றும், அந்தப்பரம்பொருளினின்றும் கிருட்டினனும் அனிருத்தனும் மகாத்துவசனும் ரௌகிணேயனும் என்று நான்குவியூகங்கள் சகத்தைப்படைத்தற் பொருட்டுத் தோன்றும் என்றும், இந்தநான்கு வகுப்பினால் சடமும் சித்தும் ஆகிய எல்லா உலகும் படைக்கப்பட்டன என்றும், வேதாந்தவாதிகள் நால்வரில் பரிணாமவாதி சொல்வதுபோல எல்லாம் வாசுதேவன்வடிவு என்றும், வேதங்களில்உறுதிப்பயன் இல்லை பாஞ்சராத்திரத்தில் உறுதிப்பயன் உண்டென்றும், ஆகையாற் பாஞ்சராத்திரத்தின் முறையே தீக்கைசெய்துகொண்டு வாசுதேவனை வழிபட்டு அவன்வடிவில் இலயம் ஆதலேமுத்தி என்றும் கூறப்படும்.

இனி இதிகாசபுராணங்களில் வைதிககன்மங்களும் சாங்கியம் பாதஞ்சலம் பாஞ்சராத்திரம் பாசுபதம் சைவம் என்னுமிவற்றிற் கூறும்பொருள்களும் தோற்ற மொடுக்கங்களும் பாரம்பரியங்களும் மனுவந்தரங்களும் பாரம்பரியக்கதைகளும் கூறப்படும்.

இதிகாசமாவது மகாபாரதம்.

புராணங்கள் பதினெட்டுவகைப்படும். இவற்றிற்குக் கருத்தன் வேதவியாசன். இருபத்தைந்தாம் தத்துவம் ஆன்மாஎன்றும், தீக்கையான் முத்தியென்றும், புராணங்களிற் கூறப்படும்.

இனி அதிமார்க்கநூல் மூன்றனுள் பாசுபதநூலில் ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரணகாரிய சையோகத்தால் தோன்றும் ஞானத்தால் தனித்தனி வேறுபாடுடையனவாய் இருக்கும் என்றும், இவ்வான்மாக்களுக்கு ஆணவம் இல்லை என்றும், மாயை கன்மங்கள் என்று இரண்டுபாசங்கள் உண்டு என்றும், பாச

ங்களால் சுகதுக்கங்களை அனுபவிக்கும் என்றும், வைராக்கியமுண்டாய்ச் சாத்திரத்திற் கூறியபடியே தீக்கைபெற்ற ஆன்மாவினிடத்துப் பரமேசுரனுடைய ஞானமுதலிய குணங்கள் சங்கிராந்தமாய்ப் பற்றும் என்றும், அப்போது குடும்பபாரத்தைப் புத்திரரிடத்துவைத்துவிட்டுத் துறவறத்திற்செல்லுவார்போல ஈசுரனும் தன்னுடைய ஞானம் முத்தனிடத்துச் சங்கிரமிக்கச்செய்து தன்னதிகாரத்துஒழிவுபெற்றிருப்பனென்றும் கூறப்படும்.

இனி மகாவிரதநூலில் பாசுபதர் கூறியமுறையே மாயை கன்மங்களுடன் ஆணவமலமும் உண்டென்றும், ஆன்மாக்களுக்குப்பெத்தத்தும் முத்தியினும் ஞானசத்தியேயன்றிக் கிரியாசத்தி இல்லை என்றும், சாத்திரத்திற் கூறியபடியே தீக்கைபெற்று எலும்பணிதல் முதலிய சரியைகளை அனுட்டிப்போர் முத்தராவரென்றும், இந்த முத்தருக்குக் கேவலம் ஞானசத்திமாத்திரமே உண்டு, ஞானம் கிரிகை என்னும் இரண்டுசத்தியும் பரமேசுரன் ஒருவனுக்கே என்றும் கூறப்படும்.

இனிக் காபாலிகநூலில் ஆன்ம இலக்கணமும் பந்த இலக்கணமும் பாசுபதர்மகாவிரதர் கூறியபடி என்றும், சாத்திரத்திற்கூறிய முறையே தீக்கைபெற்றுத் தினந்தினம் பச்சைக்கொடி ஒன்றுபிடித்துக்கொண்டு மனிதர் தலையோட்டில் பிச்சையேற்று உண்ணவேண்டும் என்றும்,மகாவிரதாகூறியமுறையே முத்தி என்றும் கூறப்படும். பாசுபதம் மகாவிரதம் காபாலிகம் என்னும் அதிமார்க்கசாத்திரம் மூன்றும் மாயை வித்தை காலம் என்னும் தத்துவங்களில் இருக்கும் உருத்திரர் மூவராற் செய்யப்பட்டன.

இனி மறுமையிற்பலிக்கும் சித்தாந்தசாத்திரத்தை இம்மையிலே தெளிவிப்பனவாய்க் காருடம் தக்கிணம் வாமம் பூதம் என நான்கு நூல்கள் உள்ளன. அவை தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதம் எனக்கிழ் உள்ள நான்குமுகங்களால் பரமசிவன் அனுக்கிர

சஞ் செய்யப்பெற்று அந்தப்பெயர்கொண்ட விஞ்ஞானகலர் நால்வராற்செய்யப்பட்டன.

இவற்றுள் காருடதந்திரத்தில் தற்புருடமே பிரமரூபமாகத் தியானம்செய்து பூசிக்கற்பாற்று எனக்கூறப்படும். இந்நூலில் எவ்வகைப்பட்ட பிணியும் கண்கூடாகத்தீர்க்கும் மந்திரங்களும் மருந்துகளும் கூறப்படும்.

இனித் தக்கிணதந்திரத்தில் அகோரமே பிரமரூபமாகத் தியானம்செய்து பூசிக்கற்பாற்று என்றும் யோகத்தை அனுட்டித்துப் பரமசிவனைக் காணவேண்டும் என்றும் கூறப்படும். பகைவரைவெல்லுதற்கு மந்திரங்களும் இதனுட்கூறப்படும்.

இனி வாமதந்திரத்தில் வாமதேவமே பிரமரூபமாகத் தியானித்துப் பூசிக்கற்பாற்று என்றுகூறப்படும். இதனுள் இரசவாதம் முதலியனவும் கூறப்படும்.

இனிப் பூததந்திரத்தில் சத்தியோசாதமே பிரரூபமாகத் தியானித்துப் பூசிக்கற்பாற்று என்றுகூறப்படும். பூதப்பிரேதப்பிசாசுகளை ஓட்டும் மந்திரங்களும் மருந்துகளும் இதனுட் கூறப்படும்.

இனிச் சத்திதத்துவத்தில் வசிக்கும் ஓர் ஆன்மாவால் செய்யப்பட்டது சாத்தநூல். இந்தத்தந்திரத்தில் பாற்கரிய வேதாந்திபோலச் சடசித்துக்கள்எல்லாம் சத்தியின் பரிணமம் என்று கூறப்படும்.

இனிக் கௌளம் யாமளம் முதலிய தந்திரங்கள் மச்சேந்திரநாதமுதலிய மானுடசித்தராற் செய்யப்பட்டன.

இனி உலோகாயத ஞானிகள் பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நான்கு பூதங்களையும் அறிந்தமையால் அவர்களுக்கு அவற்றின் கீழ்ப்பட்ட புவனங்களில் பிறவி ஒழியும்.

ஆருகதருக்குக் குணதத்துவத்தின் கீழ்ப்பட்ட தத்துவங்களில் பிறவி ஒழியும்.

நையாயிகவைசேடியர்களுக்கும் புத்திதத்துவம்வரையும் பிறவி ஒழியும்.

புத்தருக்குப் புத்திதத்துவத்தின் கீழ்ப்பிறவிஒழியும்.

சாங்கியருக்குப் பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிதலால் பிரகிருதிவரையும் பிறவி ஒழியும்.

பிரகிருதிக்கு மேற்பட்ட மிச்சிரதத்துவாக்களை அறியாமையால் கன்மசேடம் உடையவர்கள் ஆதலான் இவர்களுக்கு விஞ்ஞானகேவலத்தன்மை வராது.

பாஞ்சராத்திரிகளுக்குப் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்டபிறவி ஒழியும்.

வேதாந்திகள் புருடதத்துவத்தை அடைவர்.

பௌராணிகர் அராகதத்துவத்தை அடைவர்.

காபாலிகர் காலதத்துவத்தை அடைவர்.

பாசுபதர் மாயாதத்துவத்தை அடைவர்.

மகாவிரதர் வித்தியாதத்துவத்தை அடைவர்.

காருடம் தக்கிணம் வாமம் பூதம் என்னும் தந்திரங்களில் தீக்கைபெற்றவர் சத்திதத்துவத்திலுள்ள நிவிர்த்திபிரதிட்டை வித்தை சாந்தி என்னும் புவனங்களை முறையே அடைவர்.

சுத்தமாகிய சாத்தநூலார் சத்திதத்துவத்தை அடைவர்.

கௌளம் யாமளம் முதலிய சாத்திரங்களிற் பெண்புணர்ச்சி கொலை முதலியன உண்மையால் இவர்கள் பிசாசபதத்தை அடைவார்கள்.

இனிச் சித்தாந்த சாத்திரமாவன விந்துவினின்றும் நாதம்தோன்றிவிந்துவும் பிரணவமும் வன்னங்களும் ஆகமுறையே பரிணமித்து அனுட்டுப்புச்சந்தசாய்ச் செய்யப்பட்டன.

அவை சிவபேதமும் உருத்திரபேதமும் என இருவகைப்படும்.

விஞ்ஞானகலரில் பரமசிவன் அனுக்கிரகத்தைப்பெற்ற பிரண வர்முதலிய பெயருடைய பத்துச் சிவன்களுக்கும் சத்தியோசாதம் வாமதேவம் என்னும் திருமுகங்களான் அருளிச்செய்த காமிகமுத லிய அபரஞான்ம் பத்தும் சிவபேதம் எனப்படும்.

இவ்வாறு பரமசிவன்பால் உபதேசம்பெற்ற உருத்திரர் பதினெ ண்மருக்கும் அகோரம் தற்புருடம் ஈசானம் என்னும் திருமுகங்க ளான் அருளிச்செய்த விசயம்முதலிய பதினெட்டும் உருத்திரபே தம் எனப்படும்.

இந்த இருபத்தெட்டுச் சிவாகமங்களும் ஒவ்வொன்றிற்குக் கோ டிகிரந்தமாக இருபத்தெட்டுக்கோடி கிரந்தங்களாம்.

இந்தச்சைவாகமம் இருபத்தெட்டிற்கும் சித்தாந்தம்என்றுபெயர்.

இவை ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதம் சரியாபாதம்என் று தனித்தனி நான்குபாதங்கள் உடையனவாய் இருக்கும்.

இவற்றுள் ஞானபாதத்தில் பரமசிவனுடைய சொரூபமும் விஞ் ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூப மும், ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தி என் னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின்சொரூபமும், சிவதத்துவ முதல் பிரகிருதி தத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களினதுஉற் பத்தியும் இவை ஆன்மாக்கள்போகம் புசிக்கைக்குக் கருவியாம் மு றைமையும், புவனங்கள் புவனேசுரர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப்பிரமாணங்களும், அதமப்பிரளயம் மத்திமப்பிரளயம்ம காப்பிரளயங்களின் சொரூபங்களும், அந்தப்பிரளயங்களின் பின் னர்ச் சிருட்டியாம் முறைமையும், பாசுபதம்மாவிரதம் காபாலிகம்மு தலிய மதங்களின் சொரூபங்களும் கூறப்படும்.

இனிக்கிரியாபாதத்தில் மந்திரங்களினது உத்தாரணம் சந்தியா வந்தனம் பூசைசெபம் ஓமங்களும், சமயம் விசேடம் நிருவாணம் ஆ சாரியாபிடேகங்களும், புத்திமுத்திகளுக்கு உபாயமான தீக்கையும் கூறப்படும்.

இனி யோகபாதத்தில் இந்த முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும் ஆன்மாவும் பரமசிவனும் சத்தியும் சகத்திற்குக் காரணமான மாயை மாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகள் உண்டாம் முறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணம் தியானம் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

இனிச்சரியாபாதத்தில் பிராயச்சித்தவிதியும், பவித்திரவிதியும் சிவலிங்க இலக்கணமும், உமாமகேசுரர் முதலிய வியத்தாவியத்தஇலிங்கங்களின் இலக்கணமும், நந்திமுதலிய கணநாதர் இலக்கணமும், செபமாலை யோகபட்டம் தண்டம்கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேட்டிவிதியும் சிரார்த்த விதியும் கூறப்படும்.

சமயதீக்கை பெற்றோர் உருத்திரபதம் அடைவர். விசேடதீக்கைபெற்றோர் மகேசுரபதம் அடைவர். ஈண்டு உருத்திரபதம்என்றது குணதத்துவ மத்தகத்தில் இருக்கும் உருத்திரர் பதமே ஆம்.

ஈசுரபதம் என்றது பிரகிருதிக்குமேல் மிச்சிராத்துவாவில் மூந்தின தத்துவம் ஆன அராகதத்துவ பதமே ஆம்.

ஈசரனுல் அதிட்டிக்கப்படுவதாகலான் அந்தத் தத்துவத்தைஅடைவதே ஈசுரபதத்தை அடைவது என்று சொல்லப்படும்.

சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் பாஞ்சராத்திரங்களில் கூறும் வழிக்கு மேற்பட்ட நிருவாண தீக்கையைப்பெற்றவர் பரமசிவனோடு சாமியமான முத்தியை அடைவர்.

இனி நிருவாணதீக்கை சத்தியநிருவாணம் அசத்தியநிருவாணம் என இருவகைப்படும்.

அவற்றுள் சத்திய நிருவாணதீக்கை பெற்றோர் தீக்கைபெற்றபோழ்தே சரீரம் நீங்கி முத்தியைப்பெறுவர்.

அசத்திய நிருவாணதீக்கை பெற்றோர் தீக்கையில் சஞ்சிதமும் ஆகாமியமும் சோதித்துச் சரீரம் நிற்பதற்கு எதுவாய்ப்புசிக்கப்படும் பிராரத்த கன்மம் சோதிக்கப்படாமையால் ஆயுள் முடிவில் சரீரம நீங்கி முத்தியை அடைவர்.

சாதகதீக்கைப்பெற்றுச் சிவபத்தி சிவபூஜை செய்துகொண்டு பின்பு வித்தியேசுரர் முதலியோர் பதங்களை விரும்பினவர் அந்தப்பதங்களைப்பெறுவர்

அப்பதங்களில் இருப்பவர்க்குள் பற்றற்றவர் அப்பொழுதேமுத்தியை அடைவர் அல்லாதார் மகாசங்காரகாலத்து முத்தியைப்பெறுவர்.

நிர்ப்பீசதீக்கையாவது தீக்கைசெய்தபின்பின் அனுட்டிக்கப்படும் சந்தியாவந்தனம் சிவலிங்கார்ச்சனை முதலிய சமயாசாரங்களைத்தீக்கைசெய்யும்பொழுதே சோதித்து ஒழிப்பது ஆகலான் பாலர்வாலீசர் விருத்தர் பணிமொழியார் பலபோகத்தவர் வியாதிப்பட்டவர்க்குப் பண்ணுவதாம்.

சபீசதீக்கையாவது வல்லமையுடைய சமயிபுத்திரர் சாதகாசாரியர்க்குப்பண்ணுவதாம். இந்தத்தீக்கையில் சஞ்சிதம் ஆகாமியம் என்னும் இருவகைக்கன்மங்களும் இந்தக்கன்மங்களுக்கு ஈடான எல்லாச்சரீரங்களும் சுத்திப்படும். சரீரம் இல்லாமையால் போகங்களும் நசிக்கும். இந்தச்சரீரங்களுக்கு எதுவான பிராரத்தகன்மம் சுத்திப்படாமையால் சரீரத்துக்குள்ளசுகதுக்கங்கள் அனுபவிக்கப்படும.இவ்வாறு மூவகைக்கன்மங்களும் நாசமாம். ஆகவே தீக்கையானபின்மரணமளவும் சாத்திரங்களின்விதித்த நியமங்களின் வழுவாமை ஆசரிக்கவேண்டும். பரமசிவனது திரு அருளாகிய தீக்கையானன்றிமற்றொன்றானும் முத்தி இல்லை.

தீக்கைசெய்து கொண்டபின்பு ஆசாரத்தில் வழுவினால் புத்திபூர்வமாகச்செய்தபாவம் பிராயச்சித்தத்தினாலும் மந்திராதிதிரவியங்களின் உபாயங்களாலும் பவித்திரவிதியினாலும் சுத்தியாம். அபுத்திபூர்வமாக வழுவினால் அந்தியேட்டிக்கிரியையால் சுத்தியாம்:

தீக்ஷைசெய்து கொண்டபின்பு ஆவசிகமாக அனுட்டிக்கப்படும் கன்மங்களாவன இயமம் நியமங்களும் சந்தியாவந்தனம் சிவலிங்கபூசை அக்கினிகாரியங்களும் குருவசனபரிபாலனமும் இயன்றமட்டும் மகேசுரபூசை முதலாயினவுமாம்.

அனுட்டிக்கலாகாத கன்மங்களாவன நிர்மாலியம் புசித்தல் சிவநிந்தை சிவசாத்திரவிதிதாசாரநிந்தை தேவதிரவியங்களை உபயோகஞ்செய்தல் உயிர்க்கொலை முதலாயினவாம்.

இவ்வாறு தீக்ஷைப்பெற்று விதித்தபடி அனுட்டித்து முத்தனாகிய ஆன்மாவுக்கு ஆணவம் காமியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தி என்னும் பாசங்களினின்று நீங்குதலும் பரமசிவன்போல முழுது முணர்தல் முழுதுஞ் செய்தல் சித்தமகிழ்ச்சி அநாதியாகிய சுதந்தரத்தன்மை கெடாதசத்தியுடைமை அளவிறந்தசத்தியுடைமை என்னும் சாட்குண்ணியத்தின் சொரூபத்தைப்பெறுதலும் இலக்கணமாம். இந்தக்குணங்களைப் பெற்றவர்க்குப் பரமசிவனைப்போலப் பஞ்சகிருத்தியம் செய்தல்கூடாது. பரமசிவனே பஞ்சகிருத்தியத்தால் பிறருக்கு அனுக்கிரகம் செய்வர் என அறிக.

சர்வாத்மசம்புசிவாசாரியராற் செய்யப்பட்ட வடமொழிச்சித்தாந்தப் பிரகாசிகையினைத் திருவாவடுதுறைச் சிவஞானமாதவனாற் சித்தாந்தப்பிரகாசிகையெனத் தென்மொழியாற் செய்யப்பட்டது.

முற்றிற்று.

---

வடநூற்கடலுந் தென்றமிழ்க்கடலு
முழுதுணர்ந்தருளி முனிவரன்றுறைசை
வாழ்சிவஞான மாதவன்முன்னாற்
சித்தாந்தப்பிர காசிகைசிறந்திட
மொழிபெயர்த்தருளினன் றென்மொழியாக
மருளகன்றெம்மனோர் மதிபெறற்பொருட்டே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்த
# தத்துவலக்ஷணம்.

## வேதாகமப்பிரமாணங்களைக்கொண்டு தாபிக்கப்படும்.

### பிரமேயங்களாகிய பசு பதி பாசங்களுக்கு இலக்ஷணம்.

பசுக்கள் சுதந்திரமில்லாதவர்களாகையினாலும், பாசங்கள் சடமாயிருக்கையினாலும், முதலில் ஞானசொரூபமாகிய பதிக்கும்; இரண்டாவது பசுக்களுக்கும், மூன்றாவது பாசங்களுக்கு இலக்ஷணங் கூறுவாம்.

### பதிலக்ஷணம்.

இது சொரூபமென்றுந் தடத்தமென்றும் இரண்டுவகைப்படும்.

### சொரூபலக்ஷணம்.

முதல் நடு விறுதி இல்லாததாய், தூலசூக்கும சூனியரூபமில்லாததாய் குணங்குறி இல்லாததாய், நின்மலமாய், நித்தியமாய், ஒன்றாய், அசலமாய், அகண்டாகார சச்சிதானந்தாத்துவய பரிபூரண பரஞ்சோதியாய் விளங்குவது. அப்படி விளங்குவது எதுவோ அதுவே

சிவம். அது உண்டென்கிறதற்குத் தன்னுடைய அனுபவமே பிரமாணம்.

### தடத்தலக்ஷணம்.

சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் சத்தியோடிருந்து பண்ணுவது.

சத்தியாவது அக்கினிக்கு உஷ்ணம்போலச் சிவனைப் பிரிவற்றிருக்கும். அது நித்தியமாய், ஒன்றாய், எல்லாவற்றையும் வியாபிக்கிற ரூபமாய், மகிமைரூபமாய், ஐசுவரியரூபமாய், பதார்த்தங்களைப் பார்க்கும் ஞானரூபமாய், தன்மரூபமாய் இருக்கும். இது காரியபேதத்தினாலே பரை முதலிய அநேகபேதப்படும். சத்தியினுடைய பேதத்தினாலே சிவனும், சத்தர், உத்தியுக்தர், பிரவிருத்தர் என்று மூன்று பேதப்படுவர். இதில், சத்தராகிறவர் காரியத்தைப்பண்ண உத்தியோகியாமல் அக்காரியம் பண்ணத்தொடங்காமல் இருக்கிற சித்தமந்திரத்துடன் கூடியிருக்கிறவர். இவர் சத்தி கலையற்றிருக்கிறவராகையால் நிட்களர். இவருக்கு ஞானமாத்திரமே திருமேனி. இவருக்கு இலயர் என்றும், சாந்தர் என்றும் பெயர். உத்தியுக்தராகிறவர் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் பஞ்சசத்திகளும் சுத்தமாயையிலே பதிந்தபொழுது உண்டான ஈசானாதி பஞ்சமந்திரங்களைத் திருமேனியாக உடையவர். இவர் பாசகலைகள் இல்லாமற் சத்திகலைகளுடன் கூடியிருக்கையாற் சகளாகளர். இவருக்குச் சதாசிவரென்றும், போகரென்றும் பெயர். பிரவிருத்தராகிறவர், காரியங்களைப்பண்ணத் தொடங்கிய சத்தியை யுடையவர். இவர் காரியம் பண்ணுகிறபொழுது கிரியை அதிகமாகவேண்டுகையால் ஞானசத்தி கொஞ்சமும், கிரியாசத்தி அதிகமாகவும் உடையவர். இவர் பாசகலைகளுடன் கூடியிருக்கையினாலே சகளர். இவருக்கு ஈசர் என்றும் அதிகாரர் என்றும் பெயர். இந்தப்பதி, சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேஸ்வரர், உருத்திரர், விஷ்ணு,

பிரமா என்று நிட்களம், சகளாகளம், சகளமாக ஒன்பது பேதப்படுவர். சத்திக்கும் விந்துவிற்கும் இல்லாமல், நின்ற ஏழுமூர்த்திகளுக்கும், சத்தி என்றும், விந்து என்றும், மனோன்மணி என்றும், மகேஸ்வரி என்றும், உமை என்றும், இலட்சுமி என்றும், சரஸ்வதிஎன்றும், சத்தியும் ஏழு பேதப்படுவள். காரிய பேதத்தினாலே சத்திபேதமும், சத்திபேதத்தினாலே சிவபேதமும் உண்டாம். இந்தச் சிற்சத்தியே பதிக்குத்தேகம். கரணம், இடமெனவறிக.

இப்படி ஒரு கருத்தா உண்டென்கிறதற்குப் பிரமாணம். ஆண், பெண் முதலாகிய தேகாதி பிரபஞ்சங் காரியங்கொள்கையால், அது கடாதிகளைப்போல, ஒரு கருத்தாவை உடையது. இந்தக்கருத்தா, மாயை முதலானவை சடமாயிருக்கையினாலும், முத்தாத்துமாக்கள் தாங்களே மோட்சத்தை அடையமாட்டார்களாகையினாலும், பிரம விஷ்ணுக்கள் அனித்தியர்களாகையினாலும், எல்லாமாய்நின்று சங்கரித்துத் திரும்பவும் உண்டாக்கிறவர் அரன்என்றும்பதி. ஆத்துமாக்கள் மலத்தை உடைத்தாயிருக்கையால், அமலனாகிய தான், அவ்வாத்துமாக்களோடு இரண்டறநின்று, கன்மத்திற்கீடாகத் தனதுசமவாயசத்தியினாலே சுத்தாசுத்த மாயைகளிலே நின்று தனுகரணாதிகளை உண்டாக்குவர்.

இப்படிப்பட்ட கருத்தாவானவர் குலாலராதிகளைப்போல, சரீர முதலானவைகளை உடையவராகவேண்டுமோ என்னில் அப்படி வேண்டுவதில்லை. காலம்போல அரூபமாயிருந்து சிருஷ்டியாதிகளைப் பண்ணுதல்கூடும். அப்படிக்கன்றி, தேகத்தை உடையவராகில், அவருடையதேகத்தை உண்டாக்கத் தேகியாய் ஒருகருத்தாவேண்டும். பின் அவருடைய தேகத்தை உண்டாக்கத் தேகியாய் ஒரு கருத்தா வேண்டுமென்னும் அனவத்தைத் தோடம்வரும். ஆகையால், தேகாதி

சகல உபாதிகளையும் அற்றவனே ஆதிகருத்தா. சூரியன் விகாரமின்றியிருந்து, தாமரை அலரவும், ஆம்பல் குவியவும், சேறு இறுகவும், வெண்ணெய் இளகவும், பண்ணுமாப்போல, அக்கருத்தாவு நிர்விகாரியாயிருந்து காரியத்திலே உன்முகமாகவிருக்கிற சத்தியோடே கூடியிருக்கிறதால் சந்நிதிமாத்திரத்தினாலே சிருட்டியாதிகள் பண்ணுவர்.

## இனிச் சத்தர் சிருட்டியாதியிலேபண்ணுங் கிருத்தியம்.

இவர் தீவிரதர சத்திநிபாதத்தையுடையவர்களை அநுக்கிரகித்துப் பரமமோட்சததிலே விடுவதும், தீவிரசத்திநிபாதத்தை யுடையவர்களை அபரமுத்தித்தானமாகிய சிவதத்துவத்திலே வைப்பதுஞ் செய்து, சுத்தமாயையைத் தமது சத்தியாற்கலக்கிச் சத்தரூபமாகிய நாதவிந்துக்களையும், அர்த்தரூபமாகிய நாதம், விந்து என்னும்பெயர்களையுடைய சிவதத்துவஞ் சத்திதத்துவங்களையும், இந்தத் தத்துவங்களிலே புவனங்களையும், இந்தப் புவனங்களிலேயிருக்கிற பெயர்களுக்குத் தனுகரணாதிகளையும், விந்து தத்துவத்திலேநின்று சதாசிவதத்துவத்தையும் உண்டாக்கி, சதாசிவரைச் சதாசிவ தத்துவநாயகராகப்பண்ணி, அவரை வேறறக் கூடிநின்று சிருட்டியாதிகளைப்பண்ணுவர் எனவறிக.

## இனி உத்தியுத்தராகிய சதாசிவர்பண்ணுங் கிருத்தியம்.

சத்தர் அநுக்கிரகித்து மிகுந்திருக்கிற விஞ்ஞானகலரிலே தீவிரதர சத்திநிபாதத்தை யுடையவர்களை அநுக்கிரகித்துப் பரமமோட்சத்திலே விடுவதும், தீவிர சத்திநிபாதத்தையுடையவர்களை விளக்கி அபரமுத்தராக, சிவசமானர்களாகவும், அணுசதாசிவர்களாகவும், வித்தியேஸ்வரர்களாகவும், உருத்திரர்களாகவும் வைப்பதும், சத்தரால் நாதரூபமாய்வந்த அபரஞானத்தை,ஈசானாதி பஞ்சமுகங்க

ளால், வேதங்களாகவும், பிரணவர் முதலானபேர்களுக்குக்காமிகாதிகளாகவும், பிரித்து அநுக்கிரகிப்பதும், சாதாக்கியதத்துவத்திலே நின்றும் ஈஸ்வரதத்துவத்தையும், அதிலே புவனங்களையும், அந்தப் புவன நாயகரான அனந்தர் முதலான அட்டவித்தியேசுரருக்குத் தனுகரணாதிகளையும் உண்டாக்குவதும், இந்த ஈசுரதத்துவத்திற்கு நாயகராகிய மகேஸ்வரரைப் பண்ணுவதும், இந்தத்தத்துவத்திலே நின்றுஞ் சுத்தவித்தியா தத்துவத்தை யுண்டாக்குவதும், தனுகரணாதிகளையுண்டாக்குவதும், சுத்தவித்தையிலிருக்குங் காரணமாகியசத்தகோடி மந்திரங்களுக்கும், இவ்வெழுகோடி மந்திரங்களுக்கு நாயகிகளாயிருக்கும் பிருகுடி முதலான எழுசத்திகளுக்குந் தனுகரணாதிகளை உண்டாக்குவதுமென வறிக.

## இனிப் பிரவிருத்தர்பண்ணுங் கிருத்தியம்.

பிரளயாகலரிலே தீவிரதரசத்திநிபாதத்தை யுடையவர்களை அநுக்கிரகித்துப் பரமமோட்சத்தை அடையப்பண்ணுவதும், தீவிரசத்திநிபாதத்தை உடையவர்களைச் சருவகன்மங்களையும் போக்கி அதிகாரமலமாத்திர நிறுத்தி, உருத்திரர்களாகவும், புவனேசுரர்களாகவும் பண்ணுவதும், அசுத்தமாயையைக்கலக்கி மாயை,காலம்,நியதி, கலை யென்னுந் தத்துவங்களையுண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களை உண்டாக்குவதும், இந்த நாலுதத்துவங்களிலே இருக்கிறவர்களுக்குத் தனுகரணாதிகளை யுண்டாக்குவதும்,ஸ்ரீகண்டபரமேஸ்வரனை அதிட்டித்துநின்று, கலையிலே நின்றும் பிரகிருதியையும்,வித்தையையும், இராகத்தையும் உண்டாக்குவதும், இவைகளிலே, புவனங்களை உண்டாக்குவதும், இந்த நாலு தத்துவங்களிலே இருக்கிறவர்களுக்குத் தனுகரணாதிகளை யுண்டாக்குவதும், கலாதிகளின்கூட்டத்திலே புருடதத்துவத்தையுண்டாக்குவதும், பிரகிருதியைக்கலக்கிக் குணங்களைப் பிறிப்பதும், தம்முடைய வலதுபாகம், இடதுபா

சம், மார்பென்னும் அங்கங்களிலேயுண்டான பிரமன், விஷ்ணு, நீலருத்திரர் என்னும் மும்மூர்த்திகளையும், ஸ்ரீகண்ட பரமேஸ்வரனால் அடைவிலே, இராசத சாத்துவிக தாமதகுணங்களால் அதிட்டிப்பித்துக் குணமுதல் பிருதுவியீறான இருபத்துநாலு தத்துவங்களில் சிருட்டி, திதி, சங்காரங்களைப் பண்ணுவதும் எனவறிக.

சுத்தாத்துவாவிற்குக் கருத்தா உத்தியுத்தராகிய சதாசிவரும், மிச்சிராத்துவாவிற்குக் கருத்தா, அனந்தேஸ்வரராகிய பிரவிருத்தரும், அசுத்தாத்துவாவிற்குக் கருத்தா உருத்திரமூர்த்தியும் எனவறிக.

பதிலக்ஷண முற்றிற்று.

---

## பசுலக்ஷணம்.

ஆத்துமா இல்லையென்று சொல்லுகிறதுண்டாகையாற் சூனியமென்பது இன்றி, என்னுடையதேகமென்று ஞானம்வருகையால், தேகமும் அல்லாமல், இந்திரியங்களை ஒழிந்திருக்கிற சொப்பனாவத்தையிலும் அறிகையால் இந்திரியங்களுமல்லாமல், சுழுத்தி துரியந் துரியாதீதங்களிலே, அந்தக்கரணங்களும், பிராணவாயுவும் அற்றிருக்கையால், அந்தக்கரணங்களுக்கும் பிராணவாயுவிற்கும் அன்னியமாய், விழித்தபோது பண்ணினகாரியக் குறைகளைப் பண்ணவும், அறியவுஞ்செய்கையால், க்ஷணிகனும் அல்லாமல், தேகத்திற்கு அப்புறத்திலே இருக்கிற பதார்த்தத்தைக் கிரகிக்கையால் அணுபரிமாணனும், மத்தியபரிமாணனும் அல்லாமல், தானே ஒன்றையும் அறியமாட்டாமல் இருக்கையால் சுதந்திரனும் அல்லாமல், சுகதுக்கங்கள் பலவகைப்பட் டிருக்கையால் ஒருத்தனுமல்லாமல், சுகதுக்கபலத்

தைப் புசிக்கையால் அகருத்தாவும் அல்லாமல், கித்தியனுகி, வியாபகனுகி, மலத்தினுலே தடைபட்ட ஞானசொரூபியாய், அனேகனுகி, கருத்தாவாய், அசுதந்திரனுயிருக்கிறவன் எனவறிக.

இந்த ஆத்துமா அந்தக்கரணங்களுக்கு அன்னியமாயிருந்தாலும், இராசாவும மந்திரியுங்கூடியிருக்குமாப்போல அந்தக்கரணங்களுடன் விடயபோகநிமித்தங் கூடிக்கொண்டிருப்பன். மலத்தால் தடைபட்ட ஞானசொரூபியாகையாற் பஞ்சாவத்தையைப் பொருந்தியிருப்பன். இப்படி ஒரு ஆத்துமா உண்டென்கிறதற்குப் பிரமாணம்:—தொழிலைப் பொருந்தியிருக்குந் தேகாதிகள் சடமாகையாற் கடாதிகளைப்போலத் தாமேசேட்டியா. இவைகளைச்சேட்டிக்கிறவன் யாவனொருவனே அவனே ஆத்துமா.

ஆத்துமாக்களுக்குக் கேவல சகல சுத்தமென்று முறையே ஆணவம், மாயை, சிவசத்திகளால் மூன்று அவத்தைவரும். இதிற் கேவலாவத்தையாவது:—ஆத்துமா தேகாதிகள் ஒன்று மற்று, குணமற்று, தொழிலற்று, போதமற்று, கருத்தாவாகையற்று, மைக்குண்மணிபோல ஆணவமலத்தினுலே மூடப்பட்டு, ஓரறிவுமற்று,வியாபியாய் இருக்கும் அவதரமெனவறிக. சகலாவத்தையாவது:—ஆத்துமா பஞ்சகோசபெத்தனுகி, அதனுலே பரிச்சின்னனுகி, கிஞ்சிஞ்ஞனுகி, கன்மத்திற்கீடாக நானுயோனிகளிலுஞ் சஞ்சரித்து, விடயங்களைப்புசிக்கும் அவதரமெனவறிக. சுத்தாவத்தையாவது:—ஆத்துமா இருவினையொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் வந்தகாலத்திலே குருகடாட்சத்தினுலே மும்மலங்களினின்று நீங்கித் தான் அந்தச்சிவமாக விளங்கும் அவதரமெனவறிக.

இனி இந்த ஆத்துமாக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூன்றுபேதப்படுவர்கள், இதிற் சகலராகிறவர்கள் ஞானச்

கிரியைகளைத்தடுக்கும் ஆணவமலம்; அது அற்பநீங்குதல் நிமித்தங் காரியமாகிய கலாதிகள், போகத்தின்பொருட்டுக் கன்மம், ஆகிய மும்மலத்தையும் உடையவர்கள். பிரளயாகலராகிறவர்கள் ஞானக் கிரியையைத் தடுக்கும் ஆணவமலத்தை யுடையவர்களாய்க் கன்ம பரிபாகத்தினாலே கலாதிகளைத் தங்கள்வசம் பண்ணிக்கொண்டிருக் கிறவர்களாய் மிச்சிராத்துவாவிலே போகத்திற்கேதுவான கன்மத் தை உடையவர்களாய், இப்படி ஆணவம், கன்மம் என்னும் இருமல பெத்தர்களாய் இருக்கிறவர்கள். இனி விஞ்ஞான கேவலராகிறவர் கள் ஆணவத்தினாலே தடைபட்ட ஞானக்கிரியையை உடையவர்க ளாகையால், இல்லையென்பதற்கு ஒத்தஞானக்கிரியை உடையவர்க ளாகி, ஒருமலத்தோடுகூடி இருக்கிறவர்கள். இந்த மூன்றுவகை ஆத் துமாக்களும், மாயையினுடைய அடியென்னும் ஆத்மதத்துவம் இரு பத்துநாலிலும், நடுவென்னும் வித்தியாதத்துவம் எழினும், முடி வினும் இருப்பர்கள். விஞ்ஞானகேவலர்கள் அனுக்கிரகம் பெற்றதற் குப் பிறகு, சிவதத்துவங்களிலே இருப்பார்களென்றறிக.

பசுலக்ஷண முற்றிற்று.

---

## பாசலக்ஷணம்.

---

பாசங்கள் ஆணவம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை, கன்மம் என ஐந்தாம். இவைகளுள் ஆணவமாவது நித்தியமாய், ஒன் றாய், விபுவாய், அநாதியாய், ஆத்மாக்கள்தோறும் ஞானக்கிரியை களைத் தடுக்கும் எண்ணிறந்த சத்திகளை உடையதாய், செம்பிற்குக் களிம்புபோலச் சகசமாயிருக்கும் மலமாம். இதற்கு நீகாரமென்றும், பசுத்துவமென்றும், மலமென்றும், அஞ்ஞானமென்றும், அவித்தை யென்றும், மாவிருதியென்றும், மூலமென்றுங் கூறப்பெற்ற அநே கம்பெயர்கள் உள.

இப்படி ஒரு ஆணவமலம் உண்டென்பதற்குப் பிரமாணம்;— ஆத்துமா ஒன்றினாலே ஆவரிக்கப்பட்ட சர்வஞ்ஞனாகவேணும். அற்பஅறிவனாகக்காண்கையால், அற்ப அறிவுமல்லாதவன் மலரகிதனுமல்ல, சிவனைப்போல ஆத்மாவிற்கு அற்ப அறிவும் இயல்பல்ல; ஆதலாலும், எல்லார்க்கும் ஒருபடித்தன்றி ஞானம் இருக்கையினாலும், மோட்சத்திலே சர்வஞ்ஞனாகக் கேட்கப்படுகையினாலும், அன்றியும், அசுசியாய், துக்கமாயிருக்கிற விடயபோகங்களிலே ஆசைவருவதினாலும், ஆணவம் ஒன்றுண்டென்று சித்தித்தது. இனித்திரோதாயியாவது இந்த ஆணவஞ் சடமாகையால், இந்த ஆணவசக்திகளைச் சேட்டிக்குஞ் ஞானசொரூபமாகிய ஆதிசத்தியாம். அதுபாசதன்மத்தைப் பின்செல்லுகையாற் பாசமென்று உபசாரமாகச் சொல்லப்படும்.

இனிச் சுத்தமாயையாவது நித்தியமாய், ஒன்றாய், ஷடத்துவாவையும் வியாபித்திருப்பதாய், சடமாய், சுத்தமாய், சூக்குமை முதலான நாலுவாக்குகளுக்கும், அத்துவாக்களில் மந்திரம், பதம், வன்னம், கலை, என்னு நான்கிற்கும், சிவதத்துவமுதலான சுத்ததத்துவங்கள் ஐந்திற்கும், அவைகளிலிருக்கிற முப்பத்துமூன்று புவனங்களுக்கும், அந்தப்புவனங்களில் இருக்கிற விஞ்ஞானகலர்களுக்கும், புவனநாயகரான மந்திரமகேஸ்வரர், மந்திரேஸ்வரர், மந்திரங்கள் என்னும் அணுசதாசிவர் முதலானபேர்களுக்கும் தனுவாதிகளுக்கு முதற்காரணமாய், சிவனுக்குப் பரிக்கிரகசத்தியாய் இருப்பதாம். இதற்குக் குண்டலினி என்றும், குடிலைஎன்றும், மகாமாயை என்றும், ஊர்த்தவமாயை என்றும், விந்து என்றுஞ் சொல்லப்பெற்ற அனேகம்பெயர்கள் உள.

இப்படி ஒரு சுத்தமாயை உண்டென்பதற்குப் பிரமாணம்:— இங்ஙனங்கூறிய காரியங்கள் காரணமின்றி உண்டாகா என்பதேயாம்.

இனி அசுத்தமாயையாவது, நித்தியமாய், ஒன்றாய், தன்னுடைய காரியங்களை வியாபித்திருப்பதாய், அசத்துருபமாய், கன்மத்திற்கு இருப்பிடமாய், அசுத்தமாய், சகலர், பிரளயாகலர் என்னும் இருவகை ஆத்மாக்களுக்கும் பொதுவாய், பிரளயத்திலே தேகாதிகள் அற்றிருக்கிற ஆத்மாக்களுக்குச் சிருட்டிகாலத்திலே கலாதிதத்துவங்கள், தூலசூக்கும தேகமுதலானவைகள், உண்டாகிறதற்கு இருப்பிடமாய், சிவனுக்குப் பரிக்கிரகசத்தியுமாய் இருப்பதாம். இதற்கு அதோமாயை, மோகினி முதலிய அனேகம் பெயர்கள் உள.

இப்படி ஒருமாயை உண்டென்பதற்குப் பிரமாணம்:—மேற்கூறிய கலாதி காரியங்கள் உபாதானமின்றி உண்டாகா என்பதாம். அது மண் உண்மையின்றிக் குடமுண்டாகாததுபோல என்றறிக.

கன்மஞ் சடமாகையால் ஆத்மாவினிடத்திலிராது.

சுத்தமாயை கன்மத்திற்கு மேற்பட்டிருத்தலால் அக்கன்மம் சுத்தமாயையிலும் இராது.

ஆகையால் சங்காரகாலத்தில் அசுத்தமாயையில் இருக்கவேணும் என்றறிக.

இனிக்கன்மமாவது, மனோவாக்குக் காயங்களாற் பண்ணப்படுகையால், கன்மம்என்றும், பண்ணினகன்மம் நசித்துப்பலமுண்டாக்குமட்டும் புவனத்திலும், மருந்தெண்ணெய்வாசனைபோலப் புத்தியிலும் கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டம் என்றும், எல்லாவற்றையுந் தரிக்கையால் தாரகம் என்றும், புசிக்கப்படுகையாற் போக்கியம் என்றுஞ் சொல்லப்படுவதாய், அத்தியாத்மிகம் முதலான துக்கத்திரயங்களுக்குக் காரணமாய், ஆத்மதன்மமும்

மாயாகாரியங்களுங் கூடினவிடத்திலே உண்டாகையால்,தன்மாதன்மசொரூபமாய், பிரளயத்திலே பக்குவப்படுவதாய், சிருட்டிகாலத்திலே தேகாதிகளுக்கு ஏதுவாய், சங்காரகாலத்திலே மாயையிலே இருப்பதாய், புசித்தாலொழியத் தொலையாமலிருப்பதேயாம்.

இது காயிகம், வாசிகம், மானதம் என்று மூன்றுபேதப்படும். இதில் காயிகமாவது தேவதையைப் பூசித்தல், ஒருத்தனை அடித்தல் முதலான புண்ணிய பாவங்களாம். வாசிகமாவது, தேவதையைத் தோத்திரித்தல், ஒருத்தனைத்தூஷித்தல் முதலான புண்ணியபாவங்களாம். மானதமாவது, தேவதையைத்தியானம் பண்ணுதல், பிறர் உடைமையை எடுத்துக்கொள்ளவேணுமென்று சிந்தித்தல் முதலான புண்ணியபாவங்களாம். இந்தக்கன்மம் சாதி, ஆயுள் போகங்களைக்கலந்தே பண்ணுவிக்குமொழிந்து ஒருவர்க்காயினும், நல்ல ஆயுளும் நல்லபோகமும் நல்லசாதியுமாகப் பண்ணாது. புண்ணியத்தினாலே பாவமும், பாவத்தினாலே புண்ணியமும் அழியாது. பிராயச்சித்தம் பண்ணினாற் புசியாமற்போய் ஒழியும். அல்லது, புசித்தாலொழியத்தொலையாது. புசிக்குமிடத்தில் இதாகிதங்களால் மேலைக்குக் கட்டுப்படுவதுயாம். மனோவாக்குக்காயங்களால் உண்டாகையாலும், அனுபவித்துத் தொலையப்படுகையாலும் நாசத்தை உடையது. தொன்று தொட்டுவருகையால் ஆற்றொழுக்குப்போல பிரவாகாநாதியாம். இந்தத்தன்மா தன்மரூபமான கன்மம், தனக்கு மூலகாரணமான ஆணவமாயைகளைப்போல, நித்தியமாய்ச் சகசமாயிருக்கும்.

இப்படிக் கன்மம் உண்டென்பதற்குப் பிரமாணம்:—இரண்டுபேர் ஒத்தநிலத்திலே கோளாறு சரியாகப்பயிரிட்டிருக்கையில், ஒருத்தனுக்கு விளைகிறதும், மற்றொருத்தனுக்கு விளையாதே போகிறதும் பிரத்தியட்சத்திற் காண்கிறோம். இதில் யாதொன்றுகாரண

மோ அதுவேகன்மம். அதுவல்லாமலும் ஒருவன் சுவர்க்கத்திலே சுகத்தை அனுபவிக்கிறான், மற்றொருத்தன் நரகத்திலே துக்கத்தை அனுபவிக்கிறான், இதில் யாதொன்று காரணமோ அது கன்மம் எனவறிக.

பாசலக்ஷண முற்றிற்று.

## சித்தாந்த தத்துவலக்ஷணம்

முற்றிற்று.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நாநாசீவவாதக்கட்டளை.

## காப்பு.

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையு ளடு.

சுத்தப்பிரமமா யிருக்கின்ற சர்வ சாக்ஷியினிடத்திலே அக்கினியிற் சூடுபோல அபின்னமாக ஒருசத்தி யுண்டு; அந்தச் சத்தி அவ்வதீதட்பிரமத்தில் அடங்கியிருக்கும்போது அதற்குச் சுத்தப்பிரமம் என்றுபெயர். இந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது அப்பிரமம் பரைவியாபகத்துக்குள் இருந்தபடியினாலே அதற்குப் பரபிரமம் என்று பெயராயிற்று.

இலக்ஷண சூன்யமாயிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்தில், புருடசமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ்சனித்தாற்போல அவிகிர்த சத்துவ ரஜஸ் தமோகுணங்கள் உண்டாயின. இவற்றில் சுத்த சத்துவத்திற்கு ஆனந்தரூபசத்தி என்றுபெயர். சுத்த ரஜஸிற்குச் சித்ரூபசத்தி என்றுபெயர். சுத்த தமஸிற்குச் சத்ரூபசத்தி என்றுபெயர். இவற்றில் காரணமான ஆனந்தரூபசத்தியுடனே பரப்பிரமங்கூடிச் சர்வானந்தமென்னுஞ் சுழுத்தி யவஸ்தையையடைகின்றபோது பரப்பிரமமென்கிற பெயர் நீ ய்ப் பரமாநந்தர் என்கிறபெயர் வந்தது. இந்தப்பரமாநந்தர் சித்ரூப சத்தியுடனேகூடிச் சர்வப் பிரகாசமென்னுஞ் சொப்பனாவஸ்தையை யடைகின்றபோது

பரமாநந்தரென்னும் பெயர்போய்த் தேசோமயர் என்னும் பெயர் வந்தது. இந்தத் தேசோமயர் சத்ருபசத்தியுடனேகூடிச் சர்வவியாபகமென்னுஞ் சாக்கிராவஸ்தையை யடைகின்றபோது தேசோமயரென்னும் பெயர்போய்ப் பரிபூரணர் என்றும் பெயர்வந்தது.

இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிரமத்தினிடத்திலே * சுத்தியில் ரஜிதம்போல மூலப்பிரகிருதி என்னும் ஒருசத்திஉண்டு. அந்த மூலப்பிரகிருதியும் விகிர்தகுணமாகிய முக்குணத்தோடு கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணத்தை மாயையென்றும், சர்வக்ஞவுபாதியென்றும், ஈசுரகாரண சரீரமென்றுஞ் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மல சலப்பிரதிவிம்பம்போலப் பிரமம் சுலட்சணமாகப் பிரதிவிம்பிக்கும். இந்தப் பிரதி விம்பசைதன்னியத்தைச் சர்வக்ஞனாகிய ஈசுரனென்று சொல்லப்படும்.

இந்தச் சத்துவகுண மாயையினிடத்திலே சத்துவத்தில்சத்துவம், சத்துவத்தில் ரஜஸு, சத்துவத்தில் தமஸு எனமூன்று குணங்கள் உண்டு. இவைகளில் சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தை இரக்ஷிக்கையினால் விஷ்ணு என்றும், சத்துவத்தில் ரஜஸு பிரதானமாகும்போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தைச் சிருட்டிக்கையினால் பிரமா என்றும், சத்துவத்தில் தமஸு பிரதானமாகும்போது அதில் பிரதிவிம்பித்த ஈசுரன் சகத்தை உபசம்மாரம் பண்ணுகையினால் உருத்திரன் என்றுஞ் சொல்லப்படுவன். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவகுண கற்பனை சொல்லப்பட்டது.

---

* புருடனிடத்துச் சாமர்த்திய ரூபசத்திபோலப் பிரமத்தின்கண் அநாதி சித்தமாயிருக்கிற மூலப்பிரகிருதியென்னுஞ்சத்திக்குச் சுத்தி ரஜிதத்தை உபமானமாகச் சொன்னது அநிர்வசனியத் தன்மையென்னும் பொருள்தோன்ற என்க.

இனி மூலப்பிரகிருதியின் இராஜோகுணம் அநேக ரூபமாய்ப்பிரிந்து அவித்தைகள் என்றும் சீவகாரண சரீரங்கள் என்றும், ஒன்றற்கொன்று தாரதம்மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலினசலப் பிரதிவிம்பம்போலப் பிரமசைதன்னியம்பிரதிவிம்பிக்கும். இந்தப்பிரதிவிம்ப சைதன்னியங்களை கிஞ்சிக்ஞரென்றும், சீவ சிதா பாசரென்றும், பிராக்ஞரென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் ரஜஸில் சத்துவம், ரஜசில் ரஜசு, ரஜசில் தமசு என மூன்றுகுணங்களுண்டு. இரஜஸில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் தத்துவக்ஞாநிஷ்டனாவன். இரஜஸில் ரஜசு பிரதானமாகும்போது அதில்பிரதிவிம்பித்த சிதாபாசன் காமக்குரோதபரனாய்க் கர்மநிஷ்டனாவன். இரஜஸில் தமசு பிரதானமாகும்போது அதில் பிரதிவிம்பித்த சிதாபாசன் சோம்பல், நித்திரை, மயக்கம் ஆகிய இவைகளையடைவன்; இப்படி மூலப்பிரகிருதியின் இரஜோகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி மூலப் பிரகிருதியின் தமோ குணத்திற்கு ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சத்திகளுண்டு. இவ்விரண்டில் ஆவரண சத்தியானது தத்துவஞானியையும், ஈசுரனையுந் தவிர மற்றைச் சீவர்களுக்கெல்லாம சரீரத்திரயம், சிதாபாசன், சாக்ஷிசைதன்னியம் என்னு மிவைகளின் ஒன்றற் கொன்றுள்ள பேதந்தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைக்கப்பட்ட சீவர் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நானென்றபிமானிப்பர். இந்த அபிமானத்தை அகங்காரக்கிரந்தி என்றும், சம்சாரபந்தம் என்றுஞ் சொல்லப்படும். சற்குருகடாக்ஷத்தினாலே இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களின் ஒன்றற்கொன்றுள்ள பேதந்தெரிகின்றதே முத்தி. இப்படி ஆவரணசத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

இனி விக்ஷேபசத்தியினின்றும் சத்த தன்மாத்திரையான ஆகாசந்தோன்றிற்று. ஆகாசத்தினின்றும் பரிச தன்மாத்திரையானவாயு தோன்றிற்று. வாயுவினின்றும் ரூபதன்மாத்திரையான அக்கினிதோன்றிற்று. அக்கினியினின்றும ரஸதன்மாத்திரையான அப்பு தோன்றிற்று. அப்புவினின்றும் கந்த தன்மாத்திரையான பிருதிவி தோன்றிற்று. இந்தச் சூக்ஷும பஞ்சபூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விக்ஷேபசத்தியினிடத்திலே தமஸில் சத்துவம், தமஸில் ரஜஸு, தமஸில் தமஸுஎன்னுமிவை அறபங் கருவாக விருந்தபடியால் அதன் காரியமாகிய இந்தத் தன்மாத்திரைகளான பஞ்சபூதங்களும் முக்குணங்களுடனேபிறந்தன. இந்தப்பஞ்சபூதங்கட்குத் தன்மாத்திரைகள்என்றும், அபஞ்சீகிருதபூதங்கள்என்றும், சூக்ஷுமபூதங்கள் என்றும், முக்குணபூதங்கள் என்றும் சாஸ்திரங்களில் நாமஞ் சொல்லப்படும்.

இந்தச் சூக்ஷும பூதங்களினின்று சூக்ஷும சரீரங்களும், ஸ்தூல பூதங்களுந் தோன்றும்; அஃதெங்ஙனமெனின்:—

ஆகாசமுதலான பஞ்சபூதங்களின் சத்துவாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம் இந்த அந்தக்கரணத்தின் ஆகாசத்தின் அம்சங்கூடினதற் கடையாளம்: இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கும் இடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித்தரிக்கின்ற † விருத்திக்கு ‡ உள்ளம் என்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் வாயுவினம்சங்கூடினதற் கடையாளம், இந்த அந்தக்கரணமும் வாயுவைப்போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மனம் என்றபெயர். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியினம்சங்

† விருத்தி=பரிணாமம்.

‡ உள்ளம்=தேஜஸுஎன்றும் பாடமுளது.

கூடினதற்கடையாளம், இந்த அந்தக்கரணமும் அக்கினியைப்போல ஈதின்னதென்று விளக்குவிக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி என்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவி னம்சங்கூடின்தற்கடையாளம், இந்த அந்தக்கரணமும் அப்புவைப் போல விடயங்களிற்பற்றி இழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தம் என்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில் பிருதுவியி னம்சங் கூடினதற் கடையாளம். இந்த அந்தக்கரணமும் பிருதுவி யைப்போலக் கடினமாகநின்று நானென் றபிமானிக்கின்றது; இந்த அபிமானவிருத்திக்கு அகங்காரம் என்றுபெயர்.

இன்னும் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினுடைய சத்துவாம் சத்திலே பூதத்திற் கொவ்வொரு மாத்திரையெடுத்துத் தனித்தனி யே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரியமென்று சொல்லப்ப டும். இவைகளில் சுரோத்திரம் ஆகாசத்தினம் சமானபடியால் ஆகா சத்தின் குணமான சத்தமாத்திரத்தை அறியும். துவக்கு வாயுவி னம்சமானபடியால் வாயுவின்குணமான பரிசமாத்திரத்தை அறியும். சக்ஷு அக்கினியினம்சமான படியால் அக்கினியின் குணமான ரூப மாத்திரத்தை அறியும், சிங்குவை அப்புவி னம்சமானபடியால் அப்பு வின் குணமான கந்தமாத்திரத்தை அறியும். ஆக்கிராணம் பிருதுவியி னம்சமானபடியால் பிருதுவியின் குணமான கந்தமாத்திரத்தை அறி யும். இப்படி ஐந்தும் ஒன்றோடொன்று கூடாதபடியால் ஒன்று மற் றொன்றின் குணத்தைக் கிரகிக்க வறியாது அந்தக்கரணத்தில்ஐந்து மாத்திரையும் ஒன்றாய்க் கூடினதுகொண்டு ஐந்திந்திரியங்களினு லும் ஐந்துவிடயங்களையும் அறியும. இந்தச் சத்துவகுணத்தி லுண் டான அந்தக்கரணம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும்ஆகப்பத்தும் சத்து வாம்சமானபடியால் ஞானசாதனமாயின.

இன்னம் ஐந்து பூதங்களினுடைய இராஜசாம்சத்திலே பூதத்தி ற்கு ஒவ்வொரு மாத்திரையெடுத்து ஒன்றாய்க்கூட்டி வைத்ததுவியா

ணுதி பஞ்சவாயுக்கள். இவைகளில் வியானவாயு ஆகாசத்தினம்சமானபடியால் ஆகாசத்தைப்போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு வாயுவி னம்சமானபடியால் வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதி பரியந்தம் அலையும். அபானவாயு அக்கினியினம்சமானபடியால் அக்கினியைப்போலச் சாடராக்கினியாக உஷ்ணித்துக்கொண்டு குதத்தைப் பற்றிநின்று உண்ட அன்னபாணுதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவி னம்சமானபடியால் சரீர நடுவான நாபித்தானத்திநின்று உண்ட அன்னரஸங்களை அப்புவைப்போல இழுக்கும். உதானவாயு பிருதிவியி னம்சமானபடியால் கண்டத்தைப்பற்றிப் பிருதிவியைப்போலக் கடினமாகநின்றுஉண்ட அன்னபாணுதிகளைக் கடையும். இந்தப் பஞ்சவாயுக்களையுமல்லாமல் வாந்தி பண்ணுவிக்கின்றவன் நாகனென்றும், இமைத்துவிழிப்பிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத் தும்பச்செய்கின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவிகொள்ளச் செய்கின்றவன்தேவதத்தனென்றும், வீங்கச்செய்கின்றவன் தனஞ்செயனென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவார்கள். இவ்வைந்தும்பிராணனுடைய தொழிலானபடியாய் வேறல்ல. இன்னம் ஆகாசமுதலிய பஞ்சபூதங்களினுடைய இரஜசாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரையெடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரியமென்று சொல்லப்படும்.

இவைகளில் ஆகாசத்தினிடமாக வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாகப் பாணி இடுதல், ஏற்றம்செய்யும். அக்கினியினிடமாகப் பாதம் நடக்கும். அப்புவினிடமாகப்பாயுருமலசலாதிகளை வெளியிலேதள்ளும். பிருதுவியினிடமாக உபஸ்தம் சுகத்தைப்பண்ணும். இந்தஐந்தும் தனித்தனியே இருந்துகொண்டு மறுதொழில் செய்யமாட்டாது. வியாணுதிவாயுக்கள் ஐந்துமாத்திரையும் ஒன்றுய்க் கூடினதுகொண்டு கர்மேந்திரியம் ஐந்தின்வழியினுலும் ஐந்து தொழில்

களையுஞ் செய்துமுடிக்கும். இந்த வாயுக்களைந்தும், கர்மேந்திரியங் களைந்தும் ஆகப்பத்தும் இராஜசாம்சமானபடியினால் கிரியாசாதனமாயின. அந்தக்கரணம்-ரு, ஞானேந்திரியம்-ரு, வாயுக்கள்-ரு, கர்மேந்திரியம்-ரு ஆக இருபது தத்துவங்களும் சூக்ஷும சரீரமென்று சொல்லப்படும். இந்தச் சூக்ஷுமசரீரத்தை மாயாப் பிரதிவிம்பனாகவிருக்கின்ற ஈசுரன் அவித்தையாப் பிரதிவிம்பராகிய சீவர்கள் அனேகராகையால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சரீரமாகச்சிருஷ்டித்தளித்தான். அப்போது பஞ்சபூதத்தினுடைய சாத்வீகாம்சமும் இராஜசாம்சமும் செலவழிந்தன. தாமதகுணமாத்திரஞ் சேடித்தது. சூட்சுமசரீரம் வாங்காத சீவர்களுக்கெல்லாம் இன்னுமொரு சிருட்டிக்கு ஆகட்டுமென்று நிறுத்தினர். இப்படிச் சூக்ஷும சரீரகற்பனை சொல்லப்பட்டது.

இனித் தூலபூத வுற்பத்தி சொல்லுகின்றோம்; அஃதெங்ஙனமெனின்:—தமோம்சமா யிருக்கின்ற ஐந்துபூதங்களையும் ஒவ்வொன்றை இரண்டிரண்டாகப் பகுத்து முதற்பாதி ஐந்தையும் ஒவ்வொன்றை நன்நான்காகப் பகுத்து இரண்டாம்பாதி ஐந்தில் தன் னம்சத்துடனே கூட்டாமல் மற்றைநான்கு பூதங்களுடன் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது ⁘பஞ்சீகரணமென்று சொல்லப்படும்.

இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூலபூதங்களிலே ஆகாசத்திலே பரிச ரூப ரஸ கந்தங்களாகிய நான்கு குணங்களும் வியாப்பியமானபடியால் அதிருசியமாய்ப்போக நிசகுணமாகிய சத்தந் திருசியமாம். வாயுவிலே ரூப ரஸ கந்தம் ஆகிய மூன்றுகுணங்களும்

---

⁘ பஞ்சீகரணம்=ஒவ்வொரு பூதத்தில் ஐந்து ஐந்து பூதங்களைச்சேர்த்துப் பண்ணுவது.

9

வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரணகுணமாகிய சத்தமும், நிசகுணமாகிய பரிசமுந் திருசியமாம். அக்கினியிலே ரஸகந்தமாகிய இரண்டுகுணங்களும் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப்போகக் காரணகுணங்களாகிய சத்தபரிசமும், நிசகுணமாகிய ரூபமுந் திருசியமாம். அப்புவிலே கந்தகுணம் வியாப்பியமானபடியினால் அதிருசியமாய்ப் போகக் காரணகுணங்களாகிய சந்த பரிச ரூபமும், நிசகுணமாகிய ரசமுந் திருசியமாம். பிருதுவியிலே காரணகுணங்களாகிய சத்த பரிச ரூபரசமும், நிசகுணமாகிய கந்தமுந் திருசியமாம்.

முன் சூக்ஷுமபூதங்களினின்றும் சூக்ஷுமசரீரங்கள் தோன்றினாற்போலப் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூலபூதங்களினின்றும் ஆறுதத்துவமாய், நால்வகைப்பிறப்பாய், மூவகைச்சாதியா யிருக்கின்ற ஸ்தூல சரீரங்கள் தோன்றின.

இவற்றுள் ஆறுதத்துவங்களாவன:—சர்மம், உதிரம், மாமிசம், சனுயு, அத்தி, மச்சை இவைகளாம்.

நால்வகைத் தோற்றங்களாவன:—சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பீஜம் இவைகளாம்.

மூவகைச் சாதிகளாவன:—இகலோகபரலோக புத்தி இருவகையுங் கொடுக்கின்ற மானுடசரீரம் உத்தமசாதி. பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தியைமாத்திரங் கொடுக்கின்ற பசு பக்ஷிமுதலானவை மத்திமசாதி. இரண்டுலோகப் புத்தியையும் மறைத்திருக்கின்ற மரம், கொடி, செடி முதலியவை அதமசாதி. இப்படிப் பிருதிவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற்போல அப்பு, அக்கினி, வாயு, ஆகாசம் எண்ணப்பட்ட தத்துவங்களாய் நிரைநிரையே யிருக்கின்ற பிதிர்லோகம், தேவலோகம், யட்ச, கந்தர்வ, சித்தர் லோகங்களினும் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற சந்திரன் முதலான

பிதிர்க்கள், சூரியன்முதலான தேவதைகள், கந்தருவர், சித்தர் என்னப்பட்டவர்கள் உத்தமசாதி. காமதேனு, அயிராவதம், அன்னம், கருடன் முதலானவை மத்திமசாதி. கற்பகவிருட்சம், பாரிசாதம் முதலானவை அதமசாதி. இந்தத்தூலசரீரமே அன்னமயகோசம் சூட்சுமசரீரம் மூன்றுகோசங்களா யிருக்கும்.

அஃதெங்ஙனமெனின்:—பிராணவாயுவும், கர்மேந்திரியங்களுங்கூடிப் பிராணமயகோசம். மனதும், ஞானேந்திரியங்களுங்கூடி மனோமயகோசம். புத்தியும், ஞானேந்திரியங்களுங்கூடி விஞ்ஞானமயகோசம். காரணசரீரமே ஆனந்தமயகோசம். இப்படிப் பஞ்சகோசஞ் சொல்லப்பட்டன.

ஆறுதத்துவங்களா யிருக்கின்ற ஸ்தூலசரீரத்திலே இருபதுதத்துவங்களா யிருக்கின்ற சூட்சும சரீரமிருக்கின்றது.

அஃதெப்படியெனின்:—கர்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந்திரியங்களுள் சிங்ஙுவையும் வாயிலிருக்கும். உதானவாயுவும், மனதும் கண்டத்திலேயிருக்கும். பிராணவாயுவும், புத்தியும் இருதயத்திலேயிருக்கும். சமானவாயுவும், சித்தமும் நாபியிலிருக்கும் அபானவாயுவும் பாயுருவும் குதத்திலிருக்கும். வியானவாயுவும், ஞானேந்திரியங்களுள் துவக்கும், அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும்: உச்சியிலே உள்ளாமும், கருவிழிநுனியிலே சக்ஷுந்திரியமும், காதிற்குள்ளே சுரோத்திரேந்திரியமும், மூக்குநுனியிலே கிராணேந்திரியமும், கழுத்திற்குமேலே தனித்தனியேயிருக்கும். கழுத்திற்குக்கீழ் கை, கால், குய்யங்களில் பாணி, பாதம், உபஸ்தம் மூன்றுந் தனித்தனியே யிருக்கும். இப்படித் தூலசரீர தத்துவங்கள் ஆறு. அதிற் குடிபுகுந்த சூட்சும சரீரத்துவங்கள் இருபது ஆகத் தத்துவங்கள் இருபத்தாறும் பஞ்சபூதங்களின் காரியமானபடியினாலே ஒருமைப்பாடாகக் காரியசரீரமென்று சொல்லப்படும்.

அவித்தையிற் பிரதிவிம்பித்த காரணசரீரமும் சிதாபாசனும் சாக்கிரத்திலே இந்த இருபத்தாறு தத்துவங்களுடனே கலந்து நின்றபோது விசுவனென்றும், வியவகாரிக சீவனென்றுஞ்சொல்லப்படுவன். சொப்பனத்திலே தூலசரீரத்தைவிட்டு அந்தக்கரணத்துடனே கூடிநின்றபோது தைஜசனென்றும், பிராதிபாசிக சீவனென்றும், சொப்பன கற்பிதனென்றுஞ் சொல்லப்படுவன். சுழுத்தியிலே காரியசரீர தத்துவங்கள் இருபத்தாறையுங் கைவிட்டுக் காரணசரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும்போது பிராக்ஞனென்றும், பாரமார்த்திக சீவனென்றுஞ் சொல்லப்படுவன். பிரமசைதன்னியமும் சாக்கிரத்திற்குச் சாக்ஷியாயிருக்கும்போது சீவாத்மாவென்றும், சொப்பனத்திற்குச் சாக்ஷியாயிருக்கும்போது அந்தராத்மாவென்றும், சுழுத்திக்குச் சாக்ஷியாயிருக்கும்போது பரமாத்மாவென்றும், அவஸ்தாத்திரய சாக்ஷியாயிருக்கும்போது ஞானாத்மாவென்றும், கூடஸ்தனென்றுஞ் சொல்லப்படும். இப்படிச் சீவனுக்கு மூன்றுசரீரங்களும், மூன்றவஸ்தைகளுஞ் சொல்லப்பட்டன.

இனி ஈசுரனுக்கு மூன்றுசரீரங்களும், மூன்றவஸ்தைகளுஞ் சொல்லப்படும். கற்பிதப்பிரபஞ்ச வடிவமாகத் தோன்றுகின்ற தூலபஞ்சபூதங்களும், அந்தப்பூதங்களிலே தோன்றின மூன்றுசாதியாயிருக்கின்ற தூலசரீர சமஷ்டியுங்கூடி ஈசுரதூலசரீரம் என்றும் விராட்டென்றுஞ் சொல்லப்படும். இதனுடனேகூடிச் சாக்கிராவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் வைசுவானரன் என்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்னியம் பிரமாவென்றுஞ் சொல்லப்படும்.

சூட்சும பூதங்கள் ஐந்தும், அந்தப்பூதங்களிலே தோன்றின சூட்சுமசரீர சமஷ்டியுங்கூடி ஈசுரசூட்சுமசரீரம் என்றும், இரண்யகர்ப்பன் என்றுஞ் சொல்லப்படும். இதனுடனேகூடிச் சொப்பனவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் சூத்திராத்மாவென்றும், இந்த

இருவகைக்கும் அதிஷ்டான சைதன்னியம் விஷ்ணு வென்றுஞ் சொல்லப்படும்.

இந்தத் தூல சூட்சுமம் இரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை ஈசுரகாரணசரீரம் என்றும், அவ்வியாகிருத மென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சுழுத்தியவஸ்தையைப் பொருந்துகின்ற ஈசுரன் அந்தரியாமி யென்றும், இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்னியம் உருத்திரன் என்றுஞ் சொல்லப்படும்.

சீவன், தன் மூன்றவஸ்தைகளிலும் தன் மூன்றுசரீரங்களாயிருக்கின்ற இருபத்தேழு தத்துவங்களுடனும் நானென்றுகலந்து நிற்கின்றதுபோல ஈசுரனுந் தன் மூன்றவஸ்தைகளிலுந் தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவங்களுடனுங் கலந்து நிற்பன்.

ஆகையினாலே சீவ சிதாபாசன் தன் சரீரமாத்திரமே கலந்து நிற்பன். ஈசுரன், தன் சரீரமாகிய சகல சரீரங்களோடும் சகல பிரபஞ்சங்களோடுங் கலந்து நிற்பன். இந்த இருவகைக்கும் சாக்ஷியாயிருக்கின்ற பிரமசைதன்னியமும், சகல சரீரங்களிலும், சகல பிரபஞ்சங்களிலும் நிறைந்து அப்பாலும் பத்துத் திக்கையும் அக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்குத் தூலசரீர வியவகாரத்திற்கு அன்னமயமான சட்கோசதத்துவங்கள்-சு, சூட்சும சரீர தத்துவங்கள்-உ0, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆகத்தத்துவங்கள்-௩உக.

சூட்சும சரீரவியவகாரத்திற்கு சூட்சும சரீரதத்துவங்கள்-உ0, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆகத்ததுவங்கள்-உரு.

காரணசரீர வியவகாரத்திற்குச் சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு. சீவவியவகாரத்திற்குச் சீவன், ஈசுரன், பிரமம்-ங. சாக்ஷிவியவகாரத்திற்குச் சாக்ஷி-க. ஈசுரனுக்குத் தூலசரீர வியவகாரத்திற்குச் சமஷ்டி அன்னமயகோச தத்துவங்கள்-கூ. சமஷ்டி சூட்சும சரீரதத்துவங்கள்-உ0 சமஷ்டி சீவன், அவித்தை-உ. ஈசுரன், வித்தை, பிரமம-ங. தூல பூதங்கள்-ரு. ஆகத் தத்துவங்கள்-ஙகூ.

சூட்சுமசரீர வியவகாரத்திற்குச் சமஷ்டி சூட்சுமசரீர தத்துவங்கள்-உ0, சமஷ்டி, சீவன், அவித்தை-உ, சூட்சுமபூதங்கள்-ரு, வித்தை, ஈசுரன், பிரமம்-ங, ஆகத்தத்துவங்கள்-ங0.

காரணசரீர வியவகாரத்திற்கு வித்தை, ஈசுரன், பிரமம்-ங. ஈசுர வியவகாரத்திற்கு ஈசுரன், பிரமம்-உ. பிரமவியவகாரத்திற்கு பிரமம்-க. இந்திரிய வியவகாரத்திற்கு இந்திரியம்-க. சட்கோசதத்துவங்கள்-கூ. அந்தக்கரணம்-ரு. வாயு-ரு. சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு. ஆகத் தத்துவங்கள்-உஉ.

மனோராச்சிய வியவகாரத்திற்கு அந்தக்கரணம்-ரு. சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு. ஆகத் தத்துவங்கள்-க0. இப்படித் தத்துவங்களினுடைய தோற்றமும், நிலையுஞ் சொல்லப்பட்டன.

இனித் தத்துவங்கள் ஒடுங்குகின்றவழி சொல்லுகின்றோம்.

சகல சீவரிடத்திலு மிருக்கின்ற தூல சரீரங்களனைத்தும், தமக்கு ஆசாரமான தூல பூசங்களிலே மறைந்து, பூதமாத்திரமாக ஒடுங்கும். இந்தத் தூலபூதங்களும், பஞ்சீகரணம்விட்டுத் தன்மாத்திரைகளான தமோகுண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரண்யகர்ப்பா வஸ்தையென்று சொல்லப்படும். சூக்ஷும சரீரதத்துவ

ங்களிருபதுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடைய சத்துவகுணமும், இராஜோகுணமுமாக ஒடுங்கும். அஃதெங்ஙனமெனின்:—

சகலபிராணிகளிடத்திலு மிருக்கின்ற அகங்காரமும், கிராணேந்திரியமும், உதானவாயுவும், உபஸ்தேந்திரியமும் பிருதிவியில் ஒடுங்கும். சித்தமும், சிங்குவையும், சமானனும், பாயுருவும் அப்புவில் ஒடுங்கும். புத்தியும், சட்சுவும், அபானனும், பாதமும் அக்கினியில் ஒடுங்கும். மனதும், தொக்கும், பிராணனும், பாணியும் வாயுவில் ஒடுங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியானனும்,வாக்கும் ஆகாசத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குணபூதங்களாகும். இந்தச் சூக்ஷமபூதங்களும், பிருதிவி அப்புவில்கரைந்து ஒடுங்கும். அப்புவும் அக்கினியிற் சுவறி ஒடுங்கும். அக்கினியும் விளக்கைப் போல வாயுவிலணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாசத்திலே ஓய்ந்து ஒடுங்கும். ஆகாசமும் விக்ஷேபசத்தியில் ஒடுங்கும். ஆவரணசத்தியும், விக்ஷேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தமோகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலம்வித்தில் ஒடுங்கினாற்போல இன்னும் ஒரு சிருஷ்டிக்கு வித்தாக மாயையிலும், அவித்தையிலும் ஒடுங்கும். இந்த மாயையும் அவித்தையும் அதிநுண்மையான மூலப்பிரகிருதியென்று சொல்லப்பட்ட விந்து தத்துவத்தில் ஒடுங்கும். அந்தவிந்துவும், பாம்பென்கின்ற பெயர்போய் பழுதையாகக் கண்டாற்போலத் தனக்கு அதிஷ்டான சைதன்னியமான பிரம சைதன்னிய மாத்திரமாக ஒடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொருள் ஒன்றாகக்கண்டு,அதுவே சுபாவசித்தமாய் நிசமாயிருக்கின்ற தன்வடிவெனக்கண்டு தெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித் தோற்றி ஒடுங்கின தத்துவங்கள் - ௩௬. அவையாவன:—

பூதங்கள்-ரு. ஸ்தூல சரீரதத்துவங்கள்-சு. சூக்ஷுமசரீர தத்துவங்கள்-உ0. காரணசரீரமான மாயை அவித்தை-உ. இவற்றில் பிரதிவிம்பித்தசீவன், ஈசுரன்-உ. இவைகட்கெல்லாம், அதிஷ்டான சைதன்னியமா யிருக்கின்ற * பிரமம்-க. ஆ-ங௲.

இவைகளில், பூதங்கள்-ரு. மாயை-க. மாயாப்பிரதிவிம்பரான ஈசுரன்-க. பிரமம்-க. ஆக இந்தஎட்டும் சகலபிராணிகளுக்குஞ் ‡சமுதாயமாக அநுபவிக்கப்படும். மற்றை இருபத்தெட்டும், அவனவனுக்குப் † பிருதக்காக அனுபவிக்கப்படும். அஃதெங்ஙனமெனில், பிருதிவிதத்துவம் ஒன்று இறக்கில் எல்லோருக்கும் ஆகாரமில்லை. மழை மறுக்கில் எல்லோருக்குஞ் சலமில்லை. தேயுவில்லாதிருந்தால் பாகமில்லை. வாடை தென்றல் இல்லாவிட்டால் வாயுவியக்கமில்லை. ஆகாசம் இறக்கில் ஒருவருக்கும் அவகாசமில்லை. மாயையும், மாயாப்பிரதிவிம்பரும் இறக்கில், சகலசமயங்களுக்குந் தெய்வமில்லை. பிரமமில்லையேல் ஒருவருக்கும் அறிவில்லை. ஆகையால் இந்த எட்டும் எல்லாருக்குஞ் சமுதாயமாம். பிருதக்கு எங்ஙனமெனில், ஒருவனுக்கு ஸ்தூலசரீரம் இறக்கில், எல்லோருக்கும் ஸ்தூலசரீரம் இறவாதபடியினாலும், சூக்ஷுமசரீரத்தில்ஒருவனுக்கு அங்க §வைகல்யம்வந்தால் எல்லோருக்கும் வாராதபடியினாலும், முத்தராயிருந்த சுகர், வாமதேவர் முதலானபேருக்கு அவித்தையும், சீவனும் இறந்துபோயிருக்க மற்றைப்பேருக்கெல்லாம் அவித்தையும், சீவனும் இறவாத படியினாலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் அவனவனுக்குப் பிருதக்கென்பதிலே சந்தேகமேயில்லை.

---

* பிரமத்திற்குத் தோற்றமொடுக்கங் கூறினது நாமகற்பனையைப்பற்றியென்க.

‡ சமுதாயம்—பொது.

† பிருதக்கு—வேறு.

§ வைகல்யம்—குறைவு.

இந்தத் தத்துவங்கள் ௯௬-ல் எப்போதும் தானாகவே காணப்படுகிற தத்துவம்-க. எப்போதும் தனக்கன்னியமாகக் காணப்படுகிற தத்துவங்கள்-எ. தானாகவும் தனக் கன்னியமாகவும் அநுபவிக்கப்படுகிற தத்துவங்கள்-உஅ. அஃதெங்ஙனமெனில்:—

அவஸ்தாத்திரய சாக்ஷியாயிருக்கின்ற பிரமசைதன்னியம் எல்லாவவஸ்தைகளிலுந் தானாக விளங்குகையினாலும், மற்றத் தத்துவங்கள்போலத் தனக் கன்னியமாக விளங்காதபடியினாலும் அந்தப் பிரமசைதன்னியம் ஒன்றுமே தானாகக் காணப்படுகிறது. பஞ்சபூதங்கள்-ரு. மாயை, மாயாப்பிரதிவிம்பர்-உ. ஆக எழும் தத்தந் தொழிலான வெட்டு, குத்து, உழவு பஞ்சகிருத்தியம் தசாவதார முதலானவை ஒருகாலும் தன்னுடைய தொழிலாகக் காணப்படாத படியினாலே தனக்கன்னியங்களே யல்லாமல் தானாகமாட்டா. மற்றை உஅ-தத்துவங்களுள்ளே நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான்வைசியன், நான்சூத்திரன், நான்பிரமசாரி, நான்கிருகஸ்தன், நான்வானப்பிரஸ்தன், நான் சன்னியாசி, நான் ஆண்மகன், நான் பெண்மகள், நான்கரியன், நான்சிவப்பன், நான்கட்டையன், நான்நெட்டையன், நான்பருத்தேன், நான்இளைத்தேன் என்று தானாகவழங்குகிற ஸ்தூலசரீரம் ஆறுதத்துவங்களும், மற்றொருவேளையிலே தனக்குப் புறம்புபட்டு என்மாடு, என்கன்று என்றாற்போல, என்சரீரம் பருத்தது என்சரீரம் இளைத்தது, என்மயிர் நரைத்தது, என்சரீரம்பிறந்து இத்தனை நாளாயிற்றென்று தான்வேறு, தூலசரீரம் வேறாக வழங்குகிறபடியினாலும், நான்கண்டேன், நான்கேட்டேன், நான்தொட்டேன், நான்போகித்தேன், நான்கொடுத்தேன், நான்வாங்கினேன், நான்நடந்தேன், நான்புசித்தேன், நான்சிந்தித்தேன், நான்நிச்சயித்தேன், நான் இந்தப்பஞ்சத்திற்குச் சீவித்தேன் என்று தானாகவழங்குகிற சூக்ஷ்மசரீர தத்துவங்கள் இருபதும், மற்றொருவேளையிலே தனக்

குப்புறம்புபட்டு என்வீடு, என்உடமை என்றாற்போல என் கண், என் காது, என் மூக்கு, என் நாக்கு, என் கை, என் கால், என் மனமும், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம், என்பிராணன்என்று தான்வேறு அவைகள்வேறாக வழங்குகிறபடியினாலும், நான் அறிவேன், நான் அறியேன், என்று தானாகவழங்குகிற அஞ்ஞானமும், சிதாபாசனும் மற்றொரு வேளையிலே தனைக்குப் புறம்புபட்டு என் அஞ்ஞானம், என்சீவன் என்று வழங்கக்கண்ட படியினாலும் இந்த உ௮-தத்துவங்களும் தானாகவும், தனக்கு அன்னியமாகவும் வழங்குகின்றது சித்தம்.

இப்படிச்சொன்ன குருவைப் பார்த்துச் சீடன்கேட்கும்படி, இந்த உ௮-தத்துவங்களுந் தானானால், சாக்ஷியைப்போல ஒருதன்மையாகத் தோற்றவேண்டுமேயல்லாமல், பஞ்சபூதங்களைப்போலத் தனக்கன்னியமாகக் காணக் கணக்கில்லை. இந்த உ௮-ம் தனக்கன்னியமேயானால் எப்போதும் புறம்புபட்டே இருக்கவேண்டு மன்றித் தானாக வழங்கக் கணக்கில்லை. தானுமாய் தனக் கன்னியமுமாய் இருக்குமென்கிறது இருட்டாதித்தன் என்றாற்போலும், வெள்ளாழ தீக்ஷிதன் என்றாற்போலும் விருத்தமாமென்னுஞ் சங்கைக்கு பரமார்த்தமாகத் தான் என்கின்றது ஒருவகையும், அத்தியாசத்தினாலே தான் என்கின்றது ஒருவகையும் ஆக இருவகையும் உண்டு. சாக்ஷி சைதன்னியத்தைத் தான் என்கின்றது பரமார்த்தமல்லாமல் உபசாரமல்ல. தனக்கன்னியமாயிருக்கின்ற இந்த உ௮-யும் தான் என்கின்றது கட்டையைக் கள்ளனென்றாற்போலும, பழுதைப் பாம்பென்றாற்போலும, புத்திரதாராதிகளைத் தான்என்றாற்போலும் மயக்கமேயல்லாமல் உண்மையல்ல. ஆகையினால் அஞ்ஞானகாலந்தொடங்கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள்-எ. இப்போதுஇப்படிப்பட்ட விவேகம்பண்ணினபிற்பாடு தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள்-உ௮. ஆக இந்த ௩௫-தத்துவங்களையும்அதததற்குச்சொ

ன்ன குணங் குறிகளுடனேகூடக் காண்கின்ற அறிவானது கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவேயிருந்து கடத்தைப்பார்க்கின்றதுபோல அவைகட்கன்னியமாகவேயிருந்து அவைகளை அறிகின்றதென்றும், முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுவே தானென்றும், அதுவே பரமசிவமென்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவதரிசனமுடைய சீவன் முத்தனென்று சொல்லப்படுவனென் றுத்தரம்.

இப்படிப் பிரமமே தாமென்றும், மற்றை ௯௬-தத்துவங்களும் தமக் கன்னியமென்றும் பிரித்தறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியினாலே புத்திரதாராதிகளை தபிக்கின்றதைத் தாம் தபிக்கின்றோம் என்கின்ற மூடத்தனம்போல, இந்த ௨௮-னுடைய தொழில்களையும் தந்தொழிலென்று மயங்குகின்றபடியினாலே இந்த ௨௮-னாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாற் கட்டுப்பட்டு அந்தக் கர்மத்தின்படியே சனன மரணாதி சம்சாரத்திலே அடிபடுகிறோமென்று மயங்குவர்.

பிரமசைதன்னியமே தானென்றும், மற்றை ௯௬-ம் தானல்லவென்றுந் தெளிந்த விவேகியானவன் அகங்காரக்கிரந்தியற்றபடியினால் இந்த ௨௮-னுடைய தொழில்களையும் நான்செய்யவில்லையென்றும், இந்த ௨௮-ம் புசிக்கின்றதை நான்புசிக்கவில்லை யென்றும் திடப்படத்தேறி மயக்கமற் றிருக்கின்றபடியினால் இந்த ௨௮-னாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கர்மமில்லாதபடியினால் சனனமரணாதி சம்சாரமில்லாமல் முத்தனாய்ப் பிரமமாத்திரமாகவே யிருப்பன்.

இவனைச் சீவன்முத்தன் என்றும், திடப்பிரக்ஞன் என்றும், அதிவர்ணாச்சிரமி என்றும், குணாதீதன் என்றும், பகவத்பக்தன் என்

றும், பிராமணன் என்றும் வாசிட்டமுதலிய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவங்களை விசாரம்பண்ணி மோக்ஷமடையக்கடவர்கள்.

## நாநாசீவவாதக்கட்டளை

*முற்றிற்று.*

---

சந்த்ரநாதன் துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தத்

# தத்துவக்கட்டளை.

## காப்பு.

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பநமக் காவானு—மெந்தமுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு.

## தத்துவங்கள்—௯௬.

இவை முதற்றத்துவம்-௩௰, இரண்டாந்தத்துவம்-௩௰, மூன்றாந்தத்துவம்-௩௬, எனப்பிரிக்கப்பட்டு வழங்கும்.

## முதற்றத்துவம்—௩௰.

பூதம்-௫, பொறி-௫, புலன்-௫, கன்மேந்திரியம்-௫, கன்மவிஷயம்-௫, கரணம்-௪. அறிவு-௧. ஆக ௩௰.

## இரண்டாந்தத்துவம்— ௩௰.

நாடி-௧௰, வாயு-௧௰, சயங்கள்-௫, கோசம்-௫, ஆக ௩௰.

மூன்றுந்தத்துவம்—௩௬.

ஆதாரம்-௬, மண்டலம்-௩, மலம்-௩, தோஷம்-௩, ஏடணை ×-௩, குணம்-௩, இராகம்-அ, வினை-உ, அவ்ஸ்தை-௫. ஆ௳ ௩௬.

---

முதற்றத்துவம் ௩0-ன் வரலாறு.

பூதம்—௫.

பிருதிவி—மண், அப்பு—நீர், தேயு—அக்கினி, வாயு—காற்று, ஆகாயம்—வெளி.

பொறி—௫.

சோத்திரம்—செவி, தொக்கு—உடம்பு, சட்சு—கண், சிங்ஙுவை—நாக்கு ஆக்கிராணம்—மூக்கு.

புலன்—௫.

சத்தம்—கேட்கப்பட்டது (செவிக்குயிர்க்கூறு.)
பரிசம்—சீதோஷ்ணாதி யறிவு (உடம்புக்குயிர்க்கூறு.)
உருவம்—காணப்பட்டது (கண்ணுக்குயிர்க்கூறு)
இரசம்—அறுசுவை யறிவு (நாவுக்குயிர்க்கூறு.)
கந்தம்—நற்கந்த துர்க்கவறிவு (நாசிக்குயிர்க்கூறு.)

கன்மேந்திரியம்—௫.

வாக்கு—வாய், பாதம்—கால், பாணி—கை, பாயுரு—அபானம், உபத்தம்—குறி.

---

× ஈஷணா என்னும் இச்சைப்பொருட்டான வடமொழியானது விதிவழியே ஐகாரவீராய் ஈடணை என நின்று மரூஉ வழக்கால் ஏடணை என வழங்குகின்றது.

கன்மவிஷயம்—ரு.

வசனம்—வார்த்தை (வாய்க் குயிர்க்கூறு.)

கமனம்—நடை (காலுக் குயிர்க்கூறு.)

தானம்—கொடுத்தல் வாங்கல் (கைக் குயிர்க்கூறு.)

விசர்க்கம்—விடுதல் (அபானத்துக் குயிர்க்கூறு.)

ஆநந்தம்—மகிழ்தல் (குறிக்குயிர்க்கூறு.)

கரணம்—ச.

மனம்—ஒன்றை நினைப்பது, புத்தி—அதனை விசாரிப்பது, அகங்காரம்— அதனைக்கொண்டு மேன்மேலு மெழும்புவது, சித்தம்—அதனைச் செய்து முடிப்பது.

அறிவு—க.

அறிவு—தன்னைக்கண்டு மகிழ்ந்திருத்தல்.

ஆ முதற்றத்துவம்-ருO.

---

இரண்டாந்தத்துவம் ருO-ன் வரலாறு.

நாடி—கO.

இடை—வலதுகாற் பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல் மாறலாக இடது நாசியைப்பற்றி நிற்பது.

பிங்கலை—இடதுகாற் பெருவிரலினின்று கத்தரிக்கோல்போல மாறலாக வலது நாசியைப்பற்றி நிற்பது.

சுழுமுனை †—மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிக்கும் ஆதாரமாய் நடுநாடியாய்ச் சிரசளவு முட்டி நிற்பது.

---

† சுஷும்நா என்னும் வடமொழி சுடுமுனை எனற்பாலது விதிகடந்து மரூஉ வழக்காய்ச் சுழுமுனை என்றும், இழூஉ வழக்காய்ச் சுழிமுனை என்றும் வழங்கும்.

சிங்குவை—உண்ணாக்கிலே நின்றுசோறு தண்ணீர் இவைகளை விழுங்கப்பண்ணுவது.

புருடன்—வலது கண்ணளவாய் நிற்பது.
காந்தாரி—இடது கண்ணளவாய் நிற்பது.
அத்தி—வலது காதளவாய் நிற்பது.
அலம்புடை—இடது காதளவாய் நிற்பது.
சங்கினி—குறியினளவாய் நிற்பது.
குகு—அபானத்தளவாய் நிற்பது.

வாயு—க0.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

இவற்றுள்:—

க-வது. பிராணன்—லலாடமத்தியில் தோன்றிச் சித்திர நாடியில் விழுந்து, ஒவ் என்று மூலாதாரத்திற் குதித்து, அவ் என்று நாபித்தானத்தில் முட்டி, சவ் என்று இடைபிங்கலைகளி லோடி, கபாலத்தைச்சுற்றி, நாசியிற் பன்னிரண்டங்குலம் புறப்பட்டு, நாலங்குலங் கழன்று எட்டங்குலம் மீண்டு, தானின்ற விடத்தில் தாக்குறுவது. இப்படி நாழிகை ஒன்றுக்கு ருசுO - சுவாசம்; இரவு பகல் சுO-நாழிகைக்கும் உககசOO-சுவாசம்.

இந்தச் சுவாசம் உககசOO-க்கும் விவரம்.

| | |
|---|---|
| மூலாதாரத்தில் | சுவாசம் சுOO |
| சுவாதிஷ்டானத்தில் | சுவாசம் சுOOO |
| மணிபூரகத்தில் | சுவாசம் சுOOO |
| அனாகதத்தில் | சுவாசம் சுOOO |
| விசுத்தியில் | சுவாசம் கOOO |

ஆக்கினையில் சுவாசம் க000
நாதாந்தத்தில் சுவாசம் க000

ஆக உககரு00-சுவாசமியங்கி, இதில் எஉ00-சுவாசம் பாழாகப் பாய்ந்து கசுச00-சுவாசம் உள்ளே புகும் என்று அறிக.

உ-வது. அபானன்—குதத்தையுங் குய்யத்தையும் பற்றிநின்று மல சலாதிகளைக் கழிப்பிப்பது.

ந-வது. வியானன்—தோலிலே நின்று பரிசங்களை அறிவிப்பது.

ச-வது. உதானன்—உதராக்கினியை எழுப்பி உண்ட அன்ன சாரத்தை எஉ000-நாடி நரம்புகளிலே கலப்பித்துச் சரீரத்தை வளர்ப்பிப்பது.

ரு-வது. சமானன்—எல்லா வாயுவையும் ஏறுதல் குறைதல் செய்யவொட்டாமற் சமனாய்க் கீழ்க்கொண்டியங்குவது.

சு-வது. நாகன்—விக்கலும் கக்கலும் உண்டாக்குவது.

எ-வது. கூர்மன்—கண்ணிலே நின்று இமைப்பிப்பது.

அ-வது. கிரிகரன்—புருவமத்தியத்தைப் பற்றி நின்று தும்முவித்தலும் அழுவித்தலுஞ் செய்வது.

கூ-வது. தேவதத்தன்—விழித்திருக்கும்போது ஓடுவித்தலும், உலாவுவித்தலும், உயுத்தம் பண்ணுவித்தலுஞ் செய்வது.

க0-வது. தனஞ்சயன்—பிராணன் உடம்பைவிட்டுப் போனாலும் தான்பிரியாமல் நின்று உடம்பை வீங்குவித்தலும், விசிவித்தலும், புளிப்பித்தலுஞ் செய்து மூன்றுநாட்கப்பாற் கபாலத்தைப்பிளக்கோடிப் போவது.

சயம்—ரு.

அமர்வாசயம், பகிர்வாசயம், சலவாசயம், மலவாசயம், சுக்கில வாசயம்.

க-வது. அமர்வாசயம்—உண்ட அன்னசாரம் அமருமிடம்.

உ-வது. பகிர்வாசயம்—அன்னம் பகிருமிடம்.

ங-வது. சலவாசயம்—சலக்குழி இறங்குமிடம்.

ச-வது. மலவாசயம்—மலக்குழி இறங்குமிடம்.

ரு-வது. சுக்கிலவாசயம்—சுக்கிலம் பிரியுமிடம்.

கோசம்—ரு.

அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ் ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்.

க-வது. அன்னமயகோசம்—சட்பாவ விகாரமாகத் தோற்றப் பட்ட தூலதேகம்.

உ-வது. பிராணமயகோசம்—பிராணனுங் கன்மேந்திரியமுங் கூடிநிற்பது.

ங-வது. மனோமயகோசம்—மனதும் ஞானேந்திரியமுங் கூடி நிற்பது.

ச-வது. விஞ்ஞானமயகோசம்—புத்தியும் ஞானேந்திரியமுங் கூடிநிற்பது.

ரு-வது. ஆனந்தமயகோசம்—பிராணவாயுவுஞ் சுழுத்தியுங்கூடி நிற்பது.

ஆ. இரண்டாந்தத்துவம்—ஙo.

## மூன்றுந்தத்துவம் ௩௬-ன் வரலாறு.

### ஆதாரம்—௬.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை.

க-வது. மூலாதாரம்—நாற்சதுரத்துக்குள்ளே முக்கோணமாயிருப்பது; இதனடுவேநிற்கும் எழுத்து ஓங்காரம், இதில்நிற்குந் தேவதை விநாயகன்.

உ-வது. சுவாதிஷ்டானம்—நாற்கோணமானது; இதனடுவே நிற்கும் எழுத்து நகாரம்; அதிதேவதை பிரமா.

௩-வது. மணிபூரகம்—பிறைக்கோணமானது; இதனடுவே நிற்கும் எழுத்து மகாரம்; அதிதேவதை விஷ்ணு.

ச-வது. அனாகதம்—முக்கோணமானது; இதனடுவே நிற்கும் எழுத்துச் சிகாரம்; அதிதேவதை உருத்திரன்.

ரு-வது. விசுத்தி—அறுகோணமானது; இதில்நிற்கும் எழுத்து வகாரம்; அதிதேவதை மகேசுவரன்.

௬-வது. ஆக்கினை—வட்டமாயிருப்பது; இதனடுவே நிற்கும் எழுத்து யகாரம்; அதிதேவதை சதாசிவன்.

இப்படி ஆதாரம் ஆறிலேயும், ஆறெழுத்தும், ஆறுதெய்வமும், ஆறு வீடும், அதில் ஐம்பத்தோரக்ஷரமுங் கண்டுகொள்க.

### மண்டலம்—௩.

அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

க-வது. அக்கினிமண்டலம்—நாற்சதுரமாய் நடுவே மூன்றுகோணமாய்ப் பிருதிவியும் அப்புவுங் கூடினவிடத்தே நாலிதழுடைய புஷ்பமாயிருப்பது.

உ-வது. ஆதித்தமண்டலம்—இருதயகமல அறுகோணமெட்டிதழுடைய புஷ்பமாய் வாழைப்பூப்போன்று கீழ்நோக்கி யிருப்பது.

ந-வது. சந்திரமண்டலம்—கோடி சந்திராதித்த ருதயம் ஆனாற்போலச் சிரசு நடுவே ஒவ் என்ற அக்கரத்தை முன்னிட்டுப் பேதித்து நிற்கும். இதனமிர்தகலை அக்கினிமண்டலத்தை மேனோக்கிச் சோதியா யிருக்கும். இதனடுவே பராசத்தி சுந்தராநந்தவாலையாக எழுந்தருளி யிருப்பள்.

மலம்—ந.

ஆணவம், காமியம், மாயை.

க-வது. ஆணவம்—உடம்பை நானென்றிருக்கை.

உ-வது. காமியம்—கண்டவற்றிற்கெல்லா மாசைப்படுகை.

ந-வது. மாயை—தனக்கு வருவதையறியாமற் கோபங்கொண்டிருக்கை.

தோஷம்—ந.

வாதம், பித்தம், சிலேத்துமம்.

வாதம்—வாயுவின் கோபம். பித்தம்—அக்கினியின் கோபம். சிலேத்துமம்—அப்புவின் கோபம்.

இந்த மூன்றுகோபத்தாற் சகலவியாதியுமுண்டாகும்.

ஏடணை—ந.

அர்த்தவேடணை, புத்திரவேடணை, உலகேடணை.

அர்த்தவேடணை—திரவியத்தைத்தேடி ஆசைப்படுதல். புத்திரவேடணை—புத்திரனைத்தேடி ஆசைப்படுதல். உலகேடணை—உலகவிஷயங்களைத்தேடி ஆசைப்படுதல்.

குணம்—ந.

இராசதம், தாமதம், சாத்வீகம்.

இராசதம்—அசங்காரமாய் வெட்டவும் குத்தவும் கடிக்கவுமா யிருப்பது. தாமதம்—மத்தமாய் உன்மத்தமாய் மத்திமமாயிருப்பது. சாத்துவிகம்—அடக்கம், அன்பு, விவேகம், ஐம்பொறியடக்கல், அருள், ஞானம், தவம், பொறை, மேன்மை, வாய்மை முதலியவற்றை யுடையதாய் நாட்டங்கொண்டிருப்பது.

இராகம்—அ.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, அகங்காரம்.

காமம்—ஆசை. குரோதம்—பிணக்கு. உலோபம்—பிடிபாடு. மோகம்—பிரியம். மதம்—கருவம். மாற்சரியம்—உறவாயும் உதட்டில் நகைப்புமாயிருந்து உட்பகை விளைவித்தல். இடும்பை—உதாசீனம். அகங்காரம்—கோபித்தல்.

வினை—உ.

நல்வினை, தீவினை.

நல்வினை—புண்ணியஞ்செய்தல், தீவினை—பாவஞ்செய்தல்.

அவஸ்தை—ரு.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

சாக்கிரம்—லலாடத்தானம். சொப்பனம்—கண்டத்தானம், சுழுத்தி—இருதயகமலம். துரியம்—நாபிக்கமலம். துரியாதீதம்—குறியிடம்.

முன்சொல்லிய சாக்கிரமானது லலாடத்தானத்தில் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இப்பதினாலு கருவிகளுடன் தன்னுடைய சந்நிதியிற் சேவிக்கத்தக்கதாகப் பராசத்தியருளால் இராசாவும் படையும்போல நிற்கும்.

இதற்குச் சாட்சி
திருமந்திரம்.

கண்டனவைந்துங் கலந்தனவோரைந்து
முண்டனநான்கு மோதியுணர்ந்தபின்
பண்டையனாதி பசர்ந்தவிச்சாக்கிர
மண்டமதாக வமர்ந்திருந்தானே.

இப்பால் முன்சொன்ன பதினாலு கருவியிலே பத்துமொடுங்கி நின்ற நான்கு கரணமுஞ் சொப்பனமாகிய கண்டத்தானத்தி னிற்கும்போது கனவுகண்டு மறந்துவிட்டேனென் றறியவும்.

இதற்குச் சாட்சி
திருமந்திரம்.

பண்டுமொழிந்த பதினாலுந்தன்னிலே
கண்டமதனிற் கரணங்கலந்துதான்
மண்டிவளைந்த மனைவாழ்க்கைதன்னிலே
கண்டுமறிந்துங் கனவதுவாமே.

சுழுத்தியாவது முன்சொன்ன கரணம் நான்கில் இரண்டுமொடுங்கி இரண்டும்வந் திருதயகமலத்திலே நின்றதென் றறியவும்.

இதற்குச் சாட்சி
திருமந்திரம்.

ஆனமனமு மறிகின்றபுத்தியு
மூனையிழந்துநின் றுள்ளேயுயிர்ப்பெய்தித்
தானமிழந்து தயங்கியவாறுபோல்
ஞானமிழந்து சுழுத்தியதாமே.

துரியமாவது இரண்டிலொன் றொடுங்கி ஒன்றுபோய் நாபிகமலத்தில் நிற்குமென் றறியவும்.

## இதற்குச் சாட்சி

## திருமந்திரம்.

காணத்தெழுந்து திரியுந்துரியந்தான்
வானத்தெழுந்துபோய் வையம்பிராக்கித்தே
தானத்தெழுந்த கருத்தின்றலையிலை
யூனைத்தவிர்ந்துமங் கோங்கினின்றானே.

துரியாதீதங் கெட்டவிடத்தில் ஆன்மா மூலாதாரத்திற் கிடந்துறங்குமென் றறியவும். இது முன்சொன்ன பதினாலு கருவியுமிறந்தவிடம்.

## இதற்குச் சாட்சி

## திருமந்திரம்.

துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே
நரிகள்பதினாலு நஞ்சுண்டுசெத்தது
பரியபுரவியும் பாரிற்பிறந்திடுந்
துரியமிருப்பிடஞ் சொல்லவொண்ணாதே.

ஆ மூன்றாந் தத்துவம்—௩௬.

## இதற்குச் சாட்சி

## திருமந்திரம்.

முப்பதுமுப்பது முப்பத்தறுவருஞ்
செப்புமதிலுடைக் கோயிலுள்வாழ்பவர்
செப்புமதிலுடைக் கோயிலசிதைந்தபின்
னொப்பிலனைவரு மோட்டெடுத்தாரே.

## வேதாந்தத் தத்துவக்கட்டளை
## முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஞானக்கட்டளை.

இகபரங்களிலே யாவரொருவர்க்கு முன்செய்த தவத்தினால் ஞானத்தில் விருப்புற்றுச், சற்குருநாதன்சேவை கிடைத்து, மோட்சம்பெறப் பரிபக்குவம் வந்தவிடத்து வேதாந்த தெரிசனவிளக்கமே சூரியப்பிரகாச விளக்கமாயிருக்கும். மற்றநூற்களியாவும் மின்மினி விளக்கமாயிருக்கும். ஆகையால் வேதாந்தெதெரிசனமே யுண்மையெனவறிக.

இனி வேதாந்ததெரிசனஞ் செய்வதெப்படி யென்றால்? நான்குவேதமே முப்பத்திரண்டு உபநிடதமாயும், நான்கு வாக்கியமாயும், ஆறு சாஸ்திரமாயும், இன்னும் அநேக சாகோப சாகைகளாய் விரிந்திருந்தாலும் இவை யிரண்டுவகையா யிருக்கும்.

அவையாதெனில்? அற்பசுருதி வாக்கியமென்றும்,பிரபலசுருதி வாக்கியமென்றுமாம்.

இவற்றுள் அற்பசுருதிவாக்கியம் கன்மகாண்டத்தைச் சொல்லும். பிரபலசுருதிவாக்கியம் ஞானகாண்டத்தைச்சொல்லும். இந்த ஞானகாண்டத்தைச் சொல்லாநின்ற பிரபல சுருதிவாக்கியத்தை மகாவாக்கியமென்று சொல்லப்படும்.

அவ்வாக்கியவிபரம் யாதெனில்,—நான்கு வர்ணமும், மூன்று பதமும், மூன்று பதார்த்தமும், மூன்றிலக்கணையுமாய் விளங்கும்.

வர்ணம் நான்காவன—சத்தியம், ஞானம், அநந்தம், ஆனந்தம்.

பதம் மூன்றாவன—தற்பதம், தொம்பதம், அசிபதம்.

பதார்த்தம் மூன்றாவன—அது, நீ, ஆனாய் என்பனவாம்.

இதில் அது என்றது பரம். நீ என்றது சீவன். ஆனாய்என்றது (ஐக்கியப்பொருளாகிய) சிவம்.

இலக்ஷணை வாக்கியம் மூன்றாவன—விட்டலக்கணை சம்சர்க்க வாக்கியம். விடாதலக்கணை விசிட்டவாக்கியம். விட்டுவிடாதலக்கணை அகண்டவாக்கியம்.

இப்படி விளங்கிய வேதாந்தத்துக்குத் தத்துவம்-உஅ. இந்த இருபத்தெட்டே அபரோட்சமாகிய காரிய உபாதி - எ. பரோட்சமாகிய காரண உபாதி-எ. அவத்தை-௬. அபிமானி-௬. முக்கியம், லட்சியம்-உ. சுத்தம் அசுத்தம்-உ.

இவைகள் விளங்கவேண்டுமானால்? சிரவண,மனன, நிதித்தியாசனத்தினால் விளங்கவேண்டும்.

சிரவணமாவது—முன்சொன்ன வேதாந்தப் பொருளைக் குருநாதன் பக்குவனுக்குச் சொல்லக்கேட்பது.

மனனமாவது—அதைச் சீடன் சதா சிந்திப்பது.

நிதித்தியாசனமாவது—சிந்தித்தபடியே அறிவது. இவைகளே தத்துவதெரிசனமாம்.

## இனிமுன்சொன்ன வேதாந்ததத்துவம் இருபத்தெட்டாவன.

சகளவடிவமான அசித்துருவதத்துவம்-உச. நிட்களவடிவமான சித்துருவதத்துவம்-௪. இதில் தோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் ஆகிய ஞானேந்திரியம்-ரு. வாக்கு,பாதம், பாணி

பாயுரு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியம்-ரு. ஆக பொறி-க0. இவைகளின் விஷயங்களாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ஆகிய க0. மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய அந்தக்கரணம்-ச. ஆக அசித்துருவ தத்துவம்-உச. புருடன், காலபரம், வியோமம், பரம் ஆக சித்துருவதத்துவம்-ச. ஆக தத்துவம் இருபத்தெட்டு.

இந்த இருபத்தெட்டு தத்துவமே சகம், சீவன், பரம் எனமூன்றுபொருளாய் விளங்கும். அதெப்படியெனில், உச-தத்துவமும் சகமாகவிளங்கும். புருடன், காலபரம், வியோமம் மூன்றும் சீவனுக விளங்கும். பரம் ஒன்றுமே சிவமாகவிளங்கும். இதே இன்னம் சத்தியம், பரம், ஞானம், சீவன், அநந்தம், சராசரம், ஆனந்தம், சகலபுவனமாகவும் விளங்கும். இதுவே தத்துவதெரிசனமாம்.

## க. இனிதோம்பதசிரவணம்.

முன் தற்பதத்தைச் சொல்லாமல் தொம்பதத்தை முதற்சொன்ன தெதனுலெனில:—நீ யென்ற பதார்த்தமாகிய சீவன் நிர்விகாரியாய்ச், சித்துருவமாயிருந்தும் அதையறியாமல் சடத்தைத் தானென்றறிந்திருப்பதால், இச் சடம் நீயல்லவென்று விலட்சணப்படுத்திப் போதிப்பதற்காக அது நீ ஆனுய் என்றவாக்கியத்தை நீ அது ஆனு யென்றும், தத்தொமசியென்ற வாக்கியத்தை தொந்தத்தசியென்றும், அன்வயப்படுத்தி யுரைக்கலாயிற்று.

இனி தொம்பத வுபாதியானது காரிய உபாதியென்றும், சீவவுபாதியென்றும், ஒவ்வொன்று எவ்வேழு விதமாய் விளங்கும். அஃதெப்படியெனில்:—

முன்சொன்ன சித்துருவ தத்துவம் ச-ம் நிற்க, அசித்துருவ தத்துவம் உச-ல் பொறிகள் க0-ம், தேகம் ஒன்றும் ஆகப்பதினென்

றுஞ்சேர்த்து ஒன்று. விஷயங்கள் ௧0-ம் சேர்த்து ஒன்று. அந்தக்கரணம்-௪. இவைகளுக்குச் சகாயமாகிய பிராணாதி-௧. ஆக காரிய உபாதி-எ.

இந்தக் காரியவுபாதி எழுமாகிய தேகம் நீயல்ல. எப்படி நானல்லவெனில்:—என் தனம், என் தானியம், என் புடவை, என்னுடைமையாதி என்பதுபோல; என் தேகம், என் இந்திரியம், என் பிராணன், என் மனம், என் புத்தி, என் அகங்காரம், என் சித்தம்,என்று உன்னாலறியப்படுவதால், இவைகளும் அந்தக்கரணங்களில் தொழில்களாகிய ஐயம், துணிவு, அபிமானம், சிந்தனை, ஆகிய இவைகளும் நீயல்ல; ஆயின் நான்யார்? என இந்த எழுபாதியாகிய மூன்றுதேகத்தையும் இது இது எனப் பகுத்தறிந்திருக்கின்ற அறிவாகிய ஆத்மாவே நீ.

இந்த நீ இவ்வேழுபாதியுடன் கூடியிருந்தபோது மூக்கியமென்றும், அவ்வுபாதியை நீங்கியிருந்தபோது லட்சியமென்றும், அதை நானென்றபோது அசுத்தமென்றும், அவ்வுபாதியை நானல்லவென்று கண்டபோது சுத்தமென்றுமாம்.

இவ்வுபாதியாகிய தேகம் நானல்லவென்றதற்கு வேதப்பிரமாணம் உண்டோவென்றால் உண்டு, அஃதாவது.

சம்சர்க்கவாக்கியமென்றும், விட்டலக்ஷணை யென்றும் இரண்டு விதமாம். இதற்கு அருத்தம்யாது? மச்சுவீடு கூப்பிடுகிறதென்றும், கங்கை சத்திக்கிறதென்றும் சொன்னால், மச்சுவீடுகூப்பிடுமா, கூப்பிடாது; அதற்குள் ஒருபுருஷனிருந்து கூப்பிடுகிறானென்றும்; கங்கை சத்திக்குமா, சத்தியாது; அதன்கரைமேலுள்ள இடைச்சேரியிலிருக்கும் மனிதர்களே சத்திக்கிறார்களென்றும் அருத்தங்கொள்வதுபோல, சடமாகிய தேகம் செய்கையாதி செய்யுமா, செய்யாது

தேகத்திற்குள் ஆன்மாவாகிய நீயிருந்து சகலசெய்கையுஞ் செய்வீக்கிறுயென்பதே.

ஆகையால் நீயும் அப்படியே அறிவதுமல்லாமல், காரிய வுபாதிந்தன்மையும், உனக்கு உடம்பு அன்னியமென்பதையும், உனக்குள்ள முக்கியமும் லட்சியமும் சுத்தாசுத்தமும் சம்சர்க்க வாக்கியத்தினுடைய விட்டலக்கணையும் நா மனுக்கிரகித்தபடி உன் அனுபவத்தைச் சொல்லெண? சுவாமீ தேவரீர் திருவாய்மலர்ந்தருளியசிரவணத்தினல் அடியேனுக்குக் கேள்வி நன்ருகத் திடமாயிற்றெ்ன. இதுவே தொம்பதசிரவண மென்றறிக.

## உ. இனித் தோம்பதமனனம்.

இனித் தொம்பதமனன மெப்படியெனில்:—

முன்சொன்ன காரியவுபாதி எழும் ஆத்மாவுக்குத் தூலதேகம், சூக்குமதேகம், காரணதேகம் என மூன்றுதேகமாயிருக்கும். அதெப்படி,—

எழுபாதியுடன் கூடிநின்றவிடமே தூலதேகம். இதில் தேகம் இந்திரியம்-க, விஷயம்-க, ஆக இரண்டுபாதியும் நிற்க, மனுதி ச-ம் பிராணுதி வாயுக்கள் ரு-ம், ஆக ஐந்து வுபாதியுடன் கூடிநின்றவிடம் சூக்குமதேகம். இதில் மனுதி ச-உபாதியும் நிற்க, பிராணுதிவாயுக்களாகிய ஒருபாதியுடன் கூடி முன்சொன்ன உபாதி யாவுந்திரண்டு ஒன்ருயொடுங்கி மூலப்பிரகிருதியாய் நின்றவிடம் காரணதேகம். ஆகிய இந்த மூன்றுதேகமே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்றவத்தையாம். அஃதெப்படி,—

எழுபாதியோடுங் கூடிநின்ற தூலதேகமே சாக்கிரம். இதை நானென் றபிமானித்த ஆன்மாவுக்கு அபிமான நாமம் விசுவனென்றறி.

இனி ஐந்துபாதியுடன் கூடிநின்ற சூக்குமதேகமே சொப்பனம். இந்தச் சொப்பனத்தை நானென்றபிமானித்த ஆத்மாவுக்கு அபிமான நாமம் தைசதனென்றறி.

இனி பிராணவாயுவாகிய ஒருபாதியுடன் கூடி நின்ற மூலப்பிரகிருதியான காரணதேகமே சுழுத்தி இதை நானென்றபிமானித்த ஆத்மாவுக்கு அபிமானநாமம் பிராஞ்ஞனென்றறி.

இந்த மூன்றுதேகமான மூன்றவத்தையும் சீவனுடைய முக்கியார்த்தமாகையால். மூன்று தேகமான மூன்றவத்தையும் நீயல்ல; எப்படி நானல்ல.

இந்த எழுபாதியுடன் கூடிநின்ற தூலதேகம்சாக்கிரமென்றும், இந்தச் சாக்கிரம் சொப்பனத்தி லழிகின்றதென்றும், உன்னாலறியப் படுவதால், இது நீயல்ல; இதில் அபிமானநாமமும் உனக்கில்லை.

இனி ஐந்து உபாதியுடன்கூடிநின்ற சூக்குமதேகம் சொப்பனமென்றும், இந்தச்சொப்பனம் சுழுத்தியில் அழியுமென்றும், உன்னாலறியப்படுவதால், இதுவும் நீயல்ல, இதில் அபிமானநாமமும் உனக்கில்லை.

இனி பிராணவாயுவாகிய ஒருபாதியுடன் கூடிநின்ற மூலப்பிரகிருதியான காரணதேகம் சுழுத்தியென்றும், இந்தச் சுழுத்தி ஏதுந் தெரியவில்லை யென்றழிந்துபோனதும், உன்னாலறியப்படுவதால், இதுவும் நீ யல்ல; இதில் அபிமான நாமமும் உனக்கில்லை.

இந்த மூன்றவத்தையாகிய மூன்றுதேகமும் நானல்லவெனில், பின்னை நானானவன் யாரென.

இந்த மூன்றவத்தையின் விரிவொடுக்கங்களை யறிந்து சாட்சியாயிருக்கின்ற சைதன்யமான அறிவே ஆத்மசொரூபமென்கின்ற நீ.

இந்த ஆத்மசொரூபம் உபாதி, தேகம், அவத்தை முதலியதுரி செல்லாம்விட்டு மேலாக விளங்கிக்கொண்டிருப்பதால், முன்கொண்டிருந்த அபிமான நாமங்களைவிட்டுத் துரியமென்னும் நாமத்தைப் பொருந்திச் சுத்த தொம்பதார்த்தமாய் விளங்கிக்கொண் டிருக்கின்றது.

ஆகையால் இந்தத் துரியசொரூபமே நீ யென்னும் ஆத்மசொரூபம். இதை நீ யுன்மனத்திற்றறித்து அனுபவித்திரு.

இப்படி மனத்திற் றிடமாசத் தரிப்பதே தொம்பதமனனம்.

---

## ௩. இனித்தொம்பதநிதித்தியாசனம்யாது.

சுவானுபூதியிற் காட்சிப்படுத்துவதே!

சுவானுபூதியென்ப தென்ன?

உன் அனுபவத்திலே நீ கண்டிருந்த தெளிவை நீ சொல்வதே சுவானுபூதி.

ஆகையால் முன்சொன்ன தத்துவரூபம், உபாதித்தன்மை, அவத்தைநிலைகள், அபிமான நாமங்கள் முதலிய யாவும் கண்டு கழன்று துரிசற்று மேலான துரியசொரூப தரிசனமும் உனக்கு நாம் அனுக்கிரகித்தபடி சிரவணத்திற் புலப்படக்கேட்டுத் திடப்படத்தரித்திருப்பதைச் சொல்லென?

### சீடன்அனுபவங்கூறல்.

சுவாமீ! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய கருணையால் அடியேனுக்குப் பசுமரத்தில் ஆணி யறைந்தாற்போல தொம்பத லட்சணமனைத்தும் நன்றாயறிந்தேன்! அது எப்படியென?

எழுபாதியுடன் அத் தூலதேகத்திலிருந்து புருடன் விடையாதி போகங்களை அனுபவிப்பது சாக்கிரமென்றும், இதில் அபிமானி விசுவனென்றும், இந்தச்சாக்கிரம் சொப்பனத்தில் அழிந்ததென்றும்; இனி ஐந்து உபாதியுடன் கூடிச் சூக்குமதேகத்திலிருந்துவிஷயபோகங்களை யனுபவிப்பதாகப் புருடன் பாவிப்பது சொப்பனமென்றும், இதற் கபிமானி தைசதனென்றும், இந்தச் சொப்பனம் சுழுத்தியி லழிந்ததென்றும்; இனி ஒரு உபாதியான பிராணவாயுஒன்றுடன்கூடின காரண தேகத்திலிருந்து புருஷன் கருவி கரணங்களேதுமில்லாமல், எல்லா மொடுங்கிப்போய், ஏதுந்தெரியாமல் இருளாயிருந்ததைச் சுழுத்தியென்றும், இதற் கபிமானி பிராஞ்ஞனென்றும்; இந்த அறியாமையான சுழுத்தி அறிவினிடத்தில் அழிந்ததும், இந்த அறியாமையென்னுஞ் சுழுத்தி யிருளைக் கெடுத்து அறிவாய் நின்ற தொம்பத சுத்தார்த்தமான துரியத்தை என் வடிவெனவும் கண்டேன்.

இப்படிக்கண்ட சொரூபம் எப்படியிருந்த தெனில்? அறிவே வடிவாகியும்; ஞானப்பிரகாசமாகியும், தனக்கு முதல், நடு, இறுதி, பக்கமென்ப தில்லாமல்; சர்வ புவனசராசரமும் தன்னிடத்திற்றோன்றியும், விளங்கியும், ஒடுங்கியும், வருவதாய்; அதற்குச் சாட்சியுமாய் விளங்கிய அறிவாகிய என்வடிவைக் கரதலாமலகம்போலக் கண்டேன்.

தேவரீர் கருணை கடாக்ஷத்தினாலே சீவன்முத்தனானேன். முப்பொறிப் பகைகளான மனம், வாக்குக், காயத்தினல் வரப்பட்ட காமாதி எண்வகை விகாரங்களும் அறுத்தேன், நிர்விகாரியுமானேன், ஈடேறினேன் என்ற சீடனை நோக்கி.

வாராய் சீடனே? உனக்கு ஆத்மபோதம் நன்றாகவிளங்கப்பெற்றாய்,ஆகையால் தேகாந்தமளவும் இந்நிலையைப் பிரியாதே!என்றனர்.

சுவாமீ? தேவரீருடைய அனுக்கிரகத்தால் ஆச்மபோதம்பெற்றுச் சீவன்முத்தனானதுபோல, இதற்குமேலான பரபோதமும் பெற்றுப் பரமுத்தனாகும்படி தேவரீர் திருவாய்மலர்ந்தருளி யிரட்சிக்கவேண்டுமென்று சீடன் விண்ணப்பஞ்செய்யக் குருநாதன் அருளிச்செய்கின்றார்.

## ச. இனித்தற்பதசிரவணம்.

அஃதாவது முன்சொன்ன தொம்பதப் பொருளுக்கு எழுஉபாதியுண்டானதுபோலத் தற்பதப்பொருளுக்கு எழுஉபாதியுண்டாய் விளங்கும்; அஃதென்னவெனில்.

முன்சொன்ன தத்துவப்படி புருடன், காலபரம், வியோமம் என்று சொல்லப்பட்ட மூவகை அறிவுருவான சீவதுரியம் பரனுக்குடலாக எழு உபாதியாய் விளங்கும்.

### அதன் விவரம்.

சர்வஞ்ஞன்: சர்வகாரணன், சர்வேந்திரியாமி, சர்வேசுரன், சர்வசிருட்டி, சர்வதிதி, சர்வசங்காரம் என எழாம்.

இப்படி எழுவகைப்பட்ட உபாதிநாமம் ஆத்மதுரியந்துக்குஎப்படி யனுபவமாமெனில், சர்வேந்திரியங்களினுடைய செயலையுந் தானறிந்துகொண்டிருப்பதால் சர்வஞ்ஞனென்றும், சர்வேந்திரியங்களுமழிந்தவிடத்தும் தான் அழிவற்று நித்தியனாயிருப்பதால் சர்வகாரணனென்றும், சர்வேந்திரியங்களிலும் உள்ளீடாயிருப்பதால் சர்வேந்திரியாமியென்றும், சர்வேந்திரியங்களுக்கும் மேலான அதிபதியாயிருப்பதால் சர்வேசுரனென்றும், சர்வேந்திரிய சர்வ பிரபஞ்சங்களையும் தான் தோற்றுவிப்பதால் சர்வசிருட்டியென்றும், சர்வேந்திரியாதிகளையும் தான் பரிபாலனம் பண்ணுவதால் சர்வதிதியென்றும், சர்வேந்திரியாதிகளும் தனக்குள்ளே யொடுங்கலால் சர்வசங்காரனென்றும் நாமந்தரித்தது.

அப்படியானல் சகல துரிசுகளுமற்றச் சுத்தமான துரியத்துக்கு இவ்வேழு உபாதிநாமங்கள் வருவானேனெனில்? சர்வேந்திரிய சர்வ சராசரங்களும் தன்னிடத்திலே தோன்றி, விளங்கி ஒடுங்கலாலும், அவைகள் தனக்கன்னியமெனக்கண்டு சாட்சிமாத்திரமாயிருப்பதாலும், ஆத்மதுரியத்துக்கு அவ்வொருதூடணமுண்டாய் உபாதி நாமங்களைப்பொருந்தி பரனுக்கு உடலாச்சுதெனவறிக.

இப்படியான ஏழு உபாதியும் அதுவென்கின்ற பரசொரூபமல்ல. ஆனல் பரசொரூபமெதுவெனில்.

இந்த ஏழு உபாதியும் யாதொரு சைதன்யத்திலே கண்டு அளவிடப்படுகின்றதோ அதுவே பரசொரூபம்.

அந்தப் பரம் அவ் வுபாதியுடனே சம்பந்தித்தபோது முக்கியமென்றும், அவ் வுபாதியைத் தவிர்ந்துநின்றபோது லட்சியமென்றும், அவ் வுபாதியை நானென் றபிமானித்தபோது அசுத்தமென்றும், அவ் வுபாதியைக் கடந்து நின்றபோது சுத்தமென்றுஞ் சொல்லப்படும்.

இப்படி யிருந்தாலும், சீவபரனுக்கு உபாதி வேறுபட்டதுபோல சீவனுக்கும் பரனுக்கும் வேறுபாடின்றி ஒன்றாகவே யிருக்கும். இதற்கு வேதப்பிரமாணமுண்டோவெனில்? உண்டு.

அஃதாவது, விசிட்டவாக்கியம். விடாதலக்கணே. அதற்கு அர்த்தம் யாதெனில்:—ஒருசிவப்புக் குதிரையும் வெள்ளைப்பசுவும் கண்டாயா? என்று எதிரிட்ட ஒருவனைக் கேட்க, அவன் வெள்ளை நிற்கின்றது, சிவப்புப் போகின்றது என, அச்சத்தத்தால் வெள்ளைப்பசு நிற்கின்றது, சிவப்புக்குதிரை போகின்றது எனநிறமும் பசுவும் குதிரையும் ஒன்றாயிருப்பதுபோல, சீவனும் பரனும் ஒன்றெனவறிதலேயருத்தமாம்.

ஆகையால், காரண வுபாதித்தன்மையும், பரனுக்குண்டான முக்கியமும், சுத்தாசுத்தமும், பரனும், சீவனும், ஒன்றென்பது, விசிட்டவாக்கியத்தினுடைய விடாதலக்கணைக்கருத்தமும், உனக்குநாம் அனுக்கிரகித்தபிரகாரம் உன் அனுபவத்தைச் சொல்லென.

சுவாமீ? தேவரீர் திருவாய் மலர்ந்தருளியதால் சிரவணத்திலே நன்றாகத் திடமாயிற்று.

---

## ரு. இனித் தற்பதமனனம்.

அஃதாவது, முன்காரியவுபாதி யேழும் மூன்றவத்தை யானது போல, காரணவுபாதி யேழும்மூன்றவத்தையாயிருக்கும்.

அதெப்படி யெனில்? சர்வக்ஞன், சர்வகாரணன், சர்வேந்திரியாமி, சர்வேசுரன், சர்வசிருட்டி, சர்வதிதி, சர்வசங்காரன் என்னும் எழுபாதியுடன் சம்பந்தித்த புருடன் பரசாக்கிரமென விளங்கும். இந்தப் பரசாக்கிரத்தை நானென் றபிமானித்த பரனுக்கு அபிமான நாமம் விராட் டென்றறிக.

இனி பரசொப்பனமாவது? இந்த எழு உபாதியில் நான்கு உபாதியும் நிற்க சர்வசிருட்டி, சர்வதிதி, சர்வசங்காரம், என்ற மூன்று உபாதியுடன் சம்பந்தித்த காலபரம் பரசொப்பனமென விளங்கும். இந்தப் பரசொப்பனத்தை நானென்றபிமானித்த பரனுக்கு அபிமானநாமம் இரணியகர்ப்பனென் றறிக.

இனி பரசுழுத்தியாவது? இந்த மூன்று உபாதியில் இரண்டு உபாதியும் நிற்க, சர்வசங்காரமாகிய ஒரு உபாதியுடன் சம்பந்தித்து நின்ற வியோமம் பரசுழுத்தி யெனவிளங்கும். இந்தப்பரசுழுத்தியை நானென் றபிமானித்த பரனுக்கு அபிமான நாமம் அவ்வியாகிர்தனென் றறிக.

ஆகையால் இந்த மூன்றவத்தையும், மூன்றபிமானநாமமும், பரனுக்கு முக்கியமும், அசுத்தமுமாம். ஆகையால். இது பரசொரூபம் அல்ல.

இனி பரசொரூபமும் யாதெனில்? இந்த மூன்றவத்தையையுங் கண்டு கழன்று மேலாய்நின்று விளங்கிய சுத்த அறிவானதே, அதுவென்ற பரசொரூபம்.

அதெப்படியெனில்? ஏழு உபாதியுடன் சம்பந்தித்துவிளங்கிய புருடன் பரசாக்கிரம்! இந்தப்பரசாக்கிரம் பரசொப்பனத்தி லழியுமென்று உன்னாலறியப்படுவதால் பரசாக்கிரம் பரசொரூபமல்ல. இதில் அபிமானநாமமும் பரத்துக்கில்லை.

இனி மூன்று உபாதியுடன் சம்பந்தித்து விளங்கிய காலபரம் பரசொப்பனம். இந்தப் பரசொப்பனம் பரசுழுத்தியில் அழியுமென்று உன்னால் அறியப்படுவதால் பரசொப்பனம் பரசொரூப மல்ல இதில் அபிமானநாமமும் பரத்துக்கில்லையென்றறிக.

இனி ஒருபாதியுடன் சம்பந்தித்து விளங்கியவியோமம் பரசுழுத்தியென்றும், இது அறிவிறந்துநின்றது துரியாதீதமென்றும், உன்னாலறியப் படுவதால் இப் பரசுழுத்தியும் பரவுடலே தவிரப் பரரூப மல்ல. இதில் அபிமானநாமமும் பரத்துக்கில்லை யென்றறிக.

இவையாவும் பரரூபமல்லவாயின் இனிப் பரரூபந்தான் யாதெனில்?

இந்த மூன்றவத்தையுங் கண்டு கழன்று மேலாய்நின்று விளங்கிய லட்சியம் சுத்தமான பரதுரியமே அதுவென்கின்ற பரசொரூபம். இந்தப் பர சொரூபத்தை மனதில் திடப்படத் தரித்து அனுபவித்திரு.

## ௬. இனித் தற்பதநிதித்தியாசனம்.

அதாவது, முன்சொன்ன உபாதித்தன்மையும், அவத்தைநிலைக ளும், அபிமானநாமமும், இவையெல்லாங் கண்டு கழன்று துரிசற்று மேலான பரதுரிய தரிசனம் உனக்குச் சிரவணத்திலே கேள்விப் பட்டு மனதில் தரிப்பதாக நாம் உனக்கு அனுக்கிரகம்பண்ணினபடி, உன்மனதில் திடப்படத் தரித்ததைச் சொல்லென.

சுவாமீ! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியதால், புடம்வைத்த பொன்னுக்கு மாற்றேறியதுபோல அடியேனுக்கு மனதில் திடமாக த்தரிதததது.

அதாவது, பரவுபாதியேழும் சம்பந்தித்து விளங்கிய புருடன் பரசாக்கிரமென்றும், இந்தப் பரசாக்கிரத்யைு அபிமானித்த பானு க்கு அபிமானநாமம் விராட்டென்றும் கண்டேன். இந்தப் பரசாக்கி ரம் பரசொப்பனத்தில் அழிந்ததுங்கண்டேன். இதில் அபிமானநாம ம் பரத்துக்கில்லை யென்பதுங்கண்டேன்.

இனி மூன்று உபாதி சம்பந்தித்து விளங்கிய காலபரம் பரசொ ப்பனமென்றும், இந்தச் சொப்பனத்தை அபிமானித்த பரனுக்கு அபிமான நாமம் இரணியகர்ப்பனென்பதுங் கண்டேன். இந்தப் பர சொப்பனம் பரசுழுத்தியில் அழிந்ததுங்கண்டேன். இதில்அபிமான நாமம பரத்துக்கில்லையென்பதுங்கண்டேன்.

இனி ஒரு உபாதியுடன் சம்பந்தித்து விள்ங்கிய வியோமம் பர சுழுத்தி யென்றும், இந்தப் பரசுழுத்தியை அபிமானித்த பரனுக்கு அபிமானநாமம் அவ்வியாகிருத னென்றுங்கண்டேன். இந்தப் பரசு ழுத்தி பரதுரியத்தில் அழிந்ததுங்கண்டேன். இதில் அபிமான நா மம பரத்துக்கில்லையென்பதுங் கண்டேன்.

இனி இந்தப்பரசுழுத்தியான வியோமத்தை யிதுவெனக் கண்டேன். கண்டு மேலாய்நின்று சர்வமுந் தன்மயமாய்த் தனக் கன்னியமில்லாமல் எல்லாந் தானாகவிளங்கி போக்குவரவின்றி உள்ளும்புறம்புந் தானாகிநின்ற பரதுரியமான பரரூபத்தை அடியேன் உள்ளங்கை ரத்நம்போலக் கண்டேன். சுவாமிகளினது கிருபையால் பரமுத்தனானேன் என, ஆகையால் உனக்குப் பரபோதம் நன்றாகவிளங்கிற்றென்றறி.

சுவாமீ? தொம்பத சுத்தார்த்தமான ஜீவதுரியத்தையும் தற்பத சுத்தார்த்தமான பர துரியத்தையும், அறிந்தேன். இனி யிதற்குமேலான சிவதுரியத்தையும் தரிசிப்பித்துச் சிவானுபவப்பேறு பெறும்படி கிருபை செய்யவேண்டு மென்று சீடன் விண்ணப்பஞ் செய்ய குருநாதன் அருளிச்செய்கின்றார்.

---

## எ.இனி அசிபதசிரவணம்.

அஃதாவது, முன்சொன்ன தற்பதசுத்தமான பரன் பரிபூரணமாகவும், எல்லாந்தானாகவும் விளங்கினாலும், அந்தப் பரனுக்கு ஒரு வாசனாதோஷம் உண்டு, அது யாதெனில்.

எல்லாந் தானாக விளங்குகின்றோ மென்னும் கொள்கையினாலும், ஆன்ம் என்றசிவத்துக்குத்தான் மூன்றுதேகமாய் அவத்தைக் குறிகளைக்கொண்டு நிற்கையாலும், பரனுக்கு இந்த வாசனாதோஷம் உண்டென்றறி.

ஆகையால் இந்தத் தற்பதசுத்தமான பரம்பொருளானது அசிபதப் பொருளான ஆன்ம் என்ற சிவத்துக்கு மூன்றுதேகமாய், மூன்றவத்தையாய் விளங்கும்.

அதெப்படியெனில்? பரம், விசுவக்கிராசம், உபசாந்தம் என மூன்று விதமாய் விளங்கும், ஆகையால் இந்த மூன்றும் சிவசொரூபமல்ல வென்றறிக.

---

## அ. இனி அசிபதமனனம்.

அதாவது, முன்சொன்ன தொம்பதத்துக்கும், தற்பதத்துக்கும் மூன்றவத்தைகள் உண்டானதுபோல, அசிபதத்துக்கும் மூன்றவத்தைகள் உண்டாய் விளங்கும்.

அதெப்படியெனில்? காண்பானும், காட்சிப்படுகின்ற சர்வசராசரப் பிரபஞ்சமும், தானேயாகிப் பரிபூரணித்து விளங்கிய பரனே சிவசக்கிரம். இந்தச் சிவசாக்கிரத்தைத் தானென்று அபிமானித்து விளங்கிய சிவத்துக்கு அபிமானநாமம் சிற்சொலிதை யென்றறிக.

இனிச் சிவசொப்பனம் யாதெனில், முன்சொன்ன சிவசாக்கிரமானபரன் சத்த, பரிச ரூப, ரச, கந்தமென்னும் ஐவகைப்பொருளால் சமைவதான சகல சகத்தையும் விழுங்கித்தானே சகரூபமாய்ச் சூரியனும் பிரபையும்போலவும், மணியும் ஒளியும் போலவும், மண்ணும் இசையும்போலவும், அன்னியமறநின்ற விசுவக்கிராசமே சிவசொப்பனம்; இந்தச் சிவயொப்பனத்தைத் தானென்று அபிமானித்த சிவத்துக்கு அபிமானநாமம் பிரசாபத்தியனென வறிக:

இனிச் சிவசுழுத்தி அதாவது, இந்தப்பரன் எல்லாம் தானாய் விளங்குகிறோ மென்பதையுமறந்து, தன்னையுமறந்து, தன்னையுமிறந்து பரமாதீதமாய்ச் சாந்தப்படுவதான உபசாந்தமே சிவசுழுத்தி, இந்தச் சிவசுழுத்தியை நானென்றபிமானித்த சிவத்துக்கு அபிமானநாமம் பொற்புவிசாந்தனென்றறிக.

ஆகையால் இந்த மூன்றவத்தையும் சிவரூபமல்ல; ஆனல் சிவரூபம் யாதெனில்; சர்வபரிபூரணமான பரம் சிவசாக்கிர மென்றும், இந்தச் சிவசாக்கிரம் சிவசொப்பனத்தி லழியுமென்றும், உன்னல் அறியப்படுவதால் சிவசாக்கிரம் சிவரூபமல்ல. இதில் அபிமான நாமமும் சிவத்துக்கில்லையென்றறிக.

இனி பரன் விசுவக்கிராசம் பண்ணியதே சிவசொப்பன மென்றும், இந்தச் சிவசொப்பனம் சிவசுழுத்தியி லழியுமென்றும், உன்னலறியப்படுவதால், சிவசொப்பனமும் சிவரூபமுமல்ல. இதில் அபிமானநாமமும் சிவத்துக்கில்லை யென்றறிக,

இனி உபசாந்தம் சிவசுழுத்தியென்றும், இந்தச் சிவசுழுத்தி சிவதுரியத்தி லழியுமென்றும் நீ அறிவதால் சிவசுழுத்தியும் சிவரூபமல்ல, இதில் அபிமானநாமமும் சிவத்துக்கில்லையென்பதறிக.

இவைகளும் சிவரூபமல்லவெனில் இனிச்சிவரூபந்தான் யாது;

இந்த மூன்றவத்தையுங் கண்டு கழன்று மேலான அறிவென்னும் சிவதுரியமே சுயம்பிரகாசமான குருபாதமென்றே சிவரூபம்.

ஆகையால், இந்த அசிபதத்துக்கு வேதப் பிரமாண வாக்கியம் அகண்ட வாக்கியமென்றும் சோயம் தேவதத்தனென்பதுமே.

இதற்கருத்தம் யாது? தேவதத்தனென்னும் நாமமுடைய ஒருவன் ஒருகாலத்தில், ஒருதேயத்தில், ஒருபட்டணத்தில், கிரகஸ்தனய்த் தனது கிரியை செய்துகொண்டிருந்த விடத்திலும், பின்பு ஒருகாலத்தில், ஒருதேயத்தில், ஒருபட்டணத்தில், சதுரங்கபலமுஞ் சேவிக்க, அதிக பிரதாபத்துடன் இராசாவாயிருந்த விடத்திலும், பின்பு ஒருகாலத்தில், ஒருதேயத்தில், ஒருபட்டணத்தில், சர்வசங்கபரித்தியாகம் பண்ணிக்கொண்டு, தண்டு கமண்டலத்துடன், சந்நியாசியா யிருந்தவிடத்திலும், அங்கங்கேகண்ட அடையாளங்களைப்

பார்த்தறியும்போது, முன் கிரகஸ்தனுயிருந்தவனும், பின் இராசாவாயிருந்தவனும், பின்புசந்நியாசியாயிருந்தவனும், ஒருதேவதத்தனே போல், தற்பிரகாசமாய் விளங்கிய பிரமம், அசித்துருவமான காரிய உபாதியைப் பொருந்தியவிடத்துக் கிஞ்சிக்ஞனுகியும், உபாதிநாமத்தை அபிமானித்துக்கொண்டு சீவனுகியும், அதற்குமேற்பட்டுச் சீவதுரியமாகியும், பின்பு சித்துருவமான காரண உபாதியைப் பொருந்தியவிடத்துச் சர்வஞ்ஞனுகி, உபாதிநாமத்தை அபிமானித்துக்கொண்டு, பரனுகியும், அதற்கு மேற்பட்டுப் பரதுரியமாகியும், பின்பு இந்தப்பரனே அவத்தைகளாகப் பொருந்திய விடத்து, அவத்தை நாமத்தை யபிமானித்துக்கொண்டு சிவமாகியும், அதற்கு மேற்பட்டுச் சிவதுரியமாகியும், சுயம்பிரகாசமான குருபாதமாகியும் விளங்காநின்ற பிரமம் ஒன்றே.

எப்படி? முன்சொன்ன தேவதத்தனுக்கு மூன்றுகாலமும், மூன்று தேயமும், மூன்று பிரபஞ்சமும் விட்டுப் போனவிடத்து ஒரு தேவதத்தனே யானது போலவே, மூன்றுஉபாதியும், ஒன்பது அவத்தையும், ஒன்பது அபிமானநாமமும், தீர்ந்தவிடத்தில் சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்னு முத்துரியமுமாய் அந்த முத்துரியமென்னப் படுவதுமிறந்து, சுத்த அறிவாகாரமான பிரமமேயான சிவானுபவத்தைக்கண்டு மனதில் திடப்படத் தரித்திரு.

---

## கூ. இனி அசிபதநித்தியாசனம்.

அதாவது, உனக்கு நாம்சொன்னபடி, அசிபதத்தினுடைய அவத்தைநிலைகளும், அபிமானநாமக்குறிகளும், அகண்டவாக்கியத்தன்மையும், விட்டுவிடாத லக்கணையும், கண்டு கழன்று மேலான குருபாதமான சிவதுரியமென்னும் சுயம்பிரகாச தரிசனமும், சீவ துரியமென்னும்சீவனும், பரதுரியமென்னும்பரனும், சிவதுரியமென்னும்

சிவமும், ஒருசொரூபமேயென்று அகண்டவாக்கியத்தினல் தேவ தத்தனைப்போலக்கண்ட திடமும், நீ சிரவணத்திற்கேட்டு மனதிற் றரித்ததைச் சொல்லென. சீடன் விண்ணப்பஞ் செய்கின்றான்.

சர்வபரிபூரணமாய், காண்பானும் காக்ஷியும் தானாய்நின்ற பர சொரூபத்தைச் சிவசாக்கிரமென்றும், இந்தச்சாக்கிரத்தை நானென் றபிமானித்த சிவத்துக்கு அபிமானநாமம் சிற்சொலிதை யென்றுங் கண்டேன். இந்தச்சிவசாக்கிரம் சிவசொப்பனத்தி லழிந்ததுங் கண் டேன்.

இனி முன்சொன்ன சர்வப்ரிபூரணமான விசுவமென்னும் சகத் தைவிழுங்கித் தான் சகசொரூபமாய்நின்ற விசுவக்கிராசத்தைச் சிவ சொப்பனமென்றும், இந்தச்சிவசொப்பனத்தை நானென் றபிமானி த்த சிவத்துக்கு அபிமானநாமம் பிரசாபத்தியனென்றுங்கண்டேன் இந்தச் சிவசொப்பனம் சிவசுழுத்தியில் அழிந்ததுங்கண்டேன்.

இனி சகலலோகமும் சகலசராசரமும் தன்வடிவேயெனக்கண் டுவிளங்கியபரன், எல்லாம் தன்மயமே யென்பதையும்மறந்து, தன் னையும்மறந்து, தன்னையுமிறந்து, சாந்தமான உபசாந்தத்தைச் சிவ சுழுத்தியென்றும், இந்தச் சிவசுழுத்தியைத் தானென் றபிமானித்த சிவத்துக்கு அபிமானநாமம் பொற்புவிசாந்தனென்றுங் கண்டேன். இந்தச்சிவசுழுத்தி சிவதுரியத்தில் அழிந்ததுங்கண்டேன்.

இனி இந்த மூன்றவத்தையும் கண்டு கழன்று மேலாய் நின்று தற்பிரகாசமாய் விளங்கிய சிவதுரியமான குருசொரூபத்தையுங்கண் டேன். சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம், என்னும் முத்துரியமு மாய், இந்தமூன்றுதுரியமுமிறந்து, ஏகவடிவான பிரமசொரூபத்தை யுங்கண்டேன். சுவாமிகளினது பெருங்கருணையாலே சிவானுபவப் பேறும்பெற்றுச் சிவரூபமானேன் என.

இனி நீ பெற்ற தற்பிரகாசமான குருசொரூபம் எப்படியிருந்த தெனில்?

நிராமயமாய், நிராதாரமாய், சர்வமும் பிரமம் பிரகாசமாய் விளங்குகின்றது என,

ஆகையால் இதுவே சத்தியம், ஞானம்; அநந்தம், ஆனந்தம்என், றும், சகசீவபரம் என்றும், விளங்காநின்ற பொருளும், இதுவேதொம்பதமும், தொம்பதார்த்தமும், தற்பதமும், தற்பதார்த்தமும், அசிபதமும், அசிபதார்த்தமும், உபாதிபேதமும், அவத்தை நிலைகளும், அபிமானிகளும், இதற்குமேற்பட்ட மூன்றுதுரியமுமாய் விளங்கிய பொருளும், தற்பிரகாசமான பிரமமே, சகலவேதாகம புராண சாத்திரங்களும், சட்சமய விகற்பங்களும், அவைகளிற் பேதமாயிருந்த பொருளும், இதுவே; இப்படியேயிரு.

நாமங்களினுற் குறிக்கப்படாமல், தற்பிரகாசமாய் விளங்கியது எப்படியிருந்தது சொல்லென.

இந்தச் சொரூபத்தை அடியேன் மனத்தால் எண்ணவும், வாக்காற் சொல்லவும், இடமில்லாமலிருக்கின்றது. ஆகையால், இதுவே மவுனமுத்திரை யென்பது.

அதெப்படியெனில்? மனமும் மனதினு லெண்ணப் படுவதும், வாக்கும் வாக்கினுற்சொல்லப்படுவதும், காயமும் காயத்தினுற் செய்யப்படுவதும், சுத்த அறிவான பிரமமே.

ஆகையால் மனம், வாக்கு, காயம் மூன்றுமிறந்து, வாக்குமனுதீதமாய், தற்பிரகாசமான சொரூபமானதேமவுனமுத்திரை, இதுவே மவுனமுத்திரையென்று கண்ட கருத்தையும்விட்டுச் சும்மா யிருந்தபடியே யிருப்பதே மோட்சம்; இதுவே நிச்சயார்த்தம். இதுவே வேதாந்தத்தினுண்மை தெளிந்த பிரமதரிசனம்.

## ஞானக்கட்டளை

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தத்வாமிர்தக்கட்டளை.

## அத்வைதசுத்தவேதாந்ததரிசனம்.

### கலிநிலைத்துறை.

அண்ணல்கூறிடுமரியவாரணக்கடலெழுமவ்
வண்ணமின்றியவாசாமகோசரவமிர்தைக்
கண்ணதாயிடக்கரதலமணியெனக்காட்டும்
வண்ணமுள்ளமாவாக்கியமைந்ததற்குப்புகல்வான். (௧)

வன்னநாலதாய்வண்பதமூன்றஃதுடைத்தாய்த்
தன்னதாம்வடிவதுமிகத்தானுநுண்ணியதாய்
முன்னமாமறைமுழுதுமோதியுமுடியாச்சீர்
மன்னுமாப்பொருளுடைமைமாவாக்கியப்பெயராய். (௨)

வடிவுநுண்மையுமாப்பொருளுடைமையுமலர்வு
முடிவுமாயிருமையுமறமொழிதருவிரகும்
படியிலாதெழுபழமையுமப்பட்டிபுதுமை
யுடையவாகியவுயர்குறியாறவையுடைத்தாய். (௩)

இறந்தகேள்வியாயிறந்தநற்றரிசனமஃதா
யிறந்தவீரமாயெல்லையிலானந்தஞானமதாய்ச்
சிறந்தகாலதேசந்திசையிறந்திடத்திகழ்ந்து
நிறைந்தவெட்டியல்புடைத்துநீள்வாக்கியமினங்கேள். (௪)

கலிவிருத்தம்.

சித்தமொடுசுத்தநிமலந்திகழ்பரத்தை
யுய்த்தகாமுத்தமணியத்தினிகரொப்ப
மெய்த்திடவெவர்க்குமுணரத்திகழுவிக்குந்
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்யம். (ஞ)

---

ஆதலால் மஹாவாக்யஞ் சொல்லப்பட்ட ஞானமே ஞானம் அதுவல்லாமற் சொல்லப்பட்ட ஞானங்களெல்லாம் அறியுமிடத்துக் குஞ் ஞானமேயாம். ஆண்படியினாலே சுத்தவேதாந்தஞ் சொல்லப் பட்ட பரிசினை ஆசாரியர் சிஷ்யனுக்கு அனுக்கிரகம் பண்ணுகிறார்.

அஃதெப்படியென்னில்; இருக்கு யசுர்சாமம் அதர்வணம் என் கிற நான்கு வேதங்களும், இரண்டு பிரகாரமா யிருக்கும். அவை எவை யென்னில், அற்பசுருதி வாக்ய மென்றும்; பிரபலசுருதிவாக்ய மென்றுமாம். இவற்றில், அற்பசுருதி வாக்யம் கர்மகாண்டத்தைச் சொல்லும். பிரபலசுருதிவாக்யம் அத்யாத்மத்தைச்சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிஷத்தாயிருக்கும். இதுநான்கு வாக்கியங்களைப் பிரதிபாதிக்கும். அவை யெவையென்னில் "பிரக்ஞானம் பிரமம், அகம்பிரமாஸ்மி, தத்வமசி, அயமாத்மா பிரமம்" என்பனவாம். இந்த நான்கு வாக்யங்களும் சீவ பர ஐக்கியத்தைச்சொல்லும். இந்த நான்கு வாக்யங்களிலும், தத்வமசிவாக்கியம் மஹாவாக்கிய மென்று சொல்லப்படும். அஃதெப்படியென்னில், நான்கு வாக்யத்தி னர்த்த மும், இந்தவாக்யத்திலிருக்கையினாலும், அந்வயபதம் இதனிடத்தே யிருக்கையினாலும், அவாங் மனோகோசரமாயிருக்கிற வஸ்துவைக்கர தலாமலகம் போலக் காட்டுகையினாலும் இது மகாவாக்ய மென்று சொல்லப்பட்டது. இந்த மகாவாக்கியந்தான். அவாங் மனோ கோசர மா யிருக்கிற வஸ்துவை நான்கு வர்ணத்தாலும், மூன்று பதத்தா

லும், மூன்று லட்சணத்தாலுஞ் சொல்லிற்று. ஆறுகுறியும், எட்டியல்புமா யிருக்குமென்றுஞ் சொல்லிற்று, அவை எவை யென்னில் நான்கு வர்ணமாவன:—தத் - துவம் - அ - சி - இவைகளாம். மூன்று பதமாவன:—தத்பதம் - துவம்பதம் - அசிபதம் - இவைகளாம். மூன்று லட்சணமாவன:— சீவ - பர - ஐக்கியம் - இவைகளாம், ஆறு குறியாவன:— வடிவு, நுண்மை, மாப்பொருளுடமை, நிறைவு. இரண்டற விளங்கிய முடிவு, என்றும் பழமை, என்றும் புதுமையாம். எட்டியல்பாவன:— கேள்வியிறந்ததாதல், தரிசனமிறந்ததாதல், வீர மிறந்ததாதல், எல்லையிலாத ஆனந்த முடையதாதல், எல்லையிலாத ஞானமுடையதாதல், கால மிறந்ததாதல், தேசமிறந்த தாதல், திசையிறந்ததாதலாம். இப்படி மகா வாக்கியத்தாற் சொல்லப்பட்ட வஸ்து எப்படி விளங்குமென்னில், ஆசாரியர் திருவருளினாலே சொல்லுகிற சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்னு மூன்று வகையினாலே விளங்கும். இந்தமூன்றுவகையும் விசாரிக்குமிடத்து ஸ்தூல சிரவணாதி மூன்றென்றும் சூட்சுமசிரவணாதி மூன்றென்றும், இரண்டுவிதமா யிருக்கும்.

---

## சிரவணம்.

### ஸ்தூலசிரவணாதி.

இவற்றில், ஸ்தூலசிரவணாதி மூன்றுவன, சொல்லப்பட்டசாஸ்திரங்களை இது விதுவென்று வினவிப்பகுத்தறிந்து கேள்விப் படுகிறது சிரவணம். அப்படிக்கேள்விப்படாநின்ற சப்தார்த்தங்களெல்லா மனதிலே தரிக்கத் தெளிந்து விளங்குகிறது. மனனம். சிரவணத்தினாலே கேள்விப்பட்டு மனனத்தினாலே தெளிந்து விளங்கியிருக்கப்பட்ட யாதொரு அறிவுண்டோ, அந்த அறிவு தானாய் நிற்கப்பட்ட நிலைநித்தியாசனமாம்.

## சூட்சுமசிரவணதி.

இனி சூட்சும சிரவணதி மூன்றென்ற தெப்படி யென்னில்; சிரவணமாவது மகா வாக்யஞ் சொல்லப்பட்ட அதுவென்னும் தத்ப சத்துக்கர்த்தம் பரம்; நீ யென்னுந் துவம்பதத்துக் கர்த்தம் சிவன்; ஆனுயென்னும் அசி பதத்துக் கர்த்தம் இரண்டினுடைய ஐக்கியமா யுள்ள பொருளாம். கிரியாபதத்துடனே கூட்டிப்போதிக்கிற முறை மை எப்படியென்னில், அது நீயாகின்றாயென்றும், நீயது வாகின்றா யென்றும் போதிக்கப்படுதலாம். இந்தவாக்கியம் அந்வயித்துப் போ திப்பானே னென்னில், அதுவென்கின்ற தத்பதத்துக்கு உபாதி பரோட்ச மென்கிற காரண உபாதி. நீயென்கின்ற துவம்பதத்துக்கு உபாதி அபரோட்சமென்கின்ற காரிய உபாதி. இந்த அபரோட்ச மென்கின்ற காரியஉபாதி முந்திவருகையினாலே துவந்தசியென்று போதிக்க வேண்டிற்று. துவந்தசி வாக்கியம் போதிக்கிறமுறைமை ஜகசிவபரத்தை விளக்கும். அஃதெப்படியென்னில், நீ யென்கின்ற துவம்பதத்துக்கு உபாதியேழு. அது வென்கின்ற தத்பதத்துக்கு உபாதி யேழு. இந்த உபாதியேழும் முக்கியம். இந்த உபாதியேழுந் தீர்ந்தது லட்சியம். உபாதியை நானென்றது அசுத்தம். உபாதியை நீங்கினது சுத்தம். இந்த இரண்டு பதங்களுக்கும் லட்சியமான சத் தார்த்தங்களை ஆனுயென்னும் அசிபதத்திலே ஏகமாய்க்கண்டு விள க்குகிறதே சிரவணம். மனனமாவது துவம்பதத்திற் காரிய உபாதி யேழும் அவஸ்தை மூன்றும் தற்பதத்திற் காரணவுபாதியேழும் அவ ஸ்தை மூன்றும் தரிசித்து நீக்கி, சீவனும் பரனும் அசிபதத்திலே ஐக்கியப் படக்கண்டு, ஏகமான பொருளை மனதிலே தரித்திருக்க விளங்குகிறது மனனம். நிதித்யாசனமாவது துவம்பத முக்கியமான அவஸ்தை மூன்றையும் நீங்கிலட்சியமாய் விளங்குகிற சீவனும், தத் பத முக்யமான அவஸ்தை மூன்றையும் நீங்கிச் சுத்தமாய் விளங்கு

கிற பரனும், அசிபதத்திலே ஐக்கியப்படக்கண்டு, ஏகமாய் விளங்குகிற ஸ்வரூபத்தை ஆசாரியருடைய திருவருளின் சிரவணத்தினாலே கேள்விப்பட்டு, மனனத்தினாலே தரித்து விளங்குகிற தத்ஸ்வரூபந் தானாய் நிற்கப்பட்ட நிலை நிதித்யாசனம்.

---

## துவம்பத முக்கிய சீவவுபாதி.

இப்பால், முன்சொல்லப்பட்ட சூட்சும சிரவணாதி என்கிற மூன்றையும் விரித்து விளங்க வருளிச்செய்கிறார். துவம்பத முக்கிய சீவஉபாதிசொல்லுகிறோம். அஃதெதப்படியென்னில், வேதாந்ததத்துவம் உஅ-ஆம், அவை யெவையெனில்:—ஞானேந்திரியமான சுரோத்ராதி-ரு. இவற்றின் விஷயமான சப்தாதி-ரு. கன் மேந்திரியமான வாக்காதி-ரு. இவற்றின் விஷயமான வசனாதி-ரு. அந்தக்கரணம்-ச. புருஷன், காலபரம், வியோமம், பரம் ச. ஆகத்தத்துவம்-உஅ. இவற்றில் புருஷன், காலபரம், வியோமம், பரம் இந்நான்கும் நிற்க நின்ற தத்துவம்-உச. பிராணவாயு-க. ஆகத்தத்துவம்-உரு. இவை எழுபாதியாம். அவையெவையெனில்; தேகம், இந்திரியம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம், பிராணன் ஆக-எ. இவற்றில் தேகம் நானேயெனில் தேகம் நீயன்று. அஃதெப்படி நானன்றெனில், என்னுடைய தேகமென்று உன்னால் அறியப்படுகையினாலும், தேகம் பஞ்சபூதத்தின் கூறாகையாலும், தேகம் உனக்கு அந்நியமாகையினால் தேகம் நீயன்று. இந்திரியம்நானேயெனில் இந்திரியமும் நீயன்று. அஃதெப்படி நானன்றென்னில், என் கண் நன்றாய் விளங்குகிறதென்றும், என் கண் நன்றாய் விளங்குகிறதில்லை யென்றும், என் காது நன்றாய்க் கேட்கிறதென்றும், என்காது நன்றாய்க் கேட்கிறதில்லை யென்றுஞ் சொல்லப்படுகையினாலும், இந்திரியம் ஒன்றறிந்து ஒன்று அறியாதபடியானாலும், என்னுடைய இந்திரியமென்று உன்னால்

அறியப் படுகையினாலும், இந்திரியம் பஞ்சபூதத்தின் கூறாகையினா லும், இந்திரியம் உனக்கு அந்நியமாகையினால் இந்திரியமும் நீயன்று. அந்தக்கரணங்களில் மனந்தான் நானேயெனில் மனமும் நீ யன்று, அஃதெப்படி நானன்றெனில், என்னுடைய மனமென் றன்னாலறி யப் படுகையினாலும், மனம் வாயுவின் கூறாகையினாலும் மனமும் நீ யன்று. புத்திதான் நானேயென்னில் புத்தியும் நீயன்று. அஃதெ ப்படி நானன்றென்னில், என்னுடைய புத்தியென் றன்ன லறியப் படுகையினாலும், புத்தி அக்கினியின் கூறாகையினாலும் புத்தியும் நீ யன்று. சித்தந்தான் நானேயென்னில் சித்தமும் நீ யன்று. அஃ தெப்படி நானன்றென்னில், என்னுடைய சித்தமென் றன்னாலறிய ப்படுகையினாலும், சித்தம் அப்புவின் கூறாகையாலும், சித்தமும் நீ யன்று. அகங்காரந்தான்நானேயென்னில் அகங்காரமும் நீயன்று. அஃதெப்படி நானன்றென்னில், என்னுடைய அகங்காரமென் றன் னாலறியப்படுகையினாலும், அகங்காரம் பிருதிவியின் கூறாகையாலும் அகங்காரமும் நீ யன்று. அந்தக்கரணந்தான். நானேயென்னில் அந் தக்கரணமும் நீ யன்று. அஃதெப்படி நானன்றென்னில், ஸங்கல்ப நிச்சய வபிமான சிந்தனையாதி வடிவாகையால் அந்தக்கரணமும் நீ யன்று. பிராணன்றான் நானேயென்னில் பிராணனும் நீ யன்று அஃதெப்படி நானன்றென்னில், என்னுடைய பிராணனென் றன் னாலறியப்படுகையினாலும் பிராணன் பிருதிவியின்கூறாகையினாலும், சுழுப்தியிற் † சைதன்னியமில்லாமையினாலும் பிராணனும்நீயன்று,

---

மோகவதைப்பரணி.

† பிராணனுமல்ல துஞ்சினுணர்வின்மையாலஃதுணரும்புலன் களொழிவால், பிராணனிதென்னின் மன்னையொழியாதசேனைநகர் சூழ்வலஞ்செய்பொழுதே.

இவையெல்லாம் நானன்றேல் நான் யாரோவென்னில், தசம திருஷ்டாந்தமிட்ட னுக்கிரகம் பண்ணுகிறார்.

அஃதெப்படி யென்னில், பத்துபேர்கூடி ஓரூர் வழிப்போகையில் ஆற்றிலே அமிழ்ந்திக் கரையேறி யெண்ணிப் பார்க்கும்போது ஒன்பதுபேரை யெண்ணித் தன்னையெண்ணாமல் ஒருவனைத் காணோமென்று மயங்குமிடத்தில், அங்கிபனுகிய வொருபுருஷன் வந்து பத்தாவானைக் காட்டிக்கொடுத்தாற்போல, ஆசாரியரெழுந்தருளி இந்த எழுபாதியையுங் கண்டுகொண்டிருக்கிற யாதொரு சைதன்னிய வறிவுண்டோ, அந்தச் சைதன்னிய வறிவுதான்காண் நீயென்றனுக்கிரகம் பண்ணினர். இந்தச் சைதன்னிய வறிவு காரிய வுபாதியுடனே கூடிநின்றபோது முக்யமென்றும், உபாதியைவிட்டு நீங்கினபோது லட்சியயென்றும், உபாதியை நானென்றபோது அசுத்தமென்றும், உபாதியை நீங்கினபோது சுத்தமென்றுஞ் சொல்லப்பட்டது. இதற்கு வாக்கியம் சம்சர்க்க வாக்யமாம். அஃதெதுவென்னில், "மஞ்சாக்குரோசந்தி, கங்காயாங்கோஷப் பிரதிவசதி" என்பனவாம். மஞ்சங்கூப்பிட்டதென்றும், கங்கைக்கண்ணிடைச்சேரி யுள்ளதென்றுஞ் சொல்லுமிடத்து மஞ்சமானது மரம். மரமானது கூப்பிடுமா, மஞ்சத்தில் ஒருபுருஷனிருந்து கூப்பிட்டானென்று கொள்ளல் வேண்டிற்று. கங்கையான ஜலம். ஜலத்திலே இடைச்சேரி யிருக்கமாட்டாது; கங்கைக் கரையிலே இடைச்சேரியிருக்கின்றதென்று கொள்ளவேண்டிற்று. இப்படிப்போல, எழு உபாதிக்குஞ் சீவன் சாட்சியாயிருக்கின்றானென்று கண்டுகொள்க. இது, விட்டலக்ஷணை.

---

## தத்பதமுக்யபரவுபாதி.

தத்பதமுக்ய பரவுபாதி சொல்லுகிறோம். அஃதெப்படியென்னில், த்வம்பத லக்ஷியார்த்தமான துரியம் பரனுக்கு உடலாகையா

லே, இதனிடத்திலே ஸர்வக்ஞத்வாதி உபாதியுண்டாயிற்று அஃதெதுவென்னில், ஸர்வக்ஞன் - சர்வகாரணன்-ஸர்வாந்திரியாமி-ஸர்வேசுவரன்-ஸர்வசிருஷ்டி - ஸர்வஸ்திதி-ஸர்வ ஸம்ஹாரன் என்பனவாம். அவற்றுள், ஸர்வக்ஞனென்பானேனென்னில், இந்திரியங்களெல்லாம் ஒன்றறிந்தவொன்றறியாதபடியினாலும், தான் ஸர்வத்தையும் அறிகையினாலும், ஸர்வஞ்ஞனென்கிற நாமமுண்டாயிற்று. ஸர்வகாரணனென்பானேனென்னில், இந்திரியங்களெல்லா மழிந்துந் தானழியாமல் நிற்கையினாலே ஸர்வகாரணனென்கிற நாமமுண்டாயிற்று. ஸர்வாந்திரியாமி யென்பானேனென்னில், இந்திரியங்களுக்கெல்லா முள்ளீடாய்நின் றறிகையினாலே ஸர்வாந்திரியாமி யென்கிற நாமமுண்டாயிற்று. ஸர்வேசுவரனென்பானேனென்னில், இந்திரியங்களுக்கெல்லா மேலாய்நின்று விளங்குகையினாலே ஸர்வேசுவரனென்கிற நாமமுண்டாயிற்று. ஸர்வசிருஷ்டியென்பானேனென்னில், இந்திரியங்களெல்லாந் தனக்குள்ளே தோன்றுகையினாலே சர்வசிருஷ்டியென்கிற நாமமுண்டாயிற்று. சர்வ ஸ்திதி யென்பானேனென்னில், இந்திரியங்களையெல்லாந் தானே ரட்சிக்கையினாலே சர்வ ஸ்திதியென்கிற நாமமுண்டாயிற்று. சர்வ ஸம்ஹாரனென்பானேனென்னில், இந்திரியங்களெல்லாந் தனக்குள்ளே யடங்குகையினாலே சர்வ சம்ஹாரனென்கிற நாமமுண்டாயிற்று. இந்த எழு உபாதியும் ஸ்வரூப மன்று. இனி எதுதான் ஸ்வரூபமென்னில், இந்த எழு உபாதிகளையும் யாதொருவசைதன்னியத்தினாலே அளவிடப்பட்டதோ, அதுவே ஸ்வரூபம். இந்த ஸ்வரூபம் உபாதியுடனே சம்பந்தித்து நின்றபோது முக்யமென்றும், உபாதியைப் பிரிந்தபோது லட்சியமென்றும், உபாதியை நானென்றபோது அசுத்தமென்றும், உபாதிக்குச் சாட்சியானபோது சுத்தமென்றுஞ் சொல்லப்பட்டது. இதற்கு வாக்கியம் விசிஷ்டவாக்யமாம். அஃதெதுவென்னில், "சோணஸ்திஷ்டதி, சுவேதோதாவதி" என்பனவாம். ஒருசிவப்புக் குதிரையையும் வெள்ளைப் பசுவையுங் கண்டாயோ வென்பார்க்குச் சிவ

ப்பு நிற்கின்றது, வெள்ளை போகிறதென்னுமிடத்துச் சிவப்புவர்ணந் தனியே நில்லாது, வெள்ளைவர்ணந் தனியேபோகாது, ஆகையால் சிவப்புக்குதிரை நிற்கின்றதென்றும், வெள்ளைப் பசு போகின்றதென்றுங் கொள்ளல் வேண்டிற்று. இப்படிப்போல. சர்வக்ஞத்வாதிஉபாதியுடையவனாய் அதற்குச் சாட்சியாயிருக்கிறான் பரன். இது விடாத லட்சணை.

---

## அசிபதம்.

இனி, அசிபதம் அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்றபோது முன்சொல்லப்பட்ட விரண்டுபதத்தினுடைய உபாதியுந்தீர்ந்து லக்ஷியார்த்தமான பதார்த்தத்தை அசிபதத்திலே ஐக்கியம் பண்ணவேண்டுமென்ற ஆசாரியாரை நோக்கிச் சிஷ்யன் விண்ணப்பஞ் செய்கிறான்.—

தேசக்கிரகனாகிற கிஞ்சிஞ்ஞனாயிருக்கிற சீவனுக்கும், போதக்கிரகனாகிற சர்வஞ்ஞனாயிருக்கிற பரனுக்கும் எப்படிஐக்கியங்கூடுமென்ன, கூடுங்காண்; இரண்டுபதத்திலுஞ் சொல்லப்பட்ட பொருள் முன்னைக்கியவிருப்பினாலே யேகமாம். அஃதெப்படி யென்னில் ஸம்சர்க்கவாக்கியத்தினாலும் விசிஷ்டவாக்கியத்தினாலுஞ் சொல்லப்பட்ட முக்கியமான உபாதி தீர்ந்து, லட்சியமானதுமென்கிற வாசனை தோஷமாகிய குற்றம் அகண்டவாக்யத்தினாலே ஏகம்பண்ணப்படும். அகண்டவாக்யமாவது சோயம் தேவதத்தனென்பது. ஒரு தேவதத்தனாகிய புருஷனுடனே நாம் சிறிதுநாள் கூடவிருந்தோம். இவன் சிறிதுநாளுக்குப் பிறகு பிரிந்துபோயினான். அநேகநாளுக்குப்பின்பு சதுரங்க பரிவாரத்துடனே யிவனை மதுரையிலே அந்திக்காலத்திலே ராஜாவாயிருக்கக் கண்டோம். அங்கே அவனுடன் சிறிதுநாள் கூடியிருந்தோம். பின்பு நம்மை அவன் பிரிந்துபோயினான். சிறிதுந.

னுக்குப் பின்பு தண்டகமண்டலத்துடனே அவனைச் சிதம்பரத்தி லே விடியற்காலத்திலே சந்நியாசியா யிருக்கக்கண்டோம்; அப்பொ ழுது இவன் அந்தத் தேவதத்தனோ அல்லனோ வென்று சந்தேகிக் கையில், இவனடியிலும் மார்பிலும் முடியிலும் முன்னே மறுவுண் டே அந்தவடையாளம் இவனிடத்திலேயிருந்தால், அந்தத் தேவ தத்தனே இவனுவனென்று பார்க்குபிடத்து அந்தவடையாளம் இவ னிடத்திலே இருக்கையால், அந்தத் தேவதத்தனே இந்தத் தேவ தத்தன் ஆவானென்று சொல்லப்படுவதாம். அப்போது அவனைவிட் டன அந்த இரண்டிடமும் இரண்டு காலமுமாம். அவை விட்டுப் போக விடாமல் நின்றவன் ஒருதேவதத்தன் மாத்திரமேயாம். அவ னைப்போல இந்தத் துவம்பதமாகிய ஜீவவுபாதிக்கும், தத்பதமாகிய பரவுபாதிக்கும், சாக்ஷியாய் நின்றவன் ஒருவனே. இந்த ஒருவனுக்கும் விட்டுப்போயின துவம்பத உபாதியென்னுங் காரியவுபாதியும், தத் பத வுபாதியென்னுங் காரணவுபாதியுமாம். அவை விட்டுப்போக விடாமல் நின்றவன் ஒருவனேயாம். இப்படி இரண்டு உபாதியும் போக, இரண்டுபெதத்திலும் நின்ற சிவனே பரனென்றும், பரனே சிவனென்றும் ஏகமாய்க் காண்பது அசிபதம். இது விட்டுவிடாத லக்ஷணை.

வாதமற்றிருக்கப்பட்டவஸ்துவை மன்னுமஹாவாக்யத்தினாலே தத்பதார்த்தசோதனை பண்ணப்பட்டது. அதனாலே போதமேபுரை யற்றோங்கும் பொருளெனத் தெளிந்தேன். அல்லல்தீர்பொருளீதெ ன்ப தறிந்துகொண்டேன். தேவரீரநுக்கிரகத்தினாலே சிரவணந் திடமாயிற்று. இனி, மனன மருளிச்செய்யவேண்டுமென்ன அருளிச் செய்கிறார்.

கிரவண முற்றிற்று.

## மனனம்.

### துவம்பதார்த்தம்.

அஃதாவது, முன்சொல்லப்பட்ட பதம் மூன்றில், முன்னே துவம்பதார்த்தஞ்சொல்லுகிறோம். துவம்பத மூக்யத்தை நீமனனஞ் செய் அஃதெப்படி யென்னில்:—தேகம், இந்திரியம், மனம், புத்தி, அஹங்காரம், சித்தம், பிராணன் என்னும் இந்தத் துவம்பத முக்ய மான ஏழுபாதியும் மூன்றவஸ்தைகளாம். அவை யெவையென்னில்,—ஜாக்ரம் ஸ்வப்னம் சுழுப்தியும், இவைக்கு அபிமானிகள் விஸ்வன் தைசதன் பிராக்ஞனுமாம். இந்த மூன்றவஸ்தையும் மூன்றபிமானியும் சீவனுடைய மூக்யம். ஆதலால், ஏழுபாதியுடனே கூடி விளங்குகிறது ஜாக்ரம். அபிமானி விஸ்வன். தேகேந்திரிய மிரண்டு நிற்க மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், பிராணனென்னு மிந்த ஐந்துடனேகூடி விளங்குகிறது ஸ்வப்னம். அபிமானி தைசதன். அந்தக்கரணம் நான்கும் நிற்க பிராணவாயுவுடனேகூடி விளங்குகிறது சுழுப்தி. அபிமானி பிராக்ஞன். ஆதலால் இந்த மூன்றவஸ்தையும் நீ யன்று. அஃதெப்படி நானன்றென்னில், ஜாக்ரம் ஏழு உபாதியுடனே கூடி விளங்குமென்றும், அது ஸ்வப்னத்திலே அழியுமென்றும் இப்படி உன்னாலறியப்படுகையினாலே ஜாக்ரமும் நீ யன்று. ஸ்வப்னந்தான் நானேயென்னில், ஸ்வப்னமும் நீ யன்று. ஆஃதெப்படி நானன்றென்னில், ஐந்து உபாதியுடனேகூடி விளங்குமென்றும், ஸ்வப்னம் ஜாக்கிரத்தின் வாஸனையென்றும், மனோவியாபார மென்றும், ஸ்வப்னம் சுழுத்தியில் அழியுமென்றும் இப்படி யுன்னா லறியப்படுமையினாலே ஸ்வப்னமும் நீ யன்று. சுழுப்திதான் நானேயென்னில்? சுழுப்தியும் நீ யன்று. அஃதெப்படி நானன்றென்னில், பிராணனே யாதாரமென்றும், இரண்டவஸ்தைகளுடைய வொழிவென்றும், இப்படி யுன்னா லறியப்படுகையினாலே சுழுப்தியும் நீ யன்று. இனி நான்

யாரோவென்னில்? இப்படி மூன்றுறவஸ்தைகளையும் உணர்ந்து அவை கழன்று உணர்வாய் நின்று விளங்குகிற துரியங்காண் நீயாகிற சுவரூபம். இந்தச் சுவரூபத்தை ஆக்கும் மாஹாவாக்யம், சுத்த துவம்பதார்த்த மென்று சொல்லப்பட்டது.

---

## தற்பதார்த்தம்.

இனி தத்பதார்த்தஞ் சொல்லுகிறோம். தத்பதமுக்கியத்தை நீ மனனஞ்செய். அஃதெப்படியென்னில் சர்வஞ்ஞன், ஸர்வகாரணன், சர்வாந்திரியாமி, சர்வேசுவரன், ஸர்வசிருஷ்டி, ஸர்வதிதி, ஸர்வ சம்ஹார னென்னும் இந்தத் தத்பதமுக்யமான எழு உபாதியுந் துவம்பதஉபாதிகள்போல் மூன்றவஸ்தைகளாம். அவையெப்படியென்னில்,— துரியம், காலபரம், அதீதமும், இவைக்கு அபிமானிகள் விராட்புருஷன், இரணியகர்ப்பன், அவ்யாகிருதனுமாம். இந்த மூன்றவஸ்தையும் மூன்றபிமானியும் பரனுடையமுக்யம். ஆதலால் சிவனுடைய உபாதிகளாகிய மூன்றவஸ்தையு முணர்ந்து அவை கழன்று உணர்வானதுபோல, பரனுடைய வுபாதியாகிய மூன்றவஸ்தையுமுணர்ந்து அவைகழன்று அறிவானதே பரம். பரஜாக்ரமேதென்னில், முன்சொல்லப்பட்ட சுத்த துவம்பதார்த்தமான துரியம் பரனுக்குத் தேகமாகையினாலே, காரணோபாதிக ளேழும் இதனிடத்துச் சம்பந்தித்து விளங்குகின்றதே துரியமாகிய பரஜாக்ரம். அபிமானி விராட்புருஷன். பரஸ்வப்பனமேதென்னில் சர்வசிருஷ்டி, சர்வதிதி, சர்வசம்ஹாரமென்னும் இந்தமூன்று உபாதியுடனே கூடி விளங்குகிறதே காலபரமாகிய பரஸ்வப்பனம். அபிமானி இரணியகர்ப்பன். பரசுழுப்தியேதென்னில், இந்த எழுபாதிகளும் அந்த பரஸ்வரூபத்தினிடத்திலே நிற்கிறதோ இல்லையோவென்னுமிடத்தில் இல்லை. இப்படி யொன்றுமில்லாமல் இருந்தவிடமே அதீதமாகிய

பரசுழுப்தி. அபிமானி அவ்யாகிருதன். இந்தப் பரசுழுப்தியை வேதம் ஓரிடத்திலே பரமென்றும், ஆகாசம்போல நிறைந்திருக்கையால் பிரமத்தின் சுவரூபமென்றுஞ் சொல்லும். அது ஸ்வரூபமாகாது. அஃதெப்படியென்னில்,—இது, பரனுக்கு உபாதியானபடியினாலே; இந்த மூன்றவஸ்தையு முணர்ந்து அவை கழன்றுநின்றதே பரம். இப்படிச் சுத்த துவம்பதார்த்தமான துரியத்திலே, காரணோபாதிகளேழுஞ் சம்பந்தித்து விளங்குகிறதே பரஜாக்ரமென் றறியப்படுகிறதினாலும், பரஜாக்ரம் பரஸ்வப்பனத்திலே தோன்றாமையினாலும், பரஜாக்ரமும் நீயன்று. மூன்று உபாதியுடனே கூடி விளங்குகிறதே பரஸ்வப்பனமென் றறியப்படுகையினாலும், பரஸ்வப்பனம் பரசுழுப்தியில் அழிகையினாலும் பரஸ்வப்பனமும் நீயன்று. இந்த உபாதிகளேழும் ஒழிந்து ஒன்றுமில்லாமலிருந்தவிடமே பரசுழுப்தியென் றறியப்படுகையினாலும், பரசுழுப்தி மேலாய்நின்று விளங்குகிற பரஸ்வரூபத்திலே அழிகையினாலும் பரசுழுப்தியும் நீயன்று. இப்படி மூன்றவஸ்தையுங் கண்டு கழன்று மேலாய் நின்று விளங்குகிறதே பரஸ்வரூபம். இந்த ஸ்வரூபத்தை ஆக்கும் மஹாவாக்யம், சுத்த தத்பதார்த்தமென்று சொல்லப்பட்டது. இந்தச் சுவரூபம் உள்ளும் புறம்பும் போக்கும் வரவுமின்றித் தானே தானாகி விளங்கா நிற்கும். அதுவே பரம்.

---

## அசிபாதார்த்தம்.

இப்படி யிரண்டு பாதார்த்தத்தினுடைய லட்சியார்த்தப் பொருளைப் பொருந்த வருளிச்செய்தாற்போல, ஆனயென்கிற பதத்தினர்த்தமும் மனனத்திலே அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்ன, அப்படியே இரு பதப்பொருளையும் லட்சியப்பரிசாற் குற்றமற விளங்கத் தக்கதாக மனனத்திலே தரித்தபின்பு, ஆன யென்னும் பதத்தையும்

பூரணமாக மனனத்திலே தரித்திரு. அஃதெப்படியென்னில், சீவ னிடத்திலிருக்கிற துவம்பத உபாதி நீங்கினேமென்ற வாசனையிருக் கையினாலும், பரனிடத்திலிருக்கிற தத்பத உபாதி நீங்கினேமென் கிற வாசனையிருக்கையினாலும், துவம்பதத்திலுள்ள துரிசு மூன்றை யும்விட்டுத் தத்பதத்திலுள்ள துரிசு மூன்றையும் விட்டுத் தருக்காய் நின்று விளங்குகிற தத் ஸ்வரூபத்தினிடத்திலே இரண்டு உபாதியும் ஒழிந்தபடியினாலும், விஸ்வந் தோன்றாமையினாலும் அதுவே பிரம மென்று வேதத்தில் சொல்லப்பட்டது. அஃதெப்படியென்னில், ஸ்தூலமாய் விளங்குகிற பிரபஞ்சத்தைச் சீவன் நானென்று கொண் டுநின்ற உபாதியை நீக்கி, முன் சுத்த துவம்பதார்த்தமானவிடத்தில் காரணோபாதி சம்பந்திக்கையால் சுத்த துவம்பதார்த்தம் விஸ்வக் கிராசம்பண்ணமாட்டாது. விஸ்வக்கிராச மன்றியொழிய ஐக்யங் கூடாது. ஆகையால் காரணோபாதி கழன்று விளங்காநின்ற சத் ஸ்வ ரூபத்தினால் விஸ்வத்தைக் கிரகிக்கையினாலே அதுவே விஸ்வக்கிராச மென்று வேதத்தில் சொல்லப்பட்டது. ஆகையால் இரண்டு பதத்தி னுடைய அவஸ்தைகளும் நீங்கி, சீவத்வமென்கிற போதமுமொழிந் து, விஸ்வமெல்லாந் தன்மயமாயிருக்கிறோமென்கிற விவேகம் தத் பதத்துண்டாகையால் சப்சர்க்க வாக்கியத்தினாலும் வசிஷ்ட வாக்ய த்தினாலும் நிச்சயிக்கப்பட்டுப் போகிறபொருள் இரண்டினுடைய வாசனையும் அசிபதத்தினாலேயன்றி நீங்காது. அதெப்படியென்னில், சோயந் தேவதத்தனென்கிற வாக்யத்தினாலே இரண்டு பதத்தினு டைய காரியமுங் காரணமுங் கழன்று இந்த அகம்போய் இந்தவாச னையுந் தீர்ந்து அகண்ட பரிபூரணமாய் விளங்குகிறது அசிபதம் ஆகையால் சீவனும் பரனும் ஐக்கியமாயிருக்கிற உபாதியும், சம்பந் தித்து வருகிற அவஸ்தையும், கோட்பாடும், விரிவும், ஒடுக்கமுமாகிய இவையெல்லாம் ஒன்று மின்றியே ஒழிவில்லாத நிறைவாய் விள ங்காநின்ற யாதொரு சுவரூபத்தை ஆர்க்கும் மகாவாக்யம் ஆனதேயன் றது.

குற்றமில்லாமல் மனனத்திலேதரித்த பதார்த்தசோதனையாகிய படியைச் சுவாநுபூதியிற் காட்டவேண்டுமென்ன, நிதித்யாசனம் அநுக்கிரகம்பண்ணுகிறார்.

மனனம் முற்றிற்று.

---

## நிதித்யாசனம்.

அஃதெப்படி யென்னில், முன்சொல்லப்பட்ட துவம்பதத்திற் காரியயோபாதியினுடைய சோதனையும், தத்பதத்திற் காரணோபாதியினுடைய சோதனையும், இரண்டு உபாதியினுடைய வாசனாதோஷமாகிய அசிபதத்தினுடைய சோதனையுஞ் சந்தேகமறக்கண்டு உண்மைகாண்பது முடிவு. இந்த உண்மையினுடைய முடிவைக் குற்றமில்லாமல் உனக்கேற்க நீகாண, விருப்பத்துடனே நிலைபெற்று விளங்கக்காட்டுகிறோம். நீ கண்டுகொண்டு வருவாய்.

---

## துவம்பதார்த்தசுத்தம்.

முன்னே உனக்குச் சிரவணத்தினாலே கேள்விப்பட்டு மனனத்திலே தரித்து விளங்குகிற துவம்பத முக்கியமான அவத்தை மூன்றும், அவை கண்டு கழன்றுணருகிற துரிய சுவரூபத்தையும், சந்தேகமற நனவிலே நீ கண்டபடி சொல்லுங்காணென்னச் சொல்லுகிறான்:—

பொறியும் புலனும் மனமே யாதாரமாக விஷயத்தைப் புசிக்கிறபோது ஜாக்ரமென்றும், விசுவமாயிருக்கிற உபாதியை நானென்றபிமானித்திருக்கையினால் விசுவனென்றுங் கண்டேன். அது தேவரீரருளினாலே தீர்ந்ததுங் கண்டேன். ஜாக்ரத்தின் வாசனை ஸ்வப்

பனமென்றும் இந்தச் சடமாகிய வாசனையை நானென் றபிமானி திருக்கையினல் இதற்கபிமானி தைசதனென்றுங் கண்டேன். அது தேவரீர் அருளினலே தீர்ந்ததுங்கண்டேன். கனவில் வாசனையாகிய கனவும் இறந்தவிடம் சுழுப்தியென்றம் இந்தவெறும் பாவனையாகிய சுழுப்தியை நானென் றபிமானித் திருக்கையினலே யிதற்கபிமானி பிராக்ஞனென்றுங் கண்டேன். அதுதேவரீ ரருளினலே தீர்ந்ததுங் கண்டேன். இந்தப் பேரிருளாகிய சுழுப்தியை விஷயமா யறியுமென்னை அறிவெனக்கண்டேன். தேவரீருடைய அனுக்கிரகத்தினலே என்னைக் கண்டபின் மூலப்பகுதியாயிருக்கின்ற சுழுப்தி யிறந்ததுங் கண்டேன். கண்ட ஸ்வரூப மெப்படியிருந்ததென்னில்:—"அறிவு தானழிவின்றியே யனைத்தையுமறிந்து முறிவதாகிய முன்பு பின் பக்கமேல் கீழ்" என்பன வொன்றுமின்றி எங்குமாய்த் திகழ்ந்து பிரிவில்லாமல் எல்லாவற்றினுள்ளுந் தானய் நின்று விளங்குகிறபடியினலும், சகலமுந் தன்னிடத்திலே தோன்றியும் விளங்கியும் ஒடுங்கியுந் தானேமேலாகிச் சகலத்துக்குங் காரணமாய்த் தேஹேந்திரிய கரணங்களுக்கெல்லா மேலாகித் தானே சாக்ஷியாய் நிற்கையினலும், ஒப்பிலாத விவ்வுணர்வதே வடிவதாமென்னைத் தேவரீரருளினலே உள்ளங்கை நெல்லிக் கனிபோற் சந்தேகமறக் கண்டே னென, அவையை வுன்றனை அநுபவத் துணர்ந்தாய்! ஆனபடியினலே துவம் பதத்திற்குப் பொருள் சுத்தமாயிற்று.

---

## தத்பதார்த்தசுத்தம்.

தத்பத முக்யமான அவஸ்தை மூன்றையுங் கண்டு கழன்றுணருகிற சித்பரத்தையுஞ் சந்தேகமற நீ கண்டபடி சொல்லிக்காணென்ன, தேவரீ ரநுக்கிரகத்தினலே சுத்த துவம்பதார்த்தமாயிருக்கிற துரிய சுவரூபத்தினிடத்தில் சர்வக்ஞத்வாதி உபாதி சம்பந்தித்து

விளங்குகிறதே பரஜாக்ரமென்றும், இதற்கபிமானி விசுவத்துக்கெல்லாம் ஆதாரமாகையால் விராட்புருஷனென்றுங்கண்டேன். அது தேவரீரருளினாலே ஸ்வப்பனத்தி லழிந்ததுங் கண்டேன். காலபரமாயிருக்கிற சுவப்பனத்தைப்பார்க்குமிடத்தில், சர்வசிருஷ்டி சர்வஸ்திதி ஸர்வசம்ஹாரன் என்கிற மூன்று உபாதியுடனேகூடி விளங்குகிறதே பரஸ்வப்பனமென்றும், இதற் கபிமானி சாக்கிரம்போல வியாப்தமும் சுழுப்திபோல அவ்வியாப்தமுமானபடியினாலே இரணியகர்ப்பனென்றுங் கண்டேன். அதுதேவரீரருளினாலே சுழுப்தியிலொழிந்ததுங் கண்டேன். தத்ஸ்வரூபத்தி னிடத்திலே சர்வக்ஞத்வாதி உபாதி ஒழிந்ததே பரசுழுப்தியென்றும், இதற்கபிமானி ஒரு வியாப்தமு மில்லாதபடியினாலே அவ்யாகிருதனென்றுங் கண்டேன். இந்தப் பரசுழுப்தியை வேதம் ஓரிடத்திலே பரமென்றும் ஆகாசம்போல வியாப்தமற்றிருக்கையினாலே பிரமத்தின் ஸ்வரூபமென்றும் சொல்லியதுங் கண்டேன். இந்தப் பரசுழுப்திக்கு மேலாய் நின்று விளங்காநின்ற ஞானத்தைப் பரஸ்வரூபமென்றுங் கண்டேன். வியோமமாயிருக்கிற பரசுழுப்தியும் பரனிடத்திலே ஒழியக் கண்டேன்.

---

## அசிபதார்த்தசுத்தம்.

தேவரீர் அநுக்கிரசத்தினாலே வியோமமீறாய மூன்றவஸ்தையுங் கபளீகரித்து நின்று விளங்காநின்றஸ்வரூபத்தையுங்கண்டேன். ஞானமே வடிவாகையால் இதற்கபிமானி சித்சொலிதை யென்றுங் கண்டேன். தேவரீர் அநுக்கிரசத்தினாலே யிரண்டு உபாதியுந் தன்னிடத்தில் ஒழிகையினாலும், போக்குவரவின்றியே நிற்கையினாலும், இதரமாயிருக்கின்ற விசுவமெல்லாம் விழுங்கி அகண்டபரிபூரண

மாய் விளங்குகையினாலும், விசுவக்கிராசமென்றுங் கண்டேன். இத ற்கபிமானி அசேஷமுந் தானாய் நிற்கையினாலே பிரசாபத்தியனென் றுங்கண்டேன். இப்படிச் சகல ஆத்மாவினுள்ளும் புறமும் முழுதும் பரிபூரணமாய்ப் பிரத்தியக்ஷமாய் விளங்குகின்றது சொரூபமென்று வேதஞ் சொல்லும். அது தேவரீரருளினாலே "பழமறைத் திருமொ ழிம் பரிசேதராசல, வுலகமுண்டகம் புறமருவுஞ் சராதிகண், முழு துந் தன்னுருவமாய்" விளங்கப்படுகின்றதுவுங் கண்டேன். பேதமா யிருக்கின்ற பிரபஞ்சமெல்லாம் பிரமமென்று வேதஞ்சொன்ன மெ ய்ம்மொழிப்படியே ஜகமெல்லா மொருதன்வடிவாய் விளங்குகின்ற சொரூபத்தைச் சீவதுரிய முதலாகக்கொண் டுள்ளும் புறமுமாய் வருகிற உபாதிக் குற்றங்களெல்லாந் தீர அநுக்கிரகம் பண்ணுகையி னாலே கண்டேன் என, இந்த ஸ்வரூபம் ஐக்கியத்திலே உபாசாந்த மாம். இதனை நீ அரிதாகிய வமல சத்பதார்த்தமென்றறி. இப்படி வியோமத்தைக்கடந்து விசுவமெல்லாந் தன்மயமாய் விளங்குகிற படியினாலே உபாதியினுடைய குற்றந் தீர்ந்தாலும் இந்தவாசனாதோ ஷந் தீரவேண்டுமென்று வேதஞ்சொல்லும். ஆகையினால் இனி யிந்த வாசனாதோஷந் தீருமுறைமை யெப்படி யென்னில், உபசாந்தம் நீங் கினாலொழிய தீராது. உபசாந்த மாவதேதென்னில் மூலாஞ்ஞானம்; மூலாஞ்ஞான மேதென்னில் மறைப்பு; அந்த மறைப்புத்தானேதென் னில், தத்சொரூபத்தை மறந்தவிடம. தேகமாதியாக இந்த மறைப் பாகிய உபசாந்தம் அந்தமாகச் சகலமும் தன்னிடத்திலே அடங்கு கையினாலே யிதற்கபிமானி பொற்புவிசாந்தனாம். நன்றாய் விளங்கப் பட்டு உலகெலாம் நிறைந்த உபசாந்தத்தின் பெருமையை வேதத்தி னுடைய முடிவு இன்றளவுஞ் சொல்லியது. முப்பதத்தவத்தை மும் மூன்றென்பது முடிந்தது ஞான மென்றுஞ் சொல்லியது. ஆகை யால் முப்பதமு முடிந்தவிடத்திலே சத்தியஞான வனந்த வானந் தமா யிருக்கப்படாநின்ற தத்சொரூபம் வெளிப்படுமென்று அநுக்கிர

கம்பண்ணியருள, அந்தச்சொரூபத்தை அநுக்கிரகம்பண்ணவேண்டு மென்ன அநுக்கிரகம் பண்ணுகின்றார்.

நிதித்யாசன முற்றிற்று.

---

## தத்வஸ்ரூபம்.

ஆஃதெப்படியென்னில், இந்தமறைப்பாகிய உபசாந்தத்தைக் கண்டு விளங்கப்பட்ட தத்சொரூபத்தி னிடத்திலே அந்த மறைப்பு நிற்கிறதோ இல்லையோ பாரென்னுமிடத்தில் இல்லை. இல்லாத விட மெப்படியிருந்தது? ஆதியந்தஞ் சூனியமாயிருந்தது. அந்தச் சொருபந்தான்காண் அறிந்திடப்படாததாய் அறிவுடையதாய் அளவிடப்படாததாய்ச் சுக சுவசொருபியுமாயிருப்பது. அதுதான்காண் சத்யஞான வனந்த வானந்தமானது. அஃதெப்படியென்னில், ஆதியந்தஞ் சூனியமாயிருக்கப்பட்டதே பரிபூரணம். அந்தப்பரிபூரணம் எப்படியிருந்தது பாரென்னுமிடத்தில் என்னுற் சொல்லப்போகா திருந்தது. அதேதென்னில், மனதுக்கெட்டாதபடியினாலே வாக்கு வசனிக்கப் போகாது. ஆகையினால் வாக்கு மனோதீதமென்று கண்டு விளங்கிவந்ததே ஞானம். அந்த ஞானத்தைவிட்டிருந்த விடத்திலே யாதொரு ஸ்வருபம் நிகழ்ந்தது அதை ஆசாரியரும் மஹாவாக்யத்தினாலே அது நீ யாகின்றாயென்றும் நீ யதுவாகின்றாயென்றும் அநுக்கிரகம் பண்ணினார். அந்த ஸ்வருபந்தான் மூன்று பதமானது. அஃதேதுவென்னில், துவம்பதமுதலாக அந்த ஸ்வருபந்தான்காண் மூன்று லக்ஷணமானது. அஃதேதுவென்னில், ஜீவன் முதலாக அந்தஸ்வருபந்தான்காண் ஆறு குறியா யுள்ளது. அஃதேதுவெனில், வடிவு நுன்மை முதலாக அந்தஸ்வருபந்தான்காண் எட்டியல்பாயிற்று அஃதேதுவென்னில், இறந்தகேள்வி முதலாயினவாம்.

இப்படி அநுக்கிரகம் பண்ணப்பட்ட குருநாதன் பெருமை யாதோவென்னில்,

"மூலையிலிருந்தாரை மூற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென்றுந் தீபற
தவத்திற் றலைவரென்றுந் தீபற."

என்று கூறுவதாற் கண்டுகொள்க.

---

## கலிவிருத்தம்.

தொம்பதந்தத்பதந்தோன்றுமசிபதம்.
நம்பியசீவன்பரன்சிவமாய்நிற்கு
மம்பதமேலைச்சொருபமாவாககியஞ்
செம்பொருளாண்டருள்சீர்நந்திதானே.

## நேரிசைவெண்பா.

புசிப்போஞ் சிவபோகம் பூரணமா யெங்கும்
வசிப்போ முலகில் வசியோ—முசிப்பின்றி
வாழ்வோஞ் சிவத்தையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்த்
தாழ்வோ மெமக்கார் சரி.

# தத்வாமிர்தக்கட்டளை.

முற்றிற்று.

---

சற்குருநாதன் துணை.

சிவமயம்.

திருசிற்றம்பலம்

# உபதேசவுண்மைக்கட்டளை.

இகபரங்களிலுள்ள ஆத்மகோடிகளுக்குள் தெய்வகதியாய் ஒவ்வொருவருக்குக் கிருத கர்ம புண்ணிய பரிபாகத்தினாலே இனிப் பிறவாத முடிந்த பிறப்பிலே இந்தத் தேகாதிப் பிரபஞ்சமுதலிய வனைத்துந் தோன்றி நின் றழியுந்தன்மை ஏகதேசத்தில் காட்சிப்பிரமாணமாய் விளங்கும்.

அங்ஙனம் விளங்குவதைக் கருத்திலூன்றி விசாரிக்குமிடத்து இதனாற் றுன்பமேயன்றி இன்பமில்லை யென்றும் இந்தச்சரீரம் உற்பத்தி நாசமடைகின்றபடியால் இதனால்வருஞ் சுகதுக்கம் அனுபவிக்கிறவனே பசு வென்றும், நாமே தேகத்தையறிந்து உற்பத்திசெய்துகொள்ளக் கூடாமையினால் ஒருவரிருந்து தனுவாதிகளைக்கொடுத்து வினைவழியே யூட்டிவிக்கின்ற தன்மையினால் அவரே பதி யென்றும், பதிக்குப் பசுவுக்குமுள்ள தாரதம்மியங்களைச் சற்றுந் தெரியவொட்டாமல் மறைத்துநின்றதே பாச மென்றும், இந்தத்திரிபதார்த்த நிச்சயமுந்தெரியாமல் அனாதியே மூலாஞ்ஞானத்தினால் பந்தப்பட்டு நின்று அந்தப்பந்தத்தினால் நால்வகையோனி, எழுவகைப் பிறவியிலும், எண்ணிறந்த சரீரங்களெடுத்துத், தாபத்திரயாக்கினியினால் தகிக்கப்பட்டுத் துக்கசாகரத்தி லமிழ்ந்தினோமென்றும் சாமானியமாகச் சற்றே விவேகமுண்டாகும்.

அங்ஙனம் விவேகிக்குமிடத்து இப்போதெடுத்த தேகத்திலனுபவிக்குந் தாபத்திரயங்களை விசாரிக்கும்படிவரும். அங்ஙனம் விசாரி

க்குமிடத்து, தேகமே நாமென்ற நிச்சயத்தினால் இத்தனை துன்பமும் வந்ததென்றுதோன்றும். இந்த நிச்சயம் எதினால்வந்ததென்று விசாரிக்குமிடத்து அவிவேகத்தினால் வந்ததென்று தோன்றும். அவிவேகம் எதினால்வந்ததென்று விசாரிக்குமிடத்து, மூலாஞ்ஞானத்தினால் வந்ததென்றுதோன்றும்.

இங்ஙனந்தோன்றுவது முற்பிறப்பிற்செய்த நிஷ்காம புண்ணிய பலத்தினால் ஈஸ்வரானுக்கிரகம் பொருந்திச் சுத்தவாசனையோடுந் தோன்றிய மானுடப்பிறப்பிலன்றி மற்றைப்பிறப்பில் தோன்றாதபடியினால் இந்த மானுடசரீரம்பெற்ற அருமையும், இந்தச்சரீரம் மின்னல்போலவிளங்கி யழிகின்ற சிறுமையும் விசாரித்தறிந்து இந்தச்சரீர நீங்குமாகில் எந்தச்சரீரம் வருமோவென்னும் பயத்தினால் இந்தச் சுத்தவாசனை பொருந்திய மானுடதேகத்திலன்றி வேறொரு தேகத்தில் சத்தியோன்முத்தி பெறக்கூடாதென்னுந் திடங்கொண்டு இந்தத் தேகமிருக்கும்பொழுதே காருண்ய மூர்த்தியாகிய சற்குருநாதனையடைந்து அநித்திய அசுத்த துக்க லக்ஷணமாகிய சரீர தாப நீங்கி நித்திய சுத்த சுலக்ஷணமாகிய சொற்சொருபத்தைப் பெறவேண்டுமென்கிற தாகத்தினால் உள்ளத்தில் விசாரக்குறிப்புண்டாகும்.

அந்த விசாரமேலீட்டினால் மலைக்கட்படுந் தீவெப்பத்தி லகப்பட்ட அந்தகன், மார்க்கந்தெரியாது நின்று நீர்தேடுந் தன்மைபோலத் தாபத்திரயாக்கினியினால் வெந்து, இருள் பிணிப்பினால் மார்க்கந்தெரியாமல் அஞ்ஞானதாபந் தணிக்கும்பொருட்டு அறுதி சுயசொரூபானந்த ஞானாசாரியரைத் தேடுமிடத்து இவ னுள்ளக்குறிப்பையறிந்து இவனுட் டோய்வற நின்ற சுகசொரூபமே கருணைகூர்ந்து, சலமே ஆலங்கட்டியாய்த் தடித்ததுபோலச் சதேக சீவன் முத்தி அறுதியாகிய குருலிங்க ஜங்கம வடிவமாய்த் தடித்து சீவகாருணியம் ஈசுரபத்தி பாசவயிராக்கியம் பிரமஞானமென்னும் நாற்

குணங்களுங் குறைவின்றி விசேஷப் பிரசித்த வொழுங்காய்த் திருமேனிகொண் டெழுந்தருளிவரும்.

அஃதெப்படியென்னில்,—சூரியவிம்பம் எங்கும் வியாபித்திருந்தாலுந்நிருமலமான கண்ணாடியில் விசேஷவிம்பம் பிரதிபாலிக்கிறதுபோலச் சிவம் எங்கும் பரிபூரணமாயிருந்தாலும் சதேகசிவன் முத்தி யறுதியாகிய குரு லிங்க ஜங்கம வடிவத்தில் அகமும் புறமும் விளங்கி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல மூன்றுகுறியாகிய மானுட சொரூபத்தைக்காட்டிச் சற்சீடனைத் தன்மயமாகச் செய்விக்கும்பொருட்டு கிருபையினா லெழுந்தருளிவரும்.

அங்ஙனமான தரிசனங்கிடைத்தபோது, மோக்ஷ விருப்பங்கொண்ட அதிதீவிர பக்குவமுள்ள சீடனானவன் அதிமோகியைப்போல நிறைந்த பத்தியங்கொண்டு மூன்றுருவையுஞ் சற்பாவகமாய்ப் பாவித்துத் தோத்திரவணக்கத்துடன், ஆப்த அங்க தான சற்பாவமென்னு நான்கு பணிவிடைகளுஞ்செய்து ஸ்ரீ சற்குருவின் திருவுளப்பாங்காய் நடந்து, அவரது திருவருள் சுரக்குமளவும் எதிர்பார்த்திருக்குமிடத்து ஸ்ரீ சற்குருகடாட்ச வீக்ஷணிபத்தினாலும், அவரது தரிசன பரிசன பாதோதகப் பிரசாத மகிமையினாலும் சீடனது மும்மலங்களும் மூன்றுவடிவிற்கரைந்து இவனும் அந்த முக்குறியில் லயமாகுமிடத்து உடல் பொருள் ஆவி மூன்றும் குருலிங்க ஜங்கமத்திக் கர்ப்பணமாகி சற்குருவுக்குஞ் சீடனுக்குங் கண்ணும் இமையும்போல் உடன்பாடாகையினால் அந்தப் பக்குவத்தில் இருவினையொப்பு மலபரிபாகம் வரும். அதனால் சத்திநிபாதம் பதியும். அதனால் ஞானவிசாரமுண்டாம். அதனால் தற் றரிசனமாகும். அதனால் அகண்டபரிபூரண சொரூப சாக்ஷாத்கார நிரதிசயானந்தத்தை யென்றைக்கடைவோமென்கிற ஆவேசமும், கண்ணீர்ததும்பல் முதலிய எண்குணமும், அரைநோக்கமுதலிய தசாவஸ்தைகளு முண்டாகும்.

அதையறிந்து சோதிக்கும்பொருட்டு, சற்குரு தினேதினேபரிக்ஷித்துவருவர். அங்ஙனம் பரிக்ஷிக்குமிடத்து, சீடனானவன் உலகத்தின்கண் ஒருவனது வியாதியை நிச்சயித்து அவிழ்தங்கொடுத்துத் தணிப்பதுபோல, நமக்கு அனேக ஜன்மவாசனையாய்வந்துள்ள சகல மீகேவலமாகிய பவவியாதியை நீக்கும்பொருட்டு ஒரு கைம்மாறிலும்விருப்பமின்றிய குருசுவாமிகள் நம்மைப்பரிக்ஷிக்கின்றது. இதனால் பின்பு மாறுதலுக்கிடமில்லையென்று நிச்சயங்கொண்டு, சுவர்ணமானது புடத்துக்குப்புடம் மாற்றேறுதல்போல ஆசிரியர் பரிக்ஷிக்கப் பரிக்ஷிக்கத் தெளிவையடைந்து சமரச பத்தியங்கத்தினால் சூரிய சந்நிதானத்திலுருகுகின்ற வெண்ணெய் பாவைபோலச் சற்குரு சந்நிதானத்தில் நின்று நாளுக்குநாள் இருபோதங்கரைந்து கரைந்துருகி அஞ்சலியஸ்தனாய்த் தேகத்தைவிட்டு நீங்காத சாயைபோலச் சற்குருதரிசனத்தைவிட்டு நீங்காதிருப்பன்.

அங்ஙனமான அதிதீவர பக்குவமுள்ள சீடனுக்கிரங்கி அஸ்தமஸ்தக சையோகஞ்செய்து, திருவடி சூட்டிப் பஸ்ம கவசந்தரித்து அந்தக்ஷணமே விதி நிஷேத சூனியமாகிய வேதாந்த சித்தாந்த சமரச போத மகாவாக்கியமாகியஅதி சூக்ஷ்மவாக்கியார்த்த சிரவண தீபத்தை அவனது பரிபக்குவமாகிய அகண்ட தகளியில் பரபத்தியாகிய ஆச்சியநிறைந்த கருத்தாகிய திரியிலேற்றி, ஐயந்திரிபாகிய காற்றசைக்காதிருக்கும்படி யாகிய திரைச்சீலை கட்டுவித்து, சிட்டங்கட்டுதல்போல் அண்டபிண்டங்களில் மவுட்டியமலைவு பீடியாமலிருக்க நிதித்தியாசனமாகிய தூண்டுகோலால் தூண்டித் தூண்டி, அறுதி அகண்டபரிபூரணானந்த சாக்ஷாத்கார வனுபவத்திற் கரைந்து நின்று சகசானுபூதிவிளக்கமாய் இருந்தபடியேயிருக்கும் உபதேசவுண்மையை அனுக்கிரகஞ்செய்தருளினார்.

அங்ஙனமான சீடன் பெத்தத் திசையில் இருளில் சொச்சொரூபமிருந்துந் தோன்றாமல் மருள்வடிவமே சகசமானதுபோல சுவா

னுபூதியாகிய முத்தித்திசையில் மருட்சொரூபமிருந்துந் தோன்றாமல் அருள்வடிவமே சகசமாகி அவ்வருண்மேலீட்டினால் ஞானனந்தத்தைப்பெற்று, முடவனுக்குப் பிடிப்புநீங்கி கைகால்நடக்கவந்தும் திரும்பவும் அது தொடராதிருக்கும்படி உல்லாசமாய்நடந்து பார்ப்பதுபோல இருட்பிடிப்புநீங்கி அருள்நடை நடக்கவந்தும் இவ்வருளில் அவ்விருட்பிடிப்பு வராதிருக்கும்படிஉள்ளுள்ளாசத்தினால் அருள்நடைநடந்து பார்ப்பதுமன்றிப்பெத்தத்திசையிற்றகித்த தாபாக்கினியைக் கிருபாவீக்ஷண்ய ஜலத்தினாற் றணிர்வித்துப் பேரானந்த சமுத்திரத்திற் குளிப்பாட்டியஸ்ரீசற்குருநாதனுடைய திருவடிப்பிரதாபத்தைப் புகழ்ந்து தேசபதனபரியந்தஞ் சுவானுபூதியைப் பிரியாதிருக்கும்படிப் பலவாறாகத் தோத்திரஞ்செய்து மவுட்டியமலவாகிய துர்வாசனைகள் தன்னைப்பீடியாமலிருக்கச் சகசானந்தப்பணியால் சீவன் முத்தி சதுஷ்பாத முறைமையாகிய வனுபூதியடைந்து விதேக கைவல்ய முத்தியைப்பெறுவன்.

இங்ஙனமன்றிச்சற்குரு பரிக்ஷிக்குமிடத்துப் பொற்பொடிமெழுக்குண்டையில் மறைவதுபோல் மலபாதத்தினால் இருட்டிமிரத்தில் சிரவணாதிகள் மறைந்து, சீடனுக்குச் சொற்சுவையொழிய பொருட்சுவை விளங்காது. வராகம் பூமியையுழுது தான்வேண்டிய பொருளைவிட்டு வேறொன்றை நாடுதல்போலந் தனது சுகசொரூபானந்தத்திற் கனுகூலமாகிய பொருளில் கருத்தழுந்தாமல் மலவாசனையால் சுகப்பொருள் சொல்லாய் விளங்குவதை ஆசிரியர் குறிப்பினாலறிந்து அவனை இடைவிடாமல் குருலிங்க ஜங்கமப் பணிவிடைகளில் விடுத்துக் குருதரிசனபரிச பாதோதகப் பிரசாதங்களினால் அவனுக்கு இருவினையொப்புமுதலிய பரிபாகம்வருவித்து அத்தியாரோப யுத்தியும் அபவாதயுத்தியு மறிவிக்கத்தொடங்கி முன்னர் அத்தியாரோபயுத்தியை அருளிச்செய்கின்றார். அஃதெப்படியென்னில்:—

பழுதையிற் பாம்பும், கட்டையிற் கள்ளனும், கானலிற்சலமும், கிளிஞ்சிலில் வெள்ளியும்போலச்சச்சிதானந்த சொரூபமாகிய தன்னிடத்தில் மூலாஞ்ஞானத்தினால் அத்தியாரோபமாய் முக்குணம் பிறந்தது, அவற்றுள்:—

சத்துவகுணத்தில் ஈஸ்வராதிகளும், இராசதகுணத்தில் சீவர்களும், தாமதகுணத்தில் ஆவரணவிக்ஷேபசத்திகளும், அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைகளும், சூக்ஷ்மசரீரங்களும் பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களும், ஸ்தூல சரீரப் பிரபஞ்சங்களுமுண்டாயின.

இவற்றுள் பிரபஞ்சம் அனுபவிக்கப்படுகின்றது, சீவனனுபவிப்பவன், ஈஸ்வரன் சீவர்கள் கர்மானுசாரப்படி யனுபவங்கொடுப்பவர்.

ஆவரணசத்தியானது, ஈஸ்வரனையும் ஞானிகளையுந்தவிர மற்றைச் சீவராசிகளனைத்தையுந் திரிபதார்த்த நிச்சயந் தெரியவொட்டாமல் நாஸ்தீகபாதியென்னு மிருமுகத்தினால் மழைக்காலத்து அமாவாசை நிசியின் குமரியிருளைப்போல மறைந்து நிற்கும்.

விக்ஷேபசத்தியானது, பிறவிமுதல் துணைக்காரணமாயிருந்து முன்னர் விடையஞானத்தை விளக்கிப் பின்னர் ஞானசாதனமாயிருந்து சொரூபஞானத்தை விளக்கிப் பின்னர் ஞானசாதனமாயிருந்து சொரூபஞானத்தை விளக்கிவைத்து அதுவும் அந்தச்சொரூபஞானத்திற் பிணஞ்சுடு தடியைப்போல லயமாகிவிடும்.

முற்கூறிய சத்துவத்திற் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபலித்த ஈஸ்வரனுக்கு விஷ்ணுவென்றும், இராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபலித்த ஈஸ்வரனுக்குப் பிரமாவென்றும் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபலித்த ஈஸ்வரனுக்கு உருத்திரனென்றும் பெயர். இதுவேமாயை இந்தமாயையும்

அஞ்ஞானமாகிய ‡ சமஷ்டி சீவகாரண சரீரமுங்கூடி ஈஸ்வரனுக்குக் காரண சரீரமாம். இதுவே ஈஸ்வரனுக்கு அவஸ்தை. இதை யபிமானித்த ஈஸ்வரனுக்குச் சுழுத்திக்கு அவ்வியாகிருத னென்றும் பெயர்.

இராசதத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்த சீவர்களுக்கு ஞானநிஷ்டாபரரென்றும், இராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபலித்த சீவர்களுக்குக் கர்ம நிஷ்டாபரரென்றும், தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபலித்த சீவர்களுக்குச் சோம்பல் நித்திரை மயக்கமுடையவர்களென்றும் பெயர். இதுவே அஞ்ஞானம், இதுவே சீவகாரணசரீரம், இதுவே சீவனுக்குக் சுழுத்தியவஸ்தை, இதையபிமானித்த சீவனுக்குப் பிராஜ்ஞுவென்றுபெயர்.

தாமதத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபலித்த விக்ஷேபசத்தியினால் அபஞ்சீகிருத பஞ்ச தன்மாத்திரைகள் பிறக்கும். இந்தஅபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைகளும் சீவர்களது வியஷ்டி சூக்ஷமசரீரமுங்கூடி ஈஸ்வரனுக்குச் சமஷ்டி சூக்ஷமசரீரமாம். இதுவே ஈஸ்வரனுக்குச் சொப்பனவஸ்தை. இதை யபிமானித்த ஈஸ்வரனுக்கு இரணியகர்ப்பனென்றுபெயர். அதெப்படியென்னில்:-

விக்ஷேபசத்தியின் காரணமாய் சத்த தன்மாத்திரையா ஆகாயம்பிறக்கும். அதில் பரிச தன்மாத்திரையான வாய்வுபிறக்கும். அதில் ரூப தன்மாத்திரையான தேயு பிறக்கும். அதில் ரச தன்மாத்திரையான அப்பு பிறக்கும். அதில் கந்த தன்மாத்திரையான பிருதிவிபிறக்கும். ஆக தன்மாத்திரைகள்-ரு.

---

‡ சமஷ்டி யென்பது - வனமென்றும், வியஷ்டியென்பது மரமென்றுமாம்.

சத்ததன்மாத்திரைசாத்துவீகசமஷ்டியுடன்கூடினது ஞானம். இதற்குநிலை புருவமத்தியம். இராஜசமஷ்டியுடன்கூடினது சமான வாயு. இதற்குநிலை நாபி. சாத்துவீகவியஷ்டியுடன் கூடினது சுரோத்திரேந்திரியம். இதற்கு நிலை செவி. இராஜச வியஷ்டியுடன்கூடினது வாக்கு. இதற்கு நிலை வாய். சத்தம் விடயம்.

ஞானம், சமானவாயு, சுரோத்திரேந்திரியம், வாக்கேந்திரியம், சத்தவிடயம் ஆக ௫-ம் சத்த தன்மாத்திரையின்கூறு.

பரிசதன்மாத்திரை - சாத்வீகசமஷ்டியுடன் கூடினது மனம்; இதற்குநிலை கண்டம். ராஜச சமஷ்டியுடன் கூடினது வியானவாயு; இதற்குநிலை சர்வசரீரம். சாத்துவீக வியஷ்டியுடன் கூடினது தொக்கேந்திரியம்; இதற்கு நிலை தொக்கு. இராசசவியஷ்டியுடன் கூடினது பாணேந்திரியம்; இதற்கு நிலை அஸ்தம். பரிசம் விடயம்.

மனம் - வியானவாயு - தொக்கேந்திரியம் - பாணேந்தியயம்- பரிசவிடயம் ஆக ௫-ம் பரிச தன்மாத்திரையின்கூறு.

ரூபதன்மாத்திரை - சாத்துவீகசமஷ்டியுடன் கூடினது புத்தி; இதற்குநிலை நேத்திரம். இராசத சமஷ்டியுடன் கூடினது உதான வாயு; இதற்குநிலை கண்டம். சாத்துவீகவியஷ்டியுடன் கூடினதுசட்சேந்திரியம்; இதற்கு நிலை நேத்திரம். இராசச வியஷ்டியுடன் கூடினது பாதேந்திரியம்; இதற்கு நிலை பாதம். ரூபம் விடயம்.

புத்தி - உதானவாய்வு - சக்ஷேந்திரியம் - பாதேந்திரியம் -ரூடவிடயம் ஆக ௫ - ம் ரூப தன்மாத்திரையின்கூறு.

இரசதன்மாத்திரை - சாத்துவீகசமஷ்டியுடன் கூடினது சித்தம்; இதற்குநிலை நாபி. இராசதசமஷ்டியுடன் கூடினது அபான

வாயு; இதற்குநிலை குதம். சாத்துவீக வியஷ்டியுடன் கூடினது சிங்ஙுவேந்திரியம்; இதற்குநிலை நாக்கு. இராசத வியஷ்டியுடன்கூடினது குய்யேந்திரியம்; இதற்குநிலை உபஸ்தம். ரசம் விடயம்.

சித்தம் - அபானவாயு-சிங்ஙுவேந்திரியம்-குய்யேந்திரியம்-ரசவிடயம் ஆக ரு-ம் இரச தன்மாத்திரையின்கூறு.

கந்தசன்மாத்திரை - சாத்துவீகசமஷ்டியுடன் கூடினது அகங்காரம்; இதற்குநிலை இருதயம். இராசத சமஷ்டியுடன் கூடினது பிராணவாயு; இதற்குநிலை இருதயம். சாத்துவீக வியஷ்டியுடன்கூடினது ஆக்கிராணேந்திரியம்; இதற்குநிலை நாசி. இராசதவியஷ்டியுடன்கூடினது குதேந்திரியம்; இதற்கு நிலை பாயுரு. கந்தம் விடயம்.

அகங்காரம்-பிராணவாயு-ஆக்கிரா ணேந்திரியம்-குதேந்திரியம்-கந்தவிடயம் ஆக ரு-ம் கந்த தன்மாத்திரையின்கூறு.

இந்தத்தத்துவங்கள் உரு-ங்கூடிச் சீவசூக்ஷம சரீரமாம். ஞானத்தைக்கழித்து உசு-தத்துவங்களென்றுஞ் சொல்லுவர். இதுவே சீவனுக்குச் சொப்பனவஸ்தை. இதை யபிமானித்த சீவனுக்குத் தைசதனென்றுபெயர்.

இனி ஸ்தூலசரீரமுண்டானமுறைமையெப்படியெனில்:—

தாமதத்தில் தாமதம் பிரதானமாகும்போது அபஞ்சீகிருத பஞ்சபூதத்தினின்று பஞ்சீகிருத பஞ்ச மகாபூதங்கள் பிறக்கும். இந்தப் பஞ்சீகிருத பஞ்ச மகாபூதங்களும் சீவர்களது சமஷ்டி ஸ்தூலசரீரங்களுங்கூடி ஈஸ்வரனுக்கு ஸ்தூலசரீரமாம், இதுவே ஈஸ்வரனுக்குச் சாக்கிராவஸ்தை, இதை யபிமானித்த ஈஸ்வரனுக்குவிராட்டென்று பெயர். அஃதெப்படியெனில்:—

பஞ்சபூதங்களையும் பத்தாகச்செய்து அவைகளின் பாதியை நன்னான்காகப் பிரித்து, சுவாமிசத்தைவிட்டு இதராமிசத்திற் கூட்டிப் பஞ்சீகரணப்படுத்த ஸ்தூல பூத பௌதிகங்களாம்.

| | ஆகாசத்தி லாகாசம் | வாயுவி லாகாசம் | தேயுவி லாகாசம் | அப்புவி லாகாசம் | பிருதிவியி லாகாசம் |
|---|---|---|---|---|---|
| சாத்துவீக சமஷ்டி | ஞாதுரு மோகம் | மனம் தாண்டல். | புத்தி சங்கமம் | சித்தம் சுக்கிலம் | அகங்கா ரம் மயிர் |
| இராசத சமஷ்டி | சமானன் லச்சை | வியானன் ஓடல் | உதானன் சோம்பல் | அபானன் உதிரம் | பிராணன் நரம்பு |
| சாத்துவீக வியஷ்டி | சுரோதித் ரியம் பயம் | தொக்கு உட்காரு தல் | சட்சு நித்திரை | சிங்குவை வியர்வை | ஆக்கிரா ணம் தோல் |
| விஷயம் | சத்தம் துவேஷம் | பரிசம் நடத்தல் | ரூபம் தாகம் | ரசம் மூத்திரம் | கந்தம் மாமிசம் |
| இராசத வியஷ்டி | வாக்கு ராகம் | பாணி படுத்தல் | பாதம் பசி | பாயுரு உமிநீர் | உடஸ்தம் அஸ்தி |

எப்படியென்னில்:—பிருதிவியிற் பிருதிவி அஸ்தி. பிருதிவியில் அப்பு மாமிசம். பிருதிவியில் அக்கினி சர்மம். பிருதிவியில் வாயு நரம்பு. பிருதிவியில் ஆகாசம் ரோமம். ஆக ரு-ம் பிருதிவியின் கூறு.

அப்புவில் அப்பு மூத்திரம். அப்புவில் பிருதிவி உமிநீர். அப்புவில் அக்கினி வியர்வை. அப்புவில் வாயு உதிரம். அப்புவில் ஆகாசம் சுக்கிலம் ஆக ரு-ம் அப்புவின்கூறு.

தேயுவிற்றேய்வு நித்திரை. தேயுவிற்பிருதிவி பசி. தேயுவில் அப்பு தாகம். தேயுவில் வாயு ஆலசியம். தேயுவில் ஆகாசம் சங்கமம். ஆக ரு-ம் தேயுவின்கூறு.

வாயுவில்வாயு ஓடல். வாயுவிற் பிருதிவி படுத்தல். வாயுவில் அப்பு நடத்தல். வாயுவில் தேயு உட்கார்தல். வாயுவில் ஆகாசம் தாண்டல் ஆக ரு-ம் வாயுவின்கூறு.

ஆகாயத்தில் ஆகாயம் மோகம். ஆகாயத்திற் பிருதிவி ராகம். ஆகாயத்தில் அப்பு துவேஷம். ஆகாயத்தில் தேயு பயம். ஆகாயத்தில் வாயு லச்சை ஆக ரு-ம் ஆகாயத்தின்கூறு.

ஆக உரு-ங் கூடி ஸ்தூலசரீரமாயிற்று. இவை சடமாகையினால் பஞ்சதன்மாத்திரைகளின் சாத்துவீகருணத்தினாலும், இராசதகுணத்தினாலும் உண்டான சூக்ஷ்மசரீரமிருப்பதற்குப் போகஸ்தானமாம். இதுவே சீவனுக்கு ஸ்தூலசரீரம். இதுவே சீவனுக்குச்சாக்கிராவஸ்தை. இதை யபிமானித்த சீவனுக்கு விஸ்வனென்றுபெயர்.

இனி நால்வகையோனியாவன:— அண்டசம்-உற்பீசம்-சுவேதசம்-சராயுசம் ஆக-ச. இவற்றுள் அண்டசத்திற்பிறந்தவை பட்சி பன்னகமுதலியன. பையிற்பிறந்தவை தேவர், நரர், மிருகமுதலியன. வேர்வையிற்பிறந்தவை, ஈ, பேன், மசக முதலியன. நிலத்திற் பிறந்தவை விருக்ஷம், கொடி, செடி முவலியன.

சிலசாஸ்திரங்களில் சூட்சுமசரீரத்திற்கு கூ-தத்துவங்களென்று சொல்லியிருக்க இவ்விடத்தில் உ௫ - தந்துவங்களாகச் சொல்லுவானேனெனில்.

பஞ்ச தன்மாத்திரைகளின்றிச் சூட்சமசரீரந் தோன்றமாட்டா தாகையால் உச-தத்துவங்களென்று சொன்னதே பிரமாணம்.

அந்தக்கரணம்-ச. ஞானேந்திரியம்-ரு. ஆக கூ-ம் ஞானசத்தி யாகையால் சாத்துவீககுணமென்றும், வாயுக்கள்-ரு. கன்மேந்திரியம்-ரு. ஆக க0-ம் கிரியாசத்தியாகையால் இராசத குணமென்றும், ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் ஒன்றோடொன்று சேராமல் வெவ்வேறாகையினால் வியஷ்டியென்றுஞ் சொல்லப்படும். ஆகையால் பஞ்சதன்மாத்திரைகளை விஷயமாகக்கழித்து அந்தக்கரணம்-ச. வாயுக்கள்-ரு. ஞானேந்திரியம்-ரு. கன்மேந்திரியம்-ரு. ஆக ககூ-ங் கூட்டிச் சூட்சம சரீரங்களென்று சிலர் சொல்லுவார்கள்.

இவற்றின் கிரியை எப்படியென்னில்:—

ஞானம்-சமானவாயுவுடன்கூடிச் சுரோத்திரேந்திரியத்தை அதிஷ்டித்துச் சத்தவிஷயத்தையறியும். ஆகையால் வாக்கு வசனிக்கும்.

மனம்-வியானவாயுவுடன்கூடித் தொக்கேந்திரியத்தை யதிஷ்டித்துப் பரிசவிஷயத்தையறியும். ஆகையால் பாணி இடுதலு மேற்றலுஞ்செய்யும்.

புத்தி-உதானவாயுவுடன்கூடிச் சக்ஷேந்திரியத்தையதிஷ்டித்து ரூபவிஷயத்தையறியும். ஆகையால் பாதம்கமனிக்கும்.

சித்தம்-அபானவாயுவுடன்கூடிச் சிங்குவேந்திரியத்தை யதிஷ்டித்து ரசவிஷயத்தையறியும், ஆகையால் உபஸ்தம் ஆனந்திக்கும்.

அகங்காரம் - பிராணவாயுவுடன்கூடி ஆக்கிராணேந்திரியத்தை யதிஷ்டித்து கந்தவிஷயத்தையறியும். ஆகையால் பாயுரு மலவிசர்ச்சனஞ்செய்யும். இவைகளே இந்தத் தத்துவங்களின் கிரியைகளாம். இதை அத்தியாரோப புத்தியென்று சொல்லப்படும்.

இனி அபவாதயுத்தியாவதேதென்னில்:—

சொரூபமுதல் ஸ்தம்பபரியந்தம் உண்டானமுறைமைப்படியே ஒன்றிலொன்றொடுக்கிச் சொரூபமாகக் காண்பதே அபவாதயுத்தியாம்.

இங்ஙனமாகில் அது நீயானாயென்னும் அத்துவிதானந்த சுகத்தைப் பெறுவதெப்படியென்னில்.

நீயது வானாயென்று ஆசிரியர் பிரகடமாக உபதேசித்தருளு முறைமைப்படி முன்னர் நீயென்னுஞ் சீவனுக்குண்டான சரீரத்திரயமும், அவஸ்தாத்திரயமும், அபிமானத்திரயமும், ஆக கூ-ங்கழித்து அதிற்சேடித்துநின்ற சீவசாக்ஷியாகிய கூடஸ்த தரிசனஞ்செய்து, பின்னர் அதுவென்னும் ஈஸ்வரனுக்குண்டான சரீரத்திரயமும், அவஸ்தாத்திரயமும், அபிமானத்திரயமும், ஆக கூ-ங் கழித்து அதிற்சேடித்துநின்ற ஈஸ்வர சாட்சியாகிய பிரமதரிசனஞ்செய்து, அப்பால் ஆனாயென்னும் பதார்த்தமாகிய ஆனந்தாதீதமே தற்சொரூபமாய் கூடஸ்த பிரமமென்னுந் துவித பாவமுமிறந்து, அத்துவிதானந்தத்திலமிழ்ந்தி, மதுவுண்டவண்டுபோற் சுகித்திருத்தலாம். இதுவே சனகன், மாவலி, பகிரதன் முதலிய பெரியோர்களனுபவித்த சகசானந்தானுபூதியாகும். இதைச் சற்குருகடாக்ஷத்தினாலுண்டாகும் சுவானுபூதியினாற் கண்டுகொள்க.

இக்கட்டளை யியற்றினார் வேதசிரேணி சிதம்பரசுவாமிகள்.

## உபதேசவுண்மைக்கட்டளை

## முற்றிற்று.

---

சற்குருநாதன் துணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்த தசாவத்தைக் கட்டளைச் சுருக்கம்.

மோக்ஷமுண்டென்கிற எந்த மார்க்கத்துக்கும் உபக்கிரமத்திற் பந்தமும், உபசங்காரத்தில் முத்தியும், சித்தாந்தமாகையினாலே இம் மார்க்கத்தினுடைய பந்தமுத்தி வியவகாரஞ் சுருக்கமாகச் சொல்லப்படாநின்றதெப்படியெனில்:—

சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தமென்னும் இலக்கணத்தையுடைய சுயம்பிரகாசமாகிய பரவஸ்துவின் கண்ணின்று வாசகஞ்செயவொண்ணாத பின்னாசத்தி தோன்றும்; அதினின்றும் மாயை தோன்றும்; அதில் ஊர்த்த மாயையினின்றும் பரதத்துவந் தோன்றும்; அதினின்றும் வியோமந் தோன்றும்; அதிற் காலபரந் தோன்றும்; அதோமாயையினின்றும் புருடன் றோன்றும்; அதில் மூலப்பகுதி தோன்றும்; அதில் மான் தோன்றும்; அதில் ஆங்காரந் தோன்றும்; அந்தவாங்காரந் திரிகுணமாக விரியும். அவையிற் சாத்துவிதாங்காரத்தில் மனமும், ஞானேந்திரியங்களைந்துந் தோன்றும்; இராசத வகங்காரத்தில் கன்மேந்திரியங்களைந்துந் தோன்றும். தாமதவாங்காரத்தில் சத்தாதிகளைந்துந் தோன்றும். இந்தச்சத்தாதியைந்தையும் ஒவ்வொன்றை யிரண்டுகூறுசெய்து அவையிலொருகூற்றில் ஒவ்வொன்றை நன்னான்கு கூறாகச்செய்து தனது கூறல்லாத நாலினுங்கூட்டப் பஞ்சீகரண தூலபூதமாம். உபக்கிரம முற்றும்.

இனித் தத்துவங்களினுடைய வகை யெப்படி யென்னில்:—

பஞ்சீகரண தூலபூதமைந்து, சத்தாதியைந்து, ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரியமைந்து, அந்தக்கரணம் நாலு, புருடன் ஒன்று, காலபரம் ஒன்று, வியோமம் ஒன்று, பரம் ஒன்று ஆகத்தத்துவமிருபத்தெட்டின்மேல் மாயையொன்று, பின்ஞசத்தி யொன்று ஆக ௩0. இவையே பந்தம். இனி யிம்முப்பதும் நீங்கி மேற்சுயம்பிரகாசத்தை யடைதலே உபசங்காரம் இதற்கு மார்க்கமெப்படி யென்னில்:—

தூலபூத மைந்து, சூட்சுமபூத மைந்து, ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரிய மைந்து ஆக இருபதுஞ் சீவசாக்கிரம். இதில் திரோதாயி நீங்கும். மனம், புத்தி, ஆங்கார மூன்றுஞ் சீவசொற்பனம். பிரகிருதி, சீவசுழுத்தி, புருடன், பரசாக்கிரம் இதிற் பிரகிருதி நீங்கும். காலபரம், பரசொப்பனம் இதில் அசுத்தமாயை நீங்கும். வியோமம், பரசுழுத்தி, பரம், சிவசாக்கிரம், மாயை, விசுவக்கிராசம். இதிற்கன்ம நீங்கும். பின்ஞசத்தி, உபசாந்தம் இதிற் சுத்தமாயை நீங்கும். சுயம்பிரகாசமே குருதுரியம் இதில் ஆணவம் நீங்கும். ஆகவவ்வைதபத்து இதுவே முத்தி. இவ்வொழுங்கில் ஞானாசாரியார் கைகாட்டும்படிக்குச் சமாதியிலிருந்து அநுபவம் பண்ணிக்கொள்ள வேண்டியது.

வேதாந்த தசாவத்தைக்கட்டளைச் சுருக்கம்

முற்றிற்று.

---

சற்குருகடாக்ஷம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்த தசகாரியக்கட்டளை.

---

நித்திய நைமித்திய காமியப் பிராயச்சித்த உபாசனாதி கன்மங்களை அனேக ஜென்மாந்தரங்களிலே பண்ணப்பட்டுக்கிருதகிருத்தியனாய், "நித்தியா நித்தியவத்து விவேகம், இகாமுத்திரார்த்த பலபோகவிராகம், சமையாதிசட்கம், முமூட்சுத்துவம்" என்கிற சாதன சதுஷ்டய சம்பத்தியுடைய அதிதீவர பக்குவமுடையோர் மேற்சென்னமெடாத வகைக்கு, பிரமகைவல்லியம் சமாதியிலிருந் தடைதற்கு மேலான மார்க்கம் வேதமுடிவாகிய உபநிடதத்தில் தசகாரியமாக இருக்கும். இதற்குத் தொகை யெப்படியெனில்:—

மாயாரூப மென்றும், மாயாதரிசனையென்றும், மாயாசுத்தி யென்றும், சீவரூப மென்றும், சீவதரிசனை யென்றும், சீவசுத்தி யென்றும், பிரமரூப மென்றும், பிரமதரிசனை யென்றும், தேககைவல்லிய மென்றும், விதேககைவல்லிய மென்றும் ஆகப் பத்து. இது தொகையாகிய சிரவணம். இதற்குவகை யெப்படியெனில்:—

மாயாரூபமாவது சர்வப் பிரபஞ்சங்களும் இத்தனை அங்கிசத்துடனே கூடி விளங்குமெனக் காண்கை. மாயாதரிசனமாவது அந்த அங்கிசத்தில் இத்தனை யங்கிசம் மாயாசம்பந்தமெனக் காண்கை. மாயா சுத்தியாவது, அதனுடைய வதிட்டானத்தைக் காண்கை. சீவரூபமாவது, விளக்க விளங்கப்பட்ட மாயா ரூபத்தைக் காணுதற்

கோரறிவுண்டெனக் காண்கை. சீவ தெரிசனமாவது, அவ்வறிவைத் தானெனக் காண்கை. சீவசுத்தியாவது, அவ்வறிவி னதிட்டானத்தைக் காண்கை. பிரம ரூபமாவது, மாயாரூபத்துக்குஞ் சீவரூபத்துக்கு மதிட்டானம் பிரமமெனக் காண்கை. பிரம தரிசனமாவது, ஆரோபிதமு மதிட்டானத்தைவிட வேறில்லாததுபோல மாயையுஞ் சீவனும் பிரமமாகத்தானே காண்கை. தேக கைவல்லியமாவது அந்தப் பிரமமாகத்தானே காண்கிறபோதமு நீங்கி ஆனந்த மயமாய்நிற்கை. விதேக கைவல்லியமாவது, அந்தப்பிரமானந்தாதீதத்தையடைகை. இது வகையாகிய மனனம். இனி விரிவு எப்படியெனில்:—

சந்தாதி விடயத்தி லவாவறுத்து ஏகாந்தத்திலிருந்து ஸ்திதியாசனத்தில் சமாதியைப்பொருந்திச் சாட்சாத்கரிக்கும்வகை.

மாயாரூபமாவது இதுவென்று காணப்பட்ட சர்வப்பிரபஞ்சமுமுண்டாய் விளங்கி ரம்மியமாய் நாமரூபமாய் இவை ஐந்தங்கிசத்துடனே விளங்குதலைக் காண்கை.

மாயா தரிசனையாவது அந்த ஐந்தங்கிசத்தில் பின்பு சொல்லப்பட்ட நாமரூபமாகிய விரண்டங்கிசமு மாயையெனக் காண்கை.

இனி மாயாசுத்தியாவது இந்தமாயா சம்பந்தமாகிய நாமரூபத்துக்கு முன்சொல்லப்பட்டனஉண்டாகி விளங்கி ரம்மியமாகிய மூன்றங்கிசத்தை யுடைய அதிட்டானத்தைக் காண்கை.

சீவரூபமாவது ஐந்தங்கிசத்துடனே விளங்கப்பட்ட சர்வத்தையும் நோக்கி அவையில் பின்பு சொல்லப்பட்ட இரண்டங்கிசமு மாயா சம்பந்தமென்றும், அந்த மாயாசம்பந்தமும் முன்பு சொரூப சம்பந்தமாகிய சச்சிதானந்தத்தைவிட வேறின்மையென்றுங் கண்டவறிவொன் றுண்டெனக் காண்கை.

சீவ தரிசனையாவது நாமரூப மயமாகிய கேவலமும் நீங்கிச் சச்சிதானந்தமாகிய பிரமத்தைப்பற்றி நிற்கை. இது சாக்கிராவத்தை.

சீவசுத்தியாவது அந்தச் சச்சிதானந்த மயமாகிய பிரமத்தை அவ்வொளியே கண்ணாகக் கொண்டறிந்து அதிற் சீவதத்துவபோத மடங்கி அச்சீவனுக்கு அதிட்டானமாகிய பிரமந் தானாய்நிற்கை.

பிரமரூபமாவது மாயா ரூபமாகிய நாமரூபத்திற்கும் அதையுணருஞ் சீவனுக்கு மதிட்டானமாய் விளக்கப்பட்டது சச்சிதானந்தமே யெனக் காண்கை. இது சொற்பனாவத்தை.

பிரம தரிசனையாவது பழுதை கிளிஞ்சில், கட்டை, சூரியன், தங்கம், மண் முதலிய வதிட்டானங்களில் கற்பிக்கப்பட்ட பாம்பு. வெள்ளி, கள்வன், கானனீர், ஆபரணம், கடகலச முதலிய வாரோபிதம் விசாரித்தவிடத்தில் அவை அவ்வதிட்டானமேயாகி விளங்குதல்போல ஆரோபிதமாய் விளங்கபபடுகிற நாமரூபமயமாகிய மாயையும், அம்மாயையை யறியப்படாநின்ற சீவனும், அதை விளக்கப்பட்ட பரமும், நாமரூபமறியப்பட்டதானும், அறிவிக்கப்பட்ட பரமே யெனக் காட்டாமல், நாமரூபத்தையுந் தன்னையும் வேறுபோல் விளக்கப்பட்ட அஞ்ஞானமும், அதற்கு நியதமாகிய கர்மமுமாகிய ஐந்து பதார்த்தமும் அதிட்டானமாகிய சச்சிதானந்தசொரூபமாகக் காண்கை. இது சுழுத்தியவத்தை.

தேககைவல்லியமாவது அப்படி அந்த ஐந்து பதார்த்தமுஞ் சொரூபமாகக் காணப்பட்டவாதனையும் நீங்கி, அவ்விடத்திற் பிரகாசிக்கப்பட்ட சொரூபானந்தத்தைப் பெற்று நிற்கை. இது துரியம்.

விதேக கைவல்லியமாவது அந்தச் சொரூபானந்தத்தைப் பெற்று ஆனந்தாதிதனாய் வாக்குமனாதீத கோசரமாகிய பிரமகைவல்லி

யத்தைப் பெறுகை. இது துரியாதீதம். இவ்வொழுங்கில் குரு காருண்ணியத்தினாலே சென்று, தசகாரியமு மனுபவப்பட்டு, பிரமகைவல்லியமடையில் அப்போது பந்தமுத்தி வியவகாரஞ் சொற்பனம் போலக் கண்டு, பழையபடியாய் நின்றால், மேற் சனனத்துக்கு வித்தாகிய ஆசை பய மிரண்டும் தான் சர்வானந்தத்திற்கு மதிட்டானமாகிய பிரம்மானந்த மயமாகையால் ஆசையும், தற்சொரூபமாகிய பிரம்மத்தைத்தவிரப் பிரத்தியக்கு வேறொன்றுமில்லாத தாகையால் பயமு மொழியும்.

## வேதாந்த தசகாரியக்கட்டளை

முற்றிற்று.

குருபாதந்துணை.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பிரமோபதேசக் கட்டளை.

## கடவுள் வணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

அருமறையாகமத்தினுளதனிப்பொருளே
கருணையினாலவனிதன்னில்
திருவுருவாய்வந்தருளிமலமயக்காற்
செகநாட்டஞ்செறிந்துவாடும்
தெரிவிலியேன்றனக்கருணாட்டங்கொடுத்தென்
றனைமுன்னர்த்தெரித்துப்பின்னர்
ஒருவடிவாந்தனையறிவித்தொன்றாக்கு
மருளிறையையுன்னிவாழ்வாம்.

ஸ்ரீ பரமானந்த உல்லாச வைபோகத்தைத் தந்தருளும் தத்துவ ஞானத்திற்கேதுவாகிய சிரவணாதிகளில் அதிகாரியாக்கும் நித்தியா நித்தியவஸ்து விவேகம், இகமுத்தரார்த்த பலபோகவிராகம், சமாதி சட்கம், முமுக்ஷுத்துவம் என்கின்ற சாதனசதுஷ்டய சம்பத்தை

யுடைய ஓர் பக்குவியானவன், மலச்சிறையில் கட்டுண்டவனுய்ப் பவத் துன்பப்பட்டு வெகுகாலம் இக்கொடிதாகிய துன்பத்தை நீக்கி மோக்ஷவின்பத்தை அளித்து இரக்ஷிப்பவரெங்குளரென்று தேடும் அதிதேட்டரவால் பாலுக்குள் மறைந்து பூரணமாயிருந்தநெய் கடைதலினல் தடித்து வெளிப்பட்டுத்தோன்றியதுபோல,தன்னுண்மறைந்திருந்த சச்சிதாநந்த நித்தியபரிபூரண சிவசொரூபமே பாசவைராக்கியம், ஜீவகாருண்ணியம், ஈசுரபக்தி, பிரமஞானம் ஆகிய நான்குடனுங்கூடி விளங்கும் ஸ்ரீ சற்குருசுவாமிகளாகத் திருவுருவங்கொண்டு, கட்புலனுக்கு வெளிப்பட்டுத்தோன்ற, இப்படித்தோன்றிய ஸ்ரீ சற்குருசுவாமிகளது உபயசரணரவிந்தங்களில் தண்டாகாரமாய் விழுந்து கோவென்றழுது முறையிட்டவனைப்பார்த்தருளி அப்பா நினக்குற்ற ஆபத்து யாதென்று கேட்டருள.

சுவாமி! பலாபேக்ஷையின்றி அடியேனை வலிதிற்றடுத்தாட்கொள்ளவந்த கிருபாநிதியாகிய வென்னுடைய ஞானசாரியரே. தேவரீர் அன்றி மற்றியாவராலு நீக்குதற்கரிய இப்பிறவித்துன்பமே எனக்குற்ற ஆபத்தென்று விண்ணப்பஞ்செய்து, தைந்நியவாக்கியங்களால் தோத்திரமும் ஆராமையுற்ற மனத்தினலாதரவும் அடக்கமாகிய காயத்தால் அர்ச்சனை நமஸ்காரங்களும் ஆப்தம், அங்கம், தானம், சற்பாவமாகிய பணிவிடைகளுஞ்செய்து நின்றவனது பக்குவதசையைச் சோதிக்க உண்மையாகத் தோன்றலால் திருவுளத்தில் கிருபை கூர்ந்து, வாராய் நமதுமாணக்கனேயென் றழைத்துத் திருவடியைச்சூட்டி, சமீபத்திலிருக்கச்செய்து, விதிப்படி அவனதுடல்பொருளாவி மூன்றையுங் கைக்கொண்டு, தமதுதிருவருண்ஞானக்கண் தந்தருளி மலரகித பிரமமான நினக்கெப்பொழுதும் பிறவித்துன்பம் முயற் கோடுபோன்று கிடையாதென்று தமது மலர்க்கரத்தால் சீடனது சிரத்தைத்தொட்டுச் சத்தியஞ்செய்துத்தருள.

சுவாமி! மலமாவது யாது? ரகிதமான பிர்மமாவது யாது? நான் யாவன்? இவற்றை அடியேனுக்குத் தெரியத் திருவுளம்பற்றவேண்டுமென்ன?

மலமாவது அஞ்ஞானம், மாயை, கன்மம் எனத்திரிவிதமாயிருக்கும்; சூரியாதி அக்கிநிய பிரகாசங்களைவேண்டாது சகலத்தையுந் தோற்றுவித்துக்கொண்டு தானுஞ் சுயம்பிரகாசமாய்ச் சதாவிளங்குகின்றபடியால் அஞ்ஞான மலரகிதமாயும், சகலாதாரத்திற்குந் தன்னைத்தவிர வேறொருவரில்லாமல் தானே அத்துவிதமாய் விளங்குகின்றபடியால் மாயாமலரகிதமாயும், தேசகாலவஸ்து பரிச்சேதமின்றிப் பரிபூரணமாய் விளங்குகின்றபடியால் கன்மமலரகிதமாயும், விளங்குகின்றதே பிரமம்; நீயோ! அறிவாய்விளங்குகின்ற சொரூபமே எனத் திருவாய்மலர்ந்தருள,

சுவாமி! அடியேன் புத்திஈனத்தாற்செய்யும் விண்ணப்பங்களுக்குச் சலியாமல் திருச்செவிசாத்தித் திருவுளங்கொண்டு பிரதியுத்தரங் கட்டளையிட்டருளவேண்டிய கடமை, தேவரீருக்கிருப்பதால் கிருபைசெய்யவேண்டியதென்று துதித்து, நான் அறிவாய்விளங்குந் தன்மையை முன்னர்த் தெரியத் திருவுளம்பற்ற வேண்டுமென்ன,

நின்னைக் கரதலாமலகம்போல உண்மையாகத் தெரிவிக்கின்றோம், நீயுந் தெரிந்துகொள்ளக் கடவாயென்று திருவாக்கருளி, இங்கே விளங்காநின்ற சகலபிரபஞ்சங்களும் எத்தனைபதார்த்தங்களாகவிருக்கின்றனவென்ன,

சுவாமி! விசாரித்துப்பார்க்குமிடத்துச் சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமாகிய ஐந்துபதார்த்தங்களாக இருக்கின்றனவெனலும்,

ஆனால், இங்ஙனம் யாதினாலறிந்தாயென்ன,

சுவாமி! என்னாலேயே அறிந்தேனெனலும்,

நீயாரென்ன,

சுவாமி! அவயவசகிதமாகிய இத்தேகமேயானெனலும்,

இத்தேகங்கொண்டோ முன் சொன்ன ஐந்துபதார்த்தங்களை அறிந்தா யென்ன,

சுவாமி! இம்மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் அறிந்தேனெனலும்,

ஒருவனுக்குச் செவியிருக்கவுஞ் செவிட்டுத்தன்மையால் சத்தமறியாமையும், மெய்யிருக்கவும் திமிரால் ஸ்பரிசமறியாமையும், கண்ணிருக்கவும் படலத்தால் ரூபமறியாமையும், வாயிருக்கவும் நாவறட்சியால் ரசமறியாமையும், மூக்கிருக்கவும் அடைப்பால் கந்தமறியாமையும் வருவானேன் என்ன,

சுவாமி! தேவரீர்வாக்கியபிரகாசத்தால் நோக்கும்போது இத்தேகம் அல்லாமலே ஐம்புலன்கள் வேறே உள்ளனபோலத் தோன்றுகின்றன; அவ்வையாவையோ நன்றாகத்தெரியத் திருவுளம்பற்றவேண்டுமெனலும்.

அவைதாம் சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்நுவை, ஆக்கிராணம் என்னும் ஞானபஞ்சேந்திரியங்களென்று சொல்லப்படுவனவென்ன,

சுவாமி! அப்படியானால் இத்தேகம் யாதெனலும்,

விசாரித்துப்பார்க்குமிடத்தில் இஃதுமுன்சொன்ன ஐந்துபதார்த்தங்களோடும் சேர்க்கப்பட்டுத் தேகாதி பிரபஞ்சமென்று சொல்லப்படுமென்ன,

சுவாமி! முன்னர்த் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய ஞானேந்திரியங்களின் சொரூபத்தை நன்றாகத்தெரியத் திருவுளம்பற்றவேண்டுமெனலும்,

மெய், வாய், கண், மூக்கு, செவிகளல்லாமல் அவற்றினிடமாயிருந்து சத்தாதி பஞ்சவிஷயங்களை அறிவனவாயும், மனங் கலவாதபோது அவற்றைப் பகுத்தறியாமல் பொதுவாய் அறிவனவாயும், எவ்வறிவுகளுளவோ அவையே ஞானேந்திரியங்களென்ன,

சுவாமி! இந்திரியங்களென்பவை தேவரீர்கிருபையால் தெரியவந்தன. மனமென்று திருவாய்மலர்ந்தருளினீர் இந்திரியங்களன்றி மனமென்பதுண்டாயின் அதன்சொரூபத்தை விவேகசூனியனாகிய அடியேனுக் கறியத் திருவுளம் பற்றவேண்டுமெனலும்,

தேகேந்திரியங்களை அபேக்ஷியாமல் லோகாலோகாந்தரங்களில் கமனாகமனம்பண்ணுவதாயும், மனோராச்சியமாகிய சூக்ஷுமவிஷயங்களை அறிவதாயும், ஜீவன் கலவாதபோது அவற்றைப் பகுத்தறியாமல் மறதியோடும் பொதுவாயறிவதாயும், யாதோராறிவுண்டு! அஃதே மனமென்ன.

சுவாமி! இம்மனத்தைக்கொண்டு பார்க்கும்போது இந்திரியங்கள் அபாவமா யிருக்கின்றனவெனலும்,

ஒருவனுக்கு மனமிருந்தும், முன்னர்ச்சொல்லிய மெய், வாய், கண், மூக்குச் செவிகளிருந்தும், சத்தாதி விஷயங்களை அறியாமற்போகின்றபடியால் இவற்றையல்லாமலும் இந்திரியங்கள் வேறே உண்டென்பதற்குச் சந்தேகம் வேண்டுவதில்லையென்ன,

சுவாமி! மனமென்பதும் தயாசமுத்திரமாகிய தேவரீர் கிருபையால் தெரியவந்தது, ஆயினும், முன்னர்ச்சீவனென்று திருவாய்மல

ர்ந்தருளினீர் இம்மனமன்றிச் சீவனென்பானுண்டாயின் அவனது சொரூபத்தையும் பிரஞ்ஞாமந்தனாகிய அடியேனுக்குவிளங்கத் திருவுளம்பற்றவேண்டுமெனலும்,

தேகேந்திரிய மனங்களை அபேக்ஷியாமல் தூஷ்ணீம் பூதாவஸ்தையையும், மூர்ச்சாவஸ்தையையும் அறிவதாயும், ஞானத்துமாவாகிய கூடஸ்தர்கலவாதபோது தன்னை அறியாமல் சூனியவிஷயத்தை அறிவதாயும் யாதோரறிவுண்டு? அஃதே ஜீவனென்ன,

சுவாமி! இச்சீவனைக்கொண்டு பார்க்கும்போது மனமானது அபாவமாயிருக்கின்றதெனலும்,

தூஷ்ணீம் பூதாவஸ்தையாதிகளில் ஜீவனிருக்கவும், இந்திரியங்களும் பொதுப்பார்வையாயிருக்கவும், மனம் யாதொன்றுமினையாய விருக்கின்றதென்னும் அநுபவமிருக்கின்றபடியாலும், விஷயபரிணாமமில்லாத சூக்ஷ்ம அசைவோடு இருக்கின்றதை நுண்ணிதாய்ப் பார்க்கின்றபோதிருக்கின்றபடியாலும், மனமில்லையென்று நீ சொல்லியது ஆராயாத அவிவேகமல்லது விவேகம் அன்றென்று திருவுளத்தில் சற்று முனிவுகொண்டதுபோலக் காட்டியருள,

மிகவும் நடுநடுங்கி சுவாமி!பூதேவி கோபிக்கில் இருக்கவேறிடம் இன்மைபோல, நற்றாயினும் அதிகபரிவாய் வந்தருளுந் தருமமூர்த்தியே தேவரீர் திருவுளத்தில் முனிவுகொள்ளின் அடியேன் உய்யும் வகை காண்கிலேனென்று மனம் அழலிற்பட்ட மெழுகெனவுருகிப் பல்வாறு வந்தனைசெய்யாநிற்கத் திருவுளம் இரங்கி அஞ்சேலென்று அபயாஸ்தஞ் செய்தருள,

சுவாமி! ஜீவனென்பானைத் தேவரீரநுக்கிரகத்தால் அறிந்தனன், ஆயினும், ஆவரணம்நீங்காமல் அயருகின்ற அடியேனுக்குச் சீவ

ளையன்றி ஞானாத்மா உண்டாகில் அதனது சொரூபத்தைத்யும்தெரியத்திருவுளம்பற்ற வேண்டுமெனலும்?

முன்னர்ச்சொல்லிய ஐந்துபதார்த்தங்களாகிய பிரபஞ்சங்களையும், தேகத்தையும், இந்திரியங்களையும், மனத்தையும், அறிகின்ற ஜீவனுக்கும் சாக்ஷிமாத்திரமாயும் விலக்ஷணமாயும் விளங்குகின்ற யாதோரறிவுண்டு? அஃதே ஞானாத்மா என்ன,

சுவாமி! அதை நோக்குமிடத்து ஒன்றுந் தெரியாமல் அந்தகாரமா யிருக்கின்றதெனலும்,

அவ்வந்தகாரமாகிய மூலாஞ்ஞானத்தை அறிந்து சொல்லுகின்றாயோ? அறியாமற் சொல்லுகின்றாயோ? என்ன?

சுவாமி! அறிந்தே சொல்லுகின்றேனெனலும்,

அங்ஙனமறிந்த நீயே, ஞானாத்மா என்ன,

சுவாமி! இப்படித் தேவரீர் அநுக்கிரகித்தது அநுமானமாய் இருக்கின்றதல்லது, தன்மைப்பிரத்தியக்ஷமாக விளங்கவில்லையே எனலும்,

ஆநந்தமடைந்து ஆனால் அவ்வந்தகாரத்தை அதோமுகமாக இருந் தறிகின்றாயோ? ஊர்த்தமுகமாக இருந் தறிகின்றாயோ என்ன?

சுவாமி! அதோமுகமாக இருந்து அறிகின்றேன் எனலும்,

அவ்வாறு அறியாமலே அப்பார்வையை ஊர்த்தமுகமாகத் திருப்பி நமதுதிருவருளினால் பார்க்கக்கடவாயென்று திருவுளத்திலும் நினைத்தருள,

சுவாமி! அப்படியே பார்க்குமிடத்தில் நான் சுயம்பிரகாசமாய் விளங்குகின்றேன் எனலும்,

ஆனால் அங்குண்டான சுவாநுபவத்தைச் சொல்லுவாயென்ன,

சீடன் தனது சுவாநுபவ பிரஞ்ஞையோடும் ஆசிரியரது திருமுகத்தைநோக்கி சுவாமி தேசிகரத்தினமே அடியேனுடைய சொரூபத்தை அநாதிதொட்டு இன்றுகாறும் தெரிந்துகொள்ளாமல், அசுத்தமாயும் துக்கத்துக்கு எதுவாயும் அநித்தியமாயும் சடமாயுமுள்ள தேகாதிகளாய்த் துன்பப்பட்டுச் சனனசாகரத்தில் மூழ்கிக் கரைகாணமல் இடுக்கணுறுகின்ற என்னை இன்று நினதுதிருவருளாகிய புணையால் சொரூபமாகிய கரையிலேற்றி இரக்ஷித்த ஞானபானுவே எனதறிவிற்கு அறிவாய் விளங்காநின்ற சிற்பராநந்தச் செல்வமே அரா, அரா அடியேன் என்னபாக்கியஞ்செய்தேனோ என்னை யான் கண்டவிடத்தில் கோடிசூரிய பிரகாசத்தாலும் நீங்குதற்கு அரிய ஜீவத்வமூலாஞ்ஞானமாகிய அந்தகாரமானது ககனாரவிந்தம்போலச் சொல்லளவிற்குமில்லாமல் ஒழிந்தபோதுளவாகிய சிற்சுகோதய விலாசமாகிய பேராநந் தாதிசயாநுபவத்தைச்சொல்ல என்றால்அது வாக்கிற்கும் மனத்திற்கும் அறிவிற்கும் எட்டாமலிருப்பதால்தானே தானாய் அநுபவித்தறிவதே அல்லது சொல்லக்கூடுவதன்று. இங்ஙனம் அருளிய தேவரீர் கிருபாமான்மியத்தை யாதெனப் புகழ்வேன் என்று பேரன்போடு அநேகவிதமாகத் தோத்திரஞ்செய்து நமஸ்கரித்துச்சுவாமி! தேகேந்திரிய மனோ ஜீவனுக்கும் சாக்ஷியாய் அப்பாற்பட்டு விலக்ஷணமாய் விளங்குகின்ற அறிவாகிய நான் அவைகளாய்ப் போன மார்க்கத்தைத் தெரியத் திருவுளம் பற்றவேண்டுமெனலும்,

இப்படிச் சகோதயமாய் விளங்குகின்ற நின்னிடத்தில் அநாதியாய் இராநின்ற மூலாஞ்ஞான சக்தியினல் ஆரோபிதமாகத்தோன்றும், ஓரசைவாகிய சங்கற்பசக்தியின் வசத்தினல் ஜீவனுகியும், அப்படிச் சீவனுகிய நீயே பஞ்சேந்திரியங்களின் வசத்தினல் மனமாகியும் அப்படி மனமாகிய நீயே தேகவசத்தினல் பஞ்சேந்திரியங்களாகியும், அப்படிப் பஞ்சேந்திரியங்களாகிய நீயே தேகாபிமான வசத்தினல் தேகமாகியும், இத்தேககரணங்களை யானென்னு மகங்காரமும், இதற்குப் போக்யசாதனங்களான புவனபோக பதார்த்தங்களை எனதென்னும்மமகாரமும் அடைந்து மிகவுங் கொடிதாகிய பவத்துன்பப்பட்டாய் இனிமேல் இந்திரிய விவகாரமாய்ப் பிரேரிக்கும் சாக்கிராவஸ்தைக்கும், மனேவிவகாரமாய்ப் பிரேரிக்குஞ் சொப்பனவஸ்தைக்கும், ஜீவவிவகாரமாய்ப் பிரேரிக்கும், சுழுத்தியவஸ்தைக்கும், எப்போதும் விலக்ஷணமான சாக்ஷிமாத்திரமாய் விளங்குவாயேல் மூலபிரகிருதிமுதல் சகல பிரபஞ்சங்களும் தங்கத்தின்கண் மகுடாதியாபரணங்கள் தங்கமுமல்லாமலும் தங்கத்தைஅன்றி வேறுமல்லாமலும் விளங்குவனபோல, நின்னிடத்தில் தன்மயமாய்விளங்கிச் சாக்ஷிவாசனையும் கரைந்து சகஜாநந்தமாய் விளங்குமென் றருளிச்செய்ய,

சுவாமி! தேவரீர் கிருபையினல் எனதுசொரூபத்தை யானறியலாயினேன்; நானேஅந்தப்பிரமமானதற்குச் சந்தேகமில்லாமல் இருக்கும்பொருட்டுச் செய்யுஞ் சங்கைகளுக்கு உத்தரங் கட்டளையிட்டருளவேண்டுமென்று நமஸ்காரஞ்செய்து, தேவரீர் முன்னர்த்திருவாக்கருளிய திரிமலங்களுள் அஞ்ஞான மெத்தனைவிதம்? மாயையெத்தனைவிதம்? கன்மமெத்தனைவிதம்? இவற்றைத் தெரியப்பகுத்துத் திருவுளம்பற்றவேண்டும் எனலும்,

விஷயாஞ்ஞானமென்றும், சொரூபாஞ்ஞானமென்றும், அஞ்ஞான மிரண்டுவிதமாயிருக்கும். சத்துவகுணமாயையென்றும், ரஜோகுணமாயையென்றும், தமோகுணமாயையென்றும், மாயை மூன்றுவிதமாயிருக்கும். ஆகாமிய கன்மமென்றும், சஞ்சிதகன்மமென்றும், பிராரத்தகன்மமென்றும் கன்மம் மூன்றுவிதமா யிருக்குமென்ன,

சுவாமி! அவற்றின் தொழில்களைத் தெரியத் திருவுளம் பற்றவேண்டும் எனலும்,

சப்தாதி விஷயங்களை மறைப்பது விஷயாஞ்ஞானத்தினது தொழில், சொரூபத்தைமறைப்பது சொரூபாஞ்ஞானத்தினது தொழில், அதிஷ்டானமாகிய சச்சிதாநந்த பிரமத்தைச் சமஷ்டி அபிமான அறிவென்கின்ற ரூபமாகவும், சர்வஞ்ஞனாகிய ஈஸ்வரனென்கின்ற நாமமாகவும், ஆரோபிதமாகத் தோற்றுவிப்பது சத்துவகுணமாயையினது தொழில், வியஷ்டி அபிமான அறிவென்கின்ற ரூபமாகவும், கிஞ்சிஞ்ஞனாகிய ஜீவனென்கின்ற நாமமாகவும், ஆரோபிதமாகத் தோற்றுவிப்பது ரஜோகுணமாயையினது தொழில், சப்தாதிபஞ்சவிஷயங்களென்கின்ற ரூபமாகவும், அநேகவிதங்களாகிய ஜகத்தென்கின்ற நாமமாகவும், ஆரோபிதமாகத் தோற்றுவிப்பது தமோகுணமாயையினது தொழில், புண்ணியபாவ இச்சாசங்கற்பமாதியாய் வந்து வந்து அநுபவிக்கப்படாமல் வாசனையாகக் கட்டுப்படுவது ஆகாமிய கன்மத்தினதுதொழில், வாசனையாகக் கட்டுப்பட்டு மேல் அநேகம் பிறவிகளுக்குப் பீஜரூபமாக வர்த்தித்துப் பாகப்பட்டகன்மப்படிக்குத் தேகாதிகளைக் கொடுப்பது சஞ்சிதகன்மத்தினது தொழில் ஜாதி, ஆயுள் சுகதுக்கபோகமாக வநுபவிக்கவருவது பிராரத்த கன்மத்தினது தொழிலென்று அருளிச்செய்ய,

சுவாமி! இப்படித் தேவரீர் அநுக்கிரகித்த எண்வகைமலங்களும் அவற்றின்தொழில்களும் பிரமமாகிய என்னிடத்தும் ரகிதமா

ணவைகளை சுவாநுபவமாக விளங்கத் திருவுளம்பற்றவேண்டும் என னும்,

ஆனல், தெரியச்சொல்லுகின்றோம், வித்தியாவிநயத்தோடும் சூக்ஷமமான ஏகாக்ரசித்தத்தையுடையவனய்க் கேட்பாயாக. பிரம மாகிய தான் பிருதிவிமுதல் மூலபிரகிருதி பரியந்தமாகிய திருசியம் போன்று விஷயமாகாதபடியினுலும், பந்ததசையில் ஜீவனுக்கு முத லா அவஸ்தாதிரயங்களில் தோன்றும் ஸ்தூலம் சூக்ஷமம் சூனிய மான விஷயங்களையும் தோற்றுவிக்கின்ற சொரூபமாக விளங்குகின் றபடியினுலும், விஷயாஞ்ஞானமும் அதனது தொழிலுமில்லாமலு ம், அசத்துச் சடதுக்காதிகளைக் குறித்துச் சச்சிதாநந்த லக்ஷணதி களையுடைய திருக்குசொரூபாநுபவத்திற்கும், அதீதமாய் விளங்குகி ன்றபடியினுலும், முத்திதசையில் அவ்வநுபவத்தையும் விளங்குகி ன்ற சொரூபமாக விளங்குகின்றபடியினுலும், சொரூபாஞ்ஞானமும் அதனது தொழிலும் இல்லாமலும், குணதீத பிரமசொரூபமாகிய தன்னிடத்தில் ஈஸ்வரனுக்குரிய நாமரூபங்களும், ஜீவனுக்குரிய நா மரூபங்களும், ஜகத்திற்குரிய நாமரூபங்களும் ஆகிய ஆரோபிதமும், தன் னம்சமான அதிஷ்டான சச்சிதாநந்தத்தை அன்றி இல்லாமை யாய் விளங்குகின்றபடியினல் சத்துவகுண மாயையும், அதனது தொழிலும், ரஜோகுணமாயையும், அதனதுதொழிலும்,தமோகுண மாயையும், அதனது தொழிலும் இல்லாமலும், சூக்ஷமதேகசம்ப ந்தனய் இச்சிக்கின்ற ஜீவனிலும், இச்சைகளிலும் இச்சிக்கப்படும் பொருள்களிலும், உள்ளும் புறமும் தானேயாய் விளங்குகின்றபடியி னுலும், விக்ஷேபரூபமானமாயை பொய்யாயிருக்கின்றபடியினுலும், வாசனையாய்க் கட்டுப்பட மூலபிரகிருதியான இடம் இன்மையின லும் ஆகாமியகன்மமும், அதனதுதொழிலும் இல்லாமலும், இப்படி ஆகாமியம் இல்லாமையாலும், காரணதேகமாகிய அஞ்ஞானம் ஞா

னத்தால் சூனியமாய்ப் போனதினாலும், மேல்தேகத்திற்குரிய ஜீவன் சிவமாய்ப்போனதினாலும், சஞ்சிதகன்மமும் அதனதுதொழிலும் இல்லாமலும் இப்படிச் சஞ்சிதமில்லாமையினாலும், கன்மபோகங்களுக்குரிய ஸ்தூலசரீரமே பிரமாநந்த பூரணத்தில் கரைந்துபோனதினாலும், சகலமும் தனது சிற்சத்தி லீலாவிநோதமாய் முடிந்தபடியினாலும், பிராரத்தகன்மமும் அதனது தொழிலும் இல்லாமலும், சுயம்பிரகாசமாயும் அத்துவிதமாயும் பரிபூரணமாயும் விளங்குகின்ற நினதிடத்தில் அநுபவமாகவிருப்பதை நீயே சுவாநுபவத்தில் பார்த்துச் சொல்லென்ன,

சுவாமி! தேவரீர் அநுக்கிரகித்தருளியபடியே மலரகிதமாய்ப் பிரமமென்பதும் நானென்பதும்வேறின்றி ஒன்றாய் விளங்குகின்றேனெனலும்,

இஃதே மறைமுடிவாகிய சாந்தோக்ய உபநிஷதத்திற் கூறும் "தத்வமசி" என்னும் மஹாவாக்யார்த்தமும் மகேசரநுபவமும் நமது அநுபவமும்ஆம். இதில் சந்தேகமில்லை, ஆயினும், இப்படியாவுமறிந்த ஓர் ஞானவிருத்தியிருக்கின்றபடியால் அதையும் தன்மயமாக்கிக்கொண்டு விளங்குவதே நமதுபரமார்த்த சித்தாந்தம்; ஆதலால், அப்படிச்செய்யக்கடவாயென்று மௌநாநந்த சொரூபமாய் இருந்தருள,

சீடனானவன் மிகவும் அதிசயமடைந்து, சுவாமி! நல்லபுத்தியென்று தானும் அப்படியே அந்நிலை சகஜாநுபவமாகப் பெற்றெழுந்து, பலதரம் வலம்வந்து திருவடிகளில் பன்முறை அஷ்டாங்காதி நமஸ்காரங்களும் செய்தெழுந்து, நாத்தழும்பேற வாழ்த்தித் திருவுருக்காக்ஷியைக் கண்ணாரக்கண்டு களிக்குந்தோறும் கண்களிலாநந்தபாஷ்பம் பொழியவும், தனக்கருளிய பெருங்கருணையை நினைக்குந்தோ

றும் உரோமஞ்சிலிர்க்கவும் உடல் புளகாங்கிதமாகவும் பேரன்பினால் ஆலிங்கனஞ்செய்துகொள்ள விரிந்த அஸ்தங்கள் அஞ்சிச் சிரசின் மேல் அஞ்சலியாகக் குவியவும், ஆராமைமேலிட்டால் நாக்குழறவும் சித்தமுருகிப் பரவசப்பட்டமையால் சித்திரபிரதிமைபோன்று சந்நிதானத்தில்நின்ற மாணாக்கனைப் பார்த்தருளி, பரமபிதாவாகிய ஸ்ரீ சற்குருஸ்வாமிகள் சந்தோஷமடைந்து செந்தாமரை மலர்போன்ற திருக்கரத்தால் திருநீற்றைத் தரித்துச் சுவசப்படுத்தி நாம் அநுக்கிரகித்த உபதேசவாக்யங்களை வாக்களவில் ஆக்காது மனனஞ்செய்து சுவாநுபூதிக்குக் கொண்டுவந்தமையால் நீயே சற்குருவாக்கிய பரிபாலனஞ்செய்யும் சற்சீடனென்று புன்முறுவல்செய்து கிருபா நோக்கத்தோடும் நம்போல நீயும் வாழ்வாய் என்று ஆசீர்வாதஞ் செய்தருளினபடியே ஜீவன்முத்திதசையில் சின்னாள் வாழ்ந்திருந்து பின்னர் விதேகமுத்தியை அடைந்தனன்.

## பிரமோபதேசக் கட்டளை

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

இக்கட்டளை வளவனூர் குமராலயமடம் சண்முகசுவாமிகள் அருளிச்செய்தது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உபதேச
# சித்தாந்தக்கட்டளை.

ஆத்மாக்களை முத்தியிலே விடவேண்டி வாக்கு மனாதீத கோசரமாகிய அருட்சத்திதானே பாச வயிராக்யம், ஜீவகாருண்ணியம், ஈசுவர பக்தி, பிரமஞானமென்கின்ற நான்குமே ஒரு திருமேனியாகக் கொண்டருளிய ஞானாசாரியர், இனிப்பிறவாத முடிந்த பிறப்பில் "நித்தியா நித்தியவஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பலபோக விராகம் சமையாதிசட்கம், முமூட்சுத்துவம்" என்கின்ற சாதனசதுஷ்டய சம்பத்தியே ஓர்வடிவெனக்கொண்ட சற்சீடனுக்கு அனுக்கிரகம் பண்ணுமுறைமை.

உலகத்தின் கண்ணே வயித்தியராயினோர் ஒருவனது வியாதியை நிச்சயம் பண்ணி, இத்தனை தினத்தின்மேல் அவுடதங் கொடுக்கவேண்டுமென்னு நியமமிருப்பினும், ஓரோர் அசாத்திய வியாதியை யுடையவனுக்குக் கண்ட வக்கணமே கனமாகிய பூபதி முதலிய அவுடதங்களைக் கொடுத்து, உடனே திருப்பவேண்டும்; அதைப்போல, சாதனங்களையுடைய தீவிரதரபக்குவனுக்கும் ஓராண்டாகிலுஞ் சோதித்து அனுக்கிரகம்பண்ணவேண்டுமென்றாலும், ஓரோர் அதிதீவரதர பக்குவனுக்கு அந்தக்கணமே இந்த உபதேச சித்தாந்

தத்தை அனுக்கிரகம்பண்ணிப் பவரோகத்தை உடனே நிவிர்த்தி பண்ணவேண்டும். இந்த உபதேச சித்தாந்த மார்க்கமொழிய மற்றைய மார்க்கத்தினாலே பவரோக நீங்காதோவென்னில், பாதாதிகேசபரியந்தம் அக்கினி பற்றிக்கொண்டவனுக்கு விழுந்த துறையிலே அவனைவிழுங்கி மேலிடப்பட்ட மடுவிலேயன்றிக் கொஞ்ச ஜலத்தில் பிரவேசிக்கில் உடனே அவ்வக்கினியவிந்து முடியாது; அதைப்போல, அதிதீவிர பக்குவனுக்கு உடனே அவனையும் விழுங்கி மேலிடப்பட்ட அகண்டாகார ஞானம் இம்மார்க்கத்திலே பிரவேசித்த அக்கணமேயுண்டாம். அதெப்படியெனில்,

சற்குரு சந்நிதியிலே சற்சீடனானவன் தேனிரம்பிய மலரைத் தேடும் வண்டுகள்போலப் பூதலமெங்குந்தேடி வெப்பந்தீராமல் வந்தடைந்து, கண்ட அக்கணமே உள்ள மகிழ்ச்சியையடைந்து தாரகமாகிய சிவமே யெனக்கொண்டு, அவருடைய அருள்சுரக்கும்படி பண்ணிக்கொண்டு சுவாமீ! நானார்? இந்த நானாவாகிய வுலகமேது? இது ஆரையுடையது? எனக்குச் சனனமரணம் வந்தவாறேது? இது யாதினாலே நீங்கும்? இவற்றை யனுக்கிரகஞ் செய்யவேண்டும்? இவற்றிற் பிரதமத்தில் அடியேன் நானாரென்று விண்ணப்பஞ் செய்தபடிக்கு என்னை யறிவித்தால் மற்றைநாலும் அடியேனே விண்ணப்பஞ் செய்வேனென்று சற்சீடன் கேட்க, ஆசாரிய ரனுக்கிரகம் பண்ணுகிறார்:—

நல்லது உன்னைக் கரதலாமலகம்போலக் காட்டுகிறோம்? நீ நன்றாகப் பார்க்கக்கடவாயென்று திருவடியைச் சூட்டி, அஸ்த மத்தகசையோகம்பண்ணிக் கிருபாதிருஷ்டியினாலே நோக்கி, இங்கே யுண்டாய் விளங்குவதெல்லாம் நீயேயென்றனர். சுவாமீ! இங்கே யுண்டாய் விளங்குவதெல்லாம் நானெப்படியாவேன்? என, ஆனால்உனக்

கிங்கே என்ன பிரகாசியா நிற்கிறதெனக்கேட்க, சுவாமீ! நாமரூப மயமாகிய உலகந் தோன்றுகிறது என்ன. ஆனா லந்தவுலக மெவ்விடத்தினின்று தோன்றுகிறதென்ன, சுவாமீ! என்னுடைய நினைவிலே நின்று தோன்றுகிறதுஎன, ஆனால் நினைவுவேறு உலகம் வேறோ என்ன, சுவாமீ! உலக மெதிரிட்டுக் காண்கையினாலே வேறு தானே. ஆனால் உலகமாகிய நாமரூபத்தை நீக்கி நினைவைப்பாரென்ன, சுவாமீ! அப்படி பார்க்குமிடத்தில் நினைவைக்காணேன், என ஆனால் நினைவைநோக்கி நாமரூபத்தைப் பாரென்ன, சுவாமீ! அப்படிப்பார்க்குமிடத்தும் நாமரூபத்தைக் காணேன் என ஆனால் நாமரூபமயமாகிய உலகமேதென்ன,சுவாமீ! என்னுடைய நினைவுதானே என, ஆனால் அந்நினைவு எங்கேநின்று தோன்றுகிறதென்ன, சுவாமீ! என்னிடத்திலேநின்று தோன்றுகிறது என்ன, ஆனால் நினைவுவேறு நீ வேறோவென்ன, சுவாமீ! என் நினைவாகையினாலே வேறின்றி நான்றானே என, ஆனால் நினைவை நீக்கி யன்னைப்பாரென்ன, சுவாமீ! நான் பிரகாசியா நிற்கின்றேன் என, ஆனால் நினைவு நீயெப்படியாவாயென்ன, சுவாமீ! நினைவு என்னைவிட வேறதானே என? ஆனால் உன்னைப் பிரித்து நினைவைப் பாரென, சுவாமீ! அப்படிப் பார்க்குமிடத்தில் நினைவைக் காணேன் என, ஆனால் நினைவு யாதோவென்ன, சுவாமீ! நினைவானது நானுமல்ல என்னைவிட வேறமல்ல என, ஆனால் அஃதெப்படி யென்ன, சுவாமீ! தங்கத்தினிடத்திலே பணியானது தங்கமு மல்லாமல் தங்கத்தைவிட வேறுமல்லாமல் கற்பிக்கப்பட்டதுபோல நினைவு மென்னிடத்திலே கற்பிதம் என்றான். ஆனலிந்த நினைவு வேறே சத்தையோ வென்ன, சுவாமீ! அதற்கு வேறே சத்தையில்லை; என்னுடைய சத்தையேதோன்றி விளங்கா நிற்கிறது என, ஆனால் இங்கே தோன்றுவதெல்லாம் யாதென்ன, சுவாமீ! இங்கே தோன்றி விளங்குவதெல்லாம் நானே என, ஆனல்

நாமுன்னம் எல்லாம் நீயே யென்று சொன்னோமே, அதற்குனக்கு ஐயந்தோன்றிற்றே, இப்போது எல்லாம் நானே யென்று நீ சொன்னது திரிவோ நன்றாய்ப்பாரென்ன, சுவாமீ! முதற்றிரிவினாலே எல்லாம் நானெனப்படி யாவேனென்று கேட்டேன். இப்போது சுவாமிக ளுடைய கடாக்ஷத்தினாலே திரிவுபண்ணிக்கொண்டிருந்த அஞ்ஞா னவிருள்போய்த் துணிவாகத்தானே எல்லாம் நானேயெனக்கண் டேன். ஆனால் உன்னைக்கண்ட இடத்தில் அனுபவமெப்படியிருந் தென்ன, சுவாமீ! அகண்டாகாரமயமாய்ச் சுட்டிறந்த சுகாதீதமாய்ப் பழுதையினிடத்திற் பாம்பொருகாலு மில்லாததுபோல், உலகம் உயிர் பரம் என்பது ஒருகாலுமில்லாததாய்ப் பிரகாசியாநிற்கிறது. ஆனா லிதுவே தற்சொரூப முத்தி. இதிற் றேகபதன பரியந்தம் கல க்கமில்லாமல் நிற்பாயாக. இதன்றி அந்த முத்தி நீயானதற்குக் குறி; மற்றை நாலும் நீ யுன்னனுபவப்படிக்குச் சொல்லென்ன, சுவாமீ! நானாவிதமாகிய பிரபஞ்சம் என்னிடத்திலே ஆரோபிதம்; அது சங் கற்பத்தையுடையது; அந்தச் சங்கற்பத்தையுடைய ஆரோபிதமாகிய பிரபஞ்சமும் அதிட்டானமாகிய என்னைவிட வேறல்லவென்று கா ணாத திரிவினாலே எனக்குச் சனன மரணம், எல்லாம் நானே யென் றறியில் சனன மரணமில்லை. இப்படி மற்றை நாலும் சுவாமிகளு டைய கடாக்ஷத்தினாலே எனக் கனுபவ மாயினவென, நல்லது, நம் முடைய அனுபவமுமிதுவே. சுருதியினுடைய முடிவிலே சொல்லு வதுமிதுவே. உன்னுடைய வனுபவமு மிப்படியேயாகில் இதுவே உபதேச சித்தாந்தம் என்று இதிற் கலக்கமில்லாமல் வாழ்வாயாக வென்று ஆசீர்வாதஞ் செய்தருளினார்.

## உபதேசசித்தாந்தக்கட்டளை முற்றிற்று.

---

சற்குருநாதன் சரணம்வாழ்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்த ஸாராமிருதம்.

[illegible]
[illegible]

உலகத்திலுள்ள சகலரும் எளிதிலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்ற வபிப்பிராயத்துடன் நம்தேசபாஷையாகிய தமிழில் எழுத வாரம்பிப்பது யாதெனில்:—

ஆத்மேசுவரமான பிர்மமானது சேதனு சேதனமயமான விப்பிரபஞ்சத்திற்கு எவ்விதமான சம்பந்தத்தோடு கூடியது, என்பதை முதலில் ஆராயவேண்டி "நான்" என்ற பொருளைப் பரிசோதிக்கத் துடங்குவோம். நான் என்றது அஹம் என்ற வடமொழிச் சொல்லின்பொருள். இப்படிப்பட்ட அஹம் என்றசொல்; நம்முடைய உடலைப்பற்றியா? அல்லது கர்மேந்திரியங்களைந்துகளையும்பற்றியா? அல்லது ஞானேந்திரியங்கள் ஐந்துகளையும் பற்றியா? அல்லது மனம் என்ற அந்தக்கரணத்தைப்பற்றியா? அல்லது பிராணன்களைப்பற்றியா? அல்லது அறிவைப்பற்றியா? அல்லது எதைப்பற்றிப்பொருள்படுகின்றது எனில்; பிரதிவாதி உடலைப்பற்றியதே யென முதலில் ஆட்சேபித்தான். அதை அஸம்பாவிதமென [வாதி மறுதளிக்கின்றான். அதாவது வாதி—ஓ மித்திரனே ! எந்தக்காரணத்தைக் கொண்டு அஹம் என்றசொல் உடலையே பற்றியதெனவுரைத்தீர்?

பிரதிவாதி—ஓமித்திரனே உள்ளங்கைப்புண்ணிற்குக்கண்ணுடியும் தேவையுண்டோ, நான் கறுத்தவன் வெளுத்தவன், பெருத்தவன், இளைத்தவன், செவிடன், குருடன் முதலிய விவகாரத்தில்; பிரத்தியட்சமாகக் கறுப்பு, பெருமை, செவிடு முதலிய தன்மைகளெல்லாம் சரீரத்தையொட்டியே வியவகரிக்கப்படவில்லையா? அல்லாமலும் நான் களிக்கின்றேன், பேசுகின்றேன், அழுகின்றேன், சுகிக்கின்றேன் முதலிய குணங்களும் சரீரத்தினுடைய வியவகாரங்களாகவே காண்கவில்லையா? அன்றிவேறு ஒருவன் இந்தச்சரீரத்திலிருந்துகொண்டு வீட்டிற்குள் மனிதன்போல் அனுபவிப்பானே யாகில் அடித்தால் துக்கமும் கண்ணீரும் கம்பமும் தடிப்பும் சரீரத்திலேயே காணப்படுவானேன்?

வாதி தாம் சொல்லியது முழுமையும்சரீராத்தும விவேகமில்லாதவர்கட்குச் சரீரமே ஆத்மாவெனத் தோன்றும், நான் சொல்வதை முழுமையும் கேட்பீரேயாகில் சரீராத்துமப் பிரமம் விடும். அதாவது நான் கறுத்தவன் என்று சொல்லுகையில் நான் என்ற சொல் ஜீவாத்துமா. கறுப்புஎன்றது ஓர்வர்ணம்இவ்வருணத்தோடு கூடியது கைகால்;வயிறு, முதுகுமுதலிய அவயவங்களோடுகூடியதேகம். அப்பொழுது உடல்கறுத்தது. இப்படிப்பட்ட கறுத்த சரீரத்தை யுடையவன் ஜீவான்மா இவ்வளவுதூரம்கறுத்தவன்என்றதுபொருளாகாவிடில் கறுப்பு அல்லது கறுத்தது என்றேசொல்லவேண்டிவரும் இதுபோலவே மற்றவைகட்கும்அறிக. நான் சுகியாயிருக்கிறேன் என்கையிலும் சுகம் என்பது ஓர்வித மனோபாவம். மனோபாவமென்றால் உட்கருவியான மனதினுடைய ஓர் நிலை. அந்நிலைக்கு சுகமானபொருள். அப்படிப்பட்ட சுகமயமான மனதையுடையவன் சுகிஎனவாகின்றது. அக்காலையிலும் உட்கரணத்திற்குமேல் ஓர்அதிகாரியிடமே சுகி என்பதற்குப் பொருள்முடிக்கின்றது அல்லாமல் சரீரத்தில் சுகி என்பதைப்

பொருள்படுத்த வகையில்லை. சுகதுக்காதிகளெல்லாம் மனதைப்பற்றினதாகவே விளங்குகின்றன. வெகுதொலையிலுள்ள புத்திரன் முதலிய பந்துக்களில் யாராவது இறந்தான் என்ற கடிதம் கண்ட அந்த க்ஷணதில் கண்டவன் சரீரம் என்னபாடுபடுகின்றது. யாருவது சரீரத்தில் அடித்தார்களா? ஒருவன் அவமானமாகத்திட்டும்காலையில் மற்றவன் சரீரம் எப்படி துடிக்கின்றது. அப்பொழுதாவது சரீரத்தைத் தொட்டு யாராவது ஸ்பர்சித்தார்களா? அப்பொழுதும் மனம் என்றதல்லவா முறையே துக்கத்தையும் கலக்கத்தையும் அடைந்து அதன்வழியாய் சரீரம் அசைகின்றது. அல்லாமலும் என்னுடைய குடம் என்கையில் என்னுடைய என்ற தனக்கும், குடமென்ற பொருளுக்கும் பேதம் செம்மையாய் காணப்படுவது போல என்னுடைய கை கால், வயிறு, கழுத்து, மூக்கு, என்னுடைய மனம் என்கிறவரையில் நான் என்றதற்கும் கைமுதல் மனமீறாக வுள்ளவைகட்கும் பேதம் திண்ணமே' தீர்க்கபாகு=நீண்ட கைகளையுடையவன்=விசாலாக்ஷன் பறந்த கண்களையுடையவன், மனஸ்வீ=நன்மனமுடையோன் முதலிய அனுபவவார்த்தைகளும் பேதத்தையே காட்டுகின்றது. ஆனல் ஆரும்வேற்றுமையின்பொருள் வஸ்துக்களுடைய (ஸ்வாமித்துவம்) அதாவது உடைமைக்காரத்தன்மையை வெளிபடுத்துமே யொழிய உடைமையையும் உடைமைக்காரனையும் ஒன்றுபடுத்தாது. இப்படியிருக்க கை கால் முதல் மனமீறாகவுள்ள சரீரம் எப்படிநான் என்றதற்கு பொருளாகும். "என்னுடைய நான்" என்று உலகத்தில் யாரும் வழங்காதது. ஒருக்கால் அவ்விதம் நீர் வழங்குவீராகிலும் நான் என்றதற்குள்ள பொருளே என்னுடைய என்றதற்கு மென்பதும் ஸ்பஷ்டம். அதாவது நான் என்னும் பொழுது தேகாபிமானியோ அல்லது தேகமோ பொருளாகிலும், எனது என்கையிலும் நான் என்றசொல்லின் ஆரும்வேற்றுமையாகையால் அதே அதற்கும்பொருளாகவேண்டி வரும். ஆனல் என்னுடைய நான் என்று வியவகா

ரம் வந்தாலோ வென்றால் இராகுவினுடைய தலையென்பதுபோலக் கருத்துகொள்ளவேண்டும். இவ்விடத்தில் இராகு என்பதே தலைமாத்திரமாயுள்ளகிரகத்தையே அதின்வடிவாய்விதமிருக்க இராகுவினுடைய என்ற ஆறும்வேற்றுமைக்கு யாதுபொருள் என்கில்; யாதுமில்லாது வாய் மூடிகொள்ளும்படி ஏற்படும் அது போலவே எனது நான்என்பதும்இராகுவின் தலை என்றதுபோல் வியவகாரமாத்திரமேயொழிய பிரயோஜனமற்றது. ஆகையால் "ஜெஹொநாதாவடாதிவஸ" என்ற பிரமாணத்தின்படி குடம் முதலியனபோலதேகமும் ஆத்மாவை விட வேறானது. தேகமும் குடம் போலவே. ஆத்மாவென்றால்(அது= பக்ஷணே,' என்றபகுதியின்பேரில் மநின்)என்ற பிரத்தியம்வந்து போக்தாவென்ற பொருளை. விளக்குகின்றதுபோக்தாவாவது சரீரத்தி லுண்டாகும் சுக துக்காதிகளைத் தானனுபவிப்பதாக அபிமானிப்பவன் ஹொக்ஷெகெஹ த... வ...தெ.

என்றபிரமாணம் இவ்வர்த்தத்தை யாதரிக்கின்றது. அல்லாமலும்; அறிவென்றது ஓர்விசித்திரமான குணம்,இது இத்தேகத்தைக் காட்டிலும்வேறென்பனதை அனுபவித்தாலும் அறியலாகும்.

பிரதி—மித்திரனே! தான் சொல்வதெல்லாம் மெய்தான் ஆகிலும் நான் சொல்வதையும் கேட்பீர். அதாவது:— இந்த சரீரமானது பிரத்தியட்சமா யிருக்கின்றது இது பிரதுவீ, அப்பு, தேயு, வாயு என்ற நான்கு வஸ்துக்களை யுடைய ஓர் விதமானசேர்க்கை. அது சேருகிற சமார்த்தியத்தால் தாம்பூலாதிகளில் சிவப்புஎன்பதுண்டாவதுபோலஅறிவு என்ற சக்தியுண்டாகின்றது. அதைத்தான் தாங்களும் ஆத்மாஎன்றீர்கள் இதையொரு சொல்லாலேயே முடிக்கலாமாயிருக்கஇவ்வளவுதூரம் தாம்வளர்த்தியது எனக்குமிகவும் பிரயாசமாயிருக்கின்றது. இனியாவது வாயை மூடும்.

வாதி—ஓமித்திரனே என்விஷயமாகத்தாம் வருத்தப்படுவது மிகவும் ஆச்சரியம். இவ்வளவு தூரம் என் துக்கத்தை ஏற்றதம்மைக் குறித்து நான் மிகவும் சந்தோஷிப்பதுடன் வியசனத்தையு மடைந்தேன். அதாவது தேகமே ஆத்மாவென்ற பிரமத்தால் மோட்சமென்ற பிர்மானந்தத்தை அடையாமலும், அதையடைய முயலாமலும், வீணுக மறுபடியும் பிறவிக்கு ஆளாகின்றீரே என்பதுதான். இது நிற்க. இப்பொழுது தாம்யாதுரைத்தீர்? பூதங்களுடைய சேர்க்கையின் சாமர்த்தியத்தா லல்லவா ஞானமென்ற சக்தி யுண்டாகின்ற தென்றீர். அதை விவகரிக்கின்றேன் பாரும். சமுகும் வெற்றிலையும் நீறும் சேரும்போ துண்டாகும் சிவப்பும் புதிதல்ல; ஏனெனில் சமுகில் ஏற்கனவேயுள்ள சிவப்புத்தான் மறுபடி விருத்தியடைந்தது. ஆகையால் இந்த திருஷ்டாந்தம் சரியல்ல, இவ்விதமே தான் சாராயம் முதலியவைகளுக்குண்டாகும் மதசக்தியும்; ஏனெனில் பூதம் நான்கென வும்முடைய சம்மதம். அந்நான்கிலும் மதகரசக்திபோல அறிவு என்பதேயில்லை. இது பிரத்தியக்ஷம். இதின் பேரில் மறுப்பது விதண்டாவாதமாகும். அல்லது பிரதிபூதங்களிடமும்வேறுவேறு ஞானமிருந்ததா? அல்லது ஓர் பூதத்தினிடமிருந்து மற்றயதுகள் விருத்தி செய்ததா? பிருதிவி யென்றால் இது அனேகம் பரமாணுத்திரள் மயமானது. அப்படியாகில் பிரதிபரமாணுவிற்கும் ஒவ்வொரு ஞானசக்தி யொப்புக்கொள்ளும்படி வரும். இவ்விதமே பிரதிபூதத்தினிடமும் வேறுவேறு ஞானமிருந்ததாகத் தீரும். எதைக்கேட்டேனே அதையே பார்த்தேன் தொட்டேன் முதலிய வியவகாரம் கேழ்வி பார்வை தொடுகை முதலியவைகட்கெல்லாம் சம்பந்தித்திருப்பதால் ஒரேஞானமே யெனதெரியவருகின்றது. ஒருசரீரத்தில் பல ஆத்மாவுளதென வங்கீகரித்தல் பிரத்தியக்ஷத்திற்கு விரோதமல்லவா. ஆனதால் இல்லாததொன்று திடீரென வுதித்ததென் றுரைப்பதும், பிரதிபூதங்களிலிருந்த தென்பதும் அஸ

ம்பாவிதம். அன்றியும் ஞானமென்றது ஒன்றெனவும் பலவெனவும் பிறிக்கமுடியாதது. ஞானசிரயமாயுள்ள ஜீவான்மா வேறு வேறென்பது மாத்திரம், உம்முடைய வபிப்பிராயத்திற்கும், சுகதுக்கத்திற்கும், நம்முடைய வவிப்பிராய சுகதுக்காதிகளுக்கும் உண்டாயிருக்கும் வேறுபாட்டாலேயே பிரத்தியட்சம். ஆகையால் பூதங்களைவிட ஆன்மாவென்பது வேறென என் அன்பனே தாம் கைக்கொள்வீர். சமுதாய சக்தி சாமர்த்தியம் என்றது சரியல்லவெனவுமறிவீர். அன்றியும் நான் நடந்தேன் பார்த்தேன் எண்ணினேன் முதலிய காலங்களில்நடப்புப்பார்வை எண்ணம்முதலியவைகளெல்லாம் நான் என்று சொல்லுகிற வஸ்துவிற்கு அன்னியமாகத் தோன்றுகிறதல்லவா!! ஆதலால் மனம்வரையில்கழிக்கப்பட்டன. அவ்வண்ணமேயறிவென்பதும் ஆத்மாவினுடைய தர்மரூபமாயுள்ளகுணமானதால் தீபத்தின் பிரபைபோல அதுவும் கழிக்கப்படும். அப்பொழுது ஸ்வரூபமாகிற ஞானத்துடன் கூடிய ஆன்மாவொன்றே சேடிக்கும் இவ்விதம் சேஷித்த வான்மா தேகேந்திரிய மனோ புத்தியாதிகளுக்கன்னியமென்பதும் ஸ்பஷ்டம். ஏனெனில் பிராணாதிகள் வாயுவினுடைய விகாரமாதலால் அவையும் பூதங்களேயாயின. பின்னும் ஆகாயமென்ற ஓர் பூதத்தைத் தாம் ஒப்புக்கொள்ளாத காரணம் அப்பிரத்தியட்சமாகையாலல்லவா. நாம் தாய் மகன் என்பதும் அப்பிரத்தியக்ஷந்தானே. இதை அனுமானங்கொண்டு தானே அறியவேண்டிவருகிறது. ஆகையால் அனுமான மென்பதும் அங்கீகரிக்க வேண்டும். இவ்வனுமானத்தால் யோசிக்கும் காலையில் இந்நான்கு பூதங்களும் நிலைத்திருக்கிறவிடமே ஆகாயமெனக் கொள்வதுடன் நமது பரிச்சின்னமாயிருக்கிற சிற்றறிவிற்கு எட்டாமல் பெரியோர் பேரறிவு கொண்டு நிச்சயித்திருக்கிற பிரமாணத்தையும் நம்ப வேண்டியதுதான். அப்படிப்பட்ட பிரமாணம் ஸ்வயமென்றும், தைவமென்றும், ஆர்ஷமென்றும், மானுஷமென்றும்,நான்குவிதம், இவற்

றுள் பூர்வ பூர்வம் மேன்மை பொருந்தியது அதாவது மானுஷத்தை க் காட்டில் ஆர்ஷமும், ஆர்ஷத்தைக்காட்டில் தைவமும், தைவத்தை க்காட்டில் ஸ்வயமும் பெரியதுஎன்பது. மானுஷமாவது மத்துவரா மானுஜ ஸ்ரீகண்டசங்கராசாரியர் முதலியவர்களால் தீர்மானித்தெழு தப்பட்டிருக்கிற புத்தககோவைகள், ஆர்ஷமாவது ஆபஸ்தம்ப, போ தாயன, கபில, பதஞ்சலி, கௌதம, மனுயாக்ஞ வல்கியாதிகளால் செய்யப்பட்ட கிரந்தங்கள். தைவங்களாவன பிர்மா, இந்திரன், வி ஷ்ணு, ருத்திரன் முதலியவர்களால் கூறப்பட்ட யோக வியாகரண பாஞ்சராத்திரபாசுபதாதி பிரபந்தங்கள். ஸ்வயமாவது பிர்ம்மத்தை ப்போல் யாராலும் செய்யப்படாமலுள்ள எழுதாமறையே. உத்த ரோத்திரம் பூர்வ பூர்வத்திற்கு விரோதமில்லாமலிருந்தால் பிரமா ணங்களுக்குஞ் ஏற்றமுண்டு. அல்லாமல் பூர்வ கிரந்தங்களிற் கூறு தவிஷயம் உத்தரகிரந்தங்களிற் கிடைக்குமாகில் பூர்வத்திற்கு விரோத மில்லாதவையே. தான் எடுத்துக்கொள்ளக் கூடியவை வேத விரோதத்தைக்காட்டிலும்எவ்விதத்திலும் கீழ்ப்பட்டனவே. மற்றவை யென்ற விஷயம், பிர்ம சூத்திரத்தில் ஆர்ஷ மாகி லும் அது தான்மூன்றிபல்ல. மறையிலுள்ள ஸம்சயம் விபரியயம் இவைகளை ஒழுங்கு படுத்துவது மாத்திரமே. இதுபோலவே பூர்வ மீமாம்சையும். ஆகையால் வைதிகமதாவிரோதமான எந்த கிரந்த மும் அங்கீகரிக்கக்கூடியதே. அவைககளிலும் தைவமாயுள்ள பாஞ் சராத்திர பாசுபதயோகாதிகள் உத்தமகிரந்தங்கள். ஏனெனில் வே தத்தின் பொருளாற் கூறப்பட்டவையாதலாலும் வேதவிரோதமா யிருக்கமாட்டாவென்றநம்பிக்கையாலும் சிலவிடங்களில்வேதவிரோ தம்போல் தோன்றினும் அவை அசுரமோகனார்த்தமென வுதாசீன ம்செய்யத்தக்கவையாலும். ஆகையாற்றான் ஆகமங்களிலும் சாத்துவி க ராஜஸதாமஸவிபாகம் ஏற்பட்டது. புராணஸ்மிருதிகளெல்லாம் உபபிர்மணரூபங்கள் அதாவது வேதத்தில் விளங்காதபொருளைவிள க்குவன. ஆகையால் நண்பரே! ஆகமம் என்ற இப்பிரமாணத்தையும்

தாம் ஏற்று நம்புவீராக. ஆக இப்பொழுது பிரத்தியக்ஷம், அனுமானம் ஆகமம் அதாவது சப்தம்என்ற மூன்று ப்பிரமாணங்களையும் விசுவஸித்தீரென நான் எண்ணுகின்றேன்.

பிரதி—ஓ மித்திரனே! தாம் இதுவரையில் வெகுசாமர்த்தியமாய் வர்ணித்துவந்ததை யெல்லாம் ஒப்புக்கொண்டேன். ஆனால் தாம்சொல்லிவந்த விஷயத்தில் பெருத்தஸம்சயம் ஒன்று அதாவது சரீரத்தைக்காட்டிலும் அன்னியம் ஆத்மாவெனில் சரீரத்தை யிம்சைப்படுத்துங்காலும் சுகப்படுத்துங்காலும் ஆன்மா துக்கிக்கவும் சுகிக்கவும் என்னகாரணம். வீட்டையிடித்தால் வீட்டிலுள்ள மனிதனு மிடிபடுவானோ. இதல்லவோ பரமவிந்தையானது. இதையறியாமல் வாளியடுக்குவதுபோல் மேன்மேலும் அடிக்கிக்கொண்டே போகின்றீரே அதென்ன?

வாதி—நண்பரேதாம் ஸந்தேகிக்கிறது உண்மைதான் அதை விளங்கச்சொல்லுகின்றேன் கேட்பீராக. உலகத்தில் ஹிதமானவார்த்தையைச் சொல்பவர் பலருளரேயாகிலும் கேட்பவர் சுருக்கம். அவ்விதம்கேட்கவாவலுற்றாலும் அதுவிதண்டையாய் முடிவதுடன் ஆபாஸமாயும் முடியும். அவ்விதமில்லாமல்யுக்திதவறாதும் தாய்வினவுவதைபற்றி என்மனம் மிகவும் களிப்படைந்து தமக்குச்சமாதானம்சொல்ல எத்தனிக்கின்றது பார்ப்பீர். அதாவது ஏற்கனவே தெரிவித்தபிரகாரம் இந்தசரீரத்திற்கு மகத்தான வீசுவரன் ஜீவான்மா இவன் இச்சரீரத்தைக் கொண்டு சுகதுக்காதிகளை யனுபவிக்கிறான். அது எவ்விதமெனில் அரசன்படைகளைக்கொண்டு ஜயாபஜயங்களையடைவதுபோல தேகரத்தில்திஷ்டாதாவாக விருப்பதுபற்றி திரேசத்திலுண்டாகும் வேற்றுமைகளையும் அனுபவங்களையும் தான்செய்ததாய் அபிமானித்துக்கொண் டனுமோதிப்பதால் இத்தேகத்திலுண்டாகும் காரியங்கள் ஆன்மாவிற்கு சுகிக்கவும் துக்கிக்சவும் காரண

ங்களாகின்றன. வீட்டையிடிக்குங்காலையில் வீட்டுக்காரனுக்கு எவ்வளவு துக்கம் சம்பவிக்கின்றது என்பதையும், வீட்டைச்சீர்தூக்குங்காலையில் வீட்டுக்காரனுக்கு எல்வளவு சந்தோஷமுண்டாகின்றதென்பதையும், நாம் எல்லோரும் காண்கிறோம். இவை அவ்வீட்டில் இவனுக்குள்ள அபிமானமல்லவா? இதுபோலவேதான் இந்ததேகத்திலுள்ள எனதென்ற அபிமானம் அனுமோதிக்க ஏதுவாயிற்று. உபத்ரஷ்டாநுமந்தா ச பர்த்தா போக்தா மஹேஶ்வர: என்ற இப்பிரமாணம் மேற்கூறிய கருத்திற்கு மூலாதாரமாயுள்ளது. ஆகையால் அன்பரே இனித்தாமும் தேகமே ஆன்மாவென்ற பிரமத்தை விடவேண்டும்.

பிரதி--இவ்வளவு ஸ்பஸ்டமாக எடுத்துக்காட்டப்படும் ஆன்மா இப்பஞ்சேந்திரியங்களுள் எதற்காவது ஏன் தெரியக்கூடாது? அல்லது சரீரம்போனபின்னேயாவது ஏன் புலம்பக்கூடாது? இதைதெளிவித்தீரேயாகில் தாமே என்குருவாகுவீர். இல்லையாகில் தமக்கு நானே குருவாவேன் இதற்குச் சீக்கிரம் பிரதிமொழி கூறுவீர்.

வாதி—பிரியசகாவே! தம்முடைய ஒவ்வொரு வினவும் என்னை மிகவும் உற்சாகப்படுத்துகின்றது. இவ்விதமாயுள்ள உண்மை விசாரத்தில் உலகத்தோருக்கு புத்திவருவது அஸாத்தியம். ஏனெனில் மலத்திலுள்ள புழுவிற்கு மலமே போக்கியமாக விருப்பதுபோல சப்தாதி விஷயானுபவத்திலேயேயுள்ள ஸம்ஸாரிகளுக்கு உலகாதீதமான வஸ்துவில் புத்தி செல்லாது. சென்றாலும்அது சாதுக்களுக்கு இமிசையாய்தீரும். முடிவில் தானும் கெட்டு நல்லோரையும் கெடச்செய்வான். பெரியோர் சொல்வதையும் கேளான் உன்மத்தன்புற்கிணற்றில் தான்விழுவதுடன்கைபற்றினவனையும் இழுத்துக்கொண்டு விழுகைக்கு சமானமாவான், அவ்விதமில்லாமல் நான் சொல்வதை யங்கீகரித்து மேன்மேலும் சம்சயங்களை யுக்தியுடன்கேட்டு மனதி

விருத்தி ஒருவாறு தாம்திருப்தியடைவது எனக்கும்திருப்தி. ஏனெனில் ஓர் நல்லபூமியில் ஓர்விதைவிதைத்தால் அது முளைத்தெழுந்து நல்லபயனை கொடுத்தால் விதைத்தவனுக்கு மிகவும் திருப்திகரமாகவும், முளைக்காமல் அல்லது முளைத்துப்பாதியில் அல்லது பூக்காமல் அல்லது வெம்பி அல்லது பலிக்காமல் அல்லது விதைத்தவனுக்குபயோகப்படாமல் போமேயாகில் விதைத்தோனுக்கு எவ்வளவுதுன்பம் உண்டாகும். அதுபோல சிரமப்பட்டு நான் சொல்லும் விஷயங்களை தாம் பிரியமில்லாமல் வேறுகாரியத்தில் சிந்தையோடு என் திருருப்திக்காக மட்டில் கேட்பதுபோ லபிநயித்தாலும் தற்காலம் கேட்டுப்பின்புமறந்தாலும், சிறிதுநாள் தரித்து மறந்தாலும், தெரிந்திருந்து உபயோகிக்காமலிருந்தாலும், உபயோகித்து முடிவில் மறந்தாலும், சிரமப்பட்டு தெரிவிக்கின்ற எனக்குப் பிரயாசமேமிச்சமாகும். அவ்வண்ணமில்லாது சிரத்தையோடுதாம்கேட்டு அதிலுள்ள சங்கைகளையெடுத்து என்னிடம் கேட்டு பரபரக்காமல் மனதில் நிறுத்தி மேன்மேலும் வினவுகின்ற பிரகாரமானது மேற்பயனுள்ளதாகவேயாகுமென "விளையும்பயிர் முளையிலேயே" என்றபடியானறிந்தேன் தச்சங்கையைப் பரிகாரம் செய்கின்றேன். சாவதானமாககேட்பீர். அதாவது இருட்டில் உள்ளவஸ்துக்களையும் மேடுபள்ளங்களையும்விளக்குவது விளக்கு. விளக்கைவிளக்குவதுஎது? விளக்கென்பது கல், வெண்கலம், பித்தளை, கண்ணாடி, பீங்கான் முதலியவைகளாற் செய்ததல்ல. பிரகாசமாகவு பிரகாசத்தை கொடுக்கின்றதாயு முள்ள சுடர். விளக்கையறிவதும் எப்படி அவ்விளக்கைக்கொண்டேயோ அவ்விதம்ஆன்மாவையறிதல்வேண்டும். ஆகையால் இது வேறொரு ஸாதனங்களுக்குட்படாதது. வைரத்தைவெட்ட வைரமே வேண்டுவதுபோலவுமாம் சாதரண காஞேய யோகிகளான நாம் சுவரூபோபயோகியாகவாகில் தேகமிருக்கும்பொழுதும் அழிந்தபின்னும் காண்கலாகும். காஞேயயோகியா யிருப்பதுபற்றி அஞ்ஞானம்,

என்ற மறைவு அறியவொட்டாமற் செய்கின்றது. அவ்விதம் றிய வேண்டு மென்றால் அப்பியாசம் வேண்டும். அப்பியாசம் வலுக்கவேண்டில் சப்தாதிகளில் வைராக்கியம் வேண்டும். வைராக்கியம் வேண்டில் நன்னூல்களுடைய ஆராய்ச்சிவேண்டும். ஆராய்ச்சிக்கு சாதுசங்கம் வேண்டும். சாதுசங்க மென்பதுயாதெனில்; காரியத்தைச் சாதிப்பவன் அல்லது சாதித்தவன் சாது. இவன் சங்கமாவது பிரியமான ஸகவாஸம். ஸகவாசமாவது கூடவிருத்தல் முதலியன. காரியசாதகரல்லாமல் வீண்படிப்பாளர் பலவுளர். அவர் தான் குலிங்கசகுனிபோன்றவர். அதாவது அயலாருக்கு ஸாஹஸம் செய்யாதையென வுபதேசித்துத் தான் சிங்கம் கொட்டாவிவிடுங் காலேயிற் பற்களிடையி லொட்டிக்கொண்டிருக்கும் மிருகமாமிசங்களை யுண்ணும்பறவை இதுபோல அலங்காரவித்துவான்களாய் அயலார் மெச்ச படித்தவரும் படிக்கின்றவரும் கணிகைபோல அயலாருக்குபயோகம்போலும் முடிவில் அயலாருக்குந் துன்பமாகத்தீர்ந்தவரும் தீரத்தக்கவருந்தான் அதாவது. அவ்விதமில்லாமல் படித்தவரையிற்றன்னுடைய வனுபவத்திற்குக் கொண்டுவந்து கேட்பவருக்கும் துக்கிகளுக்கும் சொல்லித் தேற்றி தேற்றி வருபவரே சாதுவாவார். தோஷத்திலேயே திருஷ்டியுள்ளவராய் வாழ்நாள் முழுமையும்வீணாக்கித்திரிபவரின் இலக்கணவிலக்கியம் சரீரத்தின் முடிவுகாலத்தின் யாதொருபயனுமில்லாது போகும். இவரது சாமர்த்தியமெல்லாம் மேன்மேலும் ஜன்மங்களுக்கு ஏதுவாகும். அப்படிப்பட்டவர் சங்கம் தமக்கு ஜன்மஹேது ஆகையால் ஆத்மோபயோக்கியமான பாண்டித்தியத்தோடு கூடியவரிடம் பழக்கம் தமக்குமோட்சஹேதுவாகும். தான்கடைத்தேறப்படித்தவரும் அப்பியாசிப்பவரும் சாதுக்களென்ற திதன்றிரண்டபொருள். இதுவரையிற்சொன்ன வி

ஷயங்களுக்கு தேஹேந்த்ரியமந: ப்ராணதீப்யோ ந்யோ நந்ய ஸாதந: என்றதேமூலப்பிரமாணம். ஆகையால்பஞ்சபூதங்களுடைய சங்காதமாகிற தேகம், கன்மேந்திரியம், மனம், பிராணங்கள், புத்தி யென்ற இவ்வாறையும்காட்டில் வேருகவும் தன்னைத் தவிர்த்த மற்றொன்றையும் தனக்காக சாதனமாக வுடைத்தாகாததுமாயுள்ளது ஜிவான்மாவெனவாயிற்று.

பிரதி—ஓநண்பரே இனி எனக்கு தாம்குருவாதலால் வணக்கத்தோடு கேட்டுக்கொள்வதுயாதெனில்இதுவரையில் சாமானிய ஞானம் போதிப்பிக்கப்பட்டது. இனி விசேஷ ஞானம்வேண்டியது. அது ஸாமானிய சாஸ்திரத்திலேயே வணக்கத்துடன் கேட்கும்படி விளங்குகின்றது. உண்மையாய் எனக்குள்ள தேகாத்மப்பிரமம் தீர்ந்தும் பின்னும் சில சந்தேகங்களுள இனிகேட்பதெல்லாம் மணலில் தூணிறக்குவதுபோல் ஆட்சேபிக்க முயலுகின்றேன். ஆகையால் என்மீது தயையுடன் சீற்றமில்லாது உபதேசித்தருளவேண்டும். அதாவது இந்த தேகமழியுங்காலயில் இவ்வாத்துமாவும் அழியுமா? அல்லது அதுமாத்திரம் நித்தியமாயிருக்குமா? சரீரத்தினெவ்வவயவத்தி லெவ்விதம் அதனிருப்பு. அப்படிப்பட்ட ஜீவான்மா எத்தனை? இவைகளையெல்லாம் படைத்ததெது. இவ்விதமுள்ள சரீரசம்பந்தம் எதற்காக வந்திருக்கின்றது. இது அழிவானேன்? மோட்சமென்றாலென்ன? இவ்வேழு வினுக்களுக்கும் விடையருளி என்னை ஸந்தேகசாகரத்தினின்றும் கரையேற்றவேண்டும். சாதுக்களுடைய சங்கம் நல்லறிவைகொடுக்கக் கூடியதென்று தாமேயுரைத்திருக்கின்றீர். தாம்சாதுவென என் நிச்சயம், சாதுக்களுடைய தொழிலும் எளியோரைக். கரையேற்ற வேண்டியதே. எளியோர் என்றது ஆத்மஞானமில்லாத எனையோரே. பொருளென்பது போக்கியமாயுள்ளவஸ்து. போக்தாவானஜீவனுக்குபோக சாதனங்களான கரணங்

களும் களேபரமுமே அழியுங்காலையில் பொருளுடைமையைப்பற்றி பெருமையையும், அதின்மையைப்பற்றிஎழ்மையையும் நான்ஏற்காத விஷயம். சாஸ்திரங்களைக்கொண்டு மறிந்த விஷயமிது. ஆகையால் வைக்ருவரிஷி போல் விளங்கும் தாம் என்னை சிடனாக அங்கீகரித்தருளவேணும்.

வாதி—ஏ சிடா! உனது ஜனன காலமானது சாத்துவிகமாயிருந்ததால் என்னுபதேசம் உன்னிடம் பொருந்திற்று, இல்லையாகில் பொருந்தா. எப்பொழுது எனக்கு சிடனென்றாயோ அப்பொழுது எனக்கு நீ புத்திரனைப்போலானாய். நான்உனக்குப்பிதாவைப்போலானேன் சரீரத்தைக்கொடுத்தவன் பிதாவானாலும் அது ஸாமானிய தர்மம். இது ஞானவிஷயமாதலால் இழியாத பொருளுகவிபைப்பற்றி இந்த சம்மந்தந்தான் மேன்மையானது ஆனதுபற்றியேகுருவைப்பிதாவென வாரியருங்கூறியனர். தானத்திலும் ஞானந்தான் சிறந்தது. அன்னதானம் பொருடானமெல்லாம் அழிவுள்ளது. இது ஜன்மாந்திரத்திலும் வாஸனுபலத்தால் உதவிசெய்யக் கூடியது. ஆகையால் ஞானதானம் அழிவற்றதும் மோட்சத்திற்கு நேராகவுதவுவதும். இனி உன்னுடைய சங்கைகளை நிவாரணம் செய்கின்றேன் கேள்.

அவையாவன:—

இத்தேகமழியும்பொழுது ஜீவன் அழிவதில்லை. அது எப்பொழுது முள்ளதாகவும் நித்தியமாகவு முள்ளது. நித்தியத்துவ மென்றதற்கு மாறாததன்மையையுடையது எனப்பொருள். எப்பொழுது முள்ளதாவது சத்தியமாயுள்ளது. தேகமோசத்தியமாயினும் அநித்தியமாயுள்ளது. எனெனில் பாலியம், யௌவனம், வார்த்தக்கியம், மரணம் முதலியவிவகாரங்களையுடையதாலென்றறிக. ஜீவனோ பாலியாதி விகாரங்களற்று நித்தியமாயுள்ளது. ஆகையால் தேகங் கலை

யும்பொழுது ஜீவான்மா அதைவிடவேருகவும் நித்தியமாகவுமுள்ள தால் அழியாமல் வேறொருதேகத்தை யடையுமெனக்கொள்ளல் வேண்டும். ஜீவான்மா சுவயம்பிரகாசம். "அதாவது தனக்குத்தானே தோற்றுகை" யென்பது. தேகமோ ஆத்மாவென்ற மற்றொன்றுக் குத் தோற்றத்தக்கது. ஞானமயம், அதாவது பிருதிவி அப்பு, தேயு வாயு, ஆகாயமென்ற ஐந்துமகாபூதங்களைக்காட்டிலும் இதன்குணங் களான சந்தம்,ரஸம்,ரூபம்,பரிசம்,சத்தம்,என்றவைகளைக்காட்டிலும் இவைகட்கு மூலமான பிரகிருதியையுங்காட்டில் வேறென்பது அறி வுமயமாயிருப்பதினுலேயே யறியத்தக்கதாயிருக்கின்றது. ஆகையால் ஞானமயமான ஆன்மாமற்றப்பிரா்கிருத வஸ்துக்கள்போல நசிக்கா தது. ஆனல் அது காணங்களென்ற இந்திரியங்கள், களேபரமென் ற சரீரம் இவைகளைகாட்டிலும் வேறென்பது ஸ்பஷ்டம். அறிவெ ன்பது ஜடரூபங்களான பிராகிருதங்களினின்று முதிக்காதெனே முன்னமேயே கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் இவ்வாத்மா வெ ன்பது இத்தேகம்போனுல் வேறொருதேகத்தைக் கட்டாயமடைய வேண்டும். இவ்விதமேதான் முன்னொருதேகமிருந்து இத்தேகம் கிடைத்திருப்பதாகவும் அங்கீகரிக்கவேண்டும். ஆகையால் பூர்வஜன் மமும், நிசமும் ஜன்மமும், எதிர்காலஜன்மமும் சித்தம். சரீரமேஆன் மாவெனும் ஆபாசமதத்தியரோ ஜன்மாந்திரமில்லை யென்பர்

ஜாவா‍ெதாவிகு‌ெத ஹாெவாநாஹாெவா விகு‌ெதவஹதஃ

என்ற பிரமாணமுங்காண்குக. ஆகவிப்பொழுதஜீவான்மாவிற்குநித் த்தியத்துவம் ஸ்தாபிக்கலாயிற்று. இனிஅதின்நிலைமையும்வியாபக த்தையையும் கூறுகின்ரும். நிலைமையாவது விளக்கும் அதினொளி யும்போல் ஆன்மாவும் அறிவும் பிரமையானது சுடரைவிடாது சிறி துதூரம் பரவி இருட்டையகற்றுவதுபோல ஆன்மாவின் அறிவு சி றிது வெளியிற்போய் வஸ்துக்களைக்காண்கின்றது. அவ்விதம் கண் டாலும் சுழுத்தியென்ற மூன்ருவதவஸ்தையில்தன்னிடமே ஒடுங்கி

நிற்கின்றது. அப்படியுள்ள இருப்பு முதலாவதான ஜாக்கிராவஸ்தை யில் தெரிகின்றது. அதே 3-வது அவஸ்தையில் தனக்குத்தானே தோன்றிகொண்டிருத்தலால் கரணங்களோடு சம்பந்தமில்லை. கரண ங்களில்லாது சுவயம்ஞானத்தாலே அனுபவிப்பதுஎன்பதுபழக்கமில் லாததால் அவ்வளவுவிசதமாய் தோன்றுதது,தன்னிலையென்பது சுக மயமாதலால் ஜாக்கிரத்தில் தான்சுகமாக விருந்ததுமாத்திரம் தெரி கின்றது. சுவப்பினமென்பது வெளியிந்திரியங்களில் அந்தக்கரணமா னமனம் முதற்சேவித் தனுபவிக்கு மவஸ்தை. அதில்ஆன்மா விஷ யங்களை யனுபவிப்பதுண்டு. ஆனல் அது சரீராந்தர்க்கதமாகில்உண் மையாகும். பாஹ்யமாகும்பொழுது காரியத்திற்கு வாராதுபோம். அதாவது ஸ்வேதம், கம்பம், பயம், சந்தோஷம்,ரோதனம், சம்பாஷ ணம், குரோதம் மூத்திரசுக்கில விஸர்ஜனம் இவைகள் ஆந்தரங் கள். அசனம் முதலியனபாஹ்யம். ஆகையால் ஜீவான்மா, தானு கவும் தன்னறிவு வழியாகவும் இந்திரியங்கள் வழியாகவும்ஹஸ்தம், பாதமுதலியகளேபரங்கள் வழியாகவும் விஷயங்களை அனுபவிக் கும் திறமையுள்ளது. இவ்வளவால் வஸ்து அணுருப மென்றும், அறிவால் வியாபியென்றும் தோற்றுகின்றது. இது இருதயாதிப் பிரசேதங்களில் அவஸ்தாபேதம் போலனுவாக நிற்கின்றதென் பது, சாஸ்திரங்களாலும் யோகாப்பியாசத்தாலும் பிரத்தியட் சம்போலறியத்தக்கது. பாதாதிமஸ்தகாந்தம் அறிவாலேயே பரவி சுகதுக்கங்களையனுபவிப்பது போலவே, பாக்யத்திலும் வெகுதொ லையிலுள்ள விஷயங்களையும் கிரகித்து கொள்ளுகின்றது. அதாவது தேசாந்தரவிஷயக்கிரகணம்.ஆகவிதால் சுவரூபமணுவானதென்றும்

அறிவால் பரவியதென்றும் முடிந்தது. இனி இவ்வாத்மா ஒன்றுபல வாவென்பதை யாராய்வோம். ஒவ்வொருதேகத்திலும் உள்ள ஜீவான்மாவேறு வேறு ஒன்றல்ல. ஏனெனில் அத்து அனுபவிக்கும் சுகதுக்க தாரதன்மியத்தாலென்றறிக. சுகதுக்கதாரதம்மியமாவது ஒரு ஜீவனுக்கு சுகமாயிருக்கும் வஸ்துவேமற்றொரு ஜீவனுக்குத்துக்கமாயிருக்கின்றதும்,ஒருஜீவனுக்குதுக்கமாயிருக்கும்வஸ்துவேமற்றொரு ஜீவனுக்கு சுகமாயிருத்தலும். இவையெல்லாம் மொன்றென்கில் எல்லோருக்கும் சுகதுக்கானுபவம் ஒரேசமயத்தில் சமனாகவிருக்கவேண்டும். இதுகாணுமையால் பிரதிதேகமும் ஜீவன் வேறு வேறு. இவை அனந்தம். அதாவது எண்ணிலசப்படாதவை. அன்றியும் இவை மூன்று வகுப்புகளையுடையன அவையாவன.-பிரகிருதிலீனங்கள், பத்தர்கள், முக்தர்கள், என்பன. பிரகிருதலீனங்களாவன=ஜடவஸ்துக்களில் கேவலம் ஜடத்தோடுஜடமாய் ஒட்டிக்கொண்டிருப்பது. இதற்கு இனிபத்தாவஸ்தை வரப்போகின்றது. பத்தர்களாவன-ஜடவஸ்துவினின்று கரணங்களேபரங்களோடு கூடி அந்தவிந்திரியங்கள் வழியாகவிஷயங்களை யனுபவித்துக்கொண்டிருக்கும் தேவ, திரியக்கு, மனுஷிய, கீடாதிகளிலிருக்குமவை. முக்தர்கலாவன= இப்படி தேவாதி சரீரத்திலிருக்கையில் பரிபூரணவயங்களோகூடியமனுஷியசரீரத்தினின்று சுவரூபத்தையறிந்து பிறகு சரீரத்தில் நின்றே அனுபவித்து இச்சைப்பிரகாரம் சரீரத்தை தரித்துகொண்டிருந்து, அதைசுத்திசெய்துஸ்தூலத்தை விலக்கிசூட்சுமபூதாதிகள் அதாவது தன்மாத்திரா சரீரிகளாய்க் காயமென்றபந்தமில்லாது சுவதந்திரர்களாய் இருந்து இடையூறின்றி சுவானுபவம் செய்பவர் இவரைக்காட்டிலும் பேற்பட்டவரு முளரெனவும் இவரே மேற்பட்

டனரெனவும் தர்க்கம் செய்பவர்கொள்கை. கேவலர் அதாவது கைவ ல்லியத்தை யடைந்தவர் இவர் தானென்பது மாத்திரம் நிச்சயம்

நிதித்யாஸிதவ்ய: இதி க்ஷேத்ரஜ்ஞா ஹிந்ந:ஸ்வதஸ்ஸம்பவே

என்றதிதன் மூலப்பிரமாணம். பிர்மத்திற்கும் அதற்குக் கீழ்கூறப் பட்டஜடஜீவர்களுக்குமுள்ள சம்பந்த பிரயோஜனாதிகள் இதின்இர ண்டாவது பாதத்தில் கூறுகின்றோம்.

நாஸ்திகாஸ்திகஸம்வாதைஃ ஸ்வபரப்ரஹ்மஜீவயோ:।
நிரஸ்ய விரோதாயாயாஶக்தி ஸங்க்ரஹணாய நமோ நம: ॥

வேதாந்தசாராமிருதம்

முற்றிற்று.

சிவமயம்.

# பஞ்சீகரண
# வேதாந்தசித்தாந்தம்.

## குருவணக்கம்.

ஸ்ரீ சற்குருவே நம:

## சுலோகம்.

பரமானந்தம் பரமசுகதம்
கேவலம் ஞான மூர்த்திம்
நிஸ்வாதீதம் ககன சதுர்சியம்
தத்வம் சியாதி லட்சியம்.

ஏகம் நித்யம் விமல மசலம்
சர்வதா சாட்சிபூதம்
பாவாதீதம் திரிகுண ரகிதம்
ஸ்ரீசற் குருந்தம் நமாமி.

தியானமூலம் குரோர் மூர்த்யம்
பூசாமூலம் குரோர்பதம்
மந்தரமூலம் மாரோர்வாக்கியம்
மூத்திமூலம் குரோர்கிருப.

குருப்ரம்மம் குரோர் விஷ்ணு
குருதேவா மஹேஸ்வர

குருசாட்சாத் பரப்ரம்மம்
தஸ்மைஸ்ரீ குருவேநமா. ௪

மன்னாதோ ஸ்ரீஜகன்னாதோ
மகத்குரும் ஸ்ரீஜகத்குரும்
மமாத்மா சர்வபூதாத்மா
தஸ்மைஸ்ரீ குருவேநமா. ௫

சைதன்யம் சாஸ்விதம் சாந்தம்
வியோமாதீதம் நிரஞ்சனம்
நாதபிந்து களாதீதம்
தஸ்மைஸ்ரீ குருவேநமா. ௬

பிர்ம்ம விஷ்ணுஸ்ய ருத்ரஸ்ய
ஈஸ்வரஸ்ய சதாசிவ
ஏகேகர்ப்பக தக்கேய
தஸ்மைஸ்ரீ குருவேநமா. ௭

சர்வாத்மகம் சர்வவசமம்
சச்சிதானந்த விக்ரகம்
சர்வாதாரம் சர்வபூர்ணம்
சதாநாரா யணம்பஜே. ௮

குருவேநமா.

## ராகத்வேஷப் பிரகரணம்.

எந்தராகத் வேஷங்களினாலே சகலமான பேரும் ஜனனமரண துக்கப் பரம்பரையுடையவர்களா யிருக்கிறார்களோ அந்த ராகத்வேஷங்களினுடைய சுவரூபங்களை விசாரிப்போமாக.

ராகமென்றும், த்வேஷமென்றும், காமமென்றும், குரோதமென்றும், உலோபமென்றும், மோகமென்றும், மதமென்றும், மாற்சரி

யமென்றும், இரட்சியமென்றும், அசூயையென்றும், டம்பமென்றும், தர்ப்பமென்றும், ஆங்காரமென்றும் ஆக-கங.

## இந்தப்பதின்மூன்றுக்கும் விவரம்.

### ராகமாவது.

பரஸ்திரீகமனம் பண்ணவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு ராகமென்றுபெயர் இதற்குச்சாட்சி இராவணன்.

### த்வேஷமாவது.

தனக்காராகிலும் அபகாரம் பண்ணினால் அவர்கள்மேல் விரோதத்தையெண்ணி அதற்குப் பிரதி அபகாரம் பண்ணவேணுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு த்துவேஷமென்று பெயர் இதற்குச்சாட்சி இரணியன்.

### காமமாவது.

கிரகம்-கிராமம்-க்ஷேத்திரம்-தனம்-தானியங்களை மேன்மேலும் சம்பாதிக்கவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்த விர்த்திக்குக் காமமென்றுபெயர் இதற்குச்சாட்சி நரகாசுரன்.

### குரோதமாவது.

தன்பொருளை யாராகிலும் அழித்தால் அவர்கள்பேரில் கோபித்து விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு குரோதமென்று பெயர் இதற்குச்சாட்சி பகாசுரன்.

### உலோபமாவது.

தன்பொருளில் யாராகிலும் ஒருகாசுகேட்டால் அரைக்காசுமில்லையென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு உலோபமென்று பெயர் இதற்குச்சாட்சி துரியோதனன்.

### மோகமாவது.

தான் சம்பாதித்த பதார்த்தத்தின்மேல் பிரியமாகிய ஆசாபாசங்களைக்கொண்டு விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு மோகமென்று பெயர் இதற்குச்சாட்சி தசரதமகாராஜன்.

### மதமாவது.

ஐசுவரிய கர்வத்தினாலே கிர்த்யா கிர்த்யங் தெரியாமல் யாரையும் அலட்சியமாக இகழ்வுசெய்து விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு மதமென்றுபெயர் இதற்குச்சாட்சி கார்த்தவீரியார்ச்சுனன்.

### மாற்சரியமாவது.

யாராகிலும் தன்னிலும் அதிகமாக மேன்மைபெற்றிருந்தால் அதுபொறாமல் விகர்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு மாச்சரியமென்றுபெயர் இதற்குச்சாட்சி சிசுபாலதந்தவக்கிரன்.

### இரட்சியமாவது.

தனக்குவந்த துக்கம் அன்னியருக்கும் வரலாகாதோ என்று விகர்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு இரட்சியமென்றுபெயர் இதற்குச்சாட்சி அருணட்சன்.

### அசூயையாவது.

தனக்குவந்தசுகம் அன்னியருக்கும் வரலாகுமோவென்று விகர்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு அசூயையென்றுபெயர் இதற்குச்சாட்சி பவுண்டரீகவாசுதேவன்.

### டம்பமாவது.

தான்செய்கின்ற புண்ணியகருமங்களைப் பலரும்பார்த்துப் பளாயென்று மெச்சிக்கொள்ளவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு டம்பமென்றுபெயர் இதற்குச்சாட்சி அம்பரீஷன்.

## தர்ப்பமாவது.

தானேசுத்தவீரன் தனக்குயாவரும் நிகரில்லையென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு தர்ப்பமென்றுபெயர் இதற்குச்சாட்சி சதகண்டராவணன்.

## ஆங்காரமாவது.

ஏண்டா என்னை அறியாயோ நீதானோ என்னைச் சிருட்டிக்கிறவன் நான்பிடித்தபிடி விடுகிறவனோவென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு ஆங்காரமென்றுபெயர் இதற்குச்சாட்சி மதுகைடவன்.

ஆக இந்தப் பதின்மூன்றுகாரியமாகிய விகற்பத்திகளாலே இந்தப் பதின்மூவரும் மகா பராக்கிரமசாலிகளாகியும் வரப்ரசாதிகளாகியுமிருந்தும் ஒவ்வொருகாரியத்தினாலே ஒவ்வொருவன் புத்ரமித்திரகளத்ராதிகளோடு இகபரசவுக்கியங்களையு மிழந்துபோனதினாலும் இந்தப் பதின்மூன்று விஷையங்களாய் விகற்பித்துவருகிற சித்தவிர்த்திகளத்தனையும் சருவம்பெற்றவரிடத்தில் அனுபவமாயிருக்கிறபடியாலும் இவைகள் விபரீதத்திற்கு ஏதுக்களாகிய சுக துக்க சுவரூபமென்றறிந்து சற்சகவாசத்தினாலே சர்க்குருவால் கிருபைசெய்யப்பட்ட ஞானமாகிய விவேகமென்னும் வாளினாலே இவைகளைச் சின்னாபின்னப்படுத்தி அழித்து நிவர்த்திக்கக்கடவதாக.

இச்சையென்றும், பத்தியென்றும், சிரத்தையென்றும் மூன்றுவிதமாகும்.

# இம்மூன்றுக்குவிபரம்.

## இச்சையாவது.

பசி-தாகம்-நித்யம் அன்னபானாதிகள் கொள்ளவேண்டுமென்றும் மலவிசர்ச்சனை ஜலவிசர்ச்சனை பண்ணவேண்டுமென்றும் வரு

கிற சித்தவிர்த்திக்கு இச்சையென்றுபெயர் இவைகள்வந்தபோது தற்காலத்திற் செய்தால் சாதகமாகவிருக்கும் அன்றிப் பாதையாயிருக்கும் இதனாலே புண்ணியம்-பாவம்-சுவர்க்கம்-நரகம்-பந்தம் மோட்சங்களில்லையென்று அறியவேண்டியது.

## பத்தியாவது.

வேதாந்த சாஸ்திர சர்வாந்திரியாமியாகிய குருவினிடத்திலே வருகிற பிரதி விசுவாசத்திற்குப் பக்தியென்றுபெயர் அதிகவிசுவாசத்திற்குச் சிரத்தையென்றுபெயர் முமுட்சுக்கள் அவசியம் பக்திசிரத்தை பண்ணவேண்டும் என் பண்ணவேண்டுமென்றால் பூர்வத்தில் கட்டுவாங்கமகாராஜன் இந்தப்பக்தி சிரத்தையினாலே இரண்டு நாழிகையிலே மோட்சத்தையடைந்தானென்று சாஸ்திரஞ்சொல்லுகிறபடி அவசியம் சிரத்தாபக்திகொள்ளவேண்டும் இந்தமூன்றும் மோட்சத்துக்கேதுக்களாயிருக்கின்றன.

## சாதனசதுஷ்ட்யசம்பத்தி.

எந்தச்சாதன சதுஷ்ட்டிய சம்பத்தினாலே முமுட்சுக்களானபேர்கள் மோட்சத்தை யடைவார்களோ அந்தச்சாதனசதுஷ்ய சம்பத்தியை விசாரிப்போம் சாதனசதுஷ்டய சம்பத்தியாவது நித்தியாநித்தியவஸ்து விவேகமென்றும் இகவுத்திரார்த்தபலபோக விராகமென்றும் சமாதி சட்கசம்பத்தியென்றும் முமுட்சுத்வமென்றும் நான்காம் இவைநான்கிற்கும் விவரம்.

## நித்தியாநித்தியவஸ்துவிவேகமாவது.

பிரமமே நித்யம் சமஸ்தநாமரூபமாய்த் தோற்றுகிறதேகேந்திரியாபிரபஞ்சமாகிய ஜகத்து அநித்தியமென்றறிவதே நித்தியா நித்ய வஸ்து விவேகம்.

## இகவுத்திரார்த்தபலபோகவிராகமாவது.

இகத்தாலே சிரச்சந்தனாதி வனிதாபோகங்களாகிய வீடு-மாடு-குடும்பம்- தனதானிய முதலாகிய அஷ்ட ஐசுவரியத்தினிடத்திலும் பரத்திலோரம்பாமிர்தாதி போகங்களிடத்திலும் விந்தியசன மலமூத்திர புரீடாதிகளிடத்திலும் இச்சையில்லாதது போல விடுவதே வைராக்கியம் இதுவே இகவுத்திரார்த பலபோகவிராகம்.

## சமாதிஷட்டகசம்பத்தியாவது.

க்ஷமையென்றும்-தமையென்றும்-உபர்த்தியென்றும்- திதிக்ஷையென்றும்-சிரத்தையென்றும்-சமாதானமென்றும் ஆறுகும்.

## இவையாறுக்கும்விவரம்.

க்ஷமையாவது மனோநிக்கிரகம் பண்ணுவதே க்ஷமை, பாக்கிய இந்திரியவிஷய நிக்ரகம்பண்ணுவதே தமை, சகலசங்கையையும் விட்டு குருசேவைபண்ணுகிறதே உபர்த்தி, சுகதுக்கங்களைச் சகிக்கிறதே திதிக்ஷை, வேதாந்தசாஸ்திர சர்வாந்திரியாமியாகிய குருவினிடத்தில்வருகிற பிரதிவிசுவாசமே சிரத்தை, முன்போல் மனமும் இந்திரியங்களும் எங்குஞ்சிதரிப்போகாமல் பகவத்தியானத்திலே நிறுத்துவதே சமாதானம் இவையே சமாதிஷட்க சம்பத்திகளாம்.

## முமுக்ஷத்வமாவது.

தலையிலே நெருப்புபற்றினவனுக்கும் காவரக்ஷி கண்டவனுக்கும் தண்ணீர்கரைகண்டா லல்லாமல் மற்றோரிடங்களிலும் மனது செல்லாததுபோல் மோட்சம் எப்போது வரப்போகிறதோ வென்று அளவற்றவாசையினாலே ஜீவன்முத்தியடைந்து நிர்தநிர்த்தியனாகிறவரையில் அதிதீவரபுத்தியைக் கொண்டிருப்பதேமுமுட்சத்வமாகிய இந்நால்வகைச் சாதனங்களையும் உடையவர்களே மோட்சத்திற்கு அதிகாரிகளாகும்.

## குணத்திரயம்.

### சுலோகம்.

*சத்யஞானம் தபோமௌனம் சுருதிதர்மம் இதிட்சமம் உற்சாகம் நிச்சயம் தைரியம் சாத்மீககுணலக்ஷணம் அகர்வக்குரோதண ஹுாங்காரம் சதிசங்கம் ப்ரலாபனம் அப்ரிவம் டம்பம் மாற்சரியம் ராச்யகுணலட்சணம் அக்யானமோக நித்திரஸ்யா சாபல்யம் புக்தி யீனதாபா பீஷ்டம் பரவாதித்பம் தாமஸகுணலட்சணம்.*

### இவைகளிலே.

*சாத்மீகம்-உத்தமம்-ராஜசம்மத்திபம்-தாமஸம்அதமம்-விவேகியானவர்கள் இவைகளைத் தம்மிடத்தே வரவொட்டாமல் நிவர்த்திசெய்து சதாகாலமும் சாத்மீககுணத்தைப் பெற்றிருக்கக்கடவார்.*

### தத்வத்திரயம்.

*மூர்க்க துரவ்ஷடஞயாம் உதசம் சித்தவாசிதம் பசங்கம் வயச்வாம் தீர்க்கந்திகசேந்திரயுக்வதுபிராந்தம் நிகிலசகத்ரூபம்.*

## இதற்குவிபரம்.

*காணலினிடத்திற் சலப்பிராந்தியும் கிளிஞ்சலினிடத்தில் வெள்ளிப்பிராந்தியும் கயிற்றினிடத்தில் சர்ப்பபிராந்தியும் சந்திரனிடத்தில் உபயசந்திரபிராந்தியும் எப்படித்தோற்றுகின்றனவோ அப்படிபோல் நிஷ்பிரபஞ்சசொரூபரானவர் தன்னிடத்தில் மூலப்பிரகிருதி மகத்துவம் ஆங்காரத்துவம் பஞ்சதன்மாத்திரை சூட்சுமஸ்துலாதிஜகத்பிராந்தி தோற்றப்படுகின்றன என் தோன்றுகின்றனவென்றால், அதிர்வ்ஷ்டான அஞ்ஞானத்தினாலேதான், இப்படித்தோன்றுகிற பிராந்திக்கு நிவர்த்தி எப்படியென்றால் கானலிடனிடத்தில் சலம் காலத்திரயத்திலும், கிளிஞ்சலிடத்தில் வெள்ளிகாலத்திரயத்திலும், கயிற்றினிடத்தில் சர்ப்பம் காலத்திரபத்திலும், சந்திரனிடத்தில்*

உபயசந்திரன் காலத்திரயத்திலும் எப்படியில்லையோ அப்படிபோல் அகண்ட பரிபூரண அத்வைத ஆனந்தசொரூபமானவர் தன்னிடத்தே அதிர்ஷ்டான அஞ்ஞானமூலப்பிரகிருதி மகத்துவ ஆங்காரத்துவபஞ்சதன்மாத்திரைகள் சூட்சுமாதி ஸ்தூலாதிஜகத்காலத்திரயத்திலும் இல்லை இல்லாதபிரகாரத்தை நிரூபிக்கிறோம்.

அஸ்தி-மாமிசம்-நரம்பு-தோல்-உரோமம் ஆகிய இவ்வைந்தும் பிருதிவியின் —கூறுகும்.

உதிரம்-சிறுநீர்-வெயர்வை-மச்சை-சுக்கிலம்! ஆகிய இவ்வைந்தும் அப்புவின்கூறுகும்.

பசி-தாகம்-நித்திரை-ஆலசியம்-சங்கமம் ஆகிய இவ்வைந்தும் தேயுவின்கூறுகும்.

கிடத்தல்-இருத்தல்-நிறுத்தல்-நடத்தல்-ஓடல் ஆகிய இவ்வைந்தும் வாயுவின்கூறுகும்.

ஆசை-வெட்கம்-பயம் - லச்சை - மோகம் ஆகிய இவ்வைந்தும் ஆகாயத்தின் கூறுகும்.

ஆக இவ்விருப்பத்தைந்தும் பலக்கருவிகளாம் பூர்வசென்ம சமஸ்காரமாகிய பிராரப்பசென்மத்தினாலே பஞ்ச பூதாகாரமாகச் சுக்கில சுரோணிதத்திலுண்டாகிய அன்னமயகோசம் இதுஸ்தூலதேகம் இதன்மேல்.

## அத்தியாசமாவது.

சாதி-நாமம்-ரூபம்-வர்னம்-குலம்-கோத்திரம்-ஆசிரமம்-வேஷம்-பாஷை-ஸ்திரீ-புருஷன்-ஆயுள்-கிரியை-விஸ்வன்-வியவாரியன்-சிதாபாசனென-அபிமானமும்-சாக்கிர-அவஸ்தை-நேத்திரஸ்தானம்-யுக்தபோகம்-அகாரமாத்திரிகைரஜஸ்குணமும் - கிரியாசத்திவசித்வமும்-

மனுஷத்வமும்-ஜடகோசமும் ஐம்பாவவிகாரங்களும் இவைமுதலாகிய அகங்கர்த்தா போகத்தாவரைக்கும் அத்தியாசகற்பனைகளை ஏற்றிக் கழித்துநின்றது ஸ்தூலதேகம்.

ஸ்தூலதேகமென்றறிந்து அறிவு தன்னாலறியப்பட்ட இந்தஸ்தூலதேகம் தன்னையறியமாட்டாதாகையால் ஜடம்தானல்ல இந்த ஸ்தூலதேகம் பஞ்சீகிருத பஞ்சமாபூதங்களிலுண்டானது, இதனால் வரப்பட்ட ஆனி விர்த்திக்களாகிய சுகதுக்கம் தனக்கு அக்கறையில்லை இதுவேதானானால் இந்தஸ்தூலதேகம் போனால்தான்போகவேண்டுமே அதுபோகாமையால் தான்போகவில்லை ஆகையால் இந்தஸ்தூலதேகத்துக்குச் சாட்சியாலறிந்தது அறிவாகும்.

## இனிசூட்சமதேகத்தில் இருதயங்களிலிருக்கும் ஸ்தானகரணவிவரம்.

ஆகாசத்திலாகாசம் ஞாதுரு ஸ்தானம் புருவமத்தியம் ஆகாசத்தில் வாயு சமானவாயு ஸ்தானம் நாபி ஆகாசத்தில் தேயு சுரோத்திரேந்திரியம் ஸ்தானம் செவி ஆகாசத்தில் அப்பு, சப்த்ததன்மாத்திரை ஆகாசத்தில் பிருதிவி-வாக்கேந்திரியம்-ஸ்தானம்-வாக்கு ஆக இவ்வைந்தும் ஆகாயபஞ்சகிர்த்தி.

வாயுவிடத்தில் ஆகாசம் மனம் ஸ்தானம் கண்டம் வாயுவிடத்தில் வாயு வியானவாயு ஸ்தானம் சர்வாங்கம் வாயுவிடத்தில் தேயு த்வக்கேந்திரியம் ஸ்தானம் தவக்கு வாயுவிடத்தில் அப்பு பரிசதன்மாத்திரை வாயுவிடத்தில்பிருதிவி பாதேந்திரியம் ஸ்தானம் பாதம் ஆக இவ்வைந்தும் வாயுபஞ்சகிர்த்தி.

தேயுவிடத்தில் ஆகாசம் புத்தி ஸ்தானம் நேத்திரம் தேயுவிடத்தில் வாயு உதானவாயு ஸ்தானம் கண்டம் தேயுவிடத்தில் தேயு சட்சேந்திரியம் ஸ்தானம் நேத்திரம் தேயுவிடத்தில் அப்பு ரூப

தன்மாத்திரை தேயுவிடத்தில் பிருதிவி பாணி இந்திரியம் ஸ்தானம் அஸ்தம் ஆக இவ்வைந்தும் தேயுபஞ்சகிர்த்தி.

அப்புவினிடத்தில் ஆகாயம் சித்தம் ஸ்தானம் நாபி அப்புவினிடத்தில் வாயு அபானவாயு ஸ்தானம் குதம் அப்புவினிடத்தில் தேயு சிங்குவை இந்திரியம் ஸ்தானம் நாவு அப்புவினிடத்தில் அப்பு ரச தன்மாத்திரை அப்புவினிடத்தில் பிருதிவி குஹ்யேந்திரியம், ஸ்தானம் குஹ்யம் ஆக இவ்வைந்தும் அப்புபஞ்சகிர்த்தி.

பிருதிவியினிடத்தில் ஆகாசம் ஆங்காரம் ஸ்தானம் இருதயம், பிருதிவியினிடத்தில் வாயு பிராணவாயு ஸ்தானம் இருதயம் பிருதிவியினிடத்தில் தேயு பிராணேந்திரியம் ஸ்தானம நாசி பிருதிவியினிடத்தில் அப்பு கந்ததன்மாத்திரை பிருதிவியினிடத்தில் பிருதிவி பாயுரு இந்திரியம் ஸ்தானம் குதம் ஆக இவ்வைந்தும் பிருதிவி பஞ்சகிர்த்தி.

ஆக விருபத்தைந்து தத்துவமும் அபஞ்சிகிர்த்த பஞ்சமாபூதங்களிலே உண்டான பஞ்சகிர்த்திகளாம்.

## இனிசூட்சுமதேகவிவரம்.

சப்ததன்மாத்திரை சாத்மீகதாமச சமஷ்டியினாலே உண்டானது ஞானம் சப்ததன்மாத்திரை ரசோம்ச சமஷ்டியினாலே உண்டானது சமானவாயு சப்ததன்மாத்திரை சாத்மீகாம்சவியஷ்டியினாலே உண்டானது சுரோத்திரேந்திரயம் சப்ததன்மாத்திரைவிஷையம் சப்தமாத்திரை ரசோம்ச வியஷ்டியினாலே உண்டானது வாக்கேந்திரியம் ஆக இவ்வைந்தும் சப்ததன்மாத்திரையினா லானவைகள் ஆதலால் சப்த தன்மாத்திரைகல் வினாவவில்லை.

பரிசதன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினாலே உண்டானது மனது பரிசதன்மாத்திரை ரசோம்ச சமஷ்டியினாலே உண்டானது

வியானவாயு பரிசதன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினுலேஉண் டானது துவக்கேந்திரியம், பரிசதன்மாத்திரை விஷயம், பரிசதன் மாத்திரை ரசோம்பவியஷ்டியினுலே உண்டானது பாதேந்திரியமா னது வியானவாயு துவக்கேந்திரியம் பரிச விஷயம் பாதேந்திரியம் ஆக இவ்வைந்தும் பரிசதன்மாத்திரையினுலே ஆனவைகள் ஆத லால் பரிசதன்மாத்திரையை வினுவவில்லை.

ரூபதன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினுலே உண்டானது புத்தி ரூபதன்மாத்திரை ரசோம்ச சமஷ்டியினுலே உண்டானது உதானவாயு ரூபதன்மாத்திரை சாத்மீகாம்ச வியஷ்டியினுலேஉண் டானது சட்சேந்திரியம் ரூபதன்மாத்திரை விஷயம் ரூபதன்மாத்தி ரை ரசோம்ச வியஷ்டியினுலே உண்டானது பாணிஇந்திரியம் புத் தி உதானவாயு சட்சேந்திரியம் ரூபவிஷயம் - பாணி - இந்திரியம் ஆகிய இவ்வைந்தும் ரூபதன்மாத்திரையினுல் உண்டானவைகள் ஆதலால் ரூபதன்மாத்திரையை வினுவவில்லை.

ரசோதன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டியினுலே உண்டா னது சித்தம் ரசோதன்மாத்திரை ரசோம்ச சமஷ்டியினுலே உண் டானது அபானவாயு ரஜோதன்மாத்திரை சாத்மீகாம்ச வியஷ்டியி னுலே உண்டானது சிங்குவையிந்திரியம் ரசோதன்மாத்திரைவிஷ யம் ரசோதன்மாத்திரை ரசோமசவியஷ்டியினுலே உண்டானது குஹ்யேந்திரியம் சித்தம் அபானவாயு சிங்குவை இந்திரியம் ரசோ விஷயம் குஹ்யேந்திரியம் ஆகிய இவ்வைந்தும் ரசோதன்மாத்திரை யினுலே உண்டானவைகள் ஆதலால் ரசோதன்மாத்திரையை வினு வவில்லை.

கந்ததன்மாத்திரை சாத்மீகாம்ச சமஷ்டினுலே உண்டானது ஆங்காரம் கந்ததன்மாத்திரை ரசோம்ச சமஷ்டியினுலே உண்டா

னது பிராணவாயு கந்ததன்மாத்திரை சாத்மீகாம்ச வியஷ்டியினு லே உண்டானது கிராணேந்திரியம் கந்ததன்மாத்திரை விஷயம் கந்ததன்மாத்திரை ரசோம்சவியஷ்டியினுலே உண்டானது பாயுரு இந்திரியம் ஆங்காரம் பிராணவாயு கிராணேந்திரியம் கந்தவிஷயம் பாயுரு இந்திரியம் ஆக இவ்வைந்தும் கந்ததன்மாத்திரையினுலே உண்டானவைகள் ஆதலால் கந்ததன்மாத்திரையைவினுவவில்லை.

ஆகிய இருபத்தைந்து தத்துவமும் பஞ்சதன்மாத்திரைகளா லே உண்டானவைகள் ஆதலால் பஞ்சதன்மாத்திரையை வினுவ வில்லை.

இனி வித்தை யவித்தையாக நேர்த்திபண்ணுகிற விவரம் எப் படியென்றால்.

வாக்கு பாதம் பாணி குஹ்யம் பாயுரு எனப்படுகின்ற கன்மேந் திரியங்களைந்தும் வசனம் கமனம் தானம் ஆனந்தம் விசர்ச்சனம் எனப்படுகின்ற ஐந்துவிஷயங்களி லிருந்தும் தன்னைத்தான் அறியா மலிருக்கிறபடியினுலே சுரோத்திரேந்திரியம் சப்தத்தினுலே வாக் கேந்திரியத்தை அறியப்பட்டது.

தொக்கு அல்லது துவக்கேந்திரியம் பாசத்தினுலே பாசேந்திரி யத்தை அறியப்பட்டது.

சட்சேந்திரியம் ரூபத்தினுலே பாணி இந்திரியத்தை அறியப் பட்டது.

சிங்குவை யிந்திரியம் ரசத்தினுலே குஹ்யேந்திரியத்தை அறி யப்பட்டது.

கிராணேந்திரியம் கந்தத்தினுலே குதேந்திரியத்தை அறியப் பட்டது.

ஆகவாக்காதி கன்மேந்திரிய பஞ்சகத்தை அறியப்பட்ட சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமே தான் தன்னாலறியப்பட்ட இந்தக் கன்மேந்திரியங்கள் தன்னை யறியமாட்டாதாகையால் சடம்தானல்ல இந்தக் கன்மேந்திரிய பஞ்சகம் பஞ்ச தன்மாத்திரைகளுடைய ரசோம்ச வியஷ்டியினாலே உண்டானது இவைகளால் வரப்பட்ட ஆனி விர்த்திக்களாகிய சுகதுக்கம் தனக்குத் தேவையில்லை இவைகளே தானானல் இவைகள்போனால்தான் போகவேண்டும் இவைகள் போனாலும் தான்போகவில்லை ஆகையால் இவைகளுக்குச் சாட்சியாயறிந்த சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சங்களாம்.

இனிச் சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்துக்கும் சப்தாதி விஷயங்களைந்து மிருந்தும் தன்னைத்தானறியா திருக்கிறபடியால் ஆங்காரபிராணவாயுவினோடு கூடி கிராணேந்திரியத் துவாரகந்தங்களை அறிகிறது சித்தம்.

அபான வாயுவினோடுகூடி சிங்குவை அல்லது சிங்குவை இந்திரியம் துர்வாரசங்களை அறியப்பட்டது புத்தி.

உதான வாயுவினோடுகூடிச் சட்சேந்திரியம் துவாரரூபங்களை யறியப்பட்டதுமனம்.

வியான வாயுவினோடுகூடித் துவக்கேந்திரிய துவாரபரிசங்களை அறியப்பட்டதுஞானம்.

சமான வாயுவினோடுகூடிச் சுரோத்திரேந்திரியதுவாரசப்தங்களைக் கூறப்பட்டது.

பிராணாதி வாயுக்களைந்து சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்து சப்தாதிவிஷயங்களைந்து ஆக இப்பதினைந்தையும் அறியப்

பட்ட ஞானேதியந்தக்கரண பஞ்சகமேதான் தன்னாலறியப்படட் இப்பதினைந்தும் தன்னையறியமாட்டாவகையால் சடம் தானல்ல இப்பதினைந்தும் பஞ்சதன் மாத்திரைகளுடைய ரசோம்ச சமஷ்டி யினாலேயும் சாத்வீகாம்ச வியஷ்டியினாலேயும் உண்டானது இவைக ளினாலே வரப்பட்ட ஆனி விர்த்திகளாகிய சுகதுக்கம் தனக்கு அவ சியம் இல்லை இவைகளே தானானால் இவைகள் போனால்தான் போ கவேண்டும் இவைகள் போனாலுந் தான்போகவில்லை ஆகையால் இவைகளுக்குச் சாட்சியாயறிந்த ஞானேதிஅந்தக்கரணபஞ்சகங்களே தானாகும்.

இனி மனமென்றால் சங்கற்பம், புத்தியென்றால் நிச்சயம், சித்த மென்றால் ஆலோசனை, ஆங்காரமென்றால் அபிமானம் இவைகளை யறிகின்ற ஞானத்துக்கு சங்கற்பமும் நிச்சயமும் ஆலோசனையும் அபிமானமுமில்லை ஆகையால் வாக்காதி கன்மேந்திரியங்களைந்து சப்தாதி விஷயங்களைந்து சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்து பிராணாதி வாயுக்களைந்து மனாதியந்தக் கரணங்கள் நாலு ஆக இரு பத்துநாலு தத்துவமே க்ஷேத்திரம் இவ்விருபத்துநாலு தத்துவத் திற்கும் சாட்சியாயறிந்த அறிவே க்ஷேத்திரன் இவையே அனாத்மா இவைகளுக்குச் சாட்சியாயறிந்த அறிவே ஆத்மா இவைகளே பிரகி ருதி இவைகளுக்குச்சாட்சியாயறிந்த அறிவே புருஷன்.

## இனி சூட்சமதேகஅத்தியாசங்களை

### நிருபிக்கிறோம்.

### அத்தியாசமாவது.

தைச்சனென்றும் பிராதிபாசகனென்றும் சுவப்பனக் கற்பித னென்றும் அபிமானமும் கண்டஸ்தானமும் சுவப்பனாவஸ்தையும்

சுவேச்சாபோகமும் உகாரமாத்திரையும் சாத்வீககுணமும் இச்சாசக்தியும் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமய கோசங்களும் நான் பேசுகிறவன் ஊமையென்றும், நான்கொடுக்கிறவன் கையில்லாதவனென்றும், நானடக்கிறவன் முடவனென்றும், நான் சிறுநீர் மலம் விசர்ச்சனைபண்ணுகிறவனென்றும் ஆகிய வாக்காதி கன்மேந்திரியங்களுடைய அத்தியாசங்களும் லௌகீகவைதீக சப்தபோதனங்களுக்கும் சீதளம் உஷ்ணம் மிருது கடினபரிசபேதங்களும் நீலம் பீதம் சுவேதம் ரத்தம் அரித்ரூபபேதங்களும் தித்தித்தல்-புளித்தல்-கசத்தல்-துவர்த்தல்-கூர்த்தல்-கார்த்தல் ஆகிய ருசிபேதங்களும், நற்கந்தம் துற்கந்தம் ஆகிய கந்தபேதங்களும் சப்தாதி பஞ்சவிஷயங்களினுடைய அத்தியாசங்களும் நான் கேட்கிறவன் செவிடனென்றும் நான்பரிசமுடையவன் திமிருடையவனென்றும், நான் பார்க்கிறவன் குருடனென்றும், நான் ருசியறிகிறவன் அரோசிகனென்றும், நான் கந்தமறிகிறவன் மூக்கறப்பனென்றும், ஆகிய ஞானேந்திரியங்களுடைய அத்தியாசங்களும் நான் பசிதீபனமுடையவன் பசியில்லாதவனென்றும், நான்தாகமுடையவன் தாகமில்லாதவனென்றும், நான சத்தியுடையவன் நான் பலமில்லாதவனென்றும், நான் வீரமுடையவன் வீரமில்லாதவனென்றும், நான் தும்முகிறவன், இருமுகிறவன், விக்கலெடுகிறவன், நான்வாந்தியெடுக்கிறவன், கொட்டாவிவிடுகிறவன், கண்ணிமைப்பை மூடத்திறக்கச்செய்கிறவன், நான்யோகி, அடவாதி, நான் ஆகாசகமனம் பண்ணுகிறவன் என்று சொல்லப்பட்ட தசவாயுக்களினுடைய அத்தியாசங்களும் நான் சங்கற்பவான், விகற்பவான், புத்திமான், நிச்சயவான், சபலன், சாஞ்சலியன் யோசனையுடையவன், ஆங்காரி, உத்திரனென்றும் சம்சியநிச்சயம் சாஞ்சல்ய அபிமானமாகிற அந்தக்கரணங்களினுடைய அத்தியாசங்களும் வைராக்கியம் பொறுமைசாத்வீகத்திற்கு காமக்குரோதம் ரஜஸ்வினுக்கு சோம்பல் நித்திரை தாமசத்திற்கு ஆகிய குணத்திரய அத்தியாசங

களும் வர்ணபிரமை ஆசிரமபிரமை சரியை கிரியை யோகம் முதலாகிய ஆடம்பரபிரமை மந்திரபிரமை தந்திரபிரமை மூர்த்திபிரமை தீர்த்தப்பிரமை ஸ்தலபிரமை நவக்கிரக திதிவார நட்சத்திரயோக விரத உபவாச தெய்வ புண்ணியஸ்தோத்திரம் காலதேச கீர்த்தி இகபரலோக சௌக்கிய பிரமைகள்முதலிய அத்தியாசபிரமைகளை ஏற்றிக்கழித்து நின்றது சூட்சமதேகம். இந்தச்சூட்சமசரீரம் தானல்லாதபடியினாலே இதனுடைய அத்தியாசங்கள் தனக்குத்தேவையில்லை இந்தச்சூட்சமதேகம் மாத்திரைகளினாலே உண்டானது இவைகளால் வரப்பட்ட ஆனிவிர்த்திகளாகிய சுகதுக்கம் தனக்கவசியமில்லை இவையேதானானால் இந்தசூட்சமசரீரம் போனால்தான் போகவேண்டும் இந்தச்சூட்சமசரீரம் தானானாலும் தானப்படிக்குப்போகவில்லை ஆகைவால் இந்தச்சூட்சமசரீரத்திற்குச் சாட்சியாயநிந்த அறிவேதான்.

இனிப் பஞ்சதன்மாத்திரைகளை விசாரிப்போமாக அதுவுமில்லையென்றறிவது எப்படியெனறால் ரசதன்மாத்திரையினாலே உண்டான கந்த தன்மாத்திரை ரசதன்மாத்திரையை வினவவில்லை யென்றறிவதுதான்.

ரூப தன்மாத்திரையினாலே உண்டான ரசதன்மாத்திரை ரூப தன்மாத்திரையை வினவவில்லையென் றறிவதாம்.

பரிச தன்மாத்திரையினாலே உண்டானது ரூப தன்மாத்திரை சப்ததன்மாத்திரையை வினவவில்லையென் றறிவதுதான்.

சப்த தன்மாத்திரையினாலே உண்டான பரிசதன்மாத்திரை சப்த தன்மாத்திரையை வினவவில்லையென் றறிவதுதான்.

ஆங்கார தத்துவத்தினாலுண்டான சப்ததன்மாத்திரை ஆங்கார தத்துவத்தை வினவவில்லையென் றறிவது.

பஞ்ச தன்மாத்திரைகள் காலத்திரயத்திலும் இல்லவே யில்லை.

தமோகுணப் பிரதானமாகிய ஆங்காரத்துவமே காரணசரீரமென்னப்பட்டது அந்தக்காரணசரீரத்தை விசாரிப்போமாக.

அதாவது.

பஞ்ச தன்மாத்திரைகளைத் தனித்தனியே உற்பத்தியானபடியாலோசித்து லயப்படுத்திப் பார்க்குமிடத்து.

சேஷவிட்சாண வந்தியாபுத்திர சசஞரவிந்தமித்தியாபுருஷன் போல் இல்லாமற்போனபடியால் அது ஒன்றுமில்லையென்றும் தோன்றவில்லையென்றும ஆங்காரத்துவமென்றும் அஞ்ஞானமென்றும் அவித்தையென்றும் பிரகிருதியென்றும் தமஸென்றும் ஸ்தூலசூட்சமசரீரங்களுக்கு ஏதுவாகிக் காரணமாய்ப் பிறப்பித்தலினலேகாரணசரீரமாச்சுது இதனுடைய அத்தியாசங்களை நிருபிக்கிறேம்.

அதாவது.

பிராக்கியனென்றும், பாரமாத்திகனென்றும், அவச்சின்னனென்றும், அபிமானமும, சுழுத்தியவஸ்தையும், இருதயஸ்தானமும், ஆத்மானந்தரூபகமும், மகாரமாத்திரையும், தாமசகுணமும், திரவியசத்தியும், ஆனந்தமயகோசமும்,நான்சுகி, துக்கி, மூடன்,அவிவேகி, பிராந்தன், பாவி, சேடன், அஞ்ஞானி, ஒன்றக்குமாகாதவன்,கெட்டுப்போனவன், என்கிற இவை முதலான பிராந்தி சன்னிய அத்தியாச நாமங்களை ஏற்றக்கழித்துநின்றது காரணதேகம். இந்தக்காரணதேகம் தானல்லாதபடியினலே இதனுடைய அத்தியாசங்கள் தனக்குத் தேவையில்லை இந்தக்காரணதேகம் மகத்துவந்தினலே உண்டானது இதனாலேயேற்பட்ட ஆணி விர்த்திகளாகிய சுகத்துக்

கம் தனக்கவசியமில்லை இந்தக்காரணதேகமே தானானால் இதுபோனால்தான் போகவேண்டும் இதுபோனாலும்தான்போகவில்லை அதெப்படி போகவில்லையென்றால் சமாதிநிஷ்டையிலேசுகப்திகளாசத்தாமாத்திரமப்பிரபஞ்சந் தோன்றாமல் பிரமஸ்வரூபமே தானாயிருக்கிறபடியினாலே தான் போகவில்லை ஆகையால் இந்தக்காரணதேகத்துக்குச் சாட்சியாயறிந்த அறிவேதான் இந்தஸ்தூல சூட்சமகாரணசரீரத்திரயம் மாயையினாலே பொய்யாக்கற்பிதமாய்ப் பிரகையாய் உண்டானது இதைக்குறித்துவந்த அத்தியாசங்களும் ஆபாசங்களும் கர்மகாண்ட சப்த தர்க்க மீமாம்ச யோக ஞானவேத ஆகம புராணங்களாகிய கீதா சாஸ்திரங்களும் இவை முதலாகிய சகலசங்கற்பபிராந்திகளும் சேஷவிக்ஷாணவந்தியா புத்திராகிகனாவிந்த மித்தியாபுருஷன்போலவே நிஷ்பிரபஞ்ச ஸ்வரூபனான தன்னிடத்தில் காலத்திரயத்திலும் இல்லை.

## மகாகாரணம்.

தனித்த ஆத்மாவிற்கே மகாகாரணசரீரமென்றும் கூடஸ்தனென்றும், சித்தென்றும், சைதன்னியமென்றும், சாட்சியென்றும், பெயர்களாம். இந்தச்சாக்ஷியமெனப்படுகின்ற பிரபஞ்சத்தைக்குறித்துச் சாட்சியாகிய சத்து அகண்டாகார விர்த்தியென்றும், போதாங்குரமென்றும், தோணமென்றும், ஓங்காரமென்றும்இவைமுதலானவைகள் வியஷ்டி சமஷ்டி ஸ்வரூபமான சகத்தைக்குறித்துவந்த அகண்டாகாரவிர்த்தியுடனே கூடியிருக்கிற மூலப்பிரகிருதியென்கிற மகாகாரணசரீரம் தானல்ல அதெப்படியென்றால் தூஷ்டீம பூதாவஸ்தையாகிய அதீதவிளக்கத்தில் இந்தமகாகாரணசரீரம் இல்லாமற்போனால் தானென்கிறபிரதி இல்லாமல் தானாயிருக்கிறபடியினாலே இந்தமகாகாரணசரீரம் தானல்ல இந்தமகாகாரணசரீரம் அத்தியாசங்களை நிரூபிக்கிறோம்.

## அதாவது.

பிரத்தியேகாத்மாவென்றும் கூடஸ்தரென்றும் சர்வசாட்சியெ ன்கிற அபிமானமும் துரியாவஸ்தை மிருததன்னியமென்கிற பிரமா ண்ட அதீதஸ்தானமும், ஆனந்தபோகமும், ஓங்காரமாத்திரையும், சுத்தசத்துவகுணமும், ஞானசத்தியும், பின்னும் சர்வக்கியனென் றும், சர்வேஸ்வரனென்றும், சர்வகாரணனென்றும், சர்வாந்திரியாமி யென்றும், சர்வசிருஷ்டி சர்வஸ்திதி சர்வசங்காரமென்றும், பின் னும்தானே சர்வமென்றும், தன்னுடையகற்பனையேசகத்தென்றும், சர்வத்தினிடத்தில் தானனுசூதமாயிருக்கிறவரென்றும், இவைமுத லிய சர்வத்வாதி அத்தியாசநாமங்களும், இதைக்குறித்துவந்த ஆபா சங்களும், இதைக்குறித்துச்சொல்லப்பட்ட வேதாகமபுராண கலைக் ஞான கீதாசாஸ்திரம் தர்க்க மீமாம்ச யோக ஞான சர்வசாஸ்திரங் களும் இந்த சாஸ்திரங்களுக்கு ஏதுவாகிய மகா வாக்கியங்களும் இஹ்றவ முதலாகிய அத்தியாசங்கள் சேஷவிக்ஷாணவந்தியாபுத்திர ககுைரவிந்த மித்தியா புருஷன்போல் காலத்திரயத்திலும் தன்னிட த்தில் இல்லை அதெப்படியென்றால் இந்த சாட்சாத்துவமாகிற மகா காரண சரீரம் சாட்சமெனப்படுகிற பிரபஞ்சத்தைக் குறித்துவந்த தேயல்லாமல் விசாரிக்குமளவில் தன்னிடத்தில் காலத்திரயத்திலும் இல்லை, இருக்கிறது திருக்கு ஆகையால்சாட்சி, சாட்சிரகிதமாய்மபந் தம் மோட்சரகிதமாய் காரியம் காரணரகிதமாய்நினைப்பும் மறப்புமி ல்லாமல் துஷ்டணிதம் பூதனுயிருக்கிற அதீதவிளக்கமாகிய ஸ்வ ரூபம் குருவாக்கியத்தினாலே தானென்றறிந்ததே மூலப்பிரகிருதி ரகிதமான தன்னுடைய ஸ்வரூபம் இதற்குச்சமதிவசனம் ஞானம் சுளுவு பளுவுமாம், அதெப்படியென்றால் தானென்றறிந்த அறிவே தானென சுளுவு அது தானென்றுசொல்லும் மறதியே பளுவென்று இராமஸ்தவராசத்திலே வியாசரிஷி நிருபித்திருக்கிறார், பின்னும்

அறிதேனென்கிற நினைவும் அறியேனென்கிறமறதியும் இவ்விரண்டு மில்லாமல் நடுவாகவிளங்குவதே நிரதிசயானந்தமென்றும் தத்தாத்திரேய யோகீசுவரர் நிரூபித்திருக்கிறார்.

பின்னும் பூர்வாசாரிகளாயிருந்த ஆசாரிய சுவாமிகள் முதலான மகாத்துமாக்கள் மகாமுனிகளும் ரிஷீசுவரர்களும் இதுவேபிரமாணமென்று நிரூபிக்கிறார்கள் இதுவே வேதாந்த ரகசியசித்தாந்தம்.

## துக்கநிவர்த்தி.

தாபத்திரயங்களினாலே தவிக்கின்ற துக்கம் எப்போதொழியுமென்றால் சரீரம்போனால் துக்கம்போம் சரீரம் எப்போதொழிந்து போகுமென்றால் கர்மமில்லாமற்போனால் கர்மம் எப்போதொழியுமென்றால் ராகத்வேஷாதிகளில்லாமற்போனால், ராகத்வேஷாதிகள் எப்போதொழியுமென்றால் அபிமானமில்லாமற்போனால் அபிமானமெப்போதில்லாமற் போகுமென்றால் அவிவேகமில்லாமற்போனால் அவிவேகமெப்போதில்லாமற் பொகுமென்றால் அஞ்ஞானமில்லாமற்போனால் அஞ்ஞானம் எப்போதில்லாமற்போகுமென்றால் பிரமதாந்தம் அபரோட்சமாய் அத்வைத ஆத்மக்கியானம் உதயமானால்.

ஞானமெப்படி வருமென்றால் அதிக சிரத்தாபக்தியுடனேசாதனசதுஷ்டய சம்பத்தியுண்டாகிச் சர்ச்சங்கமூலமாய்ச் சற்குருவினிடத்தில் சத்காலக்ஷேபமாய் சிரவண மனனநிர்த்தியாசனத்தினாலே ஆத்மா அனாத்மாவிசாரஞ்செய்தால் ஆத்மக்கியானம் உண்டாகும் மற்றப்படி எதனாலும் உண்டாகமாட்டாது மெஞ்ஞான அருளாகிய ஆருபஞானம் உதயமானால் அஞ்ஞானம் கிலேசமுமில்லாமல் அடியோடு முழுவதும் அழிந்துபோம்.

அஞ்ஞானம்போனால் அவிவேகம்போம் அவிவேகம்போனால் அபிமானம்போம் அதுபோனால் ராகத்வேஷாதிகள்போம் அதுபோ

ஞல் கன்மம்போம் அதுபோனல் சன்மம்போம் அதுபோனல் துக்கம்போம் அதுபோனல் சுயம்பிரகாசமான சொருப சாட்சாத்கார மேயாவன்.

## ஆத்மாஅனாத்மாவுக்குலட்சணம்.

மூன்றுகாலத்திலேயும் மூன்றவஸ்தையிலேயும் ஒருவிதமாயில்லாதபடினாலே அசத்துலட்சணம் தானுந்தோன்றாமல் ஒருவருக்குந் தோன்றுவிக்காமலுமிருக்கிறதே சடலட்சணம்.

ஆதியாத்மீக ஆதிபௌதிக ஆதிதெய்வீகங்களினாலே வருகிற தாபத்திரயங்களே துக்கலட்சணம் நூறுவயதுக்குமேல் ஸ்தூலதேகமில்லை பிரளயகாலத்தில் சூட்சுமதேகமில்லை சீவன்முத்தியில் காரணதேகமில்லை ஆகையால் அநித்தியலட்சணம் ஒன்றாயிராமல் சிவராசிகளுக்கும தேகங்களாகி யண்டபிண்ட சராசரங்களாயிருக்கிற படியினாலே கண்டித லட்சணமென்று சொல்லப்படும் அசத்து சடம் துக்கம் அநித்யம் கண்டிதம் ஆகிய இவ்வைந்தும் அனாத்மாவுக்கு லட்சணமாம்.

## ஆத்மாவாவது.

மாயாசத்திக்கு ஆதாரமாயிருக்கின்ற அத்வைத ஆனந்தலைசதன்னிய சொருபமே ஆத்மாவென்று சொல்லப்படுகிறது இதற்குலட்சணமெப்படியென்றால் திரிகாலத்திலும் மூன்றவஸ்தையிலும் தாமல்லவாகையால் சத்துலட்சணம் மூலைவீட்டிலே முக்காடிட்டுக் கவிழ்ந்து படுத்துக் கண்ணைமூடிக்கொண்டிருந்தாலும் சூரியசந்திரநட்சத்திர அக்கினிப்பிரகாசங்களாகிய சாதனந்தரங்களில்லாமல் புத்திதெரிந்ததுமுதல் இதுவரையில் நடந்த சகிர்த்தாரங்களெல்லாம் நினைக்குமளவில் தன்னிடத்திற் பிரத்தியட்சமாய்த் தோன்றுகிறபடியினு

லே சித்து லட்சணம் சர்வவுயிர்கள் சம்மதியாக சுழுத்தியவஸ்தையி லிருக்கிறபடியினாலே ஆனந்த லட்சணம் ஒருகாலத்திலும் அழியாத படியினாலே நித்தியலட்சணம் எங்கும் வியாபகமாய் நிரஞ்சனமாகை யால் பரிபூரணலட்சணம் சத்து சித்து ஆனந்தம் நித்தியம் பரிபூர ணம் ஆக இவ்வைந்தும் ஆத்மலட்சணம்.

பிறக்கிறதும் இறக்கிறதும் ஸ்தூலதேகத்துக்குப் பசி தாகம் பி ராணவாயுவிற்குச் சுகம் துக்கம் மனத்திற்கு ஆக இவ்வாறுகாரியமும் ஆத்மார்த்தம்போல் தோன்றுகிறதுமாத்திரமே யல்லாமல் ஆத்மா வுக்குச் சம்பந்தமில்லை காலத்திரயத்திலேயும் அது எத்தன்மையெ ன்றால் ஆகாசத்தில் மேகம் ஓடுகையில் சந்திரன் ஓடுதென்கிறது போல் சொல்மாத்திரமே ஆத்மாநித்தியதிர்ப்பதியாய் நிசானந்தசுகஸ் வரூபியாகிய சுயம்பரகாசமாய் ஆத்மாவென்று அறியப்பட்டவாகளெ வர்களோ அவர்களே சீவன்முத்தர்கள்.

ஆத்மவிவேகம் நித்தியா நித்திய வஸ்துவிவேகம் உண்டான சிஷியனுக்குக் குருஅறிவினுபதேசம்பண்ணுகிற லக்ஷணம்.

நித்தியாநித்திய வஸ்துவிவேகமாவது பிரமமே நித்தியம் ஜகம் அநித்தியமென்றறிக.

இகவுத்திரார்த்தபல போகவிராகமாவது இகபரபோக அபே க்ஷையில்லாமலிருப்பது.

## சமாதிசட்க சம்பத்தியாவது.

சமம் மனோநிக்கிரகம் தமம் பாக்கியஇந்திரியநிக்கிரகம் உபாதி சகலகன்மங்களையும் விட்டிருப்பது திதிசையாவது ஏகதுக்கங்களைச் சகிக்கிறது சிரத்தை குரு வேதாந்தசாஸ்திர தேவதையினிடத்தில் பிரதி விசுவாசமுண்டாயிருப்பது.

சமாதானம் மனப்பிரவிர்த்தியாகிய இந்திரியப் பிரவிர்த்தியில்லாமல் யோகாக்கிரசித்தனு யிருப்பது முமுட்சத்வம் சீக்கிரத்தில் மோட்சத்தையடைய வேண்டுமென்கிற அபேக்ஷையாயிருப்பது.

இப்படிக்கொத்த அங்கத்துடனே கூடி விளங்கப்பட்ட சாத்வீசபுருஷனுக்குக் குருவானவர் திருவுளம் பற்றுகிறார்.

## அஃதாவது

ஸ்தூலசூட்சும காரணமென்கிற இம்மூன்றும் சரீரத்திரயங், சக்கிரம் சொற்பனம் சுழுத்திஎன்கிற இம்மூன்றும் அவஸ்தாத்திரயம் நேத்திரம் கண்டம் இருதயம் ஆக இம்மூன்றும் ஸ்தானத்திரயம், விசுவ தைச்ச பிராக்கிய இம்மூன்றும் அபிமான புருஷத்திரயங்களாம், ராஜசம் தாமசம் சாத்வீகம் இம்மூன்றும் குணத்திரயம், ஆணவம் மாயை காமியம் இம்மூன்றும் மலத்திரயம், சகசதாதாத்மிகம் கர்மதாதாத்மிகம் பிராந்தி சைதன்னியதாதாத்மிகம் இம்மூன்றும் தாதாமாத்திரயம், சாஸ்திரவாசனை தேகவாசனை லோகவாசனை இம்மூன்றும் வாசனுத்திரயம், ஆத்மதத்துவம் வித்தியாதத்துவம் சுகதத்துவம் இம்மூன்றும் தத்துவத்திரயம், வருங்காலம் இறந்தகாலம் நிகழ்காலம் இம்மூன்றும் காலத்திரயம், கர்மம் பக்தி வைராக்கியம் இம்மூன்றும் கன்மத்திரயம், சிரவண மனன நிர்த்தியாசனம் இம்மூன்றும் சாதனத்திரயம், மன மனன மன்னியம் இம்மூன்றும் சங்கற்பத்திரயம், ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்வம் இம்மூன்றும் பிராரத்துவத்திரயம், புண்ணியகன்மம் பாவகன்மம் மிசர்க்கன்மம் இம்மூன்றும் கன்மத்திரயம், ஆதியாத்மீகம் ஆதிபௌதிகம் ஆதிதெய்வீகம் இம்மூன்றும் தாபத்திரயம், மனம் வாக்கு காயம் இம்மூன்றும் திரிவிதகரணம்' நாதம் பிந்து கலை இம்மூன்றும் பிந்துத்திரயம், சர்ச்சங்கம் துர்ச்சங்கம் மத்தியசங்கம் இம்மூன்றும் சங்கத்திரயம், விராட்டுஇரணியகர்ப்பம் அவ்வியாகிருதம் இம்மூன்றும் ஈஸ்வரமாயா உபாதிசரீ

ரத்திரயம், சம்சியம் அசப்பாவனை விபரீதபாவனை இம்மூன்றும் சம்சியத்திரயம், ஞாதருஞானம் ஞேயம் இம்மூன்றும் திரிபுடித்திரயம், சுவர்க்கம் மத்தியம் பாதாளம் இம்மூன்றும் உலோகத்திரயம், அஞ்ஞானம் மாயை வாசனைசித்து இம்மூன்றும் மாரணத்திரயம், தாரிஷ்ணம் தனஈஷ்ணம் புத்திரஈஷணம் இம்மூன்றும் ஈஷணத்திரயம், மனோவிர்த்தி அறிவுவிர்த்தி ஆனந்தவிர்த்தி இம்மூன்றும் விர்த்தித்திரயம்' அஞ்ஞானம் ஆபாணம் விக்ஷேபம் இம்மூன்றும் பந்தத்திரயம், தேசம் காலம் வஸ்து இன்மூன்றும் திரிவித பரிச்சேதத்திரயம்.

## கர்த்த கர்ம கிரியை இம்மூன்றும்.

புக்தம் போச்சயம் போகம். ஆவ ௩
பசு பதி பாசம். ௩
ஜகம் சீவம் பரம். ௩
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை. ௩
இடம் பொருள் ஏவல். ௩
உடல் பொருள் ஆவி. ௩
பெண்டு பிள்ளை பதார்த்தம். ௩
விராட்டு வைசிவானசம் வைராச்சர். ௩
இரணியசர்ப்பர் சூஸ்திராதர் பிராணரதர். ௩
அவ்வியாகிருசர் அந்திரியாமி ஈஸ்வரன். ௩
பிரமன் விஷ்ணு உருத்திரன். ௩
சுருதி குரு சுவானுபவம். ௩
தொம்பதம் தற்பதம் அசிதபம். ௩
விட்டபார்வை தொட்டபார்வை விட்டுவிடாதபார்வை. ௩
வாச்சியம் லக்ஷியம் லட்சியார்த்தம். ௩
சிவன் ஈஸ்வரன் பிரமன். ௩
சிவபதம் பரம் ஈஸ்வரபதம் அல்லதுமோட்சம். ௩
பிரமபதம் சார்ந்திருப்பது,

கிரச்சரம் சாந்திராயணம் நித்தியம் நைமித்யம் இவையேநித்தியகர்ம சதுஷ்டயம். ஆஉ ௪

தபோ மந்திர யோக கர்மம் இவையே தபோகர்ம சதுஷ்டயம். ௪

தர்ம அர்த்தகாம மோட்சம் இவையே சதுர்வித பலபுருஷார்த்தம். ௪

சுகதுக்கம் ஸ்தூலபோகம் அபஞ்சீகிருத்தம் சூட்சுமபோகம் ஆநந்தம் காரணபோகம் நித்தியம் சர்வசாட்சிபோகம் இவையேபோகசதுட்டயம். ௪

ருக்கு எசுர் சாமம் அதர்வணம் இவையே வேதசதுஷ்டயம்-௪

பிரக்கியானம் சதபிரமம் அகம் பிரம்மாஸ்மி தத்வமசி அயம் மாத்மாபிரமம் இவையேமகாவாக்கிய சதுஷ்டயம். ௪

ஆத்மசிஸ்ருஷை அங்கசிஸ்ருஷை தானசிஸ்ருஷை பாவசிஸ்ருஷை இவையேசிஸ்ருஷை சதுஷ்டயம். ௪

மனம் புத்தி சித்தம் அகங்காரம் இவையே அந்தக்கரண சதுஷ்டயம். ௪

பிரமசாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசி இவை ஆச்சிரமசதுஷ்டயம். ௪

குரங்குபாவம் வெள்ளாட்டுபாவம் படபாவம் எருமைக்கடாபாவம் இவையேபாவ சதுஷ்டயம் ௪

லயயோகம் மந்திரயோகம் அடயோகம் ராஜயோகம் இவையே யோக சதுஷ்டயம். ௪

மந்ததரம் மந்தம் தீவரம் தீவரதரம் இவையே பக்குவ சதுஷ்டயம். ௪

அண்டசம் உற்பிசம் சுவேதசம் சராயுசம் இவையே உற்பவசதுஷ்டயம். ௪

உலோகமார்க்கம் தாசமார்க்கம் புத்திரமார்க்கம் சன்மார்க்கம் இவையே மார்க்கசதுஷ்டயம். ௪

சாதுசங்கம் விசாரணை சாந்தி சந்தோஷம் இவையே சாதன சதுஷ்டயம். ௪

சீவன் ஈஸ்வரன் கூடஸ்தம் பிரமம் இவையேசித்து சதுஷ்டயம். ௪

பிரமவேதம் பிரமவித்வான் பிரமவரியம் பிரமவரிஷ்டன் இவையே சீவன்முத்தி சதுஷ்டயம். ௪

சரியை கிரியை யோகம் ஞானம் சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்யம் இவையே பதவிகளாம். ௪

அஸ்தி பாதி பிரியம் நாமம் ரூபம் இவையே அம்சபஞ்சகம். ௫

கர்மி முமுட்சு அப்பியாசி அனுபவம் ஆரூடம் இவையே அதிகாரபஞ்சகம். ௫

அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் இவையே பஞ்சகோசங்கள். ௫

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் இவையே பூதபஞ்சகம் ௫

பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் இவையே பிராணாதிவாயு பஞ்சகம். ௫

சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் இவையே ஞானேந்திரிய பஞ்சகம். ௫

சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் இவையே சப்தாதிவிஷய பஞ்சகம். ரு

வாக்கு பாதம் பாணி குஹ்யம் பாயுரு இவையே கன்மேந்திரிய பஞ்சகம். ரு

வசனம் கமனம் தானம் ஆநந்தம் விசர்ச்சனம் இவையே கன்மேந்திரிய விஷய பஞ்சகம். ரு

நாதன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் இவையே உபவாயு பஞ்சகம். ரு

கோபாக்கினி சமாக்கினி மந்தாக்கினி சடராக்கினி படவாக்கினி யிவையே அக்கினிபஞ்சகம். ரு

தாரித்திரன் ரூட்டியன் கர்மியக்தன் மூமுட்சு இவையே தாரதம்மிய பக்குவபஞ்சகம். ரு

பராசத்தி ஆதிசத்தி ஞானசத்தி இச்சாசத்தி கிரியாசத்தியிவையே பஞ்சசத்திகளாம். ரு

பிரமா விஷ்ணு உருத்திரன் மயேஸ்வரன் சதாசிவன் இவையே பஞ்சகர்த்தாக்கள். ரு

சிருஷ்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் இவையே பஞ்சகிர்த்திகளாம். ரு

பசி தாகம் பிறப்பு சுகம் யிறப்பு துக்கம் ஆறு சு

சிசுத்வம் காவிகாபுத்தம் பக்குவம் பாலியம் எவ்வனம் வார்த்திகம் இவையே ஷட்பாவ விகாரம். சு

மூளை அஸ்தி நரம்பு மாமிசம் தோல் உரோமம் இவையேஷட்கோசங்கள். சு

காம குரோத லோப மோக மத மாற்சரியம் இவையேஅரிஷ்ட வர்க்கம். சு

மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆக்கினை யிவையே ஆராதாரம். சு

உபக்கிரமம் உபசம்மார மிவையுமொன் றுமுதல், இலிங்கம் அப்பியாசம் இரண்டாவது, அபூர்வதம் மூன்றாவது, பலம் நான்காவது, அர்த்தவாதம் ஐந்தாவது, உபர்த்தி ஆறாவது, இவையே ஷட்விதலிங்கம், சு

பாக்கிய திருசியான வித்தசவ்விகற்ப சமாதியாகிய சந்தானுவித்த சவ்வியகற்பசமாகி அந்தர திருசியானுவித்த சவ்வியகற்ப சமாதி பாக்கியநிர்விகற்பசமாதி அந்தரங்கநிர்விகற்ப சமாதியிவையாறும் ஷட்சமாதி. சு

இச்சை திரேஷம் சுகம் துக்கம் சங்காதம் சேதனம் துர்தி யிவையே சப்தவிசனம். ஆு எ

இஞ்சானம் ஆவரணம் விக்ஷேபம் பரோக்ஷம் அபரோக்ஷம் துக்கநிவிர்த்தி ஆனந்தவியாப்தி யிவையே சப்தாவஸ்தைகள். எ

சுபேட்சை விசாரணை தனுமானிசை சத்வாபத்தி சமுஞ்சத்தி பதார்த்தபாவனை துரியம் இவையே ஞானபூமிகள். எ

குலம் சலம் தனம் எவ்வனம் ரூபம் வித்தை ராச்சியம் தமசு இவையே அஷ்டமதங்கள். ஆு அ

தயை சந்தோஷ பயம் லச்சை சிகிச்சை குலம் சீலம் விரதம் இவையே அஷ்டமதங்கள். அ

இயமம் நியமம் ஆசனம் பிரணயாமம் பிரத்தியாகாரம் தியானம் தாரணை சமாதி யிவையே அஷ்டாங்கயோகம். அ

சாதனசதுஷ்டயச் சம்பத்தியுடைய அதிகாரிக்கு முந்தினது பக்குவம் பிந்தினது பதிப்புண்ணியம் பின்னே மலபரிபாகம் மேல் பதிப்புண்ணியம் மேல் பலபரிபாகம் மேல் சத்திநிபாதசமயம் மேல் இருவினை ஒப்பு இப்படிக்கொத்த அங்கத்துடனே கூடி விளங்கப் பட்ட முமுட்சுவாகிய சீஷனுக்குச் சற்குருசுவாமிகள் உபதேசமனுக்கிரகஞ்செய்கிறார்.

தேகத்தை ஆத்மாவோ சொல்லுமென்றால் தேகம் சடமாகை யால் ஆத்மாவாகமாட்டாது பிராணாதி வாயுக்களை ஆத்மாவோ சொல்லுமென்றால் அவையும் சடமாகையால் ஆத்மாவாகமாட்டாது, இந்திரியங்களை ஆத்மாவாகச் சொல்லுவோமென்றால் அந்தக்கரணத்தைசெலுத்த சாமர்த்தியமில்லாதபடியினாலே அதுவும்சடமே அந்தக் கரணத்தை ஆத்மாவாகச் சொல்லுவோமென்றால் அந்தக்கரணங்களுக்குஆதாரமாகிய சீவனைவினைச் சாமர்த்தியமில்லாதபடியினாலே அதுவும்சடமே, சீவனை ஆத்மாவென்று சொல்லுவோமென்றால்சர்வாதாரமாயசர்வகாரணமாய் சர்வபரிபூரணமாய் சர்வசாட்சி அதீதவிளக்கமாகிய அகண்டானந்த நிர்விசற்ப சுத்தசைதன்னிய ஸ்வரூப சாக்ஷாத்கார நீங்கலாக சீவிக்கமாட்டாதாகையால் அதுவும் சடமே ஆத்மா எப்படிக்கொத்ததென்றால் வொருபதார்த்தத்தை நினைத்து அதைவிட்டு நீங்கி மற்றொருபதார்த்தத்தை நினையாமல் நடுவில் யாதொருவிகற்பங்களுமில்லாமல் நிற்குண ப்ரதிமாத்திரம் யாதொன்றுண்டோ அதுவே ஆத்மக்கியானம் தன்னுடைய சங்கற்ப விகற்பத்தினாலே ஜகத்தென்று விளங்கும் ஜகத்தென்றுவிளங்குதற்கு ஞானமில்லாமல் வேறொன்றில்லை அதைவிலக்கிச் சொர்க்காதி போகங்களைக்கோருகிற பலப்பிராப்தி ஞானிகளுக்கில்லை பரப்பிரமமென்று ஒருவஸ்து இருக்கின்றது அதெப்படிக்கொத்ததென்றால் எண்ணிறந்த ஆனந்தமாய் ஒருகாலத்திலும் அழிவில்லாததாய் நித்தியமாய்

ஞானஸ்வரூபமாய் ஆகாசத்தைப்போல் நிறைந்து நிபிடிகரமாய் ஏக மாய்ச் சகலவஸ்துக்கியானமாய் உடைய ஆத்மாஸ்ரூபந் தவிர மற் ளுென்றென்கிற பேதமில்லாததால் பால் தயிர்போல் பின்னெரு விகாரத்தையுமடையாததாய் சகலசாமார்த்தியங்களுமுண்டாய் தன் மயமாகிய சைதன்னியமென்னும் ஒருவஸ்து உண்டு அந்தவஸ்து தவிர பின்பு இப்போது இனிமேல் காலத்திரயத்திலும் அன்னிய மாய் இரண்டாம்வஸ்து இல்லவேயில்லை ரூபமில்லாமல் ஞானமாத் திரமாகிய ஆத்மா தன்னைத்தானே சிந்திக்கும் அப்போது சர்வரூப ங்களாய் விளங்கும் இதற்குச் சுவர்ப்பனம் பிரமாணம்.

பிரமம் எப்படிநினைக்கிறதோ அந்தப்படியாகிய ரூபங்கள் விள ங்கும் அப்படிவிளங்காநின்ற ரூபங்களெல்லாம் ஞானமாத்திரயாகிய நானே அந்தப் பதார்த்தங்கள் சகலசத்துகளு முடைத்தாகியவரா கையால் தன்னைத்தானே நினைத்து ரூபமாகவிளங்குகின்ற வஸ்து தானே இது பதார்த்தமென்று பார்த்தால் அதற்குப்பேர்கள் அனே கமாயிருக்கும் சீவனென்றும் மாயையென்றும் அஞ்ஞானமென்றும் சடமென்றும் இவ்விதமாய்சொல்லப்படும். இந்தப்பேதம் பரமாத் துமாவுக்கில்லை பிரமா விஷ்ணு மகேஸ்வரராலே கற்பிக்கப்பட்ட சீவராசிகள் தங்களை வேருென்ருய் நினைத்துக்கொண்டால் பந்தம் இது ரம்மியவஸ்துவென்று நிர்ணயஞ்செய்கிற நிச்சயத்திஞலே வாச னையுண்டாகும் அந்தவாசனையிஞேடு கூடிய புண்ணியகன்மங்களைச் செய்தால் தாமசகுணம் இரண்டும் சமமாய்ச்செய்தால் ராஜசகுணம் சாத்மீககுணம் கன்மத்துக்குப்பலம் சொர்க்காதி போகங்களாகிய சுகம் தாமசகுணம் கர்மத்துக்குப்பலம் நரகவேதனையாகிய துக்கம் ராஜசகுணம் காமத்துக்குப்பலம் மீசுரமான சுகதுக்கங்களை யனுப விக்கிற மனிதஜனனம் ஞானம் சத்தியசங்கற்ப முடையதாகையால் தானெப்படி நினைத்தாலப்படியாக விளங்கும் ஆத்மஸ்வ ரூபத்தி

லே உண்டான திரிமூர்த்திகளாலே கற்பிக்கப்பட்ட சீவர்கள் தங்களைச் சின்மாத்திரமென்றறியாமல் கரசரணாதி அவயவங்களான தேசம் தானென்றெண்ணிக்கொண்டால் செனனங்களையெடுத்து மரணங்களை யடைந்து சுகதுக்கங்களை யனுபவிப்பார்கள் ஸ்வரூபம்தானென்று நிச்சயித்துக்கொண்டால் ஈஸ்வரபதம் அல்லது மோட்சத்தை யடைவார்கள்.

மூமுட்சுக்கு மூன்றுசனனம், அப்பியாசிக்கு இரண்டுசனனம் அனுபவசாலிக்கு ஒருசனனம், ஆரூடனுக்குச் சனனமேயில்லை.

பிருதிவிக்குக் காரணம்கடினம் மண்ரூபமேகாரியம் நவரத்தினங்கள் நவலோகங்கள் சிலைகள் பருவதங்கள் காரியப்படுக வெளியிலே பஞ்சபூதங்களுக்குக்காரணம் காரியம் காரியப்படுக,

எறும்புகடை எண்பத்துநான்குலட்சம் சீவராசிகளுக்கும் தேகங்களாய் வீடு வாசல் மச்சு மாளிகை கோபுரங்களாய் அழிவதே காரியப்பட்டுவிடுக.

அப்புவுக்குச் சீதளம் காரணம் மழைபெய்கிறது சமுத்திரம் நதிகள் ஏரி குளம் குட்டை நிரம்புவதே காரியப்படுக. குடிக்கிறது நக்குகிறது உறிஞ்சுகிறது தேன் பால் தயிர் தேங்காய்பால்கள் முதலான சர்வரசாரம் எத்தமிறைக்கிறது சலசூஸ்திரமுதலானதும் காரியப்பட்டுவிடுக.

அக்கினி உஷ்ணம் காரணம் சர்வதேகத்திலும் சமஸ்தத்திலேயும் இப்படியிருக்கிறதே காரியம் வடவாக்கினி பிரளயாக்கினி காலாக்கினி மூலாக்கினி கோபாக்கினி மந்தாக்கினி காமாக்கினி சோமாக்கினி முதலானவைகள் காரியப்படுத்துக.

அடுப்பு நெருப்பு சுடுகோட்டுநெருப்பு மடப்பள்ளிநெருப்பு சக்கிமுக்கிநெருப்புகிலேபுருசு ஆகாசபாணம் பகல்வத்தி முதலானவைகள் காரியப்பட்டுவிடுகை.

ஆகாசத்துக்கு அவகாசம் நிரந்தரம் காரணம் திசை திக்குகள் காரியம் சர்வத்துக்கும் இடமாவதே கடாகாசம் மடாகாசம் தேகாகாசம் வஞகாசம் கோபுராகாசம் என்கிற உபாதிநாசமே..

## அத்தியாத்மம் அதிபூரம் அதிதெய்வங்களை விசாரிப்போமாக.

சுரோத்திர அத்தியாத்மம் சப்தம் அதிபூதம் திக்குகள் அதிதெய்வம், துவக்கு அத்தியாத்மம் பரிசம் அதிபூதம் வாயு அதிதெய்வம், சட்சு அத்தியாத்மம் ரூபம் அதிபூதம் சூரியன் அதிதெய்வம் சிங்குவை அத்தியாத்மம் ரசம் அதிபூதம் வருணன் அதிதெய்வம், கிராணம் அத்தியாத்மம் காந்தம் அதிபூதம் அசுவினிதேவதைகள் அதிதெய்வம்.

வாக்கு அத்தியாத்மம் பேசுகிறது அதிபூதம் அக்கினி அதிதெய்வம், பாத அத்தியாத்மம் கமனம் அதிபூதம் உபேந்திரன் அதிதெய்வம், அஸ்த மத்தியாத்மம் தானம் அதிபூதம் இந்திரன் அதிதெய்வம், குய்யம் அத்தியாத்மம் ஆனந்தம் அதிபூதம் பிரசாபதி அதிதெய்வம், பாயுரு அத்தியாத்மம் விசர்க்கம் அதிபூதம் மிருத்துவு அதிதெய்வம், மனசு அத்தியாத்மம் சங்கற்பம் அதிபூதம் சந்திரன் அதிதெய்வம், புத்தி அத்தியாத்மம் நிச்சயம் அதிபூதம் சதுர்முகன் அதிதெய்வம், சித்தம் அத்தியாத்மம் ஆலோசனை அதிபூதம் க்ஷேத்திரிக்கள் அதிதெய்வம், ஆங்காரம் அத்தியாத்மம் அபிமானம் அதிபூதம் இந்திரன் அதிதெய்வம், தபசு அத்தியாத்மம் விகாரம் அதிபூதம், ஈஸ்வரன் அதிதேய்வம் இவைகளெல்லாங்கூடிச் சாக்கிரம் சுவப்ப

ணம் சுழுத்தி அவஸ்தைகளாயின் இவைகளுக்குத் தாபத்திரயங்களென்றும்பெயர் இந்தஅவஸ்தாதிரயங்களுக்குச் சாட்சியாய் நித்தியராய் நிர்விகாரராய் ஆனந்தஸ்வரூபரான ஆத்மாதானென்று யாரறிகிறார்களோ அவர்களே சீவன்முத்தர்களென்று வேதாந்த சித்தாந்தஞ் சொல்லுகின்றது.

## வைராக்கியஉபாதிபோதம்.

வைராக்கிய வுபாதிபோகத்துக்கு எதுஸ்வரூபம் காரியம் அவதிபலம் நிரூபிக்கிறோம்.

இவ்வைராக்கியத்துக்குச் சகல விஷயத்திலேயும் தோஷதிருஷ்டி எது அந்தவிஷயத்திலே தேகதாரணைக்கு அன்னியமானவிஷயங்களை மலமூத்திரவாந்தியாசனம்போல் வேண்டுவதில்லாமல் விடுவதேஸ்வரூபம் அந்தவிஷயங்களைப் புசியாமல் என் தள்ளிவிட்டோமென்று மறந்தாலும் மறுபடி ஆசக்திவராமல் இச்சையற்றதே காரியம் பிரமலோகபரியந்தம் திருணிகாரமாகவந்ததே அவதிபலம் சத்தியலோகம் உபாதிக்கு இயமநியமாதி அஷ்டாங்கயோகம் எது சித்தநிரோதம் ஸ்வரூபம் சர்வவிகாரநாசமே காரியம் சாக்கிரத்திலேலே காடாந்தகார சுழுந்தியைப்போல் தேகாதிபிரபஞ்சத்தை மறந்திருப்பதே அவதிபலம்.

ஞானத்துக்குச் சிரவண மனன நித்தியாசனம் எது இந்தச்சிரவணத்திலே தேகாந்திராதி பிரபஞ்சத்தையும் ஆத்மஸ்வரூபத்தையும்பகுத்து அந்த அத்வைதபிரத்யேகத்வம் ஸ்வரூபமேதானென்று இந்தத் தேகேந்திரியாதி பிரபஞ்சந்தானல்ல.

இந்தப் பிரபஞ்சந் தோன்றப்பட்டபோதும் காலத்திரயத்திலும் இல்லையென்று புத்தியில் திருஷ்டிநிச்சயம் வருகிறதே ஞானத்

துக்கு ஸ்வரூபம் மறுபடியும் இந்தஅனாத்ம ஸ்வரூபமான தேகேந்திரயாதிகள் தானென்று வராமலிருப்பதேகாரியம்.

அஞ்ஞானகாலத்தில் தேகேந்திராதி சங்கம் தானென்று ஊர்த்வமாம் நிச்சயமாய் வந்ததுபோல் அந்தபுத்தி யெவ்வளவும் வராமல் அத்வைத ஆத்மஸ்வ ரூபமேதானென்று அழுத்தமாய் திடநிச்சயம் வருகிறபரியந்தம் ஞானத்துக்கு அவதிபலம்மோட்சம்.

இந்தப்பிரகாரம் வருகிற வைராக்கிய உபாதிஞானத்துக்கு ஏது ஸ்வரூபம் காரியம் அவதிபலம் ஆக ஐந்தும் சொல்லப்பட்டது.

மோட்சத்தை யடைவதற்கு இந்தமூன்றும் பிரதானமாய் வேண்டியதோவெனில் சாதனாந்திரங்களை அபேட்சிக்காமலே பிரத்தியட்சமாய் மோட்சத்தை அடைகிறபடியினால் ஞானமென்றே பிரதானம்.

வைராக்கிய உபாதியிரண்டும் பூரணமாயிருந்தாலும் ஞானமில்லாவிட்டால்மோட்சமில்லை.

இவ்விரண்டும் ஞானத்துக்குச் சாதனமாயிருக்கும் இந்தமூன்றும் ஒருபுருஷனிடத்தி லிருக்குமேயானால் மாதபோத பலம் ஒவ்வொருபுருஷனிடத்தில் கர்மவசத்தினாலே ஒவ்வொன்று மில்லாதிருக்கும் எந்தபுருஷனுக்கு வைராக்கியமும் உபாதியும் பூர்ணமாயிருந்தும் ஞானம் ஒன்றுமாத்திரம் இல்லாவிடில் அவனுக்கு மோட்சமில்லை எந்தப்புருஷனுக்கு வைராக்கிய உபாதி யில்லாமல் ஞானமாத்திரம் பூரணமாயிருந்தால் அவனுக்கு மோட்சமே சித்தம்.

ஆனால் வைராக்கிய உபாதி வியர்த்தமாய்போகுமோவென்றால் போகாது இவ்விரண்டும் தமசானபடியால் புண்ணியலோகப் பிராப்திசித்திக்கும் இதனாலே ஞானத்துக்குப் பிரயோசனமென்னவென்றால் இந்தவைராக்கிய உபாதியிரண்டுமில்லாவிட்டால் பிரத்தியன் சத்துக்கபோகாது பிரார்த்வகர்ம நானாவிதமானபடியினாலே ஞானிகளுடைய வியாபாரமும் நானாவிதமாயிருக்கும்.

விவேகியானபேர்கள் தங்களுடைய வியாபாரங்களைப்பார்த்துச் சாஸ்திரங்களிப்படிசொல்லுகிறது இவர்களுடைய வியாபாரமிப்படியிருக்கிறதென்று பிரமிக்கவேண்டியதில்லை அவரவர்கள் காமவசத்தினாலே நானாவிதவியாபாரத்தோடு கூடியிருந்தாலும் ஞானமும்ஞானத்துக்குப் பலமானமுக்கியமும் சமானமென்று வேதாந்தசாஸ்திர சித்தாந்தம்.

## ஞானம் அஞ்ஞானத்தினுடையவிவரம்.

அஞ்ஞானமாவது தன்னை யதார்த்தமாயறியாதது ஞானமாவது தன்னை யதார்த்தமாயறிந்தது மேலும் அஞ்ஞானமாவது தன்னைக் கரசரணாதி அவயவாகாரமாகிய தேகமாகவறிந்ததேயாகும் ஞானமாவது தன்னைப் பிரமஸ்வரூபமாக வறிந்ததேயாம்.

அஞ்ஞானமாவது அத்வைதமாகிய ஆத்மாவை துவிதமாகவறிந்ததேயாகும் அபரிச்சின்னமாகிய ஆத்மாவைப் பரிச்சின்னமாக வறிகிறதேயாகும் அசங்கமாகிய ஆத்மாவைச் சங்கமாகவறிகிறதேயாகும் அகர்த்தாவாகிய ஆத்மாவைக் கர்த்தாவாக வறிகிறதேயாகும் அபோக்தாவாகிய ஆத்மாவை போக்தாவாக வறிகிறதே அஞ்ஞானம்.

ஞானமாவது துவைதமாகிய ஆத்மாவை அத்வைதமாக வறிகிறதேயாகும் அபரிச்சின்னமாகிய ஆத்மாவைப் பரிச்சின்னமாகவறிகிற

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தத்துவதீபிகை.

## சரீரத்தினளவு பிரமாணாதிகளின் விவரம்.

இந்தச் சரீரமானது அவரவர்கள் கைபிறைல் ௮-சாண் நீளமும் ௪-சாண் பருமனும், அல்லது ௯௬-விரற்கடை பிரமாணமுமுள்ளது

இதற்குள் ௯௬-தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன.

### அவையாதெனில்

வாசல்கள்-௯ பொறி-௰ புலன்-௰ ஆதாரம்-௬-மண்டலம்-௩ நாடி-௰ வாயு-௰ காது-௭ இராகம்-௮ கோசம்-௫ கரணம்-௪ அவஸ்தை-௫ குணம்-௩ மலம்-௩ வியாதி-௩ ஆக-௯௬.

### இவைகளுக்குவிவரம்.

செவிகள்-௨ கண்கள்-௨ நாசிகள்-௨ வாய்-௧ குய்யம் பெண்குறி அல்லது ஆண்குறி-௧ குதம் அல்லது அபானவாயு-௧ ஆக-வாசல்கள்-௯.

சுரோத்திரம்-௧ தொக்கு-௧ சட்சு-௧ சிங்குவை-௧ ஆக்ராணம்-௧ ஆக பொறிகள்-௫.

### இவைகளின் இயற்கையாவன.

சுரோத்திர மென்பது-செவி, இது ஆகாசத்தினிடமாய் நின்று சத்தத்தை யறியும்.

தொக்கு என்பது-உடம்பு, இது வாயுவினிடமாய்நின்று பரிசத்தை யறியும்.

சட்சுவென்பது-கண், இது தேயுவினிடமாய் நின்று ரூபத்தை யறியும்.

சிங்குவை யென்பது-நாக்கு, இது அப்புவினிடமாக நின்று ரசத்தை யறியும்.

ஆக்ராண மென்பது-மூக்கு, இது பிருதிவியினிடமாக நின்று கந்தத்தை யறியும்.

இவைகளை ஞானேந்திரிய மென்னப்படும்.

---

கன்மேந்திரியமாவன.

வாக்கு-பாதம்-பாணி-பாயுரு-உபஸ்தம் ஆ-ரு.

இவைகள் முறையே வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் இவைகளாம்.

ஆகாசத்தினிடமாக நின்று வசனிப்பது வாக்கு.
வாயுவினிடமாக நின்று கவனிப்பது பாதம்.
தேயுவினிடமாக நின்று இடல் ஏற்றலானது பாணி.
அப்புவினிடமாக நின்று சலமலாதிகளைக்களைதல் பாயுரு.
பிருதிவியினிடமாக நின்று ஆனந்திப்பது உபஸ்தம்.

இவைகள் கன்மேந்திரியங்களாம்.

---

## தன்மாத்திரைகளாவன.

சத்தம்-பரிசம்-ரூபம்-ரஸம்-கந்தம்-ஆக-ரு.

சத்தமானது-ஆகாசத்திலும், செவியிலு மொடுங்கும்.
பரிசம்-வாயுவிலும், உடம்பிலு மொடுங்கும்.
ரூபம்-தேயுவிலும், கண்ணிலு மொடுங்கும்.
ரஸம்-நீரிலும், நாவிலும் ஒடுங்கும்.
கந்தம்-பிருதிவியிலும், மூக்கிலும் ஒடுங்கும்.
வசனம்-வாக்கிலும், ஆகாசத்திலும் ஒடுங்கும்.
கமனம்-வாயுவிலும், காலிலும் ஒடுங்கும்.
தானம்-தேயுவிலும், கையிலும் ஒடுங்கும்.
விசர்க்கம்-அப்புவிலும், மூகத்திலும் ஒடுங்கும்.
ஆனந்தம்-பிருதிவியிலும், குய்யத்திலும் ஒடுங்கும்.

ஆக பொறி ௧0-க்கும் புலன்கள் ௧0-க்கும்
விவரமிதுவாம்.

---

## ஆதாரமாவன.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை இவைகளாம்.

## இவைகளின்விபரம்.


மூலாதாரமாவன—காலெலும்பு உ-ங் கதிரெலும்புங்கூடிய இடம் குய்யம், குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவே குண்டலி வட்டமாய் அந்த வட்டத்துக்கு நடுவே திரிகோணமாய் அந்தத்திரிகோணத்துக்கு நடுவே நாலிதழுடைய ஒருபுட்ப வட்டமாய் கடப்பம் பூப்போன்றிருக்கும், அந்தப் புட்பத்துக்கு நடுவில் ஓங்காரவெழுத்து

நிற்கும் அந்த ஓங்காரத்திற்கு நடுவில் விக்கினேஸ்வரனும், வல்லபை சத்தியும் எழுந்தருளியிருப்பார்கள். பச்சை நிறமுள்ளது, அந்த நாலிதழிலும் நிற்கும் அட்சரங்களை இதற்கடியில்வரும் மூலாதார சக்கரத்திற் காண்க.

## இதற்குப்பிரமாணம் திருமந்திரம்.

மாமலர் நாலையும் வட்டத்தின் மேவிடு
மாமலர் நாலிலும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே
ஒருவீடு வாசற் கிருவீடு மேலே
கருவீடு வாசற் கிருவிரல் கீழே
உருவீடு சோதியு மங்கே யுதித்தன
திருவுடை யாரிது தேர்ந்தறி வாரே
ஈட்டா னறிந்திலன் எத்தாளுங் கண்டிலன்
தட்டா னறிந்தான் ஒருவர்க் குரைத்திலன்
மெட்டாய் வளர்ந்து அதின்மேல் விநாயகன்
அட்டாங்க யோகத் தமர்ந்திருந் தானே
ஓங்கார மென்னும் அவளொரு பெண்ணும்
நீங்காப் பச்சை நிறம தாகந்தவள்
ஆங்கார முடன் ஐவரைப் பெற்றவள்
ரீங்கா சனத்தி லினிதிருந் தாளே.

# மூலாதாரம்.



முக்கோணம்
நாலிதழ்க்கமலம்
மாணிக்கநிறம்
கணபதி
குண்டலிசத்தி
ஓங்காரம்
இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

இதற்கு இரண்டு விரற்கடைக்குமேலிருப்பது

## சுவாதிஷ்டானமாம்.

அது நாற்சதுரமும், அச்சதுரத்தினடுவே ஆறிதழ்களையுடைய ஒருபுட்ப வட்டமும், அதன் மத்தியிலே லிங்கபீடமும் வீணாத்தண்டினடியுமா யிலங்கி அதினடுமத்தியிலே நகார எழுத்து நிற்கும்.

அந்த நகாரத்தினடுவில் பிரம்மாவும், சரஸ்வதியும் வீற்றிருப்பார்கள்.

இது பிருதிவியின் கூறுகும்-பொன்னிறமாம் அந்தப்புட்பத்தின் ஆறிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் சுவாதிஷ்டான சக்கரத்திற் காண்க.

## இது சுவாதிஷ்டானம்.



நாற்சதுரம்
ஆறிதழ்கமலம்

செம்பொன்னிறம்

பிரம்மா

சரஸ்வதி

நகாரம்

இவையெல்லாம் அவ்விடத்தில்

தோன்றுவனபோலிருக்கும்.

---

இதற்கு ௮-விரல் பிரமாணத்துக்குமேல் இருப்பது மணிபூரகமாம், இதுகோழிமுட்டைபோல ௧௦௦௮-நரம்பு நாடிகளுஞ்சூழ நாடிக்கெல்லாம் வேருள்ளது, இதை உள்ளறிவுள்ளோர் உந்திக்கமலமென்று சொல்லுவார்கள், இது தொப்புளுக்கு நேரில் அப்புஸ்தானத்தில் எழாம்பிறைக் கிணங்கியிருக்குமாம். இதனடுவே பத்து இதழுடைய ஒருபுஷ்பம் வட்டமாயிருக்கும், அந்த புஷ்பத்தினடுவில் மகாரவெழுத்து நிற்கும், அந்த மகாரத்திற்கு நடுவில் மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் எழுந்தருளியிருப்பார்கள். பளிங்கு நிறமுள்ளது, அந்தப் பத்திதழிலும் நிற்கின்ற அட்சரங்களை இதற்கடியில் வரும் மணிபூரகச் சக்கரத்திற் காண்க.

19

# இருமணிபூரகம்.



மூன்றாம்பிறை

பத்திதழ்கமலம்

மரகதநிறம்

விஷ்ணு


லட்சுமி

மகாரம்

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

இதற்குமேற் பத்து விரற்கடை பிரமாணமுள்ள இடத்துக்கு மேல் உள்ளது அநாகதமாகும். இது இருதயகமலமாம் தேயுஸ்தானத்தில் முக்கோணமாயிருக்கும், அந்த முக்கோணத்தினடுவில் பன்னிரண்டிதழையுடைய ஒரு புட்பவட்டமாயிருக்கும். அந்தப் புட்பத்தினடுவில் சிகாரவெழுத்து நிற்கும். அந்தச் சிகாரத்தினடுவில் ருத்திரனும் பார்வதியும் அமர்ந்திருப்பார்கள். அக்கினி நிறத்தையுடையது அந்தப் பன்னிரண் டிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் அநாகத சக்கரத்திற் காண்க.

## இது அநாகதம்.



பன்னிரண்டிதழ்கமலம்
முக்கோணம்

ஸ்படிகநிறம்

உருத்திரன்

பார்வதி


சிகாரம்

இவையெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

---

இதற்குப் பத்துவிரற்கடை பிரமாணமுள்ள இடத்துக்குமேலுள்ளது விசுத்தியாம், இது கண்டஸ்தானத்திலே வாயுஸ்தானத்திலுள்ளது. அறுகோணமாயிருக்கும். அந்த அறுகோணத்தினடுவில் பதினாறிதழையுடைய ஒரு புட்பவட்டமாயிருக்கும், அந்தப் புட்பத்தினடுவே வகாரவெழுத்துநிற்கும், அந்த வகாரத்தினடுவில் மகேஸ்வரனும் மகேஸ்வரியும் எழுந்தருளி யிருப்பார்கள். கருநிறத்தையுடையது, அந்தப் பதினா றிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் விசுத்தி சக்கரத்திற் காண்க.

# இது விசுத்தி.




பதினறிதழ்கமலம்
அறுகோணம்
மேகநிறம்
மகேஸ்வரன்

மகேஸ்வரி

வகாரம்

இவையெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவனபோலிருக்கும்.

---


இதற்கு (கஉ) விரற்கடை பிரமாணமுள்ள ஸ்தானத்துக்கு மேல் ஆஞ்ஞை லலாட பீடத்திலிருக்கின்றது, வீணைத்தண்டின் முடியுமாய் ஊடுருவிப் பொன்போன்ற வடிவமுற்றுநிற்கும், நெற்றிப்புருவத்தின் வெளியாய் ஆகாசஸ்தானத்தில் மூன்றிதழையுடைய ஒரு புட்பத்தினடுவே யகாரவெழுத்தோ டிணங்கிநிற்கும், அந்த யகாரத்துக்கு நடுவில் சதாசிவமும் மனோன்மணியும் எழுந்தருளி யிருப்பார்கள். மேகநிறத்தையுடையது இதிலுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் ஆஞ்ஞை சக்கரத்திற் காண்க.

## இதற்குத் திருமந்திரம்.

ஐம்பதெழுத்தே அமர்ந்த வேதங்கள்
ஐம்பதெழுத்தே ஆகமாதிகள்
ஐம்பதெழுத்தின் அறிவை யறிந்தபின்
ஐம்பதெழுத்தே ஐந்தெழுத்தாமே.

---

# இது ஆஞ்ஞை.




க்ஷ

மூன்றிதழ்க்கமலம்

வட்டம்

படிகநிறம்

சதாசிவம்

மனோன்மணி

யகாரம்

இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவதுபோலிருக்கும்.

---

## ஆராதாரவிவரம்.

மூலகாரணமாயிருக்கும் இந்தப்படத்தில் சங்கை நேரிடுமேயாமைல் அகமும் புறமும் ஆராய்ந்துபார்த்தால் தெரியவரலாம்.

### திருமூலர் திருமந்திரம்.

ஒருவீடுவாசலுக் கிருவிரன்மேலே
கருவீடுவாசலுக் கிருவிரல்கீழே
உருவிடச்சோதியும் உணர்வதுமாங்கே
திருவுடையாளிது சேர்ந்தறிவாளே.

### மூலாதாரம்.

க. குதத்திற்கும் லிங்கத்திற்கும் நடு.

### சுவாதிஷ்டானம்.

உ. லிங்கத்திற்கும் நாபிக்கும் நடு.

### மணிபூரகம்.

ங. நாபிக்கமலம்.

### அனாகதம்.

ச. இருதயகமலம்.

### விசுத்தி.

ரு. கண்டத்தானம்.

### ஆஞ்ஞை.

சு. லலாடத்தானம்.

### சந்திரமண்டலம்.

எ. மூலாதாரந்தொடங்கி ஒவ்வோரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசு நடுவே கோடி சூரியர் உதயமானாற்போலப் பிரகாசிக்கும், இந்த அமிர்தகலை அக்கினிமண்டலத்தை நோக்கி ஜோதியாய் நிற்கும்.

## ஆதித்தமண்டலம்.

அ. இருதயகமலத்தில் அறுகோணமாய் எட்டிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும், இதில் வாழைப்பூப்போல் கீழ்நோக்கி யிருக்கும்.

## அக்கினிமண்டலம்.

கூ. பிரிதிவியும் அப்பும்கூடினவிடத்தில் நாற்சதுரமாய்நடுவே முக்கோணமாய் நாலிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும்.

## இதுவே ஆறுதார விவரமாம்.

# இனிமண்டலங்களாவன.

அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திர மண்டலம், ஆ-ந.

இதில் அக்கினிமண்டலமானது மூலாதாரத்திற்கு இருவிரற்க டைக்குமே லிருக்கின்றது.

ஆதித்தமண்டலம் உந்திக்கு நாலுவிரற்கடைக்குமே லிருக்கின் றது.

சந்திரமண்டலம் கோடி சந்திரசூரியர்க ளுதயமானதுபோல சிரத்தினடுவில் நிலையாய் நிற்கும். இதை அமுர்தகலையென்று சொல் லுவதுமுண்டு. அமுர்தம் மேல்நோக்கி அக்கினி கீழ்நோக்கி சரி யாய் நிற்கும், இதற்கு நடுவில் பராசத்தி எழுந்தருளியிருப்பாள். இத ற்குப் பிரமாணம்.

## திருமந்திரம்.

மேலைநிலத்தில் மேதகுபெண்ணே
மூலநிலத்தில் முளைத்தெழுஞ்சோதியே
ஏலவெழுப்பி யிசைந்துசந்திக்கப்
பாலருமாவார் பார்நந்திஆணையே.

## இனி நாடி ய-க்கும் விவரம்.

இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு, ஆக நாடி-க0.

இவைகளில் இடைகலை-பிங்கலை-சுழுமுனை இம்மூன்றும் மூலாதாரத்தைத்தொட்டு ஆருதாரம் ஆறிலும், மண்டலம் மூன்றிலும் ஊடுருவி முட்டி நின்று இடைகலை பிங்கலை இரண்டும் சுழுமுனையிலே இணங்கிக் கத்தரிக்கோல் பாகமாறி வீணாத்தண்டுக்குவில்லு நாணிட்டாற்போல கபாலத்தைமுட்டிக்குதிரை முகமுற்று நாசியளவும் பற்றி நிற்கும்.

சிகுவை யென்னும் நாடியானது மூலாதாரத்தைத் தொடங்கி உண்ணாக்கிலேநின்று சோறும் தண்ணீரும் இவைகளை விழுங்கச்செய்யும்.

புருடன் என்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி வலது கண்ணளவாய் வந்து நிற்கும்.

காந்தாரி யென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி இடது கண்ணளவாய் வந்துநிற்கும்.

அத்தி யென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி வலது காதளவாய் வந்து நிற்கும்,

அலம்புடை யென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி இடது காதளவாய் வந்து நிற்கும்.

சங்கினி யென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கிக் குறியின் அளவாய் வந்து நிற்கும்.

குரு யென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி அபானத்தின் அளவாய் வந்து நிற்கும்.

இந்த நாடிகளானது தேகத்தைப்போஷிக்குமாறு அன்னபானாதிகள் செல்லும் மார்க்கமாகவும், இரத்தம் நீர் இவை யோட்டங்களு

ச்சுத் தாரையாகவும், தேகத்தை வளைக்கவும், நிமிர்க்கவும், குறுகவும், பெருகவும், சுத்திரிக்கோல்போல் ஒன்றுக்கொன்று மாறலாகவும் கப்பிக்கயிற்றைப்போல இழுத்துப் பிடித்திருக்கின்றது.

---

## இனிவாயுக்களாவன.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆக-வாயு-௧௰.

இதனுடன் வயிரவன், முக்கியன், அந்தரியாமி, பிரவஞ்சனன், ஆகிய நான்கும் சேர வாயுக்கள்-௧௪.

### பிராண வாயுக்களாவன.

பிராணவாயுவானது லலாடமத்தியிலேதோன்றி சந்திரநாடியிலே விழுந்து மூலாதாரத்திலே ஓம் என்று உதித்து நாபி சக்கரத்திலே ரீம்-என்று முட்டி இடைகலை பிங்கலைகளிலே ஓடி கபாலத்தைச் சுற்றி நாசியின் வழியாய்ப் புறப்பட்டு நான்கு விரற்கடை பிரமாணங் கழிந்துபோய் எட்டுவிரற்கடை பிரமாணமீந்து தானின்ற ஸ்தானத்திலேயே தாக்குகின்றது.

இப்படி தாக்குவது உத்தமதேசிக்கு நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாகக் கொல்லன் துருத்திக்குட் காற்றேறுவது போல் ஏறும்.

இப்படி ஏறுகின்ற சுவாசமானது இராப்பகலாகிய அறுபது நாழிகையுள்ள நாள் ஒன்றுக்கு (௨௧௲௬௱) சுவாச மாச்சுது. இவ்விதமாயிணங்கி அவற்றுள் (௭௲௨௱) சுவாசம் வெளிப்படும். மற்றவை உள்ளடங்குமென்றறிக.

அபானவாயுவானது-குதத்தையும் குய்யத்தையும் பற்றி மலமூத்திராதிகளைக் கழித்துவிடும்.

வியானன்-தோளிலே நின்று பரிசங்களை யறிவித்துக் கலைகளை நிறைவிக்கும்.

உதானன்-உதராக்கினையை யெழுப்பி உண்ட அன்னசாரத்தை நாடிகளிற் செலுத்திச் சரீரத்தை வளர்க்கும்.

சமானன்-இவை யாவையும் சமப்படுத்திப்பேதமில்லாமல் நிரவலாகி வைக்கும்.

கூர்மன்-நகைப்பும், மூசலட்சணமும், கண்களிப்பும், புளகமும் மயிர்க்கூச்சலும், கொட்டாவியு முண்டாக்கும்.

நாகன்-மூக்கலும், சோம்பலும், திமிரலும், விக்கலும், வீங்கலு முண்டாக்கும்.

கிரிகரன்-புருவமெற்றுவித்தும், தும்முவித்தும், அழுவித்தும் திரியும்.

தேவதத்தன்-விழிக்கும்பொழுது வஞ்சித்து ஓட உலாவ யுத்தஞ்செய்யத் தலைப்படும்.

தனஞ்சயன்-பிராணன் சரீரத்தைவிட்டு வெளிப்பட்டபோதிலும் தான் பிரியாது நின்று உடம்பை வீஙகுவித்தும் விரிவித்தும் புழுவித்தும் கொய்தும் கபாலத்தைப் பிளந்துபோம்.

வயிரவன்-காலெலும்புங் கதிரெலும்புங் கூடிய விடத்திலே நின்று உடம்பில் அவஸ்தையுண்டாக்கி ஈளை இருமல் முதலானநோய்களை யுண்டாக்கும்.

முக்கியன்-கையெலும்பு உ-ம், கதிரெலும்புங் கூடியவிடத்திலேநின்று சரீரத்தின் யாக்கைகளைச் சிறக்கநிறுத்தும்.

அந்தரியாமி-புருஷனுக்கு வாகனமாய் நின்று பிராணவாயுவைத் தோற்றுவிக்கும்.

பிரவஞ்சனேவெனில்-பிரணவத்துக் கிருப்பிடமாயிருந்து பிரவஞ்சனும் அந்தரியாமியும் சரீரத்திற்கு அடையாணியாகவும் அச்சாணியாகவும் இருப்பார்கள்.

## தாதுக்களாவன.

ரசம், உதிரம், மாம்ஸம், மேதை, அஸ்தி, மச்சை, சுக்கிலம் ஆக-எ.

## இராகங்களாவன.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடம்பை, அகங்காரம் ஆக-அ.

இவைகளில் காமமாவது-ஆசை. குரோதமாவது-கோபம். லோபமாவது-உள்ளதையொளித்தல், பொச்சரிப்புக்கொள்கை. மோகமாவது-தானல்லாததார் மரித்தால் தான் மரித்தாற்போலிருக்கை. மதமாவது-கர்வமுற்றுத் தானதர்ம பரோபகாராதிகளை விலக்குதல். மாச்சரியமாவது-ஒன்றைக் கண்டுமகிழ்தல், இடம்பையாவது-தானே சர்வாதிகாரியென்று நினைத்து யாவரையும் இகழ்தல். அகங்காரமாவது-தன்குற்றங்களை யறியாது பிறர்சொல்லைக் கேட்டுக் கோபித்தல்.

## கோசமாவன.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் ஆக-ரு.

இவைகளில் தாதுக்களாலெடுத்தது அன்னமயகோசம்.

அன்னசாரத்தினாலே பிராணனும் பலனும் அடங்கியது பிராணமயகோசம்.

பலத்தினாலே வந்து தோற்றப்பட்டது மனோமயகோசம்.

அம்மனத்தின்கண்ணே தோற்றப்பட்டது விஞ்ஞானமாதலால் அது விஞ்ஞானமயகோசம்.

ஆனந்தமயமானது-வித்தையால் அல்லது கல்வியால் ஞானம் வந்து தோற்றும் அது ஆனந்தமயகோசம்.

## இதற்குப்பிரமாணம்.

சித்தியார்.

விருத்தம்.

ஞாலமாமன்னகோசம் ஞாலத்திற்பிராணனுற்றால்
வாலியப்பிராணகோசம் மன்னுமிம்மனோமயத்தால்
சாலவேபுந்தியுற்றால் தருமம்விஞ்ஞானகோசம்
ஏலவேவிடயமுன்போ லியன்றதும்காசமாமே.

## அந்தக்கரணங்களாவன.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக-௪.

இவைகளில் மனம்-நினைக்கும், புத்தி-நிச்சயிக்கும், அகங்காரங் கொண்டெழுப்பும், சித்தம்-மூன்றுக்கும் காரணமாயிருக்கும்.

## இதற்குப்பிரமாணம்.

சித்தியார்.

விருத்தம்.

மனதுக்குவிவரம்.

ஐயமுஞ்சலனமு நிற்கச்செய்தலும்
வெய்யவெவ்வகொடுமையும் விதப்பமேவலும்
பொய்யதுவுணர்த்தலும் பொருத்தநோக்கலும்
மையல்கொண்டீதலு மறிவுமாண்மையும்.

புத்திக்கு.

அருளுறவிருத்தலும் அபயங்காத்தலும்
மருளுபுண்ணிய பாவமாட்சியும்
தெருளுவிகாரமுந் திடப்படுத்தலும்
பொருடருமூவகைப் புத்தியாகுமே.

## அகங்காரத்துக்கு.

பாகமூர்க்கமும் பண்பிலாண்மையும்
மோகமுஞ்செயவெண் முடிவிலாமையும்
சோகமுங்கீழ்மையும் துரோகசொப்பனம்
மாய்கையுஞ்செய்யுமாங் காரமாதலால்.

## சித்தத்துக்கு.

அருந்தவமுயற்சியு மடிகள்பேணலும்
விருந்தெதிர்கொள்கையும் மேன்மைவாழ்தலும்
வருந்தினர்யாவரு மேத்தவாழ்தலும்
திருந்தியவிச்செயல் சித்தமாகுமே.

## அவஸ்தைகளாவன.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆக-டு.

இவ்வைந்தினுள் சாக்கிரமானது புருவமத்தியில் நின்று ராஜ ஓலக்கம்போல சதுரங்க பலத்துடனே யிருந்து சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் இவ்வைந்துடனும், வசன, கமன, தான, விசற்க, ஆனந்தமென்னும் அவ்வைந்துடனும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இந்த நாலும் சேர்ந்து கருவிகளுடன் சந்நிதியில் சேவிக்கத் தான் பராசத்தியருளாலே வியக்தனும் சுகதுக்கங்களை அறிந்து நின்றபோது சாக்கிரமாயின.

## இதற்குப்பிரமாணம்.

## திருமந்திரம்.

கண்டனவைந்துங் கலந்தவோரைந்தும்
உண்டனநான்கும் ஒங்கியதுணர்ந்தபின்
பண்டையினாதி பரந்ததுசாக்கிரம்
அண்டமுந்தானா யயர்ந்ததுகாணே.

சொப்பனமாவது கருவி கரணாதி ௧௪-ல் கருவி யத்தும் கண்டத்தில் நிற்கும்.

மற்றக் கரணாதி சம்சுழுத்தியோடு சீவாத்துமாவைக்கூடிச் சுவாசவிருதயத்திலே நின்றபோது கண்டவை கேட்டவை ஒன்றும் பிறர்க்குச் சொல்லப் புலப்படாதபோது சுழுத்தியாம்.

## இதற்குப்பிரமாணம்.

திருமந்திரம்.— ஆனமனமும் அறிகின்றபுத்தியும்
ஊனையிழந்துநின் றுள்ளேஉயிர்ப்பெய்தி
தானமிழந்து தயங்கியவாறுபோல்
ஊனையிழந்த சுழுத்தியதாமே.

துரியமானது சுழுத்தியைவிட்டுக் கரணமொன்றுடனே சீவாத்துமா நாபிஸ்தானத்தில் நின்றபோது உசுவாசம் நிசுவாசம் பிறக்கும் ஆகையால் இதற்குத் துரியமென்றுபெயர்.

## இதற்குப்பிரமாணம்.

திருமந்திரம்.— தானத்தெழுந்து திரியுந்துரியதானம்
வானத்தெழுந்துபோய் வையம்பிறக்கிட்டுக்
கானத்தெழுந்து கருத்தின்தலையிலே
ஊனைத்தவிர்ந்து ஒளித்திருந்தானே.

## துரியாதீதமாவன.

கருவிகரணாதி பதினாலும் பற்றற்றுச்சீவாத்துமா தானே மூலாதாரத்திற் சென்றொடுங்கி மலம், மத்தம், மாய்கை, பரிசங்களை யறியாமல் நின்றபோது துரியாதீதமென்று பேராம்.

திருமந்திரம்.— துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே
நரிகள்பதினைன்கும் நஞ்சுண்டற்றது
பரியபுரவியும் பாரிப்பரந்திடத்
துரியமிருந்திடஞ் சொல்லவொண்ணாதே.

## கேவலாவஸ்தையாவன.

அதீதத்தை முதலாகக்கொண்டு ஒருவனை முன்னொருகாலத்தில் நாமறிந்திருக்க அவன் சிறிது நாளைக்குப்பிறகு நமது முன்வந்து

என்னையறிவீராவென்ன, நானறியேனென்று நின்றவிடம் அதீதம் அதைக்குறித்து நிதானித் துணருமிடம் துரியம். ஆமோ அல்லவோ வென்று சந்தேகிக்குமிடம் சுழுத்தி. மனத்தோற்ற முற்றது சொப்பனம். நீ இன்னானென்று நிச்சயித்திருப்பது சாக்கிரமாம்.

## இதற்குப்பிரமாணம்.

### அறிவானந்தசித்தியார்.

முன்னே அறிந்தும் அறியாதிருந்ததுமுதலதீதம்
பின்னேநினைவின்றி மூச்சிட்டறிந்தபிறைதுரியம்
மன்னேமயங்கி யையுற்றசுழுத்திமனநினைவால்
தன்னேர்கனவது தானறிந்தொத்ததுசாக்கிரமே.

### மத்தியாவஸ்தை.

சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற் றுரியாதீதம்.

இவற்றுள் சாக்கிரத்துள் சாக்கிரமானது, கருவிகரணங்கள் பிரியாமல் ஒத்து நிற்பதாம்.

சாக்கிரத்திற் சொப்பனமானது, தான் நிச்சயம்போல் கண்டது கேட்டது சொல்லறியாததுவாம்.

சாக்கிரத்திற் சுழுத்தியானது, நினைவுமாத்திரம்பொய்யாய்ப்பிறருக்குச் சொல்லவொண்ணு திருக்கை, இது உசுவாச நிசுவாசமாக இருத்தலாம்.

சாக்கிரத்தில் துரியமானது, சகலகருவி கரணாதிகளுக்கும் அடங்கிப் பருமிருக்கையும் நித்திரை வருகையும், அவசமாய்விழுகையும் புருவமத்தியிலே நடுச்சக்கிரத்திலேயுள்ளது.

## மேலாவஸ்தையாவன.

புருவமத்தியில் நடுச்சக்கிரத்தில் இரண்டங்குலப் பிரமாணத்தி லேயுள்ளது சொப்பனம்.

இதற்குமேல் இரண்டங்குல பிரமாணத்தி லுள்ளது சுழுத்தி இதற்குமேல் இரண்டங்குல பிரமாணத்தி லுள்ளது துரியம். இதற்குமேல் இரண்டங்குல பிரமாணத்தி லுள்ளது துரியாதீதமாம்.

## இதற்குப்பிரமர்ணம்.

திருமந்திரம்.—காலங்கிநீரிற் கலந்துடஞகாசம்
மாலங்கியீசன் பரமசதாசிவன்
மேலஞ்சுசென்று விரவவல்லார்க்குக்
காலனூர் ஓலை கனவிலுமில்லையே.

## அவஸ்தைகளாவன.

சகலாவஸ்தை, கேவலாவஸ்தை, சுத்தாவஸ்தை ஆ-௩.

சகலாவஸ்தையானது. சாக்கிரத்தில் கருவிகரணாதிகளுடன் கூடி அந்தக்கரணங்களுக்கு நினைவா யிருக்கும்.

கேவலாவஸ்தையோவெனில் மூலாதாரத்தைப்பற்றி ஆணவம் மேலிட்டு ஒன்றுந் தெரியாமல் கிடக்கை.

சுத்தாவஸ்தையோ, சகலாவஸ்தையில் கருவிகரணாதிகளுடன் கூடி நின்று அலைச்சல் பிறவாமை கேவலாவஸ்தையில் ஆணவக்கிடையில் அறியாமை பிறவாமலும் ஆசாரியானுக்கிரகத்தினாலேஇவை யிரண்டிலும் பற்றாமல் சுற்றத்தோடே கூடி நிற்கை.

## குணங்களாவன.

*ராஜஸம், தாமஸம், ஸாத்வீகம் ஆக-௩.*

*ராஜஸமானது-அத்தி, களிப்புற்றிருத்தல், அகங்காரம், போகம் அத்தசேதம், இடும்பை, கீர்த்தி, கொடை தருதலாம்.*

*தாமஸமானது-நித்திரை, களவு, கள்ளுண்ணல், சோம்பு வெட்டி, சிரிப்பு இவைகளாம்.*

*ஸாத்வீகமோவெனில் - கொல்லாமை-பொய்யாமை, அருவருக்கை, பொறையுடைமை, விரதமுடைமை, அடக்கமுடைமை, யாவரையும் இகழாதொழிதலாம்.*

*இவைகளில்*

## ஒவ்வோன்றுக்கு மும்மூன்றுகுணங்கள் காண்க.

*தாமஸராஜஸம், தாமஸதாமஸம், தாமஸஸாத்வீகம், தாமஸகுணவிரிவே. ஸாத்வீகதாமஸம், ஸாத்வீகராஜஸம், ஸாத்வீகஸாத்வீகமாம், ஸாத்வீகுணவிரிவே. ராஜஸதாமஸம், ராஜஸஸாத்வீகம், ராஜஸராஜஸம். ராஜஸகுணவிரிவே.*

## மலங்களாவன.

*ஆணவம், மாயை, காமியம் ஆக-௩. இவைகளில்.*

*ஆணவமானது, ஆத்துமாவின் அறிவைமறந்து யான் எனதென்னும் அறியாமை யெவையும் பிறப்பித்து, தன்னுண்டமையும் புத்திர மித்திர களத்திராதிகளும், பிரியமாய் இதில் நாம் மயங்குகிறோமென்று இவனுக்குத் தெரியாமல் சிதைப்பித்து ஆசையுண்டாக்கிக்கொண்டு தன்னதென் றிருக்கை.*

மாயையானது-வேறொருவருடைய சொத்தைத் தன்னதென்று இடையூறு விளைவிப்பதும், உபத்திரவிக்க யத்தனிப்பதுமாம்.

காமியமானது-மூத்திய இரண்டு விதத்திற்கு ஒத்திருப்பதும், இதாகிதத்தினால் புண்ணிய பாவங்களை யுண்டாக்குவதுமாம்.

இதன்றி மகாமாயையென்றும் திரோதானமென்றும் இரண்டு வித மலமுண்டாகும்.

மகாமாயையானது-தனு கரண புவன போகங்களைக் கொடுத்து ஒன்றோடு மொவ்வாமல் புசிப்புகளும் வெவ்வேறாய் அனாதியாய் ஆத்துமாவுக்கு என்னபோகந் தவிர்ந்தாலும் இந்தத்தன்மை இரண்டு காலத்திலும்ஒக்கும்.

ஆத்துமாவைத் தன்னிடத்திலும் இளைப்பாற்றிக்கிடத்த இடங் கொடுத்துப் பின்பு ஜனங்களுக்கும் பத்தியாயிருக்கும்.

திரோதானமானது சிவசத்தியினது பதவியைத் திரோபவித்து நின்று, ஆத்மாக்களுக்குப் புண்ணியபாவங்களையு மட்டும் புசிப்பித்துசிவசத்தியுடனே கூட்டும்.

## ஈஷணை மூன்றாவன.

அர்த்த ஈஷணை, புத்திரேஷணை, லோகேஷணை ஆக-௩.

இவை தன்னை யடைந்தாரென்பதாம்.

## வியாதியாவன.

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆக-௩.

இவைகளில்-வாதமானது, வாயுவினுற்பத்தியாகிப் பிராணவாயு பிரசண்டமாய் அக்கினியும், அப்புங் கலங்கில் வாதமாம்.

அப்பு, வாயு, தேயு இம்மூன்றும் உடலில் கலவாமல் கலங்கில் சிலேத்துமமாம்.

## சரீரங்களாவன.

ஸ்தூலம், சூக்குமம், காரணம் ஆக-௩.

இவைகளில்-ஸ்தூலதேகமானது, ஆதி பிருதிவியினால் சமைந்த உடல். சூக்குமதேகமானது ஞானேந்திரியம்-௫,கன்மேந்திரியம்-௫, அந்தக்கரணம்-௪, பிராணவாயு-க ஆக க௫-ம் கூடியது.

இவ்விரண்டு தேகமும் பற்றற்று நிற்பது காரணதேகமாம். ஆக தத்துவம் கக-ம் சரி.

## ஆத்மாவுக்கு ஆதாரம்.

இந்தச் சரீரத்தில் ஆத்மாவுக்கு ஆதாரமான கருவிகள் எவை யெனில்; வலதுசரம், இடதுசரம், நாபி, கண், மூக்கு, செவி, உச்சி இந்த எழிடங்களிலும் ஆத்மாவானது ஒன்றைவிட்டு ஒன்றில் மாறி மாறி வியாபித்திருப்பதற்குத் தூலமாகிய உடம்பையே மார்க்கமாகக் கொண்டு உலாவிவருகின்றது.

## தேவதைகள்.

| | |
|---|---|
| வலது சரத்திற்குத் தேவதை | சூரியன் |
| இடது சரத்திற்குத் தேவதை | சந்திரன் |
| உடம்பிற்குத் தேவதை | மகேசுரன் |
| நாபிக்குத் தேவதை | விஷ்ணு |
| கண்களுக்குத் தேவதை | ருத்திரன் |
| மூக்கிற்குத் தேவதை | பிரமன் |
| காதுகளுக்குத் தேவதை | சதாசிவன் |
| உச்சிக்குத் தேவதை | பரமசிவன் |

இதற்குப்பிரமாணம்.

திருமந்திரம்.

முப்பதுமுப்பது முப்பத்தறுவருஞ்
செப்புமதனிடை கோயில்வாழ்பவர்
செப்பிலதனிடை கோயில்சிதைந்தபின்
ஒக்கவைவரும் ஓடெடுத்தாரே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரம் திருக்கண்டீச்சுரர்.

தானெழுமங்கிரீண்டா சழக்குடைபதிக்குநாதன்
வாணிபர்தொண்ணூற்றாறு வருமிகமயக்கஞ்செய்யப்
பேணியபதிக்குணின்று பிரியும்போதறியமாட்டேன்
சேணுயர்மாடமோங்குர் திருக்கண்டீச்சரத்துளானே.

பிரயோசனம்.

தத்துவந்தொண்ணூற்றாறுந் தாழ்விலாவாயுபத்தும்
மெத்தெனநாடிபத்தும் மெய்யுள்ளேஆறுதாரஞ்
சுத்தமாங்கரணநான்குந் தோற்றுமண்டலங்கண்மூன்றும்
இத்தனையறியவல்லா ரிறையவராகுவாரே.]

தத்துவதீபிகை.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆறுதார

# ஜீவோற்பத்திசிந்தாமணி.

## காப்பு.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியைமுன் காடு.

## நூற்பெருமை.

நமசிவய மென் றுரைத்த மந்திரம்
நவ்வொடு மவ்வும்பொய் மாய்கை வலமதாய்
யவ்வான ஜீவன் வவ்வுறச் சேர்த்திடில்
சிவயினி லொன்றாய்ச் சிவமென லாமே.

## இதன்பொருள்.

நகாரம் - திரோதாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்கும்.

மகாரம்-கிரியாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்தில் மெய்யென் றழுத்தும் சிவத்திலே ஆசையைவருவித்துச் சிகாரத்தோடு கூடி நிற்பது.

சகாரம்-நின்ற சிவத்திலே ஆசையை வருவித்து மகாரத்தோடு கூடி நிற்பது.

நின்றவெழுத்துமூன்றும் செபிக்குமிடத்துஒன்றாகும்.

நமசிவயமென் றோதப்பட்ட வைந்தெழுத்துக்குள்ளே ஐந்தெழுத்துண்டு, இந்த ஐந்தெழுத்தினையும் மூல அட்சரமாகிய அகாரம்-உகாரம்-மகாரம்-விந்து-நாதம்-என்கிற அட்சரங்களைச் சேர்ப்பதெப்படியெனில், சிகாரத்தில்-அகாரமும், வகாரத்தில்-உகாரமும், யகாரத்தில்-மகாரமும், விந்து-நகாரத்திலும், நாதம்-மகாரத்திலுமாம், இந்தப்படி சேர்ந்த ஐந்தெழுத்தும் ஓதுகிறவிதமெப்படியெனில்,

நகாரமானது-விந்து—திரோதாசத்தி பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்காமல் சிவத்திலே யிச்சையை வருவித்துச் சிகாரத்திலே ஐக்கியமானது.

மகாரமானது-நாதம் - கிரியாசத்தி பிரபஞ்சத்தை மெய்யென் றழுந்தாமல் சிவத்திலே ஆசையை மெய்யென்றழுத்தி வகாரத்தில் ஐக்கியமானது நின்ற எழுத்தை ஓத முன்சொன்ன மூன்றெழுத்தும் ஒன்றாயின.

அதெப்படியெனில், பராபரமாகிய பரமேஸ்வரன் ஆதிகாலத்திலே ஆத்மாக்களை இரட்சிக்கத் திருவருள் புரிந்தமையால் பராபரையான சத்தியின் துடையில் தம்முடைய பெருவிரல் அங்குஷ்டங்கொண்டு கிறுகையினாலே பராசத்தி பொறுக்கமாட்டாமல் ஓவென்றனள். அப்போது பராபரமாகிய பரமேஸ்வரன் ஆவென்றமைத்தார். அந்தவெழுத்து அகாரமானது. அப்போது பராசத்தி அடக்கமாய் ஊவென்றனள். அந்த எழுத்து உகாரமானது. இந்த இரண்டெழுத்துக்களுஞ் சத்தியும் சிவமுமானது. இவ்விரண்டெழுத்தும் ஓரட்சரமானது எப்படியெனில்,

அகாரம் இலக்கத்தில்-அ, பின்சொன்ன உகாரம் இலக்கத்தில்-உ, இவ்விரண்டுமாய் தொகைக்கு ஓ-ஆயின.

யவ்வானது-ஜீவன், அந்தச்சிலனைச் சத்தியுஞ் சிவமுமாகக்கூடி ஆத்துமாக்களை சினேகத்தை வருவித்தது. வவ்வானது- திரோதய சத்தி, இச்சினேகத்தை மெய்யென்றழுந்தி மிகவும் இருதலையுண் டாக்கினது. மகாரமானது கிரியாசத்தி. இவை யிரண்டினும் பற்று மல் நிற்கின்றது. யவ்வானது ஜீவன், இவை யிரண்டுமே விந்து நாத மானது இந்த உருக்கத்தைச் சத்திபெருளென்றறியாமல் நின்றது. கேவலமான இருள் எப்போது பெறுவோமென்ற விகாரம் சகலமா னபகல் இவை யிரண்டுக்கும் இரவு பகலென்று பேர். இவையன்றி ஞானமுறைமைக்குச் சகலாவஸ்தையென்றும் கேவலாவஸ்தையென் றும் பெயர்.

சிதம்பரத்திலே சினேகமாயிருக்கையினாலே பராபரமாகிய பர மேஸ்வரன் மானைப்பிடிக்க நான்வேடங்கொண்டதுபோல் இராப்ப கலே குருவென்று வடிவெடுத்துக்கொண்டு ஆதி கபிலமாமுனிவர் திருவள்ளுவநாயனார்வடிவமாய்த் திருக்குருந் தீசுவராகிய திருமூல தேவருக்குத் திருவாய்மலர்ந்தருளிய உபதேச வைப்பாகும்.

சிவாயநம.

## தோற்றமும்ஒடுக்கமும் அறியும்படி.

பராபரமாகிய பரமேஸ்வரன்
தராதலம்படைக்கத் தாணினைந்தருளி.

பராபரத்திற்-பரந்தோன்றி, பரத்திற்-சிவந்தோன்றி, சிவத்திற் சத்திதோன்றி, சத்தியில்-நாதந்தோன்றி,நாதத்தில்-விந்துதோன்றி, விந்துவில்-சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில்-மகேசுவரர் தோன்றி, மகேசுவரத்தில்-ருத்திரன்தோன்றி, ருத்திரனில்-விஷ்ணுதோன்றி,

விஷ்ணுவில்-பிரம்மாதோன்றி, பிரம்மாவில்-ஆகாயந்தோன்றி, ஆகாயத்தில்-வாயுதோன்றி, வாயுவில் - அக்கினிதோன்றி, அக்கினியில்-அப்புதோன்றி, அப்புவில்-பிருதிவிதோன்றி, பிருதிவியில்-அன்னந்தோன்றி, அன்னத்தின்கண்ணே-நர மிருக பட்சி தாவர சங்கமாதிகள் தோன்றின.

இவ்விதமாய்த்தோன்றிய அடைவே நர மிருக பட்சி தாவர சங்கமாதிகள் அன்னசத்திலொடுங்கி, அன்னம்-பிருதிவியிலொடுங்கி, பிருதிவி-அப்புவிலொடுங்கி, அப்பு-தேயுவிலொடுங்கி, தேயு-வாயுவிலொடுங்கி, வாயு-ஆகாசத்திலொடுங்கி, ஆகாசம்-பிரம்மாவிலொடுங்கி, பிரம்மா - விஷ்ணுவிலொடுங்கி, விஷ்ணு-ருத்திரனிலொடுங்கி, ருத்திரன்-மகேசுவரத்திலொடுங்கி, மகேசுவரம் - சதாசிவத்திலொடுங்கி, சதாசிவம்-விந்துவிலொடுங்கி, விந்து-நாதத்திலொடுங்கி, நாதஞ்-சத்தியிலொடுங்கி, சத்தி-சிவத்திலொடுங்கி, சிவம் - பரத்திலொடுங்கி, பரம்-பராயமாகிய பரமேஸ்வரனிடத்தில் ஒடுங்குமெனக் காண்க.

## அத்துவாதத்துவம்.

அன்னத்தில்-ரஸந்தோன்றி, ரஸத்தில்-உதிரந்தோன்றி, உதிரத்தில்-மாம்சந்தோன்றி, மாம்சத்தில்-மேதைதோன்றி, மேதையில்-அஸ்திதோன்றி, அஸ்தியில் - மச்சைதோன்றி, மச்சையில்-சுக்கிலந்தோன்றி, சுக்கிலத்தில்-சுரோணிதந்தோன்றியது.

இப்படித்தோன்றிய சுக்கில சுரோணிதங்கள் அனுப்பிரமாணமுள்ள ஒருருவுபோலப் பாய்ந்து குதித்துக்கண்டிப்பும் பேரிசையும் போலே கண்டித்து நடுவெளியில் ஒருசுழுமுனையுண்டாய் அம்முனையினடுவே ஒரு துவாரமுண்டாய் அத்துவாரத்தினடுவே இரண்டெழுத்துகளாலே அபிமந்திரித்துப் பிண்டமாகி யெழுமளவில்,

சுக்கிலம் பெருகில்-ஆணும்.சுரோணிதம் பெருகில்-பெண்ணும், இந்தச் சுக்கிலச்சுரோணிதம் ரேகித்துப் பெருகில்-இரட்டைப்பிண்டமாம். அப்பிண்டமானது நீர்வழியே பெருகில்-ஊமையாம். மலக்கிடையேயாகில் மந்தனும்.

இப்படிக்குக் கெற்பவுற்பத்தி கொள்ளுங்காலத்தில் இரதக்கலையென்றும் இரஸக்கலையென்றும் இரண்டுகலைகளுண்டு.

அவற்றுள் எரிகலையிலே பிராணேந்திரியம்பாயில் இடப்பாகங்கொண்டு கிருமியென்னும் புழுச்சென்று விழுங்காமல் கன்றோடு தாய்ச்சென்று தொடர்ந்தாற்போலே பிராணவாய்வை ஆத்துமா நூன்னிட்டுக்கொண்டு செல்லுமளவில் இதமகிதமென்னும் இரண்டாகாரமுமபின்தொடர்ந்து சென்று அச்சுக்குள் அச்சாக அவ்வென்னு மூலாட்சரத்தில் அமைத்துப் புகவிட்டுக் கிழிச்சிலை வாசல்போலே ஓடி அங்கிஷாவென்னு மந்திரக்கயிற்றாலே சுருக்கிக்கட்டி, விசுத்ஞா சக்கரத்திடையிலே முத்திரையிட்டு தான் ஒருத்தியாய் நின்று இந்தக்கருவை வளர்க்கும்படியாய் கெற்ப உற்பனத்தை உதானவாயுவான மூலவாயு வளர்க்கும்.

அது எப்படியெனில்,கெற்பாகுதியென்னும் பவக்கடலில் வண்ணைவாயு வளர்க்கும்.

அது எப்படியெனில், எண்ணெயுந் தண்ணீரும்போல கிற்கிற சுக்கில சுரோணிதத்தைப் பாலும் கெய்யும்போலே பாய்ந்தவுடனே கற்பிக்குங் கற்பைச் சுருக்கினாற்போல வாசலையடைத்துக் கருவை வெளியாக்கி,ஒன்றாந்திங்களில் உதிரந்திரளும்,இரண்டாந்திங்களில் கொழுந்துவிட்டு அச்சு அமையும், மூன்றாவதில் மாமிசந்திரண்டு மூட்டுருவாகும், நான்காவதிலோ தண்டமாய் நரம்புநாடிகளமையும்,

ஐந்தாவதில் பஞ்சவர்ன்னமாய் இந்திரியகாரத்தால் அழியினும் அழியும் செழிக்கினுஞ் செழிக்கும், ஆருமாதத்தில் அதிற்புகுந்து ஆமையின்வடிவமுற்று கால் கைகள் வகுக்கப்பட்டு நவத்துவாரங்களுமுண்டாகும், ஏழாமாதத்தில் கற்பத்திலிருந்து எழுந்து முழக்கமுற்று கெற்பத்தைச் சூழ்ந்து புரளும் எனெனில் (எஉ௲) நாடி நரம்புகளும் ஆருதாரமும் ஐந்தெழுத்தும் ஐம்பத்தோரட்சரமும் பஞ்சபூத தேவதைகளும் தூல சூக்குமத்துடனே கொழுந்துவிடப் பேதையாம். எட்டாமாதத்தில் நீட்டி முடக்கித் தாயுண்ட அன்னசாரத்தைத் தொப்புளின் வழியாகவுண்டு பிள்ளையினுடல் வளர்ந்து தாயுடன் தோன்றி உயிருடன் ஆடும், ஒன்பதாவதில் தலை காலளவும் ரோமத்துவாரமுண்டாம்; ரோமக்குருத்து அறிவுடனே உரங்கொள்ளுகையில் விசனம் பொறுக்கமாட்டாமல் ஈசுவரனை நோக்கித் தவஞ்செய்து தொழுகையுடனே பிரிந்து ஜனனத்தை யொழித்தருளவேணுமென்று வணங்கிநிற்கும். பத்தாவது மாதத்தில் நிறைந்த பிண்டமாய் மலைமேல்நின்று தலைகீழாய் விழுந்தவர்களைப்போலே அபானவாயுவின் பலத்தினலே பூமியில் விழுந்தும் முன்னுள்ள நினைவுகளை மறவாதிருக்கும்.

இப்படி பரப்பிரமம் சிருஷ்டிப்பினலே கர்ப்பந்தரித்து வாழ்வுபெறும்.

அப்பேர்ப்பட்ட பிராணவாயு வலப்புறமோடில் ஆண்பிள்ளையாம், இடப்புறமோடில் பெண்பிள்ளையாம், வாயுவிரண்டும் ஏகோபித்தோடில் அலியாம் அதாவது பேடி அல்லது குறியற்றது.

அந்த வேளையிலே நடந்த வாயு பேதியால் ஐந்துநாழிகை யளவும் நடந்தியங்குமாகில் அந்தப் பிள்ளைக்கு வயது-ா. அந்த அளவு குறையுமாகில் பிள்ளைக்கு வயதுங்குறையும், வாயு நிரம்பியோடில்

அவயவங்களுண்டாகும் அவ்வாயுசிதறியோடில் அவயவங்கள் குறையும். முதன்மையில் கெற்பரந்தனத்தில் போகிக்கும்பொழுது மூன்று குணத்திலே ஒன்ருவது மாதா பிதாக்களுக்கு உண்டானுல் மக்களுக்கும் உண்டாகும்.

அந்த வேளையில் வாயு நின்றியங்குமாகில் நிலத்தில் நிறமே பிள்ளைகளுக்கு நிறமாகும். மாதா பிதாக்களினுடைய மனமும் குணமும் வாயுமொன்ருகுமாகில் அந்தப்பிள்ளைக்கு மிகவும் அறிவுண்டாகும்.

மாதா பிதாக்களுக்கு அந்த மூன்றுவிதமுஞ் சிதறில் பிள்ளை மரித்துப்போம், கர்ப்பாசனத்தைவிட்டு கெற்பங்கரவழியிலும் போக்கிலும் அக்கினி மிகுக்கிலும் வாயு கலங்கிலும் மலமாம். ஸ்திரீ புருஷர்களிருவருக்கும் மூலாக்கினி அதிகரித்தால் அந்த கர்ப்பஞ் சுவறிப்போம்.

இப்படி கன்மானுபவத்திற்கிடாக எடுக்கப்பட்ட சரீரத்தில் முன் சொன்னவழியே அருந்தின அன்ஞாசாரமானது முப்பது நாழிகையில் எங்குற்றதெனில்,

மல ஜல ரத்தமாகிய மூன்றுகூருகும். இதில் இராப்பகல் அறுபது நாழிகையில் மலஜலமென்ற இரண்டுகூறு கழிந்துபோம், மற்ற ஒருகூருகிய இரத்தமானது சரீரத்தில் தங்கும் அந்த இரத்தமானது ஏழிலொருபங்கு இந்திரியமாம். மற்றபங்குகளோவெனில், தோல்-உரோமம்-சதை-கற்பம்-மேதை-அஸ்தி-குடும்பி-மூளை-சுக்கிலம்-நியம்பு-குடல்-நரம்புமுதலியவிடங்களுக்கு முறையே எ௨-நாழிகைவீதம் பரவிநிற்கும்.

இனி இந்தச் சரீரத்தில் இருவினைக்கதவுங்கூட்டி மூலத்தண்டாகிய நெடுங்கயிற்றை முகட்டுவெளியாகச்சேர்த்து பழுவெலும்பா

கிய வரிசையிட்டு நரம்பாகிய யாக்கையாலே கட்டி உதிரமாகிய ஜல த்தினாலே மண்கூட்டிச் சுவரேற்றி ரோமமாகிய கத்தையாலே மே ய்த்து எடுக்கப்பட்ட வீட்டுக்கு நவத்துவாரமென்னும் வாசலிட்டு, அச்சமாகிய கதவுகளிட்டு பல்லாகிய தாள்பூட்டி நாவாகிய ஓங்காரம் பாய்ச்சிப் பண்டமாகிய பஞ்சேந்திரியங்களு முடைத்தாய் நிற்கும்.

இந்தச் சரீரத்தில் பதினாறு கதவுபூட்டிய வீணைத்தண்டும் மொ ழியென்னு முச்சாணெலும்பும், முச்சாண்சதையும், அஞ்சுருவும், ஆறுதெருவும், ஏழுமட்டலும், எட்டுதூணும், நாலுசாண்பருமனும், எட்டுச்சாண் நீளமும், முப்பத்திரண்டு முழக்குடலும் இருக்கும்.

இது மூலாதாரத்தைத் தொட்டு ஆக்ஞைபளவும் பெருநரம்பு கள் (கக௲) சிறுநரம்பு (கஅ௲) கையிலும் காலிலும் பெருநரம்பு(எ௲) சிறுநரம்பு (கஉ௲) நாபிதானத்தில் பெருநரம்பு (௲) சிறுநரம்பு (உ௲) நவத்துவாரத்துக்கும் வாசல் கூ-க்கு பெருநரம்பு (௲ரு௱) சிறுநரம்பு (கூ௲ரு௱) முடிவில் பெருநரம்பு (கூ௲) சிறுநரம்பு(சு௲)எலும்பிலுங் குடலிலும் சிறுநரம்பு (எ௲) ஆக நரம்பு நாடி (௬0உ௲)

இனி கால்களிலும் கைகளிலும் சந்துப்பொருந்தல்-சுக கழுத் துக்குக் கீழ்ச்சந்து (அக) கழுத்துக்குமேற்சந்து (அகூ) ஆக சந்து பொருந்தல் (கூகூஎ)

இனி நாசியில் ஜலம் பலம்-சக. எலும்பில் ஜலம் பலம்-எ. மாம் சத்தில் ஜலம் பலம்-உக ஆக ஜலம் பலம் கூக.

காலிலும் கையிலும் எலும்புகள் (௱சு0) மூலாதாரத்தைத் தொ ட்டு ஆக்ஞையளவும் முழுவெலும்பு (கூ0) கழுத்துக்குமேல் பொடி யெலும்பு (கூ௱) இருப்பக்கத்திலும் எலும்பு (உ0) ஆக எலும்பு (௫௪0)

இனி சரீரத்தில் (௩ உ-கோடி) ரோமத்துவாரங்களும், நாளொன்றுக்கு (உ௪௲) சுவாசமும் (கசூ) தத்துவமும், (௩௯0) பலம்மாம்சமும் உழக்குபித்தமும், ஆழாக்குச் சேத்துமமும்கூடி சரீரத்திலே நாளொன்றுக்கு நடக்கும் பிராணவாயு (கஉ) விரல் பிரமாணப் பட்டு நாலுவிரல் பிரமாணங் கழிந்துபோய் (அ) அங்குலம் ஏ ஒருவி சப்ததாதுக்களை வளர்க்கும்.

---

## இனி ஜீவராசிகளின் வாழ்நாளின் விவரமேப்படியேனில்.

வயதளவு ரா-க்கு க0-வயதளவும் இளமை, உ0-வயதினளவும் வாலிபம், உ௫-௩0-௪0 இதுவரையில் யௌவனம், ௪௫-௫0 இவைகளில் கௌமாரதிசையடைந்து ஒளி மழுங்கலுற்று பிருதிவி - அப்புவை நெருக்கும். அறுபதில் அப்பு-தேயுவைநெருக்கும், எ0-தேயு-வாயுவை நெருக்குதலினுல் தாது மாயாவுணர்வு பண்டுபோலே செலுத்தும், அ0-வயதில் வாயு ஆகாசத்தை நெருக்கும், க0 - வயதில் ஆகாசம் ஆத்துமாவைநெருக்கும், அதனுல் மலஜலம் இடைவிடாமல்ஒத்துகிற்றிம் ரா-வயதில் ஆத்துமா வந்தவழியை நோக்கும்.

இப்படிப்பட்ட சரீரமானது முன்சொன்ன அறுதிங்களில் மூக்காமல் சற்குருவின் தாளே சரணமென்று திருக்குருந்தீசுரர் ஆதிதிருமூல தேவருக்கு திருவுளம்பற்றியருள முறைமை கூறினேம்.

தோற்றவொடுக்கம் முற்றிற்று.

---

## அத்துவாதத்துவ கலைஞானம்.

அட்சரம்-ஆகாரம்-கரணம்-அவஸ்தை-பொறி-புலன்-இளமை-வறுமை-வேதம்-புராணம்-சரியை-கிரியை-யோகம்-மெய்ஞ்ஞானம்-இவ்விதமென்று குருவருள்செய்யச் சீடன்கேட்டுத் தெளிந்து அருட்பிரகாசத்திலே சர்வ அஞ்ஞானங்களையும் ஞானாக்கினியினாலே சுட்டுப்போட்டுக் களிப்புற்றுச்சிவத்துடனே நின்று தெளிவுறவேயெப்போதும் சிவஞானியென்று ஒட்டியாணம் பூட்டி ஆனந்தமென்னும் ஞானமிர்தத்தையருந்தி ஓம் நமாவென்னும் ஞானமுத்திரைவிட்டு அழியாப்பதவியாக மோட்ச சாம்பிராச்சியத்தை யடைபவருக்கே சீவன் முத்தரென்று யோம்.

இப்படிப்பட்ட பெருமையையடையு மவர்களுக்குப் பரகதி கிடைக்காததற்குக் காரணமேதோ வெனில்,

## பரகதிக்கு விலகல்.

காயாபுரியென்னும் பட்டணமும், அந்திர சூத்திரமென்னும் உட்கோட்டையும், நவத்துவாரமாகிய வாசல்களும், இரணமென்னு முகப்பும், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம, விசுத்தி, ஆஞ்ஞை என்னும் அரண்களும் அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம் சந்திரமண்டலம் ஆகிய சொற்கமத்திய பாதாளமாகிய லோகங்களும், அங்கராசன் மூர்க்கராசன் என்னும் இரண்டுராஜர்களும்,மூலப்பிரகிருதி என்னுந் தன்மந்திரியும், பஞ்சபூதங்களென்னும் பிரதானியர்களும், அலகையென்னும் வீதிகளும், இச்சாசத்தி கிரியாசத்தி யோகசத்தி ஞானசத்தி பராசத்தியென்னும் ஊழியக்காரிகளும், அசலையென்னும் அடப்பக்காரனும், கெர்விதனென்னும் கணாஞ்சி

க்காரனும், காலகர்மனென்னும் தளவானும், மனம் - புத்தி-சித்தம்-ஆங்காரமென்னும் காணிக்காரனும், மாயாப்பிரபஞ்சமென்னும் வன்னிநாயகப்பாடிகரும், சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்னும் கொல்நாயக்கர்களும், காம-குரோத-லோப-மோக-மத-மாற்சரிய-இடும்பை-அகங்காரமென்னும் கள்ளரும், இத மகித மென்னு மல்லர்களும், ஆணவம்-மாயை-காமியம்-என்னும் கோட்டைக்காரரும், வாக்கு - பாதம்-பாணி-பாயுரு-உபஸ்தம் என்னும் கன்னக்காரரும், சாக்கிர - சொப்பன-சுழுத்தி-துரியம்-துரியாதீதமென்னும் தலையாரிகளும், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னும் காலாட்களும், வாயு, தேயுவென்னும் புரவிகளும், மனோபதியென்னும் கருணீகனும், நவகோடியென்னும் ராவுத்தனும், இருதயபாதரென்கிற தானாபதிகளும், சதகோடி மகாமந்திரமென்னும் உபதளமும், வாத பித்த சேத்துமமென்னும் பரிவாரமும், அஷ்டமதமென்னும் யானைகளும், நாலுவேதமென்னும் ரதங்களும், அசுத்தம் சுத்தமென்னும் தேவியரும், இருவினையென்னும் தோழிகளும், இவர்கள்யாவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு தங்களில் தாங்களே ஒருவருக்கொருவர் ஒப்புரவற்றவர்களாய் முன்னுரைத்த காயாபுரிக்கோட்டையை வளைந்துகொண்டு ஒன்பதுவாசலுக்கும் அஷ்டமதமென்னும் யானைகளைவிடுத்து யுத்தஞ்செய்கையில் ஒருவருக்கொருவர் தங்களால் இந்தக்கோட்டையை ஆளுகிறதற்குச் சாத்தியப்படாமல் காரிய உபாதியாலும் காரண உபாதியாலும் ஸ்தூல சூக்குமாதிதேகத்தினாலும் சதுர்விதோபாயத்தினாலும்ஆராய்ந்து இந்தக்கோட்டையைக் கைக்கொள்ளும்படி பராபரமா யிலங்குகின்ற சற்குருநாதன் மானைப்பிடிக்க மான்சட்டையுடுத்ததுபோல திருநந்திதேவரான சற்குருநாதர் ஆதிகபிலராகிய திருவள்ளுவராய்த் திருமூலதேவருக்குத் திருவாய்மலர்ந்தருளியவாறு இதயமென்னும் வில்லுக்குப் புரி

யென்னும் நாணியைப்பூட்டி அறிவென்னும் அம்பைத்தொடுத்துக் குருவென்னும் இலக்குநோக்கி மூலாதாரத்தின் இரண்டொரு மெட்டெழுத்தின் நடுவெழுத்திலே யிருந்து வங்கென்று வளைத்து சங்கென்று சன்னிதனுய் அங்கிஷாவென் றியங்குவித்துச் சங்கென்று ஆஞ்ஞையா சக்கரத்திலே புகுந்து அக்கினிமண்டலத்தில் அனைவரையுங் காண்பித்துக்கொண்டு ஆயாவாளென்னும் இடை பிங்கலை இரண்டுக்கும் படிக்கதவிட்டு ஆதிமூலமென்னும் யானையின்மேற் கொண்டு தண்டுக்குந் தனுவுக்கும் நடுக்குத்தென்னுங் குரசுக்கயிற்றுக்குள்ளாக அன்னதானத்தி லுற்றவளவில் அங்கென்று மேனோக்கி ஆதிகாலமும் அவ்வையும் பதியுங்கொண்டு நடுவணையென்னும் ருத்திராக்கினியான பன்னிரு சமுத்திரத்திலே ஆனையை நீராட்டுவித்து ஞானபரமென்னும் காவணமிட்டு அங்கென்று மேனோக்கி யுற்றளவில் சித்திரநாடி வழியேசென்று சந்திராபுரியென்னும் மண்டலமுங் கொண்டு அக்கினிமண்டலத்தில் அஞ்செழுத்திலேயும் ஆதித்தமண்டலத்தில் மூன்றெழுத்திலேயும் சந்திரமண்டலத்தில் ஓரெழுத்திலேயும் ஆசனமாயிருந்தபிறகு திரிமண்டலாதிபன் பின்னிட்டு மந்திரி யுபதேசப்படி வைத்துக் காயாபுரியென்னும் பட்டணத்தைக் கொள்ளாமற் கொண்டு அதிகாயனென்னும் பிரபஞ்சங்களையெல்லாம் கருவோடறுத்துப் பின்பு சத்தியஞானப் பிரகாசமான மனந்திருத்தேரிலே யெழுந்தருளியபின்பு அறிவுகந்து நரலோகங்கொண்டருளியபின்பு காயாபுரியை நோக்கித் திருநந்திதேவர் ஆதிகபில மஹாரிஷி திருவள்ளுவர் சாக்ஷியாகத் திருமூலதேவருக்குத் திருவுளம்பற்றியருளிய முறைமையிலே திருமூலதேசிகர் நின்று நகை செய்தளவில் காயாபுரிபட்டணத்தில் யோகாதியுங்கெட்டு இரவகெந்துருவ பதாதிசேனையும்பட்டு ஆயாக்கினி வேந்தனும் சிறப்புண்டு போய் காயாபுரியென்னும் பட்டணத்தில் சொர்க்கமத்தியபாதாள

லோகமளவாகத் திருவடிவைத்துக்கொண்டு ராச்சியஞ்செய்தபடிக்குத் திருநந்திதேவர் ஆதிகபில மகாரிஷி திருவள்ளுவர் சாட்சியாகத் திருமூலதேவருக்கு அபயாஸ்தமுங் கொடுத்தருளி அபிஷேகமுஞ்சூட்டிச் சித்தாந்தமும் வேதாந்தமுங்கடந்த நாதாந்தமுடிவான அமுர்தபஞ்சாட்சர துருவநிலையில் சூக்ஷம்புகட்டி இப்படி யுணர்த்தியருளியமுறைமையை உட்பட்டுத் தேடாதவன் சிவஞானியல்லவென்று இந்தமுறைமயை உட்பட்டுத் தேடின பெரியோர்களுக்குப் பராபரத்தில் உத்தரங்களும் வெளியாயிருக்கும்.

பிண்டத்திற் கண்டபொருள் அண்டத்திற் காணலாம் அண்டத்திற்குள்ளது பிண்டத்து முண்டெனக்கொள்க.

ஆரூதார

ஜீவோற்பத்தி சிந்தாமணி

முற்றுப் பெற்றது.

# அட்டவணை.


| பெயர். | பக்கம். |
|---|---|
| சிவப்பிரகாசக்கட்டளை | ௧ |
| திருவாலவாய்க்கட்டளை | ௧௭ |
| சித்தாந்தக்கட்டளை | ௫௯ |
| சித்தாந்த சாதனக்கட்டளை | ௭௧ |
| சித்தாந்த தசகாரியக்கட்டளை | ௮௨ |
| சித்தாந்தப் பிரகாசிகை | ௮௮ |
| சித்தாந்த தத்துவலக்ஷணம் | ௧௧௧ |
| நாநாசீவவாதக்கட்டளை | ௧௨௫ |
| வேதாந்தத் தத்துவக்கட்டளை | ௧௪௧ |
| ஞானக்கட்டளை | ௧௫௨ |
| தத்வாமிர்தக்கட்டளை | ௧௭௧ |
| உபதேசவுண்மைக்கட்டளை | ௧௯௧ |
| வேதாந்த தசாவத்தைக்கட்டளை சுருக்கம் | ௨0௪ |
| வேதாந்த தசகாரியக்கட்டளை | ௨0௬ |
| பிரமோபதேசக்கட்டளை | ௨௧0 |
| உபதேசசித்தாந்தக்கட்டளை | ௨௨௫ |
| வேதாந்த ஸாராமிருதம் | ௨௨௭ |
| பஞ்சீகரணவேதாந்தசித்தாந்தம் | ௨௪௪ |
| தத்துவதீபிகை | ௨௮௫ |
| அநாதார ஜீவோற்பத்திசிந்தாமணி. | ௫௧௧ |